உ

கடவுள் துணை

# வியாசத் திரட்டு

(இரண்டாம்பாகம்.)

இது

மதுரை வித்தியாபாநுப் பத்திராதிபர்

மு. ரா. கந்தசாமிக் கவிராயரால்

எழுதப்பெற்று:

மதுரை வடக்குமாசிவீதி

ஸ்ரீ ராமச்சந்திர விலாசம் அச்சியந்திர சாலையிற்

பதிப்பிடப்பெற்றது.

1915.

இதன்விலை] [அணா 12.

காப்பி ரைியிட் ரிஜிஸ்டர்.

குமரன்றுணை.

# இப்புத்தகத்தி லடங்கிய வியாசங்கள்.


| வரிசை எண். | வியாசப்பெயர் | பக்க எண். |
| --- | --- | --- |
| | முகவுரை. | |
| | உரிமையுரை. | |
| 1 | அன்னையும் பிதாவும் ... ... ... | க |
| 2 | இல்லற வொழுக்கம் ... ... ... | சா |
| 3 | விருந்தோம்பல் ... ... ... ... | சஅ |
| 4 | இன்சொல் ... ... ... ... | உங |
| 5 | புலான் மறுத்தல் ... ... ... ... | உரு |
| 6 | செய்ந்நன்றி யறிதல் ... ... ... | ஙரு |
| 7 | கேள்வி ... ... ... ... ... | சங |
| 8 | கொழுநனைப் பேணல் ... ... ... | சசா |
| 9 | கவிகளும் கவிஞர்களும் ... ... ... | ருஅ |
| 10 | இயலிசைப் புலவர் தாரதம்மியம் ... ... | சாச |
| 11 | கல்வியின்பம் ... ... ... ... | அச |
| 12 | அறிவுடைமை ... ... ... ... | கூச |
| 13 | உபந்யாசம் ... ... ... ... | க00 |
| 14 | பிரசங்கமும் வியாசமும் ... ... ... | க0ச |
| 15 | பிரசங்க மரபு ... ... ... ... | க0எ |
| 16 | சங்கங்கள் ... ... ... ... ... | ககஉ |
| 17 | கஷ்டத்தா லடையும் நன்மை ... ... | ககங |
| 18 | அறச்சிறப்பு ... ... ... ... | ககரு |
| 19 | கொல்லாமை ... ... ... ... | கஉச |
| 20 | வாய்மை ... ... ... ... ... | கஙச |
| 21 | பொய்மைத் தீமை ... ... ... | கஙகூ |
| 22 | நட்பு ... ... ... ... ... | கசச |
| 23 | கற்பு ... ... ... ... ... | கருசா |
| 24 | சூது ... ... ... ... ... | கசாஅ |
| 25 | பழக்கம் ... ... ... ... ... | கஎக |
| 26 | பதினாறுபேறு ... ... ... ... | கஎங |

உ
கடவுள் துணை.

# முகவுரை.

சில மாசங்கட்கு முன்னர் யான் வெளியிட்ட "வியாசத்திரட்டு, முதற்பாகம்" என்ற புத்தகத்தைக் கண்ணுற்ற பேரருளாளரிற் பல்லோர் உவகைமேற்கொண்டு அதன் இரண்டாம் பாகத்தையும் விரைவில் வெளியிடுமாறு எனக்கு ஊக்க மூட்டினர். அங்ஙனமே திருவருளுந் துணைநின்று இயக்கினமையால் அதன் வழிச்சென்று "வியாசத்திரட்டு இரண்டாம்பாகம்" என்ற இப்புத்தகத்தையும் வெளியிடத் துணிந்தேன். இதில் வெளியிடப்பெற்ற வியாசங்கள் 26 ஆகும். இவற்றுள் பல முன்னரே பத்திரிகை வாயிலாக வெளியிடப் பெற்றவை. சில வியாசங்கள் இப்போது என்னாலெழுதிச் சேர்க்கப் பெற்றவை. இவை பெரும்பாலும் எல்லா மதத்தினர்க்கும் ஒப்பச் செல்லுந் தன்மையன. ஆதலின் கலாசாலைகளிற் கல்வி பயிலும் மாணவர்கட்குப் பெரிதும் பயன்படுமென்பது என் கருத்து.

இன்னும் சில வியாசங்களை யெழுதிச் சேர்த்து வெளியிட அவாக்கொண்டிருந்தேன். பல மாசங்களாக என்னை வருத்திவரும் நோயே அதற்குத் தடையாயது. ஆயினும் இம்மட்டிலாவது இப்புத்தகம் வெளிவரும் வண்ணம் திருவருள் பாலித்த எல்லாம் வல்ல இறைவன் திருவடி மலர்களை வாழ்த்தி வணங்குகிறேன்.

சரீர சுகமும் அவகாசமும் கிடைப்பின் யான் கருதிய இன்னும் சில வியாசங்களையும் எழுதி மூன்றாம்பாகமாக முடிப்பேன். இதுநிற்க,

இதன் முதற்பாகத்துக்கு உரிமைபூண்ட பெருந்தகையும், எனது குலகுருவும், திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனகர்த்

தரும், பேரருளாளரும் ஆகிய ஸ்ரீலஸ்ரீ அம்பலவாணதேசிக சுவாமிகள் அப்புத்தகத்தைத் திருக்கண் சாத்தி ஆசீர்வதித்து என்னுள்ளங் குளிருமாறு நீண்டதோர் தந்திகொடுத் தருளப்பெற்றேன். யான் கற்றுள்ள சிறு கல்வி அவ்வாதீனத்திலிருந்தே பெற்றதாதலின் இதனையும் அக் குருமூர்த்திகட்கே உரிமையாக்குகின்றேன்.

"குற்றங் களைந்து குறைபெய்து வாசித்தல்
கற்றறிந்த மேலோர் கடன்"

---

மதுரை.
தெற்காவணிமூலவீதி
20—9—15.

இங்ஙனம்
☞ மு. ரா. கந்தசாமிக் கவிராயன்.

# உரிமையுரை.

தருமலியு ஞானக்கோ முத்தியில்வீற் றிருக்குந்
    தயாபர அம்பலவாண சற்குருவே நினது
திருவடியம் போருகத்தி னருண்மதுவை வியாசத்
    திரட்டிரண்டாம் பாகமெனச் செறியும்வரி யினமு
மருவுவது வேட்டுநின்பால் வருமெம்மா மலரும்
    வருவரிக்கு மதுவளிக்க மருவுலக வழக்கைக்
கருதியருள் கிடைக்குநலம் படைக்குமென வுள்ளங்
    களிக்கின்றே னினதுபுகழ் காலமெலாம் வாழி.

மு. ரா. க.

உ

குமரன்றுணை.

# வியாசத்திரட்டு.

## 2-ம் பாகம்.

## (1) அன்னையும் பிதாவும்.

“அன்னையும் பிதாவும் முன்னறிதெய்வம்” என்ற மூதாட்டியின் திவ்ய வசனத்தை நாம் அதிபாலியத்திலேயே கற்றுள்ளோம். பாலப்பருவமே கல்வி கற்றற்கு ஏற்றகாலம். ஆயின் அப்பருவத்தே நாம் கற்பவற்றின் பொருள்வளப்பத்தை நன்கு சிந்திப்பதில்லை. சிந்திக்கத்தக்க அறிவுத்திட்பமும் பற்றாது. ஆகவே அப்பருவத்தில் நாம் கற்பவற்றுட் பெரும்பாலன உரியபலன் றருவதில்லை. அப்படித் தராமை நம் ஆராய்ச்சிக் குறையேயல்லது வேறென்ன? நாம் சிறுபருவத்தே கிளிப்பிள்ளைத் தொனியளவாகவே கற்றுக்கொள்ளும் ஒவ்வொரு சிறுவாக்கியங்களும் ஒவ்வொரு அரிய மாணிக்கமேயென்று கூறினும் அவற்றின் பெருமைக்குப் பற்றாதாம். தெய்வத்தன்மை வாய்ந்த ஔவைப்பிராட்டி யருளிய பாலநீதிகளே இகபரசாதனங்களாகும். இதுபற்றியன்றே இந்நீதிநூல்கள் பலவும் பல்லாயிரங் காவதங்கட் கப்பால் வழங்கும் பலவேறு பாஷைகளிலும் எடுத்துப் பாராட்டத் தக்கவாயின? இவற்றைப் புறநாட்டார் எத்துணை மேம்பாடாகக் கருதுகின்றாரோ அத்துணையாக நாம் போற்றுகின்றிலம். சாதாரணமாக தூரத்துள்ளவற்றைச் சிறப்பித்தலும், சமீபத்துள்ளவற்றைப் புறக்கணித்தலும் மனிதரியல்பு. “புறக்கடைப்பச்சிலை மருந்துக்குதவாது” என்பது அறிந்ததன்றே? இக்கிழவியின் திருவாக்கைமட்டில் சற்று ஊன்றிப்பார்த்து உட்கொள்வோமாயின் எய்தற்கரிய தொன்றுண்டோ?

அன்னையும் பிதாவும்—தாயும் தந்தையும், முன் அறி தெய்வம்—முதலில் அறிந்துகொண்ட கடவுளாவர். எனச்செம்பொருள் தோன்றுவதாயினும் விசேடம் பலவுள. தந்தையைப் பார்க்கினும் தாயேசிறந்தவள் என்பது தோன்ற ‘அன்னையும்’ எனமுதலிற் கூறினர். குழந்தைகள் பத்துமாசகாலம் கருப்பையிலிருந்து பிறந்தது

முதல் பாலருந்தி வளர்க்கப்படுதலின் பிறர் காட்டவேண்டாது தா மாகவே தமது தாயையறியும். பின்னர் தாயானவள் இவர் நின் தந்தையென்று காட்டவே பிதாவை உணரும். பின்பு பிதாவால் குருவையும், குருவினுல் கடவுளையும் அறியலாகும். இம்முறை பற்றியேதான் "மாதாபிதா குருதெய்வம்" எனவழங்குவது மென்க. எல்லா ஜீவன்களும் தம்மையும் தமக்காதாரமாகிய கடவுளையும் உள்ளவாறுணர்ந்த பொழுதே பிறப்பற்று வீடுபேறடைதல் கூடும். கடவுளைக் குருவினுலும், குருவைப் பிதாவாலும், பிதாவை மாதாவாலும், மாதாவைச்சுயமாகவும் அறிந்து கொள்ளுதலின் மேற்கூறிய நால்வரும் கடவுளரேயாவர். அங்ஙனம் அறிதலுள்ளும் தாயும் தந்தையுமே முதலில் அறியப்படுகின்ற கடவுளென்றுர். இயல்பாக எல்லாராலும் பிரயாசையின்றி அறிந்துகொள்ளப் படுதலால் என்க. குருவும் தெய்வமும் பின்னறி தெய்வங்களாம். இங்ஙனம் மாதாவும் பிதாவும் முன்னெறிதெய்வம், குருவுந்தெய்வமும் பின்னறி தெய்வமென்று கொள்ளுதலில் ஒருசூக்ஷுமமுண்டு. மாதாவும் பிதாவும் ஒருபிரிவும், குருவும்தெய்வமுமொரு பிரிவுமாகக் கொள்ளலாம். மாதாவானவள் உடலை வளர்த்துப் பிதாவைக் காட்டுவாள். குருவோ ஞானத்தை வளர்த்துக்கடவுளை யுணர்த்துவர். மாதாஉடல்வளர்தற்கு வேண்டும் பால்முதலிய ஆகார முதவுவள். குரு ஞானம் வளர்தற்கு வேண்டும் சாஸ்திரோபதேச முதவிய புரிவர். இவற்ருல் மாதா பிதாக்களை முன்னறி தெய்வமென்றல் எவ்வளவு சிறந்த பொருளை யடக்கி நிற்கின்றது!

தாய், தந்தையினும் சிறந்தவளென்று மேலேகூறினேம். புதல்வரைப் பெற்று வளர்த்து வருதலினும் குழந்தைகளிடத்து அன்பு பாராட்டும் வகையினும் நமது தாயைப் போல்வார் பிறர்உண்டோ தாயானவள் தன்னுடைய சரீர வருத்தத்தையும் மனவருத்தத்தையும் பிறசௌகர்யங்களையும் கருதாது மக்களை வளர்த்தற்குப் படும் சிரமத்தையும், அவளது எலும்புங்கரைந்து பெருகக் கொண்டுள்ள உள்ளன்பையும் எவ்வாறு அளவிடுவது? இதைப்பற்றி முற்றுங்கூற யாராலாகும்? இதுபற்றியன்றே இல்லறம் விடுத்துத் துறவறம்பூண்டு தந்தையும் வணங்கப் பெறுகின்ற மகான்களும் தாயைக்கண்டால் வணங்குகின்றூர்கள். இதனை

"தந்தைதாய் பணித்தல் செய்யுந் தவமலால் தவம் வேறில்லை
மைந்தருக்கு. எதிகளேனும் வணங்குவர் தாயை. த் தந்தை
அந்தமைந் தனையே போற்ற வேண்டும். மற்றுதல் தன்னால்
சிந்தையுற் றுணரில் தாயே தந்தையில் சிறந்தாள் மன்னோ."

என்னுங்கவியால் அறியலாம். இக்கவியில் "தந்தைதாய் பணித்தல் செய்யுந்தவமலால் தவம் வேறில்லை மைந்தருக்கு" என்பது எவ்வளவு அருமையைக் காட்டுகின்றது? மக்கட்கு தவமென்பது மாதாபிதாக்கள் கட்டளைப்படி நடத்தலேயாம். பிறிது தவம்இல்லை. இது எத்துணை வற்புறுத்தி யுரைத்தவாறாகின்றது! ஒவ்வொருவரும் இவற்றை நன்கு கடைப்பிடித்துத் தத்தம் தாய் தந்தையருக்கு அடங்கிப் பயபக்தியுடன் அருமை பாராட்டிப்போற்றி வருவது இன்றியமையாததே. ஒருவன் தனது தாய் தந்தையரை அவமதித்து நடத்துவானாயின் அவன் மகனும் அவனை அவமதித்து நடத்துவானன்றோ? நமது நாட்டில் தற்காலம் புதிய நாகரீகப் பயிற்சியைக்கைக்கொண்டவர் போல நினைத்து இறுமாப் புற்றுக்களிக்கும் பல்லோர் தமது தாய்தந்தையரை அடிமைகளைப்போல அவமதித்துநடத்துகின்றனர். அந்தோ இஃதென்ன பாவம்! இவர்களடையும் கதிதான் யாது? இன்னார்கட்கு ஒருசிறியகதை புகல்கின்றோம்.

ஒருவன் மனைவிசொற்கேட்டு மயங்கிய மனத்தனாகி வயதுமுதிர்ந்த பிதாவைச் சிறிதும் மதியாது அப்பிதாவின் முதுமைப் பருவத் தோற்றத்தைக்கண்டு அருவருத்துத் தன்னுடன் வைத்துப்போஜனம் செய்யவும் சகியாமல் ஒருஒடு கொடுத்து அவ்வோட்டிலே வார்க்குங் கஞ்சியைப் புறத்தே வைத்துக்குடித்து ஒதுங்கியிருக்கச் செய்தான். கைப்பொருளனைத்தும் புத்திரனுக்களித்துக் கைகால் வலிமை குன்றிக் கண்ணொளி குறைந்து காதறிவிழந்து வாயொலி மழுங்கித் தள்ளாடி யிருக்குங்கிழவன் யாது செய்வன்? அந்தோ! பரிதாபம்!! கொடிய புத்திரனது கொடுஞ்சொற்களைக் கேட்டுக்கொண்டு வெட்கத்தையும் விடுத்து வயிற்றுக் கஞ்சியையே எதிர் பார்த்துக் கொண்டிருந்தான். இங்ஙன மிருக்கையில், இக்கொடியபுத்திரனுடைய புத்திரனொருவன் இவ்வநீதியைக் கண்டு சகியாதவனாகி மனம் புழுங்கி எப்படியாவது தன்பாட்டனுக்குக் கஷ்டநிவிர்த்தி

செய்ய வேண்டுமெனவும், தந்தைக்குப் புத்தி கற்பிக்கவேண்டு மெ னவும் நினைத்தான். ஒருநாள் பாட்டனது உண்கலமாகிய மண்கலத் தை யெடுத்து ஒளித்து வைத்துவிட்டான். போஜன காலத்தில் கிழவன் ஓட்டைத் தேடினான். வைத்தவிடத்தில் காணாது வருந்தி னான். மகனும் மருகியும் யாது கூறுவார்களோ என்று பயந்தான். இதற்குள் மகன்வந்து "ஏ கிழவா! ஓட்டை யெடுத்து வந்துகஞ்சி வாங்கிக் கொள்ளக்கூடத் திராவில்லையா? சீக்கிரம் வந்தாலொழியக் கஞ்சி கிடையாது" என்று அதட்டினான். இடியேறுண்ட நாகம்போல் நடுங்கிய கிழவன் வந்து அப்பா! ஓடு களவுபோய் விட்டது. தேடித் தேடிப்பார்த்தேன், அகப்படவில்லை என்று நயந்து மொழிந்தான். மகனுக்குக் கடுங்கோபம் பிறந்தது. கிழட்டுச் சனியனுக்குத் தின மொரு ஓட்டுக்கு யார்அழுகிறது. பத்திரமாக வைத்துக்கொள்ளக் கேடென்ன வென்றுவெடுவெடுத்துக்கூறி அடிக்கச்சென்றான். அவ் வேளையில் அவன் மகன் ஓடிவந்து தந்தையைநோக்கி "அப்பாஎன் பாட்டனை அடியாதே. அவ்வோட்டை நான்எடுத்து வைத்திருக்கி றேன்" என்றான். உடனே அடே! நீ எதற்காக அதையெடுத்தாயெ ன்று கேட்க "அப்பா சமீபத்தில் நீயும் கிழவனாகிவிடுவாய், அப்போ து உனக்கு ஒருஓடு நான்தானே தேடிக்கொடுக்க வேண்டும், ஆதலி ன் இப்போதே எடுத்து வைத்திருக்கிறேன்" என்று கூறினான். இதுகேட்டவுடன் அடே? 'பயலே எனக்கும் ஓடுகொடுக்கப் போகி றாயா' என்று அதட்டினான். சிறுவன் அஞ்சாது ஏனப்பா கோபித் துக்கொள்ளுகிறாய்? நீ உன்பிதாவை எவ்வாறு பரிபாலிக்கிறாயோ அவ்வாறு தானே உன்பிள்ளையாகிய நான் உன்னைப்பரிபாலிப்பேன். இதில் நீ வருந்தவும் கோபிக்கவும் நியாயமில்லையே என்று எதிர்த் து அஞ்சாது கூறினான். உடனே துஷ்டனுக்கு நற்புத்தி வந்தது. பிதாவை வணங்கி அதுவரை செய்தபிழை பொறுக்க வேண்டிக் கொண்டு தன்புத்திரனை யிபந்து முத்தமிட்டு நன்றி பாராட்டினான். அன்றுதொட்டுத் தன்தந்தைபால் தேவ விசுவாசத்துடன் நடந்தா ன் எனக்கூறுவதுண்டு. "தந்தை எப்படி மைந்தன் அப்படி" என்னும் பழமொழிக்கிணங்க நாம் நமது தாய்தந்தை முதலானோரி டம் எவ்வளவு அன்பு பாராட்டுகின்றோமோ அவ்வளவும் நம்மிடம் நம்மக்கள் அன்புபாராட்டி நடக்கும்படி தூண்டிவற்புறுத்தியதாகும்.

இது இம்மையிற் கைகண்டபலன் அன்றோ? மறுமைப் பலன் வேறு பெரியதாக விருக்கிறது. இப்படியெல்லா மிருந்தும் நம்மவருட்பல்லோர் மாதாபிதாக்களைப் படுத்தும்பாடு சகிக்கொண்ணுது. சிலர் மாதாபிதாக்கட்கு அற்பவுணவு கொடுத்து அவரெதிரேதாம் நல்லுணவுண்கின்றூர். இவர்எய்துங்கதிதான் யாதோ! தாய்தந்தையர்களிடத்து அன்பில்லாதவர் யாரோ அவர்தமக்கும் அன்பில்லார் பிறர்க்கும அன்பில்லார். புவிக்குப் பெருஞ்சுமையானவர் அவரே. இப்படிப்பட்டவரைப் பார்த்தாலும், அவருடன் பேசினுலும், பழகினுலும், உண்டாலும், உறவுகொண்டாலும்வருவது பழியும்பாவமு மன்றிப் பிறிதொன்றில்லை.

"ஈன்று வளர்த்த தாய்தந்தைக்கெவரே கைம்மா றியற்றிடுவார்
ஆன்ற மதலை நூறுவய தளவும் அடிமைத் திறம்பூண்டு
மூன்று புவனத் துள்ளபொருள் முற்றும் அளித்து முறைமுறையே
என்று வழிபா டியற்றிடினும் ஒருநாள் வளர்த்தற் கிணையாதே."

என்னும், அருமைப்பாடல் நன்கு கவனித்துணரற்பாற்று.

---

# (2) இல்லறவொழுக்கம்.

"அறத்தாற்றி னில்வாழ்கை யாற்றிப் புறத்தாற்றிற்
போஒய்ப் பெறுவ தெவன்?"

(1) அறம்:—புல்லும் புழுவும் மிருகமும் பறவையுமாகிய பல்வகைப்பட்ட தாழ்ந்த பிறவியைவிடுத்து, ஆறறிவுடைய மக்கள் யாக்கையைபெடுத்து, அறக்கொடிய மறச்செயல்களைச் செய்து வரும் இயற்கைவாய்ந்த பிற கண்டங்களை ஒருவிப், புண்ணியபூமியாகிய பரதகண்டத்தை மருவி, வேதாகம வழக்கொடுபட்ட மெய்ச்சமயிகளாகி வாழும் நம்மவர்கள்; கடைப்பிடியாகக் கொள்ளத்தக்க உறுதிப் பொருள்கள் "அறம் பொருள் இன்பம் வீடு" என்னும் நான்குமேயாம்.

இந்நான்கும் உறுதிப்பொருள்களே யாயினும் அறத்தானே பொருளும் அவ்விரண்டானே இன்பமும் பெறற்பாலனவாத லானும், இவை யாவையும் கடந்து, சிந்தையும் மொழியும் செல்லா நிலையதே வீடாதலானும் இவற்றுள் முதற்கட்கூறிய அறமே மிக்க சிறப்பினை யுடையதாகும்,

இதனை "சிறப்புடை மரபிற் பொருளு மின்பமும்
அறத்து வழிபடூஉந் தோற்றம் போல"

என்ற முன்னோர் மொழியால் நன்கு தெரியலாம். இவ்வறமென்பது முதனூல்களானே விதித்தன செய்தலும், விலக்கியன வொழிதலும் ஆகி "ஒழுக்கம் வழக்குத் தண்டம்" என முத்திறப்பட்டு நிகழும். இவற்றுள் வழக்கும் தண்டமும் உலகநெறி நிறுத்தற் பயத்தவாதலும், ஒழுக்கம் மக்களுயிர்க்கு உறுதி பயத்தற் சிறப்புடைத்தாதலும் பெறுவன. அவ்வொழுக்கமாவது அந்தணர் முதலிய வருணத்தார் தத்தமக்கு விதிக்கப்பட்ட பிரம சரிய முதலிய நால்வகை நிலைகளினின்றும் அவ்வவற்றிற் கோதிய அறங்களின் வழுவாதொழுகுதலே யாகும்.

(2) நால்வகை நிலையாவன:—பிரமசரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என்பனவாம். இவற்றுள் கிருகஸ்

தம் என்பதேஇல்லறம், இதனுள் பிரமசரியமும் அடங்கும். சந்நியாசமென்பதே துறவறம்,இதனுள் வானப்பிரஸ்தமும் அடங்கும். இவ்விரண்டனுள் யாம் எடுத்துக்கொண்ட இல்லறத்தைப்பற்றி இனிக் கூறப்புகுவாம்.

(3) இல்வாழ்க்கை:—ஐபாட்டைப் பருவத்தே பள்ளியிற் புக்கு முறை முறையாகக் கலைபல பயின்று குருகுல வாசஞ்செய்து பிரமசரிய நிலையின் வழுவாதொழுகிய பதினாறாட்டைப் பருவங்கடந்த ஆண்மகனாவான், தன் குலத்திற்கு ஏற்புடைத்தான குலத்தோற்றமும், எழுமையும் தொடர்வதாகிய உழுவலன்பும், எவ்வாற்றானும் தன் குலத்திற்கு ஏற்றவாற்றான் ஒழுகும் ஒழுக்கமும், வல்லென்ற நெஞ்சொடு பொறுக்கும் (ஆண்மக்கள் பொறைபோலாது மெல்லென்ற நெஞ்சொடு பொறுக்கும்) பொறையும், மறை புலப்படாமை நிறுக்கும் நெஞ்சுடைமையும், சாந்தகுணமும், இரக்கமும், இவை போல்வன பிறவும் அமையப் பெற்றுக் கடவுள் வழிபாடும், அடியார் பத்தியும், தாய்தந்தையார் சொற்போற்றும் பெற்றியும் வாய்ந்த பன்னீராட்டைப் பருவத்தளான ஒரு கன்னியை, அவளைப்பயந்த இருமுது குரவரும் இயைந்து கொடுப்பத் தன்னைப் பயந்த இருமுது குரவரும் மகிழ்ந்து ஏற்ப அங்கியங்கடவுள் அறிகுறியாக மந்திரவகையாற் பெரியார் மன்றற் சடங்குசெய்து வைப்பக் கைப்பற்றிக் கொண்டு அறநூல்களிலே விதித்தனபுரிந்து விலக்கியன வொழிந்து வடிவாலிருவரும் மனத்தாலொருவருமாகி மனையறங்காத்தலே இல்வாழ்க்கை எனப்படும்.

(4) மன்றல்வகை:—ஒருவன் ஒருத்தியைக் கைக்கொண்டு வாழ்வதாகிய மன்றல் எட்டுவகைப்படும். அவை,—பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம், காந்தருவம், அசுரம், இராக்கதம், பைசாசம் என்பனவாம். இவற்றுள்;

பிரமமென்பது:—ஒத்த கோத்திரத்தானாய் நாற்பதெட்டியாண்டு பிரமசரியங் காத்தவனுக்குப் பன்னீராட்டைப் பருவத்தாளாய்ப் பூப்பு எய்தியவளை இரண்டாம்பூப்பு எய்துமுன்னர் அணிகலனணிந்து தானமாகக் கொடுப்பது.

பிரசாபத்தியமென்பது:—மகட்கோடற்குரிய கோத்திரத்தார் கொடுத்த பரிசப்பொருட்கு இரட்டி தம்மகட்குஈந்து கொடுப்பது.

ஆரிடமென்பது:—தக்காெனாருவற்கு ஆவும் ஆனேறும் பொற்கோட்டுப் பொற்குளம்பினவாகச் செய்து அவற்றினிடையே மன்றன் மக்களை நிறீஇ ஆடையும் அணியும் அமைவுற அணிந்து நீவிரும் இவைபோற் பொலிவுற்று வாழ்விரென நீரிற் கொடுப்பது.

தெய்வம் என்பது:—பெருவேள்வி வேட்பிக்கின்றார் பலருள் ஒருவற்கு அவ்வேள்வித்தீ முன்னர்த் தக்கிணையாகக் கொடுப்பது.

காந்தருவமென்பது:—கொடுப்பாரும் கொள்வாரும் இன்றிஒருவனும் ஒருத்தியும் தாமே எதிர்ப்பட்டுக் கலப்பது.

அசுரமென்பது:—கொல்லேறு கோடல் பன்றியெய்தல் வில்லேற்றுதல் முதலியன செய்து ஒருத்தியைக் கொள்வது.

இராக்கதமென்பது:—ஒருத்தியை யொருவன் வலிமையாற் கொள்வது.

பைசாசமென்பது:—மூத்தவளையும் களிமயக்கினளையும் துயில்பவளையும் இழிந்தவளையும் விகாரத்தாற் நிலைதடுமாறிக் கொள்வது

இவ்வெட்டனுள் முன்னைய நான்கும் உத்தம மன்றல்கள். அடுத்த இரண்டு மத்திம மன்றல்கள். அடுத்த இராக்கதம் அதம மன்றல். கடைப்பட்ட பைசாசம் அதமாதமமன்றல். மேலே கூறிய மன்றல்களின் முறையே முறையாகக் கூறுவர் பெரும்பாலார். இவற்றுட் சிறிது வேறுபடுத்திக் கூறுவாருமுண்டு. அவைகளை விரிக்கிற் பெருகுமாதலின் இம்மட்டில் நிறுத்தி மேற்செல்வாம்.

5. வாழ்க்கைத் துணை.—இங்ஙனம் உத்தமமாகிய மன்றல் பெற்ற ஒருவனது இல்வாழ்க்கைக்கு இன்றியமையாச்சிறந்ததுணை நற்குணநிறைந்தகற்புடைமனைவியேயாவள். ஒருவனது இல்வாழ்க்கையின் இன்பதுன்பங்களனைத்தும் அவன் மனையாட்டியின் குணம் செயல்கட்கேற்பவேயமையும். மனைவியின் குணமகிமையே ஒருவன் இன்பமும், அவட்கு அஃதின்மையே அவன் துன்பமுமாகும். இதனாற்றான் மனைவியை வாழ்க்கைத்துணையென்றார் செந்நாப்போதார். "மனைக்கு விளக்குமடவாள்" என்பதுங்காண்க. குணமற்ற மனைவி

யுடன்விட்டிலிருத்தலினுங்காட்டிற்புக்கிருத்தலேநன்றென்பர். "இல்லாள்—வலிகிடந்த மாற்ற முரைக்குமே லவ்வில் புலிகிடந்த தூறுவ்விடும்" என்று கூறுவது ஔவைப்பிராட்டியார் திருவாக்கு.

"மாண்ட மனையாளை யில்லாதா னில்லகங்
காண்டற் கரியதோர் காடு" என்பது நாலடி.

விட்டின் முறைகளைச் செவ்வனே நடத்தும் உரிமை மனைவிக்கேயுரித்தாதலே மனை, மனைவி, மனையாட்டி, இல், இல்லவள், குடும்பினி, என்னும் பெயர்களே வலியுறுத்தா நிற்கும்.

6. வாழ்க்கைத்துணைக்கு வேண்டுங்குணங்கள்.—துறந்தார்ப் பேணலும், வறுமையும் செல்வமுங் குறியாது விருந்தினரைப்பாதுகாத்து அவர் மனமகிழ்வித்தலும், வறியார்மாட்டு அருளுடைமையும், வாழ்க்கைக்கு வேண்டும் பொருள்களைப் பருவமறிந்து தொகுத்தலும், வருவாய்க்கு ஏற்பச் செலவிடலும், அட்டிற் றொழில்வன்மையும், மலர்ந்த முகமும், குளிர்ந்த மொழியும், கொண்டோன் புரக்கும் நண்புடை மாந்தரும் சுற்றத்தாரும் குஞ்சர முதலிய காலேசங்களும் பல்படை மாக்களும் உள்ளிட்டாரையுண்பித்து அவர்களுண்டபின் தானுண்டலும், கொண்டானிற் சிறந்த தெய்வமின்றெனவும் அவனையின்னவாறே வழிபடுகவெனவும் இருமுதுகுரவர் கற்பித்தவாறும் அந்தணர்திறத்தும் சான்றோர் தேஎத்தும் ஐயர் பாங்கினும் அமரர்ச்சுட்டியும் இன்னவாறு ஒழுகுகவெனத் தலைமகன் கற்பித்தவாறும் ஒழுகுவதாகிய கற்பும், அதிதிபூசையில் விருப்பும், அல்லன செய்தலில்வெறுப்பும், இன்னோரன்ன நல்லனபலவும் வாழ்க்கைத்துணைக்கு வேண்டுங்குணங்களாம்.

இத்தகைய நற்குண நற்செயல்களையுடைய வாழ்க்கைத்துணையமையப்பெறின் அவ்வில்வாழ்க்கைக்கு இல்லாதது யாதுமில்லை. அவளிடம் இக்குணங்களில்லையேல் எத்துணைப் பெருஞ்செல்வமுற்றிருப்பினும் உள்ளது யாதுமில்லை.

"இல்லதென் இல்லவள் மாண்பானால். உள்ளதென்
இல்லவள் மாணாக் கடை."

"மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு"—என்னும்

தெய்வ நூல் உரைகளானே மேலே கூறியவை வலியுறுத்தப்படு மாறு காண்க.

7. இல்வாழ்க்கையின் பெருமை:—ஒருவனது இல்வாழ்க்கையானது அன்பாகிய பண்பையும் அறனாகிய பயனையும் உடையதாகி பிரமசரியம் வானப்பிரத்தம் சந்நியாசம் என்னும் மூந்நிலைக்கண் நிற்பார்க்கும் வருகின்ற பசி, நோய், குளிர்முதலிய துன்பங்களை நீங்க உண்டியும் மருந்தும் உறையுளுமாதிய கொடுத்து நன்கு பாது காத்தலும் களைகணானவராற்றுறக்கப்பட்டு வேறு யாதொரு பற்றுக்கோடுமின்றி நிற்பவர்கட்கும் நல்கூர்ந்தவர்கட்கும் இறந்தவர்கட்கும் களைகணாகிநின்று வேண்டுவன நன்குசெய்தலும், உண்டி முதலியன கொடுத்தலும், நீர்க்கடன் முதலியனசெய்தலும் ஆகிய எல்லா உபகாரச் செயல்கட்கும் பிறப்பிடமாகி விளங்குந்தன்மையது. தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் என்னும் நால்வகையாரையும் பாதுகாத்து அதன்பொருட்டாகத் தன்னையும் பாதுகாக்கும் உரிமை பெற்றுள்ளது. மனத்தையும் புலன்களையும் ஒறுத்தடக்க வேண்டாது ஐம்புலஇன்பங்களாரத்துய்த்து மறுமைப்பேற்றினையும் பெறுவதற்குரிமைவாய்ந்ததுடன் தன் நோயையும் பிறர் நோயையும் நீக்கி வாழ்தலின் தவத்தினுஞ் சிறந்து தலைமைப்பாடெய்தியது. இங்ஙனம் பல்லாற்றானும் சிறந்து மேம்பட்டு நிற்றலால் இல்லறம் துறவறம் என்னும் இரண்டற்கும் பொதுவாகிய அறம் என்னும் மொழியை இல்லறமாகிய தனக்கே உரிமைப்படுத்தி "அறனெனப்பட்டதே இல்வாழ்க்கை" எனவும், "அறனெனப்பட்டது இல்வாழ்க்கையே" எனவும் முறையே ஆசிரியர் திருவள்ளுவரும், ஆசிரியர் பரிமேலழகரும் பணித்தருளப்பெற்ற பெரும் பேறுடையது.

"இத்தகைய நால்வர்களின் மூவருக்கு மிறந்தார்க்கும்
அத்தமுத லற்றார்க்கு மாதார மாதலினால்
உத்தமமா மில்லறமே வாழ்வினுக்கு முபர்கதிக்கும்
வித்துமாந் துறவறத்தின் வேருமா மெனும் வேதம்"

"துறந்தவர்கள் வேண்டியதோர் துப்புரவு நல்கி
பிறந்தவர்கள் காமுறு மிருங்கட னியற்றி
யறம்பலவு மாற்றிவிருந் தோம்புமுறை யல்லார்
பிறந்தநெறி யாதுளதோர் பேருதவி யாதோ"

என்பனவாதியவாக ஆன்றோர் பலசானும் உயர்த்துக் கூறிப் புகழுப் பெற்றது.

8. அறம் செய்யும் முறை:—இங்ஙனமாகிய இல்லறத்தை மேற்கொண்ட தலைவனும் தலைவியும் உருவத்தால் இருவகைப்பட்டுத் தோன்றினும் மனத்தால் ஒருதன்மைப்பட்டு நிற்கவேண்டும். இவ்விருவரும் மனவொற்றுமைப்பட்டு நில்லாவழி அவ்வாழ்க்கை ஒரு சிறிதுஞ் சிறப்புற நடவாது. இவ்விருவரின் மனவொற்றுமையைப்பற்றிக் கூறுங்கால் தருமமென்னுஞ் சரக்கை ஏற்றிய இல்வாழ்க்கை யென்னுஞ் சகடத்தைத் தலைவனும் தலைவியுமாகிய எருத்துக்கள் கருமமென்னும் நுகத்தைப்பற்றி முறையாக ஈர்த்தால் அச்சகடம் எத்துணைத் தூரமுஞ் செல்லும். இவ் இருவருள் ஒருவர் செல்லும் நெறியையே மற்றவரும் பற்றிச்செல்லாது வேறுபாடு சிறிதுறினும் அச்சகடம் நடவாது என்று உவமித்து—

"தருமமெனும் பண்டமிடுஞ் சகடமா மனைவாழ்க்கை
கருமநுகம் பிணித்துமனைக் காதலியுந் தானுமெனும்
இருவராய்ப் பூண்டீர்ப்பி னெத்துணைத்தூரமுஞ்செல்லும்
ஒருவராய்ப் பூண்டீர்ப்பி னோரிறையுஞ் செல்லாதால்"

"காதன் மனையாளுங் காதலனு மாறின்றித்
தீதி லொருகருமஞ் செய்பவே—யோதுகலை
யெண்ணிரண்டு மொன்றுமதி யென்முகத்தாய் நோக்கருங்
கண்ணிரண்டு மொன்றையே காண்"

"ஈதலறந் தீவினைவிட் டீட்டல்பொருளெஞ்ஞான்றுங்
காத லிருவர் கருத்தொருமித்—தாதரவு
பட்டதே யின்பம் பரனைநினைந் திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு"

என்பன வாதியவாக நம்முன்னோரான நல்லறிவாளர் பலரும் கூறுவாராயினர். கருத்தொருமித்து வாழ்பவள் தான் இல்லறத்துக்குரியவளாவள். இங்ஙனமின்றிக் கவர்பட்ட சிந்தையுடைய பொதுமகளிரை "இருமனப்பெண்டிர்" என்று கூறுதலும் இங்குக் கவனித்தற் பாலதேயாம்.

9. தலைவியைப் பாதுகாக்குமுறை:—அன்னை தந்தை உடன் பிறந்தார் முதலிய யாவரையும் விட்டுத் தன்னையே பற்றுக் கோடாகக்கொண்டு வந்த தலைவியை அவளின் அன்னையைப்போல் அன்பு பாராட்டிக் காத்தல் தலைமகன் கடனாகும். மாதுலன் மாமி முதலானவரும் அவ்வாறே கருதி நடத்துங் கடப்பாடுடையராவர்.

"சம்பத்துக்களை விரும்புவோராகில் பிதா சகோதரன்புருஷன் மைத்துனன் இவர்கள் ஸ்திரீகளை கௌரவமாக நடத்தவேண்டும். ஆடையாபரணங்கள் கொடுத்துத் திருப்தி செய்யவேண்டும். ஸ்திரீகளை மகிமைப் படுத்தினால் தேவர்கள் சந்தோஷிப்பார்கள். ஸ்திரீகளைக்கௌரவமாக நடத்தாமலிருப்பார்களாகில் அவர்கள்செய்யும் எல்லாக் கிருத்தியங்களும் பலனின்றி வீணாய்விடும். ஸ்திரீகள் துக்கிக்க அக்குடும்பம் சீக்கிரம் நாசமடையும். அப்படிக்கின்றேல் அக்குடும்பம் செழுமையாயிருக்கும். ஸ்திரீகள் கௌரவம் பெறாமல் சபிப்பார்களேயாகில் அக்குடும்பம் சூனியம் வைத்தாற்போல் முற்றும் நாசத்தையடையும்." என்று மநுஸ்மிருதி கூறுகின்றது.

இவைகளையெல்லாந் தலைவனே முதற்கட்சிந்திக்கற் பாலன். ஏனையரும் கவனித்தற் பாலர். இம்முறையறியாது எலியும் பூனையும் போன்று பகைமை பாராட்டிப் பரிபவப்படுவர் சிலர். இதுமிகவுங் கொடுமையேயாம். தலைவனுந் தலைவியும் மனம் வேறுபட்டவழி அவர்க்கு இன்பப்பேறு ஒரு சிறிதும் இன்றாம். அவர்க்கின்றாகவே இரு முதுகுரவர்க்குமின்றாம், ஏனையர்க்குமின்றாம். தம்முள் மனம் வேறுபாடுறாமற் பாதுகாத்தல் தலைவன் தலைவியிருவர்க்குங் கடனாதல் போலவே மாதுலனாதியரும் அவ்வுரிமை பெற்றவராவர். ஒருமைப்பாடுள்ள வாழ்க்கையின் பெருமையும், அஃதில்லாத வாழ்க்கையின் சிறுமையும் நூல்களான்மட்டுமன்றிப் பல குடும்பங்களில் இன்றைக்கும் கண் கூடாக நாங்காணப் படுவனவேயாம்.

10. வாழ்க்கை முறை:—முப்பான் மொழியில் அறத்துப்பாலில் இல்லறவியல் கூறவந்த பொய்யில் புலவர் இல் வாழ்க்கையின் சிறப்புத்தோன்ற அதனை முதற்கட்கூறி அதற்கு இன்றியமையாத் துணையாதலின் வாழ்க்கைத் துணை நலத்தை அடுத்துக்கூறி, அவ்விருவரும் பெறும் பேறிது வென விளக்குவான் 'புதல்வர்ப்பேற்றை

அதன் பிற் கூறினர். இவை உடற்றொடர் புடையனவாகி அவர்கள் மட்டிற் பெரிதும் நலந்தாற்கு உரியனவாம். பின்னர் அவர்க்கும் பிறர்க்கும் பயன்படுவன வாகிய அன்புடைமை, விருந்தோம்பல், இனியவைகூறல், செய்நன்றியறிதல், நடுவுநிலைமை, அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை, பிறனில் விழையாமை, பொறையுடைமை, அழுக்காறாமை, வெஃகாமை, புறங்கூறாமை, பயனிலசொல்லாமை, தீவினையச்சம், ஒப்புரவறிதல், ஈகை, புகழ் என முறையே தொடுத்து இருபது அதிகாரங்களால் எல்லா நலன்களையும் விரித்தோதியருளினர். மேலே கூறப்பட்ட குணஞ்செயல்களெல்லாம் இல்வாழ்வார்க்கு வேண்டப்படுவன வென்பது பெற்றாம்.

இத்தகைய வாழ்க்கை முறையில் மனையாண்மாட்டு இன்பநுகர்தல் புதல்வர்ப்பேறு கருதியே யன்றிக் கணத்திலழியுஞ் சின்னீரவாகிய சிற்றின்ப வேட்கை மீதூர்ந்து கோடலின்றாதலை விளக்கவே வாழ்க்கைத்துணை நலத்தையடுப்பப் புதல்வர்ப் பேறு வைக்கப்பெற்றதாகும். இதனை—

"நல்லற நூல்களிற் சொல்லறம் பலசில
இல்லறந் துறவற மெனச்சிறந் தனவே
அந்நிலை யிரண்டனுண் முன்னது கிளப்பிற்
கற்றநூற் றுறைபோய்க் கடிமனைக் கிழவன்
நற்குண நிறைந்த கற்புடை மனைவியோ
டன்பு மருளுந் தாங்கி யின்சொலின்
விருந்து புறந்தந் தருந்தவர்ப் பேணி
ஐவகை வேள்வியு மாற்றி யிவ்வகை
நல்லற நிரப்பிப் பல்புகழ் நிறீஇப்
பிறன்மனை நயவான் றன்மனை வாழ்க்கைக்கு
வரையா நாளின் மகப்பேறு குறித்துப்
பெருநலந் துய்க்கும் பெற்றித் தன்றே"

என்னும் ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் திருவாக்கானே தெற்றென வுணரலாம். இத்தகைய மனைமாட்சியை யுணராது,

"கேட்டிட வேட்டவை யாவையு முதவுங்
கற்பகத் தருவென அற்பமுங் கருதாது

அடியுடன் முறித்து முடிவுற எரித்துக்
கரிபெற முயன்ற கம்மியன் போல''

மனையாள் மாட்டடைவது சிற்றின்பமொன்றே யெனக்கொண்டு உடற்றின வடக்கும் ஆவுறிஞ்சு தறியாக்கித் தம் வாழ்நாளை வீணாக்குதல் பெரிதும் பேதமைப் பாலதாம்.

11. விருந்தோம்பல்—விருந்தினரைப் பாதுகாத்தல் இல் வாழ் வாரின் முக்கிய கடமை யாகும்- அதைப்பற்றித்தனியே எழுது வாமாதலின் மேற் செல்வாம்.

(12) இல்வாழ்க்கையின் பயன்.

''தோன்றிற் புகழொடு தோன்றுக வஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று.''

''வசையொழிய வாழ்வாரே வாழ்வா ரிசையொழிய
வாழ்வாரே வாழா தவர்.''

என்பவாகலின் இல்வாழ்க்கையின் பயன் இம்மையிற் புகழ்பெறுதலேயாகும். இதனாற்றான் இல்லறவியலில் புகழ் இறுதிக் கட்கூறப்படுவதாயிற்று. புகழ்பெறுதற்கு ஈகையே கருவியாதலின் பிறர்க்கீந்து புகழ்பெற்று வாழ்வதே இம்மைப்பயனும். இங்ஙனம் புகழ்பெற்று வாழ்ந்தவன் மறுமைக்கட்டேவனாகித் தேவபோகந் துய்த்தல் மறுமைப்பயனும்.

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்'' என்பதால் இதனை நன்குதெளியலாம்.

(13) இல்வாழ்க்கையே வீடுபேற்றையுந்தரவல்லதென்பது.

இல்வாழ்க்கையானது அறம்பொரு ளின்பங்களைப் பயத்தன் மாத்திரையில் நிற்பதொன்றா? வீடுபேற்றினையும்தரவல்லதேயாகும். மிருகத்தன்மைப் பட்டு எல்லா இன்ப துன்பங்களையும் தம்மளவிற் கொண்டு விரிந்த சிந்தையின்றிக் குவிந்த மனத்துடன் இருந்த ஒருவனு மொருத்தியும் தம்முள் மன்றல்வினை முற்றப் பெற்ற பின்னர் அவ்விருவரில் ஒருவர் சுகதுக்கம் மற்றவர்க்கும் உரியன வென்று கொள்ளும்படியான மனநெகிழ்ச்சியாகிய அன்பு முளைதோன்றப் பெறுகின்றனர். அவரவர் உள்ளத்துள்ளே தம்மளவின் அடங்கிக்கிடந்த அன்பானது முளைத்துக் கிளைத்துத் தழைத்து வளர்வதா

கின்றது. துணைவனுடைய இன்ப துன்பங்களனைத்தும் துணைவியினதாகவும் துணைவியின் இன்ப துன்பங்களனைத்துந் துணைவனதாகவும் கொண்டு ஒருவர்மீ தொருவர் அன்பு பாராட்டுவோ ராகின்றனர். இங்ஙனமாயவழி புதல்வரைப் பெறுகின்றனர். பெற்றவுடன் இவர்களின் அன்பு மிகவும் விரிந்து பல்வேறு கிளையாகிப் பரவுகின்றது. அப்பிள்ளைகளின் சுகதுக்கமனைத்தும் இவர் தமவாகக் கோடல் மட்டுமன்று. அப்பிள்ளைகள் பொருட்டுத் தமக்குரிய சகல பொருள்களையும் தமது உடலுயிர்களையுங்கூடச் செலவிடற்கு ஒருப்படுகின்றனர். மக்கட்பேறுடையார்க்கு அன்பு அதிகரித்தலாற்றான் புதல்வரைப் பெறுதல் என்ற அதிகாரத்தின் கீழ் அன்பு என்ற அதிகாரத்தைத் தேவர் வைத்தருளுவாராயினர். புதல்வருக்கு ஒரு பிணிவந்தால் அப்புதல்வரைக் காக்கவேண்டித் தாமே மருந்துண்டு பத்தியங் காக்கின்றனர். புதல்வரது வாழ்நாள் விருத்தியைக்கருதி எத்தனையோ தானங் கொடுக்கின்றனர். தீர்த்த யாத்திரை போகின்றனர். கடவுள் வழிபாடு செய்கின்றனர். இன்னும் என்ன செய்யவேண்டினும் பின்னிடுவாரில்லை. மக்கள் அல்லனசெய்து இடுக்கட்படுத்தினுஞ் சகித்துக் கொள்கின்றனர். இன்னும் மக்கண்மாட்டுளதாய அன்பின் பெருக்கத்தை யாரே அளவிட்டுரைப்பார்?

தசரதச் சக்ரவர்த்தியிடம் விசுவாமித்திர முனிவர் போந்து "நின்புதல்வர் நால்வருளுங் கரியசெம்ம லொருவனைத் தந்திடுதி" எனக்கூறிய பொழுதத்து அச்சொற்கேட்ட சக்கரவர்த்தியின் உள்ளந் துடித்ததை என்னென்று கூறுவோம்!

"எண்ணிலா வருந்தவத்தோ னியம்பியசொன்
மருமத்தி னெறிவேல் பாய்ந்த
புண்ணிலாம் பெரும்புழையிற் கனனுழைந்தா
லெனச்செவியிற் புகுத லோடும்
உண்ணிலா வியதுயரம் பிடித்துந்த
வாருயிர்நின் றூசலாடக்
கண்ணிலான் பெற்றிழந்தா னெனவுழந்தான்
கடுந்துயரங் கால வேலான்"

இதுமட்டோ! கைகேயியானவள் இராமனைக் காட்டிற்கனுப்புமாறும் பரதனுக்கு முடிசூட்டு மாறும் கேட்டவெல்லை, அச்சக்கர

வர்த்தி மனம்புலர்ந்து கூறிய சொற்களைக் கேட்டால் அக்கைகேயி யை யொழிய உருகாதவர் யாருளர்?

"கண்ணே வேண்டு மென்னினு மீயக் கடவேனென்
உண்ணோ ராவி வேண்டினு மின்றே யுனதன்றோ
பெண்ணே வண்மைக் கேகயன் மானே பெறுவாயேல்
மண்ணே கொண்ணீ மற்றைய தொன்றும் மறவென்றான்"

இவ்வாறு புதல்வர் மாட்டும் அவரையுள்ளிட்ட சுற்றத்தார் மாட்டும் நாளுக்குநாள் அன்புபெருகி வழியத் தொடங்குகின்றது. இவ்வாறு தானெனும் நினைப்பும் தனக்கெனும் இச்சையும் ஒழிவதாகிய தன் மறுப்பு, பரோபகாரம், பொறுமை முதலிய வெல்லாம் உள்ளத்திற் குடிகொள் கின்றன. இங்ஙனம் தம்மோடு தொடர் புடையாரிடத்துத் தோன்றிய அன்பானது வரவர முதிர்ந்து எல்லார் பக்கலும் செல்கின்றது. தொடர்புகருதாது யாவர்மாட்டும் செல்லும் நிலையில் இரக்கம் அல்லது கருணையாகின்றது. இவ்வருள் முதிர்ந்து நித்தியாநித்திய விவேகத்தைத் தெளிவித்து

"என்னின் யாரு மெனக்கினி யாரிலை
என்னி னும்இனி யானொரு வன்னுளன்
என்னு ளேயுயிர்ப் பாய்ப்புறம் போந்துபுக்
கென்னு ளேநிற்கு மின்னம்ப ரீசனே"

என்ற தெய்வத் தமிழ்மறைத் திருவாக்கின்படி காணப்பட்டன வெல்லாம் அழியப்படுவனவாகிய உலகில் நமக்குப் பற்றுக் கோடாக வுள்ளவர் கடவுளொருவரே யென்று தெளிவதாகிய மெய்புணர்வு தலைக்கூடச்செய்து பக்தியாகின்றது. பின்னர் பத்தி வலையிற் படுவோராகிய கடவுளின் திருவருட்பேறு சித்தித்தலால் வீடுபெறும் உறுவதாகின்றது. இக்கொள்கையை

"தனக்கென வாழுந் தனிமிரு கத்தின்
மனக்கோ ணிமிர்த்து மற்றைய ரின்பமுந்
துன்பமுந் தனவா வன்புபா ராட்டி
மெள்ளமெள் ளத்தன் னுள்ளம் விரித்துப்
பொறையுஞ் சாந்தியும் படிப்படி புகட்டிச்
சிறிது சிறிதுதன் சித்தந் தெளித்துத்

தானெனு நினைப்புந் தனக்கெனு மிச்சையு
மோய்வுறச் செய்துமற் றொன்றுப் நின்ற
வெங்கு நிறைந்த பேரின்ப வெள்ள
மூங்கி யதனில் மூழ்கிட யாரையும்
பக்குவஞ் செய்யுநற் பள்ளிச் சாலையிவ், வில்லறம்."

எனத் தமிழ் நூலுணர்ச்சியும் ஆங்கிலத் தேர்ச்சியும் பெற்றிருந்த நம்நாட்டுப் *புலவரொருவர் இனியசொற்களால் முறைபடத் தொகுத்துக் கூறியிருக்கின்றனர். இதுமட்டோ. இல்லறத்தின் பயன் ஐம்புல வின்பங்களாரத்துய்த்து அவற்றை வெறுத்து மெய்யுணர் வெய்தி வீடுபெறுதலே யென்பது ஆசிரியர் தொல்காப்பியனூர்க்குங் கருத்தாகு மென்பதை—:

"காமஞ் சான்ற கடைக்கோட் காலை
ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனுங் கிழத்தியும்
சிறந்தது பயிற்ற லிறந்ததன் பண்பே"

என வகுத்தருளினமையாலும் பசுமரத்தாணிபோல் நிலைநாட்டப் படுமென்க. அறுபத்து மூன்றுநாயன்மாருள்ளே இல்லறத்தி லிருந்து வீடுபேறடைந்தோர் பலராதலும் இக்கருத்தையே நிலைநாட்டுவதாகும்.

ஆகவே அறம்பொருளின்பம் வீடு என்னும் உறுதிப் பொருள்கள் நான்கையும் தரற்பாலது இல்வாழ்க்கை யாதலையுணர்ந்து நல்லன வற்றைப் புரிந்து அல்லனவற்றைக் களைந்து பரமகருணாநிதியாகிய சிவபெருமான் திருவருட் பேறுபெற்று என்றும் அழியாப் பேரின்ப வாழ்வை யடைவோமாக.

---

* பி. சுந்தரம்பிள்ளையவர்கள் எம். ஏ.

# (3) விருந்தோம்பல்.

இருந்தோம்பி யில்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு.

மேலே கூறியவாறு இல்வாழ்வார்க்கு வேண்டிய குணஞ்செயல்கள் பலவற்றுள்ளும் விருந்தோம்பல் மிகச்சிறந்த தொன்றாகும். விருந்தினர் பண்டறிவுண்மையிற் குறித்து வந்தாரும், அஃதின்மையிற் குறியாது வந்தாருமென இருவகைப்படுவரென்க. ஒருவன் விருந்துபோற்றுதற்கு அன்பும் இன்சொல்லும் இன்றியமையாதன வென்பதை விளக்குதற்கே விருந்தோம்பற்கு முன்னும் பின்னும், அன்புடைமை இனியவை கூறல், என்ற அதிகாரங்களைத் தேவர்வகுத்தருளுவாராயினர். விருந்தினரைச் சேணிடைக்காண்புழி முகமலர்ச்சியும், அதுகண்டு அணித்தாய வழி இன்சொற்கூறலும், அதுகேட்டு அமர்ந்தவழி வேண்டுவன புரிதலும் விருந்துபோற்றும் முறையாம். விருந்தினர்க்கு மலர் முகங்காட்டாது சிறிது புறக்கணிப்பின் அவ்வளவின் அவர் வாடிச்செல்வர்.

"மோப்பக் குழையு மனிச்ச முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து" என்பவாகலின் விருந்தினரை மகிழ்ந்தேற்பதே இல்லறத்தார்கடனாம்.

விருந்தின் பெருமை:—வேதமோதலாகிய பிரமயாகமும், ஓமம் வளர்த்தலாகிய தேவயாகமும், விருந்தோம்பலாகிய மானுடயாகமும், நீர்க்கடனாற்றலாகிய பிதிர்யாகமும், பலியீதலாகிய பூதயாகமும் என்னும் ஐவகையாகத்துள்ளே விருந்தோம்பலும் ஒன்றாக நிற்பதுமட்டோ? அவற்றுள் நடுநாயகமாக நிற்றலும் உடையது. இன்னும்,

"தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க லானென்றாங்
கைம்புலத்தா றோம்ப றலை" என்பதில் தென்புலத்தாரும் தெய்வமும் கட்புலனாகாமையானும், ஒக்கல் தொடர்பு பற்றினமையானும், தான் தற்பயன் குறித்தமையானும், விருந்து பிரத்தியட்ச

தெய்வமெனவும், தொடர்பு பற்றலுந் தற்பயன் குறித்தது மில்லாத தெனவும் கருதி யிதன் சிறப்புத் தோன்றவே நடுவண் வைத்த முறையும் இதன் மாண்பை நன்கு விளக்கும்.

விருந்து போற்றற்குரிய சாதனம்:—இன்னணமாக இல்வாழ்வார் புரியும் எல்லா அறங்களினும் தலைமை பெற்றுள்ள விருந்து புறந் தருதற்கு மனைவியின் நற்குணமே முக்கிய சாதனமாம். எத்துணைப் பெருஞ்செல்வ முற்றிருப்பினும் மனைவி குணமிலியாயக்கால் விருந்தினரை மகிழ்வித்தல் ஒரு சிறிதும் இயலாது. அறக்கொடிய வறுமை யுற்றகாலத்தே மிகப்பெரிய விருந்தினர் வரினும் மனைவி குணமுடையாளாயின், அது மிகச்சிறப்ப நடைபெறும். விருந்தினரைப் போற்றுதற்குக் குணம் மிகவேண்டுமே யன்றிப் பணம் மிக வேண்டுவதில்லை.

"குடநீரட் டுண்ணு மிடுக்கட் பொழுதுங்
கடனீ ரறவுண்ணுங் கேளிர் வரினுங்
கடனீர்மை கையாறுக் கொள்ளு மடமொழி
மாதர் மனைமாட்சி யாள்"

என்பதனானே தானுற்ற வறுமையால் விருந்தோம்பலிற் குறைபாடுறாமை பெறப்படும். அன்றியும் விருந்தாகவந்தார் தகுதி நோக்காது தமது பொருளளவிற்கேற்ப மலர்முகமுமின்சொல்லுமுள்ளன்புங்கொண்டு இயைந்த மட்டில் உண்டி முதலிய தந்து போற்றலே இல்வாழ்வார் கடனாகும். இதனை

"ஒல்லும் வகையா னறவினை யோவாதே
செல்லும்வா யெல்லாஞ் செயல்" என்ற

வாயுறை வாழ்த்துக்குப் பொருள் கூறும் ஆசிரியர் பரிமேலழகர், "இல்லறம் பொருளளவிற் கேற்பவும், துறவறம் யாக்கை நிலைக்கேற்பவும் செய்தல்" என்று பணித்தருளு மாற்றானுணர்ந்து கோடலமையும். இங்ஙனம் விருந்து போற்றலின் அருமைபெருமைகளனைத்தையும் தேவர்கூறிய விருந்தோம்பலென்ற அதிகாரத்திற் பாக்கக்காணலாம்.

போற்று முறை:—"விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று" என்றவாறு

தேவாமிர்தமாயினும் முதலில் விருந்தினரை யுண்பிக்கவேண்டும். இங்கே அதியமான் நெடுமானஞ்சி அமிழ்தினு மரிதாகக் கிடைத்த நெல்லிக் கனியை, அவன் தானுண்ணாது விருந்தாகவந்த ஔவைப் பிராட்டியாருக் கீந்தமையைக் கருதவேண்டும். அன்றியும், இளையான்குடி மாறனாயனார் அற்புதச் சரிதமும் அறிகுறியாகும். என்னை? ஒருநாள் முழுதும் தமக்கு உணவின்றி இலம்பாட்டாற் றளர்வுற்றிருந்த அந்நாயனாரும் அவர் தேவியாரும் அள்ளிக் கொளலாம் நள்ளிருட் போழ்தின் கொண்மூப் பொழிந்து குளிரு மேல்வையில் விருந்தாகப் போந்த ஒரு சிவனடியாரை உண்பிக்கக் கருதினர். தமக்குணவின்மையையும் கடன்றருவாரின்மையையும் இருட்காலை யென்பதையும் வானம் பொழிதலையும் நினைந்து மனம் புழுங்காது பசித்துவந்தவரை யுண்பிக்கவேண்டுமென்று உண்மையாக நினைந்தனராதலின் முற்பகற்போழ்து வயலிடை வித்திட்ட நென்முளையே அரிசியாயது. மனைக்கூரையே விறகாயது. முளைக்கீரையே கறியாயது. இக்கீரையுஞ் சோறும் அவ்வடியார்க்கு அமிழ்தினுமினிய உணவாயது. வறுமைக் காலத்தும் மனந்தளராது விருந்து போற்றற்கு இதனிற் சிறந்த பிறிதுசான்று முண்டுகொல்? "விருந்தில்லாச்சோறு மருந்து" என்னும் உலக வழக்கு மொழியும், "மருந்தேயாயினும் விருந்தோடுண்" என்ற நீதிவாக்கியமும் எக்காலத்தும் விருந்தினரைப் போற்றவேண்டு மென்பதை வலியுறுத்துவனவாம். இல்வாழ்வார் விருந்தினரைப் புறக்கணிப்பாராயின் விருந்தினர் செய்த பாவமெல்லாம் இல்வாழ்வாருக்கும், இல்வாழ்வார் செய்த புண்ணியமெல்லாம் அவ் விருந்தினருக்கும் சேருமென்று மநுஸ்மிருதி முதலிய நூல்கள் முழங்குகின்றன.

இம்மைப் பயன்:—விருந்து போற்றுவார்க்கு இம்மையில் இலக்குமி கடாக்ஷத்தால் செல்வப் பெருக்க முண்டாமெனவும், அவரது விளைபுலங்களெல்லாம் நன்றாக விளைவெய்து மெனவும், மற்றும் பல சௌக்கியங்களும் உண்டாகுமெனவும் கூறுவர். இதனை,

"அகனமர்ந்து செய்யா ளுறையு முகனமர்ந்
தின்சொல னாகப் பெறின்"

"வித்து மிடல்வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம்." என்பனவற்று லறியலாம்.

மறுமைப் பயன்:—இம்மையில் விருந்துபோற்றுதலைச் செவ்வி து செய்து வந்தவர்கள் அப்புண்ணிய விசேடத்தாலே மறுமையிற் றேவர்களெல்லாம் எதிர்கொண் டழைத்துப் பெருஞ்சிறப்புச் செய்யத் தேவபோகமனுபவித்து வாழ்வார்கள் என்பதனை

"செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு" என்பதாற் காண்க.

விருந்தபர முடியாமைக்கிரங்கல்:-இராமபிரானைப் பிரிந்த சீதாபிராட்டியார் தற்பிரிவால் தன்றலைவன் வருந்திநிற்கும் நிலைகளை நினைந்து, அவள்வருந்துதலைக்கூறுமிடத்து,

"அருந்து மெல்லட காரிட வருந்துமென் றழுங்கும்
விருந்து கண்டபோ தென்னுறு மோவென்று விம்மும்
மருந்து முண்டுகொல் யான்கொண்ட நோய்க்கென மயங்கும்
இருந்த மாநிலஞ் செல்லரித் திடவுமாண் டெழாதாள்". எனவும், கணையாழி பெற்றவுடன் மகிழ்ந்த நிலையைக் கூறுமிடத்து,

இருந்துபசி யாலிட ருழந்தவர்க ளெய்தும்
அருந்தமுத மாகிய தறத்தவரை யண்மும்
விருந்துமென லாகியது வீயுமுயிர் மீளும்
மருந்துமென லாகியது வாழிமணி யாழி. எனவும் கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பர் கூறுவாராயினர். கோவலன் மனைவியாகிய கண்ணகியென்பாள் பண்டு தான் இழந்தவற்றைக் கூறுங்கால்

"அறவோர்க் களித்தலும் அந்தண ரோம்பலும்
துறவோர்க் கெதிர்தலுந் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும் இழந்த வென்னை"

எனக்கூறினள். இங்கே "தொல்லோர் சிறப்பின் விருந்தெதிர் கோடல்" என விசேடணங்கொடுத்து இளங்கோவடிகள் கூறியது விருந்து போற்றலின் உயர்வைக் கருதியேயாமென்பது கவனித்தற்பாற்றும். "இல்லாளையஞ்சிவிருந்தின் முகங்கொன்ற நெஞ்சிற் புல்லாளனாக" எனச்சீவகன் கூறும் வஞ்சின மொழியிற் றிருத்தக்க தேவர் கூறுவராயினர். இவற்றால் விருந்து போற்றுதலால் வரும் விழுப்

பத்தையும், போற்றுமையாற் போதரும் இழுக்கத்தையும் நம் முன்னோர்கண்மட்டுமன்றிப் புறமதத்தினரும் எடுத்துக்கூறி வந்திருக்கின்றன ரென்பது பெறப்படும்.

போது வகை:—இவையிற்றை யுணராது தற்காலத்துச் செல்வரிற் பல்லோர் புதியராய்ப் போந்தார்க்கு நகைமுகங்காட்டி நன்மொழிகூறி நாடொப்பன செய்ய நாடாதவராகிக் கண்ணிருந்துங் குருடராகவும் செவியிருந்தும் செவிடராகவும் வாயிருந்தும் மூகராகவும் பொருளிருந்தும் வறியராகவும் செல்வச் செருக்காலிறுமாந்து தம் வாழ்நாளைப் பாழ்நாளாக்குகின்றனர்.

"செல்வம்வந் துற்ற காலைத் தெய்வமுஞ் சிறிது பேணார்
சொல்வன வறிந்து சொல்லார் சுற்றமுந் துணையு நோக்கார்
வெல்வதே நினைவ தல்லால் வெம்பகை வலிதென் றெண்ணார்
வல்வினை விளைவு மோரார் மண்ணின்மேல் வாழு மாந்தர்"

என்னுங்கவி இவர்கள் செயல்களை யுள்ளவாறுபுலப்படுத்துவதாகும்.

"ஈகை யரிதெனினு மின்சொலினு நல்கூர்தல் ஓகோ கொடிது கொடிதம்மா" என்றவாறு குளிர்ந்த மொழி கூறவும் பிற்படுகின்றனர். இவ்வுலக மனைத்தும் நயமொழிக்கு வசப்படும். இன்சொற் கூறாது எத்தனை பொருளை வாரியிறைப்பினும் அப்பொருளைப் பெற்றவர் மனமகிழ்ச்சி கொள்ளார். கொடை சுருக்கினும் முகமலர்ந்து வரவேற்று நன்மொழி கூறப்பெற்றால் அவ்வளவில் மிகமகிழ்வதே யுலகியல். இவற்றாற் செலவதிகப் படுவதில்லை. உலகத்தாரது அன்பெல்லாம் வரவாக அமையும்.

"எதிர்சென்று முகமன் கூறி யிருக்கையு நல்கி யுண்டே
யதிசய மெனவி னாவி யவரவர்க் கியன்ற வாறு
துதிபுரிந் துபச ரிக்குந் தொழிலினாற் செலவொன் றில்லை
அதிர்கட லுலகு ளோர்தம் அன்பெலாம்வரவா மன்றே"

என்பதை இல்வாழ்வார் நன்கு கவனித்தற்பாலர். இன்சொற் கூறல் முதலிய எல்லா அறங்களையும் வழுவாது நடத்திவரவேண்டும். அவை யொவ்வொன்றையும் விரிக்கிற் பெருகுமாதலின் விருந்தோம்பலாகிய இவ்வொன்றைப்பற்றி மட்டும் இவண் சிறிது கூறினேம். ஏனையவற்றையும் தெய்வநூலாகிய மெய்ந்நூல்களானும் ஆன்றோர் மொழியானும் அறிதலமையும்.

# (4) இன்சொல்.

ஒருவனுடைய மனத்தின்கண்ணுள்ள நன்மையை வெளிப் படுப்பன மலர்முகமும் இன்சொல்லுமாம். இவற்றுள் இன்சொல் ஏனையதையும் தர வல்லது. இன்சொற் கூறுங்கால் முகமலர்ச்சியும் தோன்றுவதாகும். யாரிடத்தும் இனிமையாகப்பேசுகிறவனுக்கு உலகமெல்லாம் வசமாகும். அவனுக்கு யாரும் பகைவராகார். கடுஞ்சொற் பேசுபவன் எத்தனை உபகாரச் செயலை உடையனாயினும் அவனை உலகத்தார் விபக்கமாட்டார்கள். சகல நன்மைகளும் நல்வார்த்தைகளாலே விளையும். சகல கெடுதியும் கொடுஞ்சொல்லாலே விளையும். இல்லறத்தார்க்கு இன்சொல் இன்றியமையாத தொன்று. துறவறத்தார்க்கு அருள்போல்வது. அருளில்வழித் துறவறம் நன்றுநடைபெறாததுபோல் இன்சொல் இல்வழி இல்லறம் சிறவாது. நாம் எப்போதும் தனித்திராமல் பலருடன் பழகி வாழத் தக்கவர்களாதலின் யாரிடத்தும், எக்காலத்தும் இனிமையாகவே பேசவேண்டும். உபகாரம் செய்தற்குப் பொருளாதியன இல்லாதிருக்கலாம். இன்சொற் கூறுதற்கு நம் மனத்தில் இல்லாத தொன்றுமில்லை. இதனாற் செலவொன்றுமில்லை. உலகத்தார் அன்பெல்லாம் வரவாக அமையும். சிலர் உபகாரஞ்செய்யும் வள்ளன்மை யுற்றிருந்தும்உபகரிக்கப் பெறுவாரிடத்து வெட்டெனப்பேசி, வந்தவர் மனத்தைப் புண்படுத்திப் பின்னர் வேண்டு முதவியை நன்கு செய்கின்றனர். இங்ஙனஞ் செய்வார்க்குப் புகழும் புண்ணியமுமில்லை." அழுக்காறவாவெகுளி யின்னாச்சொ ஹன்கும் இழுக்கா வியன்ற தறம்" எனத்தேவரும்,"நல்லவை நாடிச் சொல்லுங்காலும் கடியவாகச் சொல்லின் அறனாகா" எனப் பரிமேலழகரும் கூறுவர்.

"அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை, நாடி யினிய சொலின்" "சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும், இம்மையும் இன்பந் தரும்" என்பனவும் தேவர் திருவாக்குக்களே. கோபந்தோன்றியக்காலும் இன்சொற் கூறுவோமாயின் அக்கோபம் தானேயடங்கிவிடும். கடுஞ்சொற் கூறுவோமாயின் கோபமதிகரித்துப் பாவத்தையும் பகையையும் பெருக்கி மீளாநரகுக்கு ஆளாக்கிவிடும்.

ஆகவே இன்சொற் கூறுவோனுக்கு மனத்தூய்மைபெருகுகிலைத்தலால் அறமும், அவ்வறத்தாலும் யாவரும் பகையின்றி நட்புக்

கோட்லாலும் பொருளும், இவ்விசண்டாலும் இன்பமும் எய்துவன வாகும். இம்மூன்றும் பெற்றான் புண்ணியமேலீட்டாற்சுவர்க்காதி மோக்ஷ இன்பத்துக்கு முரியவனாவன். இதனாற்றான்

"இன்சொல் மறுமையு மிம்மையும் இன்பந்தரும்." என்றார் பெரியார். இவைகட்கு மாறாக மனத்தூய்மை யின்மையும், பகைமையும், பொருளிழப்பும், துன்பமும், பிறவும் தருவன கொடுஞ்சொற்களாமென்பது சொல்லாமலே யமையும். இக்கருத்துக்களை வைத்துத்தான் "ஏயம்படவுரை" "வெட்டெனப் பேசேல்" எனக் கட்டளை யிட்டனர் ஔவைப்பிராட்டியார். இன்சொல், புகழும் புண்ணியமும்பிறநலங்களும் வளரச்செய்யும்பெருமையையுப்,கொடுஞ்சொல்,இகழ்பாவமாதி பிறகேடுகளைத்தருஞ்சிறுமையையும்நோக்கியன்றோ "இனிய வுளவாக இன்னாத கூறல், கனியிருப்பக் காய்கவர்ந்தற்று" எனச் செந்நாப் போதாரும், கனி-ஔவையுண்ட நெல்லிக்கனி, காய்-காஞ்சிரங்காய் எனப் பரிமேலழகரும் கூறுவாராயினர்.

எவ்வளவு பொருளைத்தான் அள்ளிபள்ளிக் கொடுப்பாராயினும் வெட்டெனப் பேசித்தருவார்க்குப் புகழ் புண்ணிய முளவாகா. சிறிதளவே கொடுப்பாராயினும், இன்சொற்கூறி யுதவுவார்க்கு அவருதவும் பொருளளவிற்கு அதிகமான புகழ் புண்ணிய முண்டாகும். இவ்விஷயத்தை நாம் பலரிடம் நேரில் பிரத்தியட்சமாக அறிகின்றோம்.

இன்சொற் கூறுவாரும் கொடுஞ்சொற் கூறுவாரும் முறையே குயிலும், நாயும்போல்வர். குயில் தனக்குக் கவலைக்காலத்தும் இனிமையான தொனியையே செய்யும். நாயோ தனக்கு மகிழ்ச்சிவந்த காலத்துங் கேட்பவர் காதில் நாராசம் நுழைத்தாற்போல ஊளையிட்டுக் குலைக்கும்.

எல்லாரும் எக்காலத்தும் எல்லாரிடத்தும் இன்சொற்களையே கூறவேண்டும். கொடுஞ்சொற்களை அறவே யொழிக்கவேண்டும். வாயாற் சொல்லுதற்குக் கூறிய இவ்விதிதான் எழுதுபவரும் கொள்ளத்தக்கது. சிலர் தாமெடுத்த விவகாரம் முட்டுப்பாடுற்றபோது தூஷணத்திரப் பிரயோகஞ்செய்ய வருகின்றார். இதனாற் பலராலும் இகழப்பட்டு அவமானமடைகின்றார். பேசுபவரும் எழுதுபவரும் எச்சமையத்தும் இனிய வசனங்களையே யுபயோகித்தல்தான் தகுதி.

"அகனமர்ந்து செய்பா ளுறையு முகனமர்ந்
இன்சொல னாகப் பெறின்"

# (5) புலான் மறுத்தல்.

## மனிதர்க்கு நல்லுணவு மாமிசமா? காய்கறியா?

மனிதர்களின் சரீரபுஷ்டி ஆயுசுவிர்த்தி அறிவு வளர்ச்சி முத லியவற்றிற்கு ஏற்றவுணவு மாமிசமா காய்கறியா என்று ஆராய்ந்து அவ்வவற்றின் குணகுணங்களை விளக்கி நமது (பாநுவில்) வெளியிட வேண்டுமென்று நமது நண்பர் சிலர் விரும்பியவண்ணம் இந்த வியாசத்தை வெளியிடுகிறோம். இவ்விஷயத்தைப்பற்றி அமெரிக் காகண்டத்து நியூயார்க்குப் பட்டணத்தில் சாகபட்சகர்சபையிலே சுவாமி அபேதானந்தராற் செய்யப்பட்ட ஆங்கில உபந்யாசத்தின் மொழி பெயர்ப்பாக மதுரைச் செந்தமிழ்ப் பத்திரிகையில் வெளி யிடப்பெற்ற "இந்து சாகபக்ஷணியாயிருப்பதேன்" என்ற வியாச த்தையும், மற்றுமுள்ள தமிழ் நூல்களையும் ஆதாரமாகக்கொண்டு இதனை எழுதப்புகுந்தனம்.

பல்லாயிர வருடங்கட்கு முன்னரே இவ்விஷயத்தை நீள நினைந்து ஆராய்ந்து மனிதர்க்கு நல்லுணவு காய்கறி வகைகளே யெனக்கண்டறிந்து ஒழுகியவர்கள் நம் இந்துக்களேயாவர். மற் றத்தேசத்தவர்கள் நம்மிடமிருந்தே இந் நற்பழக்கத்தை முதலிற் கண்டறிந்தார்கள். மாமிசபக்ஷணங் கூடாதென்று யுக்திக்கும் சாஸ் திரத்துக்கும் பொருந்துமாறு காரணங்காட்டி நமது இருஷிகள் எத் தனையோ நூல்களை யெழுதி வைத்துள்ளார்கள். சரித்திரம் ஏற்ப டாத மிகப்பழைய காலத்திலேயே இப்பழக்கம் நம்மவர்களிடமிருந்த தாகும். பிதா கோரர் என்ற கிரேக்க ஆசிரியர் நம்மவரிடமிருந் தே இதனைக்கண்டறிந்தாரென்று சரித்திரம் வல்லார் கூறுகின்றனர். அமெரிக்கர் முதலிய மேற்றிசை யார்கள் புலால் மறுத்தலை மேற் கொண்டவர்களாகி இதற்கெனவே சபைகளை ஏற்படுத்தியிருக்கின் றார்கள். இச்சபைகளில் லட்சக்கணக்கான அங்கத்தவர்கள் சேர்ந்து பாராட்டி வருகின்றார்கள். அந்நியநாட்டார்கள் புலாலுண்ணாமை யின்பயனை நம்மிடமிருந்து தெரிந்து கையாண்டு அபிவிர்த்தியடை யும் நாகரீகம் மிக்க இக்காலத்தில் நம்மவரில் (இந்துக்களில்) பெரும் பாலார் புலாலுண்பவர்களாயிருப்பதைக் காண்பது எத்துணை அவ

மானமான காரியம்.? புலாலுண்ணுமை தமது குலவொழுக்கமாகப் பரம்பரையிற் கொண்டிருந்த உயர்வகுப்பாரிற் சிலரும் தற்கால நாகரீகம் பேசிப் புதிதாகப் புலாலுண்ணப் புகுகின்றனரே. இது எவ்வளவு பரிதாபமான நிலைமை? மற்றும் சில ஜாதியார்கள் ஆதியில் மாமிசம் புசியாத வகுப்பின ராயிருந்தும் காலாந்தரத்தில் வேற்றுத்தேசவாசமும் மிலேச்சர் சகவாசமும் கொண்டு தமது பூர்வ நிலையை முற்று மறந்து தாமும் மாமிசபக்ஷணிகளா யிருக்கின்றனர். "நோன்பென்பது கொன்று தின்னுமை" என்பதையறியாது விரத காலங்களிற் கூடப் புலா லுணவை விசேடமாகக் கொள்கின்றனர். இச்செயல் கொடுமையினும் கொடுமையேயாகும். தற்காலத்துப் பிரசித்திபெற்ற ஆங்கிலவயித்திய நிபுணர்களும் ஆகார முறையைச் சீர்திருத்துபவர்களும் மனிதர்க்கு ஏற்றவுணவு காய்கறி பதார்த்தங்களே எனக் கண்டறிந்து வெளியிட்டு வருகின்றார்கள்.

மாமிசவுணவு அஜீர்ணம், குன்மம், கீல்வாய்வு, க்ஷயம் முதலிய அநேக வியாதிகட்குக் காரணமானதென்றும், உண்பதற்காகவே கொழுக்க வளர்க்கப்பட்ட ஆடு கோழி முதலியவை முறை தப்பிய வுணவு கொடுக்கப்படுவதால் ஏதேனும் ஒருவிதநோய்க்கு வித்தாகவே வளர்கின்றன வென்றும், இவற்றின் மாமிசங்களின் மூலம் சில விஷக்கிருமிகள் மனித சரீரத்துட்புகுந்து பலவித கெடுதிகளைச்செய்கின்றன வென்றும், மருத்துவ சாஸ்திர நிபுணர்கள் காரணங்காட்டி விரித்து எழுதியுள்ளார்கள். மாமிச வுணவு உடம்பில் ரத்தமிகுந்து சூடு அதிகப்பட்டு ரத்தாசயத்தின் தொழில் அளவுக்கு மிஞ்சி நரம்புத்தளர்ச்சி அதிகரித்து உயிர்வலிமைகுன்றி அவதிப்படுதற்கே ஏதுவாகின்றது. உடற் கூறு அறிந்த சாஸ்திரிகள், மனிதனுடைய பற்கள், இரைப்பை, ஆகாரக்குழல் இவைகளின் அமைப்பையும், ஜீர்ணிக்கும் தன்மையையும் உற்று நோக்கிப் பரீக்ஷித்து "மனிதன் தழை குழை முதலிய சாகபக்ஷணிப் பிராணிகளையே யொத்திருக்கின்றான். மாமிச பக்ஷணிப் பிராணிகளை யொத்திருக்கவில்லை. ஆனதால் மாமிசவுணவு மனிதருக்கு ஏற்றதன்று" என்கிறார்கள்.

மாமிசங்களின் இயற்கைத்தன்மையையும் தழை குழை காய்கனி முதலிய சாகபக்ஷணங்களின் இயற்கைத் தன்மையையும் பரீக்ஷித்துப் பார்த்தால் தசை வளரவும், நரம்புகள் பலப்படவும், சரீர புஷ்டிகொள்ளவும் வேண்டியசத்துக்கள் தாதுவர்க்கமாகிய சாகபக்ஷணங்களில்தான்

நிறைந்திருக்கின்றன என்பது தெளிவாகும். சரீரவளர்ச்சிக்கு ஆதாரமான கொழுப்பும் லோக வஸ்துக்களும் மாமிசங்களில் இருப்பதினும் காய்கறி வகைகளில் அதிகமாகவே இருக்கின்றன. அன்றியும் மாமிச வர்க்கத்தில் இல்லாத சில சத்துவர்க்கங்கள் காய்கறி வகைகளில் இருக்கின்றன. இது மட்டோ! மாமிசங்களிலுள்ள கெட்ட வஸ்துக்கள் காய்கறி வர்க்கங்களில் சிறிதும் இல்லை. கசாப்புக் கடையிலிருந்து மாமிசத்தைக் கொண்டுவரும்போது பார்த்தால் மாமிச பக்ஷணிக்கும் அருவருப்பேயுண்டாகும். சிலர் வாந்தியெடுப்பதும் உண்டு. காய்கறி பதார்த்தங்களைக் காணும்பொழுதே மனோரம்மியமுண்டாகும்.

இவ்வாறிருக்கவும் மாமிசமுண்ணும் வழக்கம் மனிதர்கட்குள் எப்படி வந்ததென்ற கேள்வி பிறக்கலாம். இக்கேள்விக்கு விடையாகச் சரித்திரகாரர் கூறுவதாவது:— ஆதியில் மிருகப் பிராயமாகத் திரிந்த ஜனங்கள் அவ்வப்போது கிடைத்த காய்கறி வகைகளைப்புசித்து உதராக்கினியைத் தணித்து வந்தனர். அவை எக்காலத்தும் வேண்டுமளவு கிடைத்தல் அருமையாதலின் வயிற்றின்கொடுமையால் சிறிய பிராணிகளைத் தின்னத் தொடங்கினர். பின்னர் உழவுதொழிலையறிந்து ஆகாரத்துக்கு வேண்டும் பொருள்களையெல்லாம் உற்பத்தி செய்துகொண்டனர். பின்னர் வரவர எல்லாப் பொருள்களின் குணாகுண பரிசீலனை செய்து உண்ணத் தகாதவற்றை யொழித்து உண்ணற்குரியவற்றையே யுண்டுவாழ்வாராயினர். இங்ஙனம் வயிற்றின் கொடுமைபற்றிவந்த கெட்ட பழக்கத்தால் மாமிசபக்ஷண நிகழ்ச்சியுண்டானதன்றி இயற்கையமைப்பில் அது ஏற்பட்டதன்று. இயற்கையமைப்பு சாகபக்ஷணமேயாகும். இங்ஙனமின்றி மாமிசபக்ஷணம் இயற்கையமைப்பென்பது அறியாமையல்லது வேறில்லை. தற்காலத்தில் குதிரைகளை மாமிசமுண்ணப் பழக்கலாம். குரங்குகளை வண்டி நடத்தவும் காபி, டீ குடிக்கவும் பழக்கலாம். கரடிகளை சுருட்டுக்குடிக்கப் பழக்கலாம். இவைகளெல்லாம் பழக்கத்தால் வந்தனவேயன்றி இயற்கை யமைப்பென்று கொள்ளக்கூடுமோ? ஆகவே மாமிசபக்ஷணம் பழக்கத்தினால் வந்ததொரு கேடேயென்பது நிச்சயம்.

"தெள்ளறிவு, அழகு, நோயற்ற வாழ்வு, சரீரவலி, மனவலி, ஆத்மசுகம் இவைகளை வேண்டுபவன் ஊனுண்ணா திருக்கக் கடவன்" என்பது மஹாபாரதம்.

இவ்வாறாக நம் இந்துக்கள் பெரும்பாலாரிடம் பழக்க வலிமையால் நாளடைவில் வேரூன்றிப் புகுந்துள்ள புலாலுணவைப் பற்றிய தீமைகளை நன்கு ஆராய்ந்த விவேகிகள் முற்றும் விலக்கிவருகின்றனர். விவேகத்தாலும் மனோதிடத்தாலும் விலக்குதற்குச் சக்திபற்ற வேறு சிலரோ தத்தமக்குத் தோன்றியவாறு வாதிக்கமுற்படுகின்றார். இவர் கூறும் வாதங்களைப்பற்றிச் சிறிது ஆராய்வாம்.

(1) பரம்பரையிற் றின்றுவந்த பழக்கமாதலின் குற்றமில்லையென்பா ரொருசாரார்.

(2) புலாலுடம்பிற்குப் புலால்தான் பலம் தருவதென்பா ரொருசாரார்.

(3) விசுவாமித்திரர் முதலிய மஹான்கள் புலாலுண்ணவில்லையா வென்பாரொருசாரார்.

(4) கண்ணப்பநாயனார் கடவுளுக்கு நிவேதிக்கவில்லையோ வென்பா ரொருசாரார்.

(5) இத்தனைகாலம் தின்றுவிட்டு இனி நிறுத்துவதால் பயனில்லையே யென்பாரொருசாரார்.

இவ்வாறு கூறுபவர்க்கு முறையே நியாயங் கூறி மறுத்து மேற் செல்வாம்.

(1) பரம்பரைப் பழக்கமெல்லாம் கொள்ளத்தக்கன வென்பதும், புதிய பழக்கமெல்லாம் தள்ளத்தக்கன வென்பதும் பொருந்தா. பரம்பரைப் பழக்கமாயினும் தீமைகண்ட போது நீக்கவேண்டும். நூதனப் பழக்கமாயினும் நன்மையிருப்பின் சேர்க்கவேண்டும். ஒவ்வொரு செயலிடத்தும் நன்மை தீமைகளையாராய்ந்தேகொள்ளுதலும் தள்ளுதலும் வேண்டுமன்றி காலத்தின் நீட்சிகருதி தீமையென்றறிந்தபின்னும் தள்ளலாகாதென்பது பொருந்தாது. "தொன்மையவாமெனு மெவையு நன்றாகா இன்று தோன்றிய நூலெனு மெவையும் தீதாகா" என்பது ஆன்றோர் கூற்று. களவு தொழிலையே செய்து வந்த கள்ளர் சாதியிற் பிறந்த வொருவன் அறிவுடையனானபொழுதும் பரம்பரைத் தொழிலென்று திருடப்புகலாமோ? அத்திருட்டை அரசாங்கத்தார் அறிந்தால் இவன் குலத் தொழிலைத்தானே செய்தானென்று தண்டனை செய்யாது விடுவாரோ? பரம்பரைத் திருடனுக்கு அதிகத் தண்டனை யன்றோ விதிப்பார்கள்? ஆதலின் பரம்பரைப் பழக்கமாயினும் அதன் தீமையை யறிந்த பின்னர் நீக்குதலே முறையாகும்.

(2) புலானுடம்புக்குப் புலால் நலஞ்செய்வதில்லை யென்பதை மேலும் விளக்கினும். மாமிசபக்ஷணிகளாகிய சிங்கம் புலி முதலி யன 30 அல்லது 40 வருஷங்களுக்கு மேல் ஜீவிப்பதில்லை. சாக பக்ஷணியாகிய யானையோ 300 வருஷங்கள் வரை ஜீவிக்கின்றன. தொத்து வியாதிகளான பேதி வைசூரி பிளேக் முதலியவை மாமிச பக்ஷகர்களிடத்துப் பரவுகின்றனவே யல்லது சாகபக்ஷகர்களான சுத்தபோஜன முடையவர்களிடம் பரவக்கண்டிலேம். மாமிச பக்ஷகர்களைப் பார்க்கிலும் சாகபக்ஷகர்கள் சத்துவகுண விசேடமும் புத்தி கூர்மையும் தேகாரோக்கியமும் அழகும் பெற்றிருத்தல் பிரத்தியக்ஷமே. இந்தியப்படையில் சீக்கிய காலாட்படையிருப் பதை யாவருமறிவர். இப் படைவகுப்பினரைப் போல பலமும் வீரமும் உறுதியுமுடைய சுத்த வீரர்கள் ஆங்கில காலாட் படை களில் கூடயாருமில்லை. யுத்தகளத்திற் பின்வாங்குதல் இவர்கட்குத் தெரியாது. கைச்சண்டையில் ஒரு சீக்கியன் ஏனைய மூன்று பேருடன் எதிர்த்துத் தாக்குவான். ஆனால் இச்சீக்கியர்கள் புலா லுண்பதில்லை. சாராயங் குடிப்பதில்லை. சுருட்டுப் பிடிப்பதில்லை. அப்படியிருந்தும் இவர்களை விடப் பலசாலிக ளில்லையெனப் பெயர் பெற்றுள்ளார்கள். தானிய வுண வுண்ணும் கோடிக்கணக்கான ஸ்காட்டு மேன்கள் நோயற்றுப் பலமுற்று அறிவிற் சிறந்து இருக் கின்றார்கள். ஜர்மனியில் ஏழு மல்லர்களுடன் நடந்த பந்தய வோட்டத்தில் மாமிஷ பக்ஷகர்களைப் பார்க்கிலும் சாகபக்ஷகனான ஒருவனே வெற்றிபெறக் கண்டார்கள். மூடத்தனமான மூர்க்கத்து வத்தை வீரமென்றும் பலமென்றும் கருதுவது தவறு. ஒரு குதி ரையை ஒரு புலி கொல்லும். இதனால் குதிரையினும் புலி பல முடையதாகுமா? ஒரு பெரும்பாரத்தை நெடுந்தூரம் இழுத்துச் செல்லும் தசைவலி குதிரைக் குள்ளதே யன்றிப் புலிக்குண்டா குமா? ஒருயானையை ஒரு சிங்கம் கொல்லும். இதனால் யானை யின்பலம் சிங்கத்துக் குண்டென்னலாமோ? ஆயிரம் பவுண்டுக்கு மேற்பட்ட நிறையுள்ள ஒரு பிரங்கியை யானை தூக்கும். சிங்கம் தூக்குமா? மாமிச பக்ஷணிகளான புலியும் சிங்கமும் மூர்க்க குண முள்ளவைகளே யல்லது குதிரையையும் யானையையும் போல் பலமுள்ளவைகளாகுமா? இதனால் தேகவலிமைக்கு ஏற்றது சாகபக்ஷ ணமேயன்றி மாமிசபக்ஷணமன்று என்பதும், மூர்க்கத்தனமே மாமிச பக்ஷணத்தால் வருமென்பதும் நிதர்சனமன்றோ? இதுபற்றியன்றே "ஊனைத்தின் றூனைப்பெருக்காமைமுன்னினிதே" என்றார்பெரியோர்.

(3) தவவலிமையால் சாபாநுக்கிரஹ சீலர்களாக விளங்கும் விசுவாமித்திரர் முதலிய பெரியார் "எவ்வுயிரும் பராபரன்சந் நிதியதாகும் இலங்குமுயி ருடலனைத்தும் ஈசன கோயில்" என்றவண்ணம் உலகத்தில் தோன்றும் எல்லாப் பொருள்களையும் ஈசுவராம்ஸமாகக் காணும் ஞானநோக்குடையராதலின் அவர்கள் கடாட்சவீக்ஷணைத்திலீடுபட்ட பொருள்கள் யாவும் மஹா புனிதப் பொருள்களாய் விடுகின்றன. சத்துவகுண மேலீட்டால் கண்டன வெல்லாம் கடவுள் வடிவாகக் கொண்டு "ஓடுஞ்சரி பொன்னுஞ்சரி, உறவுஞ்சரி பகையுஞ்சரி, வீடுஞ்சரி காடுஞ்சரி, மேலுஞ்சரி கீழுஞ்சரி" எனக் கருதுவார். அப்பெரியார் செயல்களைப்பற்றி ஆராய்தற்கு நாம் யார்?

"ஆனைமதப் பட்டால் அலங்காரம் ஆகும் நாய்
தானுமதப் பட்டால் சரியாமோ—ஞானி
தடைமீறி னாலும் சரியாகும் கன்மி
கடைமீறல் ஆகாது காண்"—என்பது இவண் கவனிக்கற்பாலது. ஞானிகள் செயலை நாம் பின் பற்றுதற்கு அருகரல்லேம். விசுவாமித்திரர் திரிசங்கு சுவர்க்கத்தைச் சிருஷ்டித்தனரே. அது போன்ற அற்புதச் செயல்கள் எத்தனையுண்டு? அவற்றிலொரு சிறு செய்கை யேனும் நம்மாலாகுமா?

(4) கண்ணப்ப நாயனர் புலாலுணவைக் கடவுளுக்கு நிவேதனம் செய்ததும், பரம கருணாநிதியாகிய எம்பெருமான் அதனை அமுதினுமினிதாக் ஏற்றருளியதும் உண்மையே. அப்புண்ணிய மூர்த்தியைப்போல அன்பு கசிந்து தன்னையு மறந்து இருகண்களையும் தோண்டிச் சாத்தும் திடபக்தி முதிர்ச்சி நமக்கும் வந்தால் நமது செயல்களில் குறைகுண ஆராய்ச்சிக்கு இடமில்லையாம். எப்பொழுதும் மாயவலைக்குட் சிக்கி, யான் எனது என்னும் அகங்கார மமகாரங்களில் முழுகிக்கிடக்கும் நமது சிறுமை எங்கே! அவரது பெருமை எங்கே! அணுவுக்கும் மேருவுக்குமுள்ள வித்தியாசத்திலும் அதிகப் படுமன்றோ? விரிக்கிற் பெருகும்.

(5) இத்தனை நாள் வரை புலாலுண்டு வந்தமையால் இனி விடுவதில் பயனில்லை என்பது பொருந்தாது. அறியாமையாற் செய்த இழிதொழில்களையெல்லாம் அறிவுவந்தபோது நீக்கிவிடுவதுதான் அறிவின் பயனாகும். உலகியலும் அதுதான். பாலப்பருவத்தே ஆடை யுடுத்தாது மலமூத்திராதிகளைக் கையாலளைந்து மேலெல்லாம்

பூசிவந்த குழந்தை, குமாரப்பருவம் வந்ததும் ஆடைபுனைதலும் மலமூத்திராதிகளைக் காணினும் அருவருப்பெய்துதலும் இயல்பன்றோ! பாலப்பருவத்தே நின்ற நிலையை விடாது ஆடையின்றித் திரியினும் மலமூத்திராதிகளைத் தீண்டினும் உலகர் பரிகசித்துப் பயித்தியகாரன் என்று எள்ளிநகைத்துக் கல்லெறி தருவாரன்றோ? ஆதலின் அறிந்த வழிநீக்கலேயறிவுடைமையாகும்.

இனி பொது வகையாக ஆராய்வாம். புல் மரம் ஈ எறும்புபக்ஷி மிருகம் மனிதன் இவை யனைத்திற்கும் உயிரும் மனமும் சுகதுக்கங்களுமுண்டு. அறிவு வகையில் ஏற்றத்தாழ்ச்சி யுண்டு. உயிரும் மனமும் இன்ப துன்பங்களும் எல்லாருக்கும் ஒன்று போலவேயிருக்கின்றன. இப்போது மனித வர்க்கத்திற் பிறந்திருக்கும் நாமும் முன்னொரு காலத்தில் புல் முதலியனவாகத் தோன்றியிருந்தவர்களே என்பது தான் இந்து மதக்கொள்கை. "புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப், பல் விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக், கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்ச், செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள், எல்லாப் பிறப்பும் பிறந்திளைத் தேன் எம்பெருமான்" என்று ஸ்ரீவாதவூரடிகள் திருவாய்மலர்ந்தருளியிருப்பதும் இக்கருத்தையே வலியுறுத்தா நிற்பதாகும். கீழான பிராணிகளுக்கு ஆத்துமாவில்லை மனமில்லை என்று கூறும் கிறிஸ்தவர் கொள்கையை நம்இந்து மதம் மிகவும் வெறுத்துத் தள்ளுகின்றது. தர்க்க முறைக்கும் இக்கொள்கை நிற்காது. இதுமிகவும் அசம்பாவிதக் கோட்பாடென்று நம்மவர் கண்டித்துள்ளார்கள். உயிர்களில சிறு உயிர் பெரிய உயிர் என்ற பேதமே கிடையாது. எல்லா வுயிர்களும் அதன் அதன் வினைக்குத் தக்கபடி இறைவனு லருளப்பட்ட தநு கரண புவனபோகங்களை யடைகின்றன. உருவங் குணஞ்செயல்களில் வேற்றுமைப் பட்டிருப்பினும் மனம் எல்லாவுயிருக்குமுண்டு. இன்பத்தில் விருப்பமும் துன்பத்தில் வெறுப்பும் எல்லாவுயிருக்கும் உண்டு. சகல உயிர்களிடத்தும் வேற்றுமையின்றி ஒரேவிதமாக எள்ளினுள் எண்ணெய்போல் அந்தர்யாமியாய் நிறைந்திருத்தல் இறைவனது இயற்கைத் தன்மையாகும். ஆத்ம அறிவானது உலோகவர்க்கங்களினும் உண்டு. அதைவிட தாதுவர்க்கத்தில் அதிகமுண்டு. அதைவிட ஜீவவர்க்கத்தில் அதிக முண்டு. கண்ணுக்குப் புலப்படாத பரமசூக்குமமான புழுப்பூச்சிகட்கும் மனமுண்டு. அவற்றிற்கும் வலி தெரிகிறது. துன்பத்திற்குத் தப்ப வழிதேடுகின்றது. எந்தச்சிறிய செந்

துவாயினும் தனக்கு மரணம் வருவதாக அறிந்தவுடன் துடிதுடிக்கின்றது. மரணத்தைத் தடுக்க முயலுகின்றது. சோகமுறுகின்றது. உயிர் வாழ விரும்புகின்றது. உயிர் நமக்கெப்படி அருமையோ அப்படியே சகல பிராணிகளுக்கும் அருமையாகவே யிருக்கிறது. சாவைக்கண்டு நாம் அஞ்சுவது போலவே சகல பிராணிகளும் அஞ்சுகின்றன. நம்முடைய ஆத்மாவுக் குள்ளிருக்கும் பரம்பொருளே அற்ப ஜந்துக்களின் ஆத்துமாவினுள்ளும் வீற்றிருக்கின்றார். இவ்விதவுண்மையை நமது சமயசாஸ்திரங்கள் நன்கு விளக்கிக்கோஷிக்கின்றன. இப்படியிருக்க, நமது வயிற்றுக் குழியைச் சற்று நேரம் நிரப்பிவைப்பதான அற்ப சுகத்துக்காக ஒரு பிராணியின் வாழ்நாள் முழுதும் அனுபவிக்கும் இன்பத்தைக் கெடுத்து அதனைக்கொன்று தின்பதென்றால் இது எவ்வளவு அறிவீனம்? தற்காப்பிலும் அறிவிலும் பலத்திலும் நம்மை விடக்குறைந்த பிராணிகளை நாம் கொன்று தின்பது நியாயமென்றால், நம்மைவிட அதிக பலம் வாய்ந்த ராக்ஷதர்களாதியோர் நம்மைக் கொன்று தின்பதும் நியாயந்தானென்று ஒப்புவோமோ? "நமது வயிறு நிரப்பச் சாக பக்ஷணமே போதுமானதாகவும் ஏற்றதாகவுமிருக்க அவ்வயிற்றினுள் சிறந்த பிராணிகளை யிட்டு அடைக்கின்றோமே" என்று ஜைந ஞானியாரொருவர் முறையிடுகின்றார். "தொக்க விலங்கிற்கும் புள்ளிற்கும் காடே புலங்கெட்ட, புல்லறிவாளர் வயிறு" என்ற நாலடியாரின் கருத்து மிதுவேயாகும். "இன்பம்வேண்டி எந்தப் பிராணியையும் கொல்லாதே; பிரகிருதியிலுள்ள எல்லாவற்றிலும் ஒற்றுமையான உயிருள்ளது எதுவானாலும் அதற்கு அனுகூலியாயிரு" என ஆரிய வேதம் கற்பிக்கின்றது. அதாவது உண்ண வேண்டியேனும் வேடிக்கை கருதியேனும் எந்தப் பிராணியையும் கொல்லாதே என்பதாம். பிழைப்புக்கு வழியற்றபோது பறவைகளும் விலங்குகளும் ஒன்று மற்றொன்றைத் தின்பதுபோல் நாமும் புலாலுண்பது நியாய மென்பாருஞ் சிலருளர். இந்தநியாயம் மிருக நியாயமாகுமே யன்றி மனிதர்க்குரிய நியாய மாகுமா? ஆகாது. ஒருபோது மாகாது. மரணம் வந்தாலுங்கூட இழிதொழிலாற்றூழ்ந்தவர் கைப்பொருளைவாங்கி யுண்டல் கூடாதென விலக்கி "தன்னுடம்பின் ஊன் கெடினும் உண்ணார் கைத்துண்ணற்க" எனப் போதிப்பதே மனித நியாயமாகும். மரணம் நேர்ந்துழியும் இழிதொழிலாளர் பொருள் கொண்டுண்ண லாகாதென விலக்கும் மனித நியாய முறையில் புலால் புசித்தல் கூடுமெனக் கொள்வது எங்ஙனம் பொருந்தும்?

பிராணிவதை அல்லது பிராணி இம்ஸை யென்பது மூன்று வகுப்பாகப் பிரிக்கப்படும். (1) தானே செய்தல். (2) தான்செய்வித்தல் (3) பிறர்செய்யத் தான்சம்மதித்தல். இம்மூவகையாலும் ஒருவன் பிராணிகளுக்கு இம்சைசெய்யானாயின் எந்தப்பிராணிகளும் அவனை வருத்தா. புலி முதலிய துஷ்டமிருகங்களாயினும் நாம் மனதார அதை இம்சிப்பதில்லையென்றிருப்பின் அவையும் நமக்கு ஒருபோதும் துன்பஞ்செய்யா. எத்தனையோ முனிவர்கள் கானகங்களில் புலி முதலிய மிருகங்களோடு வாழ்ந்துவருகின்றனர்; அம்முனிவர்கள் எந்தப்பிராணிகட்கும் துன்பம்செய்யாத ஜீவகாருண்ய சீலர்களாதலாற்றான் எந்தப்பிராணிகளும் அவர்கட்கு நட்பாகியிருக்கின்றன. இனி சம்மதித்தல் என்பதுயாதெனில் கசாப்புக்கடைக்காரன் விற்கும் புலாலை நாம வாங்கியுண்பதால் அவன்செய்த கொலைப்பாதகத்திற்கு நாம் சம்மதித்தவராகின்றோம். இதனால் கொலைப்பாவம் நம்மை விட்டபாடில்லை. இக்கருத்தை "தினற்பொருட்டாற் கொல்லாதுலகெனின் யாரும், விலைப்பொருட்டா லூன்றருவா ரில்" என்னும்பொய்யில் புலவர்திருவாக்கும் வலியுறுத்துமாறு காண்க.

மாமிசபக்ஷணத்தால் கொலைப்பாவம் வருதல் ஒன்றோ? அதனை சீர்ணிப்பித்தற்காக மதுபானமும் கொள்ளவேண்டிவரும்; மதுபானமும் சேர்ந்தபின் அதன்வெறி மீறியபோது செய்யப்படும் பாவங்கட்கு எல்லை யில்லையே; சகலபாவத்தொழில்களும் வந்துகுடிகொள்ளக் கூடும். முடிவில் மீளாநரகிற்கே ஆளாகவேண்டியதுதான். இக்காரணத்தாலும் புலாலுணவு வெறுத்தற்கேயுரியதாகும்.

சாந்தம் ஐக்கியம் தன்னடக்கம் முதலிய நற்குணங்களே ஆத்துமலக்ஷண அறிவு இருத்தற்கு அறிகுறிகளாகும். அவ்வறிவு விருத்திக்குப் புலாலுணவு முற்றும் பொருந்தாதாதலின் சாகபக்ஷணிகளான இந்துக்களே ஆத்தும ஞானத்துக்கு விரைவிற் பாத்திராதற்கு உரியவர்களாகின்றனர். இறைச்சி தின்பவர்கள் ஒருபோதும் மனத்தையொருமுகப்படுத்த முடியாது. ஆத்துமலக்ஷண தெய்வ லக்ஷணங்களைப்பற்றி ஆராயவும் முடியாது. ஆகவே மோக்ஷமெய்தவும் முடியாதென்பது சித்தமாகும் இவ்வுண்மைகளை யெல்லாம் அறிந்தபின்னராவது நம் இந்து சன சமூகத்தார்கள் புலாலுணவை விட்டொழித்து அன்பும் அருளும் பெற்று இடையறாப்பேரின்பந் துய்த்து வாழ்வார்களாக.

" தம்மினும் உயர்ந்தோர் கீழோர் தமதிலத் தறலுண்பாரேல்
அம்மவங் கவருங் கீழோன் றவர்மனைப் புனலும் உண்ணு
இம்மனி தர்கள்தாம் சீச்சீ இழிஞர்தம் மலத்தை யுண்டு
விம்முடற் பன்றி யாதி விரும்பியுண் டுவப்ப தென்னோ?

" புலையென்னும் புலைதீரப் புனலென்னும் புனல் மூழ்கி
அலைகின்ற முழுமூடர் அறிவென்ன அறிவென்ன
புலையன்றன் மலமுண்ணும் எமையுண்ணும் புலையர்க்குக்
குலமென்ன நலமென்ன கூ கூ வென்றன கோழி.

அவிசொரிந் தாயிரம் வேட்டலி னொன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று.
கொல்லா விரதங் குவலயமெல் லாமோங்க
எல்லார்க்கும் சொல்லுவதென் இச்சை பராபரமே.

எவ்வுயிரும் என்னுயிர்போ லெண்ணி யிரங்கவுநின்
தெய்வ அருட்கருணை செய்வாய் பரா பரமே."

என்னும் மேலோர் வாக்குகளைச் சிந்திப்போமாக. சுபம்! சுபம்! சுபம்!

# (6) செய்ந்நன்றியறிதல்.

"செய்ந்நன்றியறிதல்" என்பது "ஒருவன் தான்பிறர்க்குச் செய்யத்தக்க நன்றியை யறிதல்" எனவும், "பிறர் தனக்குச்செய்த நன்றியையறிதல்" எனவும் இருபொருள் தோற்றுவிப்பதாகும். இவற்றுள் ஒவ்வொன்றும் மானிடஜன்மமெடுத்த எல்லாருக்கும் இம்மை மறுமையிரண்டற்குந் துணைசெய்யத்தக்க ஒப்புயர்வில்லாத திப்பிய அறமாமென்பது எப்புலவர்களுக்கும் ஒப்ப முடிந்ததாம்.

தான் நன்மை செய்தலாவது, பசி பிணியாதியவற்றால் பிறர் வருந்தக் காணினும் கேட்கினும் தானேவிரைந்து அவர் துன்பத்தை நீக்கி மனமொழி மெய்களா லியன்ற உபகாரம் செய்தல் என்பது. இங்ஙனம் உபகரிக்குங்கால் அவ்வுதவியைப் பெறுவார் துயரத்தைக் கண்டு, "மனமிரக்கமுற்று "இவ்வுதவியையிதுபொழுது இவர்க்குயாம் செய்யப்பெற்றேம்" என்று மகிழ்ச்சியடைந்து, முகமலர்ச்சியுடன் இனிய மொழி கூறி, அன்னம் ஆடை முதலிய வற்றை அளித்தல் ஆதியவாக ஏற்றவற்றைக் காலந்தாழாது செய்துமுடிக்கவேண்டும்.

கொலைகளவாதிய தீச்செயல் புரிவாரைக் கண்டால், அந்தோ! இக்கொடுஞ் செயலால் இவர் மீளாநரகிற்கு ஆளாகுவரே! என்று உள்ளங்கசிந்து, அக்கொடுந் தொழிலால்வருந் தீங்குகளை எடுத்துக் கூறி, அவர்களை நல்வழிப்படுத்த வேண்டும். அதிகாரம் முதலியவற்றால் செல்வாக்குப் படைத்திருப்பின் தன்வாக்குச் சகாயத்தாலும், செல்வம் படைத்திருப்பின் பொருள்வகையாலும், சரீரவலியிருப்பின் உடல் முயற்சியாலும் பிறர்க்கு உதவிசெய்வதை யாவரும் மேற்கொள்ளவேண்டும். இதனை

"ஒல்லும் வகையால் அறவினை ஓவாதே
செல்லும்வாய் எல்லாம் செயல்"

என்னுந் தேவர் திருவாக்கு வலியுறுத்துமாறுகாண்க.

இவ்வுலக வாழ்க்கையில் ஒவ்வொருவரும் பிறருதவி கொண்டு சுகவாழ்க்கை யடையவேண்டுமே யன்றிப் பிறருதவி யில்லாமல் வாழ முடியாது. ஒவ்வொருவரும் தமக்கு வேண்டியவற்றையே செய்து பிறர்க்கு உதவிசெய்யா திருந்தால், உலகமே நடை பெறாது. இதுநம் அநுபவத்தால் யாவரும் அறிந்துள்ளதேயாம்.

தமக்கென முயலா நோன்றாட்
பிறர்க்கென முயலுநர் உண்மையானே
உண்டா லம்ம இவ்வுலகம்!

என்னும் புறப்பாட்டை நோக்குவோம். எந்தமுயற்சியும் தன்பொருட்டாக மட்டுஞ்செய்யாது பிறர்க்குதவியாகும் பொருட்டுச் செய்வார் இருத்தலாற்றான், இவ்வுலகம் நிலைபெற்றுள தாகின்றது என்பது இதன்கருத்தாம். ஆகவே, ஒவ்வொருவரும் பிறர்க்குதவிசெய்யக் கடமைப் பட்டிருப்பதை யறியவேண்டும். இந்த உயர்குணம் வளர வளர, தனக்குவேண்டும்! தனக்குவேண்டும்! என்கிற பற்று முற்றும் அற்றுவிடும். பற்றற்றொழியவே பிறவுயிர்களையும் தம்முயிராக் கருதும் அன்பு மேலிட்டு அருள்பெருகுவதாகும். உயர்ந்தவர் மாட்டு அன்பும் தாழ்ந்தவர்மாட்டு அருளும உடையராயவழி, மனந்தூய்மையெய்தும். மனத்தூய்மைபால் புண்ணியம்பெருகி மோக்ஷமும் சித்திப்பதாகும். "அற்றது பற்றெனில் உற்றது வீடு" என்றமுதியோர் வாக்குப் பிரத்தியக்ஷப்படுவதாகும்.

இவற்றையெல்லாம் கருதாது எல்லாப் பொருளையும் தனக்கென ஈட்டிப் பிறர்க்குதவி செய்யாராயின், அவாது அவாவே அவரது அறிவைக் கொன்று புண்ணியபாவ உணர்ச்சியை மறைத்து மேலுமேலும் பிறவிக்கேதுவாகி நிற்கும். உலகத்தாரும் அவர்களை நடைப்பிணமாகக் கருதியிகழ்வர். அவர்க்கு மனத்தூய்மை வருவதுமில்லை.

"அவாவென்ப வெல்லா வுயிர்க்குமெஞ் ஞான்றுந்
தவாஅப் பிறப்பீனும் வித்து"

என்பவாகலின், அவாவுடையார் ஒருபொழுதும் மனச்சாந்தி பெறமாட்டார். பரோபகார தருமமானது இம்மையிற் புகழ்கொடுப்பதுடன் நில்லாது மறுமையில் வீட்டுக்கும் ஏதுவாகக் கூறப்படுதலின் இதையொத்ததோர் அறச்செயல் எதுவுமில்லையென்க.

அற்றேல், "பொருளாலேனும் வாக்காலேனும் காயத்தாலேனும் உதவிசெய்யச் சக்தியற்றவர்க்குப் புகழும் புண்ணியமுமில்லையாமோ?" என்னின், அற்றன்று.

'இசையா வொருபொருளை யில்லென்றல் யார்க்கும்
வசையன்று வையத் தியற்கை'

'ஒல்லுவ தொல்லு மென்றலும் யாவர்க்கும்
ஒல்லா தில்லென மறுத்தலும் இரண்டும்
ஆள்வினை மருங்கிற் கேண்மைப் பாலே"

என்பவாகலின், இயலாதார், இயற்றுவிடத்துத் தீமையில்லை. உடையார் செய்யாக்காற்றான் தீமையாகும்.''

ஆயின், "இயலாதார் நன்மைசெய்வதெவற்றுனுளதாம்?" என்னில், அவர் செய்யற்பால நலமுமுண்டு. அன்னோர் பிறர்க்குத் துன்பஞ்செய்யாதிருத்தலே பெரியதோர் நன்றியாம்: பறவைகளைச்சிறை செய்தலும், நாய் கழுதை முதலியவற்றைக் காரணமின்றி சுத்த விளையாட்டுத்தனத்திற்காகவே நையப்புடைத்தலும், எளியார்க்கு நவி வுறுத்தலும், இரப்போரை ஏசுதலும் இன்னோரன்ன பலவகையான தீச்செயல் செய்கின்றவர்கள் எத்தனைபேருள்ளார்? பயனற்ற விளையாட்டிடத்து இன்னல்செய்தலேயன்றியும் அற்பப்பொருள் முதலிய வற்றின் வேட்கைபால் கொலை களவாதிய செய்கின்ற கொடும்பாதகர் எத்தனைபேருள்ளார்? எவ்வாற்றானும் பிறர்க்குச் சிறிதும் இடுக்கண் செய்யாது வாழ்தலே மிக்கநன்றியாம். இதுபற்றியன்றே

"நல்லது செய்தல் ஆற்றீ ராயினும்
அல்லது செய்தல் ஓம்புமின். அதுதான்
எல்லாரு முவப்ப தன்றியும்
நல்லாற்றுப் படூஉ நெறியுமா றதுவே''

எனத் தமிழ்ப்புலவர் பெருமக்களும் "பிறரை வருத்தாமையே பெரும்புண்ணியம்'' என்ற பொருளை விளக்கி "அஹிம்ஸா பரமோ தர்ம:" என்று வடமொழிவல்லாரும் கூறிச்செல்வாராயினர். ஆகவே, இயல்பவர் யாவரும் பிறர்க்கு உதவிசெய்தலும், இயலாதார்பிறர்க்குத் தீங்கியற்றாமையும் ஆகிய இவ்விரண்டுமே முதற்கட்கூறியபடி தான் செய்நன்றியாம்.

இதை மூன்றுவகைப்படுத்துரைப்பாருமுளர். அவையாவன:— (1) ஒருவர் வருத்தங்கண்டவுடன் மனமிரங்கித் தாமே வலியச் சென்றுதவுதல் தலையாய நன்றி. (2) வருந்துவார்வந்து கேட்டபின் உதவுதல் இடையாயநன்றி. (3) கேட்டபின்னும் மனமிரக்கமின்றி அலைப்புறுத்தி வெறுப்பொடு செய்யுமுதவி கடையாயநன்றி. இவை யாவும் பெறுவார்க்குத் துன்பந்துடைத்து இன்பம்பெருக்குவனவே யாதலின் நன்றியாகவே யமைவனவாம்.

அன்றியும் (1) இரக்கங்காரணமாகச் செய்தல். (2) முன் தமக்குச்செய்த நன்றி காரணமாகச்செய்தல். (3) பின்தமக்குவரும் நலங் காரணமாகச் செய்தல் என்று நன்றியை மூன்றுவகுப்பாக்கி யுரைத்தலுமுண்டு. "நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்" என்பவாகலின் விதித்தன செய்தலும் விலக்கியவை செய்யாமையும் ஆகிய இரண்டும் ஒவ்வொருவனும் தான் செய்நன்றியென்று துணிந்துகொள்ளத்தகும்.

இனி, பிறர்தனக்குச்செய்த நன்றியை மறவாதறிதலாவது:— தனக்கு இடுக்கண் வந்தக்கால் உதவுவோரை மறவாது, அவர்செய்த நன்றியை நினைந்து, அவர்க்கு ஏதேனும் துன்பம் வருமாயின், அக்காலத்துத் தன்னுயிரையுங்கொடுக்க ஒருப்பட்டு நிற்றலாம். நன்றியினளவின் சிறுமை பெருமை கருதாது அதன் பயனையே கருதி மதிக்கவேண்டும். தனக்குச் செய்த நன்றி சிறிதாகவும் தான் அவர்க்குப் பெரியதோர் உதவிசெய்யும்படி நேருமாயின் அக்காலத்து அவர் முன் தமக்குச்செய்த நன்றியின் பயனைக்கருதித் தாம்செய்யத்தக்கன எத்துணைப் பெருநன்றியே யாயினும் அதனை அப்பொழுதே மனமகிழ்ந்து செய்யவேண்டும். இதனை,

"தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வார் பயன்றெரி வார்" எனவும்,

"அல்லி யரும்பதமும் அடகுங் காயுங் குளநெல்லும்
நல்ல கொழும்பழனுங் கிழங்குந் தந்து நவைதீர்த்தார்க்
கில்லையே கைம்மாறு"

எனவும் தேவர்கள் கூறியவாற்றால் நன்குதெளிக.

அன்றியும் ஒருபொழுது ஒரு நன்றிசெய்தவர் பிற்காலத்துப் பல துன்பம் செய்தாராயினும் அவர் செய்த நன்றி ஒன்றையே பெரிதாக இடைவிடாது நினைந்து பாராட்டி, அவர்செய்த தீமைகளையெல்லாம் நினையாது விட்டுவிடுதல் வேண்டுமென்பார்,

"கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த
ஒன்றுநன்று உள்ளக் கெடும்"

"நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று." என்பவாகலின்,

நன்றி மறவாமை மிகவற்புறுத்தப் பட்டவாறு காணலாம். அறநூல்களாலே மறச்செயல்களாக விலக்கப்பட்டன பல. அவற்றுள்ளுள் மாதுர்ஹத்தி, பிதுர்ஹத்தி, குருஹத்தி முதலிய தீச்செயல்கள் மிகக்கொடிய பாதகங்களாக விலக்கப்பட்டன. அவற்றிற்கு விதித்துள்ள இராஜதண்டனையும் தெய்வதண்டனையும் கேட்டால் அம்மம்ம! நெஞ்சு நடுநடுங்காநிற்கும். இவ்விதக்கொடிய பாவங்கள் எல்லாவற்றினும் அறக்கொடிய பெரும்பாவம் நன்றிமறப்பதே என்று நமது பெருநூல்கள் முழங்குகின்றன. மாதுர்ஹத்தி முதலியன செய்தார்க்குப் பிராயச்சித்தமுண்டாயினும் செய்ந்நன்றி கொன்றவர்க்கு எவ்வாற்றானும் கழுவாயில்லையெனவும், அவரே மீளா நரகிற்கு ஆளாகுவர் எனவும் பொய்யில் புலவராதிய உண்மையறிஞர்கள் மிகக்கடிந்து வற்புறுத்துரைத்துள்ளாரென்பது பின்வருங் கவிகளாலறிந்து கொள்ளத்தகும்.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"—(திருவள்ளுவர்)

"ஆன்முலை அறுத்த அறனில் லோர்க்கும்
மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்
பார்ப்பார்த் தப்பிய கொடுமை யோர்க்கும்
வழுவாய் மருங்கிற் கழுவாயு முளவென
நிலம்புடை பெயர்வ தாயினும் ஒருவன்
செய்தி கொன்றோர்க்கு உய்தி யில்லென
அறம் பாடிற்றே"—(புறநானூறு.)

"சிதைவகல் காதற் றாயைத் தந்தையைக் குருவைத் தெய்வப்
பதவியந் தணரை ஆவைப் பாலரைப் பாலவ மாரை
வதைபுரி குநர்க்கும் உண்டாம் மாற்றலாம் ஆற்றல் மாயா
உதவிகொன் றார்க்குஒன் றேனும் ஒழிக்கலாம்
உபாயம் உண்டோ"—(கம்பர்.)

பார்த்தீர்களா! செய்ந்நன்றி மறத்தலை எவ்வளவு கொடியதாக நம்முன்னோர்கள் எள்ளியுரைத்துள்ளார்கள்? நமது சுகதுக்கங்களை யெல்லாந் தமவாகவும் அதற்கு மேலாகவும் பாவித்து நம்மிடத்தினின்றும் பிரதியுபகாரம் ஒன்றையும் எதிர்பாராமல் நம்மைப்போற்றி வளர்த்த தாய்தந்தையர்களென்ன, விலங்கையும் மரத்தையும் ஒத்தி

ருந்த நமக்கு ஞானக்கண் கொடுத்து மனிதராகச் செய்த உபாத்தியாயர்களென்ன, மற்றும் உற்றுழியுதவிய மூத்தோர்களென்ன, இத்தகையோர் பலரும் நமக்குச்செய்த உதவிகளைக் கணக்கிட்டுரைக்க ஆதிசேடனைப்போல் இரண்டாயிரம் நாவைப் படைத்தாலும் முடியுமா? இவர்கட்கு நாம் எத்தனைநாள் ஊழியஞ் செய்வோமாயினும் நம்பொருட்டாக அவர்கள் ஒருநாளடைந்த சிரமத்துக்குத் தானும் ஈடாகுமா? இவற்றையெல்லாம் சிந்தியாது தற்காலத்து வாலிபரிற் பலர் நன்றிகெட்டவர்களாகி மாதா பிதாக்களிடம் வணக்கமின்றி மிருகம்போல நடக்கின்றனரே! இது என்ன பரிதாபம்! நாம் நம் முதியோர்களிடம் எவ்வாறு நடந்துகொள்கின்றேமோ அவ்வாறுதானே நம்மக்களாதியர் நம்மிடம் பின்நடந்துகொள்ளுவர்? ஆகவே நம்முடைய நடையானது நம்மையுங்கெடுத்து நம் பின்னவர்களையும் கெடுப்பதாகவன்றோ அமையும்? என்று இவர்கள் கருத வேண்டாமா? ஆங்கிலக்கல்வி கற்ற மாணுக்கர்களிற் சிலர் "உபாத்தியாயர் என்ன சம்பளம் பெற்றுக் கற்பித்தவராதலின் அவர் ஒருவித வேலைக்காரர்தானே" என்று பிறரிடம் கூறவும் இவ்வித கெட்ட எண்ணத்தால் அவரிடம் மரியாதையின்றி நடக்கவும், நாம் நேரில் கேட்டும் கண்டும் இருக்கின்றுமன்றே! இவ்வாலிபர்கள் இம்மை மறுமையிரண்டு மற்றவர்களென்பது நாம் இங்கே கூறவேண்டியதில்லை.

நன்றி கெட்டவர்கள் நாயினும்கடையரே. தீக்குணமும்கொடுந்தொழிலும் இயற்கையாகக் கொண்டதும் பலநாள் உணவின்றி வேண்டுமென்றே பட்டினிபோட்டு வைக்கப் பட்டதால் அதிமூர்க்கத்துடன் இருந்ததுமான ஒரு சிங்கத்துக்கு இரையாகும்படி அந்திரோகிலிசு என்னும் அடிமை தண்டனை விதிக்கப்பட்டு நிராயுதபாணியாக அதன்முன் நிறுத்தப்பட்டதும், இடியேறன்னபேரொலியுடனும் கனலுமிழுங் கண்களுடனும் கண்டார் நடுங்க அச்சிங்கம் தன் இரையை நோக்கிக் கடுவிசையுடன் சென்றதும், ஆனால் அது அவ்வாறு செய்யாமல் ஆட்டுக்குட்டியினும் அதிசாந்தமாகி இறந்த மகவினை மீண்டும் உயிருடன் கண்ட தாய்போலவும் நாய்க்குட்டியைப் போலவும் மகிழ்ச்சிகூர்ந்து நன்றியறிதலைக் காட்டியதும், பாடசாலைகளிற் பயிலும் பலரும் நன்கறிவர். அஃது இவ்வாறு தன் பசியையும் இயல்பையும் மறந்து பேருவகைபூத்து அவனது ஆருயிரைக் காத்தது அவன் தனக்கு முன் ஓர் அமையத்து நன்மை செய்த

நண்பன் என்பது பற்றியன்றோ? பகுத்தறிவில்லா இத்தீயவிலங்கும் நன்றியுணர்ச்சியைக் காட்டிற்று. என்றால் பெறுதற்கரிய மானிட ஜன்மத்தைப்பெற்ற ஆறறிவுடையநாம் இன்னாசெய்தாரை யொறுத்தலும் இனியசெய்தாரை மறத்தலும் எத்துணை இழிவானகாரியம்?

ஆதலின், நம்மால் எவ்வகையினும் மாறுதவி செய்யமுடியாத பேருதவி செய்துவரும் பெருந்தகையாளர்களாகி நம்மையெப்பொழுதுங் காத்துவருகின்றகடவுளிடத்தும், அரசனுபாத்தியான்றாய் தந்தை தம்முன் ஆகிய ஐங்குரவரிடத்தும், உற்றுழியுதவும் மற்றவரிடத்தும் நாம் எப்பொழுதும் நன்றிபாராட்டி நடந்துவருவோமாக.

தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்றெரி வார்.

செய்யாமற் செய்த வுதவிக்கு வையகமும்
வானகமு மாற்ற லரிது.

தந்தை மகற்காற்று நன்றி யவையத்து
முந்தி யிருப்பச் செயல்.

மகன்றந்தைக் காற்று முதவி யிவன்றந்தை
யென்னோற்றான் கொல்லென்னுஞ் சொல். (திருவள்ளுவர்.)

கர்ணன் கூற்று.

மடந்தைபொற் றிருமே கலைமணி யுகவே
மாசறத் திகழுமே காந்த
விடந்தனிற் புரிந்தே யானயர்ந்திருப்ப
வெடுக்கவோ கோக்கவோ வென்றான்
றிடம்படுத் திடுவே லிராசரா சனுக்குச்
செருமுனைச் சென்றுசெஞ் சோற்றுக்
கடன்கழிப் பதுவே யெனக்கினிப் புகழுங்
கருமமுந்தருமமு மென்றான்.

ஒருரு மொருகுலமு மில்லா வென்னை
யுன்குலத்தி லுள்ளாரி லொருவனுக்கித்
தேருரு மவர்மனைக்கே வளர்ந்த வென்னைச்
செம்பொன்மணி முடிசூட்டி யம்புராசி

நீரூரும் புவிபாலர் பலரும் போற்ற நின்னினுஞ்சீர்
 பெறவைத்தாய் நினக்கே யல்லா
லேரூரும் கதிர்முடியா யெதிர்ந்த போரி
 லியார்க்கினியா னுயிரளிக்க விருக்கின்றேனே.

## கும்பகர்ணன் கூற்று.

நீர்க்கோல வாழ்வை நச்சி நெடிதுநாள் வளர்த்துப் பின்னைப்
போர்க்கோலஞ் செய்து விட்டார்க் குயிர் கொடா தங்குப்போகேன்
தார்க்கோல மேனி மைந்த வென்றுயிர் தவிர்த்தி யாயிற்
கார்க்கோல மேனி யானைக் கூடுதி கடிதி னென்றான்.

# (7) கேள்வி.

பெறுதற்கரிய இம்மானிடப் பிறவிக்கு மற்றப் பிறவிகளினு முள்ள விசேடமெல்லாம், நல்லதன் நலனும் தீயதன் தீமையையும் பகுத்தறிதற் கருவியாகிய மனமென்னும் இந்திரியத்தை அது விசேடமாகப் படைத்திருத்தலேயாம். இம்மன விந்திரியம் இல்லையேல், மக்கட் பிறவியேயாயினும் அது விலங்கின் பாற்பட்டு மாக்கள் என்ற வேறு சாதியாமென்பது முன்னோர் கொள்கை. இதனை "மாவு மாக்களும் ஐயறிவினவே-மக்கடாமே யாறறி வுயிரே" என்னும் தொல்காப்பியச் சூத்திரத்தால் அறிக. மனம் ஆறும் இந்திரியமாதலை, "மனஷஷ்டீணிந்த்ரியாணி" என்ற கீதா வாக்யமும் வற்புறுத்துவதாகும்.

மக்களது பகுத்தறிதற் கருவியாகிய இம்மனப் பொறியானது ஏனை மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற இந்திரியங்களை நடத்துந் தலைமையும் இன்றியமையாமையும் உடையது: இம்மனமொன்றில்லையாயின், ஏனையவை தம் தொழில்களைச் செய்யா. இவ்வைம்பொறிகளுடன் மனம் உடனின்று நடத்துவதாலே தான் இவ்வுலகப் பேறுகள் யாவும் சித்திக்கின்றன. இவற்றுள் ஆன்மகோடிகள் இம்மை யம்மைப் பேறுகளை அடைந்துய்தற்கு இன்றியமையாத காரணமாயுள்ளது, மனமுஞ் செவியும் சேர்தலாகும். இதுவே 'கேள்வி' யெனப்படும்.

கேள்வியாவது: கேட்டற்குரிய பொருள்களைக் கற்றறிந்தார் சொல்லக் கேட்டலாம். இது, கற்றார்க்கும் கல்லாதவர்க்கும் ஒப்ப வேண்டத்தக்க தொன்று. கல்லாதவர் பெரியோர் சொல்லிய உறுதிகளைக் கேட்பாராயின் தாமும் கற்றவர் போன்ற அறிவை எளிதிற் பெறுவர். கற்றோர் அங்ஙனங் கேட்பாராயின், தங்கல்வியினாய அறிவைப் பின்னுஞ் சிறப்பித்துப் பெருக்கியவராவர்.

இங்ஙனம் கற்றார் கல்லார் இருவர்க்கும் ஒப்ப உயர்தர ஞானத்தை ஊட்டவல்ல கேள்வி விளையும் நிலங்கள் கற்று முதிர்ந்த அறிஞர் குழுமிய கழகங்களேயாகும். ஞானங்களின் பிறப்பிடமாதல்

பற்றியே, அவையையும், அவைத் தலைவனையும் "நமஸ் ஸதஸே நமஸ் ஸதஸஸ் பதயே" என்று வேதமும் வாழ்த்தி வணங்குவதா யிற்று. நம் வேத வேதாங்கங்களும், இதிகாச புராணங்களும், இக் கேள்வியாலன்றோ, புண்ணிய பூமியாகிய இப்பரத கண்டத்தை இன்றுவரை அலங்கரித்து வருகின்றன? வேதத்துக்குக் கேள்வி எனப் பொருள்கொண்ட "சுருதி" என்பது பெயராக வழங்குவது கண்டு கொள்க. இக்கேள்வியானது முதற் பொருளாகிய கடவுளை அறிந்துய்தற்குரிய உபாயங்களுள் முதலாவதாம். சிரவணமாகிய இதன் சிறப்பு, "கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர், மற்றீண்டு வாரா நெறி" என்னும் பொது மறையால் அறியத்தக்கது.

பலநூல்களைப் பலகாலும் கற்றும் கேட்டும் துருவி யாராய்ந்த பெரியோர் அவையினின்று கேட்கப்பெறும் விஷயங்கள் எத்துணை அருமை பெருமை வாய்ந்தனவாதல் வேண்டும்? நல்லூழும் பெரு முயற்சியுங் கொண்டு பல்லாண்டு பயின்று தெரிதற்குரிய அரும் பொருள்களை எளிதிற் பெறச் செய்வது இக்கேள்வியே யன்றோ? ஆதலால் கல்வியினும் சிறப்பு வாய்ந்தது இக்கேள்வி என்பது பெறப்படும். இது பற்றியே, "கணக்கினை—முற்றப் பகலுமுனியா தினிதோதிக், கற்றலிற் கேட்டலே நன்று" என்றார் முன்னோரும். ஞானவிருத்தி குறைந்துவிட்ட இக்கலியுகத்தே, கேள்வியின் நிலைக் களமாகிய சங்கங்களினின்றே நம் சக்திகளைப் பெருக்க வேண்டி யிருத்தலால், ஞானபிவிர்த்திக்கு இச்சபைகளே இன்றியமையாத சாதனங்களாகும். "ஸங்கே சக்தி: கலௌயுகே" என்ற ஸ்மிருதி யின் கருத்தும் இதுவேயாம். இச்சங்கங்களின் வாயிலாக அடையும் கேள்வியினையே,

"செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வம் அச்செல்வம், செல்வத்து ளெல்லாந் தலை" என்று நாயனாரும் சிறப்பித்தருளினார்.

பெரியோர் குழுவினின்று உயர்ந்த விஷயங்களை எத்துணையள வாகக் கேட்பினும், அது பெரும்பயனை விளைக்கும். "எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானும்—ஆன்ற பெருமை தரும்" என்றார் தெய்வப்புலவர். கேட்பவை சிலவேயாயினும், விடாது பெரியோரை அடுத்திருந்து கேட்குமிடத்து, அக்கேள்வி மழைத்துளிபோல வந் தீண்டி அறிவுப் பெருக்கெடுக்கும் என்பது இதன் கருத்து. இங்ஙனம் ஞான விளைவுக்கேதுவாகிய கேள்வி என்னுங் கருவியால் துளைக்

கப்படாத செவிகள், அவை ஓசையறியுந் துவார முடையவாயி னும், செவிடுகளே யாகுமென்க. "பாட்டு முரையும் பயிலா தன விரண்—டோட்டைச் செவியு முள" என்றார் ஔவையாரும். கேள் வித்துணைபெறாத ஒருவனுக்கு இம்மைச் செல்வமும் இயற்கையறிவும் நிரம்ப விருப்பினும், இருமைப்பயன்களும் அவனுக்கில்லையாம்.

"இருவிழிகள் வாண்முகத்தி லிருந்தாலும் வானிரவியெழுந்தா லன்றிக்
கருதுநிலப் பல்பொருளுங் காண்டலரி தாமுலகிற் கண்போல் யாரும்
பெருகியசெல் வமுமறிவும் பெற்றாலு நூற்கேள்வி பெறுவார்க் கன்றித்
திருவளர்புண் ணியபாவ மிம்மைமறு மையும்வீடுந் தெரியா வன்றே."

இதனால், கேள்வியின் ஆவசியகம் வற்புறுத்தப்படுதல் காண லாம். கல்வியாகிய கண்ணில்லாதவர்க்கும் இக்கேள்வி யானது ஊன்றுகோலாய் நின்று உதவுவதன்றோ? "கண்ணுடைய ரென் பவர் கற்றோர் முகத்திரண்டு—புண்ணுடையர் கல்லாதவர்" என்றதனா ல், கல்லாதவரை கண்களற்ற முழுக்குருடராகக்குறிப்பிட்ட நாயனார்,

"கற்றில னாயினுங் கேட்க அஃதொருவற்
கொற்கத்தி னூற்றாந் துணை"

என்றார். இதனால், முன் கூறியபடி கல்லாராகிய குருடர்க்கு, இக் கேள்வியிருப்பின் அது அக்குருட்டு நிலையினும் உதவக்கூடிய ஊன்று கோல் போலாகும். என்பது தெய்வப்புலவர் உள்ள மாதலும் காண்க.

இத்தகைய கேள்வி மிகப்பெற்றவர்கள் அதன் ரஸத்தையே பானம் பண்ணி துன்பமென்பதறியாது இன்பம் அடைபவராதலின், வள்ளுவனார் இன்னோரை அவியுணவின் ஆன்றோராகிய தேவரோ டொத்தவராகப் புகழ்வர். தம்மை வியத்தலும், பணிந்தமொழிக ளில்லாமையு முதலிய தீக்குணங்களெல்லாம் பெரியாரை அடுத்துக் கேள்வி செய்யாமையால் வருவனவே. "நுணங்கிய கேள்விய ரல்லார் வணங்கிய—வாயின ராத லரிது" என்பது பொய்யாமொழி. இத்த கைய செவிச்சுவைகளின் பரமானந்தத்தை யுணராது வாய்ச்சுவை யொன்றையே அறியும் ஐயறிவினராகிய மாக்கள் இருப்பதும் இரா ததும் ஒன்றே என்னுங்கருத்துப்பட, "செவியிற் சுவையுணரா வாயு ணர்வின் மாக்கள், அவியினும் வாழினுமென்" என்றனர் நாயனார்.

இவற்றால், கேள்வி என்பது, ஆன்மாவின் ஞானபிவிர்த்திக் குரியதாய் வீட்டிற் கேதுவாமென்பதும், அது கற்றார்க்கும் கல்லார்க் கும் ஒப்ப உறுதி பயப்பதென்பதும், அஃதின்றேல் மானிடப் பிறவி பயனற்றுக் கழியுமென்பதும், நல்லோர் குழுமிய அவைகளே கேள் வித்தானமா மென்பதூஉம் ஒருவாறு விளங்கும். இத்தகைய கேள் விப் பெருக்கு எங்கும் ஓடி வெள்ளமிடும்படி செய்வது, பரமோப கார மென்பது சொல்லவேண்டா. அதற்குரிய சங்கங்கள் நாடெங் குந் தழைத்து ஞானம் விளைப்பனவாகுக.

# (7) * கொழுநனைப் பேணல்.

இவ்விஷய சம்பந்தமாக (1) கொழுநன் யாவன்? (2) பேணல் எவ்விதம்? (3) பேணுங்கடமை யார்க்குரித்து? (4) அங்ஙனம் பேணலாற் பெறப்படும் பயன் யாது? (5) பேணாமையின் விளைவு என்னும்? என்பவற்றை ஆராய்ச்சியில் வைத்துக் கவனிப்போம்.

(1) கோழுநன்-இது கொழுமைக்கு உரியவன் எனப்பொருள் தரும். கொழுமை-செழிப்பு. ஆகவே செழிப்புக்கு உரியவன் என்பதாம். இனி, யாருடைய செழிப்புக்கு உரியவன் எனின், நற்குடிப் பிறந்த கற்புடைமங்கையின் செழிப்புக்கு உரியவன் என்பதாம். உருவமுங் குணமும் குலமும் ஆதியவற்றின் ஒப்புமை பெற்ற ஓர் ஆடவனும் ஓர் கன்னியும் தாய் தந்தையராதியர் சம்மதியுடன் விதிப்படி அக்கினிசாக்ஷியாக விவாகம் செய்துகொண்டபின்னர், அக்கன்னிகைக்கு அவ்வாடவன் கொழுநனாவன். அம்மணமகனுக்குஅக்கன்னி வாழ்க்கைத்துணையாவள். வாழ்க்கைத் துணையாகிய நங்கையின் செழிப்புக்கு இம்மணமகனே உரியவனாதல் வேண்டும். எவ்வாறெனில், குலபபிறப்பமைந்த கற்புடைய நங்கைக்கு அழகும், செல்வமும், இன்பமும், இவைபோல்வன பிறவும் தன் நாயகனை யல்லது வேறில்லையாம். இவள் அழகுற்றிருப்பதன் பயன் தன் நாயகன் கண்டு மகிழ்வதேயாம். தன் நாயகனுக்கு மகிழ்ச்சி வருவதற்காகவே கற்புடைய நங்கை தன்னை அலங்கரித்துக் கொள்வதல்லது பிறிதில்லை. இதனாற்றான் நாயகன் வேற்றூர்க்குச் சென்றிருக்குங்காலத்து, பதிவிரதாசிகாமணிகளாகிய நங்கைமார் ஆபரணங்களை யணியாமலும், மலர் சூடாமலும் எவ்வாற்றானும் தம்மை அலங்கரித்துக்கொள்ளாமலும் இருப்பர். கற்புடைய பெண்கள் தம்மை ஆடை ஆபரணாதிகளால் அலங்கரித்துக்கொள்வது தமது நாயகர் கண்டு மகிழ்வதற்கே யென்பதும், நாயகர் பிரிந்த காலத்துத் தம்மை அலங்கரித்துக்கொள்ள மாட்டாரென்பதும் அடியில்வரும் காசிகாண்டச் செய்யுளாற் காண்க.

> "எரிமணிப்பொலம் பூண்சுமந் தின்னுயிர்க்
> குரிய கேள்வர் உவப்பமுன் எய்துவர்
> பிரியுங் காலைபிற் பெய்கலன் யாவையும்
> ஒருவி மாசுடல் உண்டிட வைகுவார்."

---

* இது கோனபட்டு ஞானசம்பந்தநற் சபையில் 14—9—12ல் கூடிய சபையில் வாசிக்கப்பெற்றது.

அன்றியும் செல்வச் செழிப்புற்ற நங்கைக்குச் சகல ஆடையாபரணாதி களு மிருப்பினும் நாயகனில்லையாயின் அவையனைத்தும் அணியப் படாமல் விலக்கப்படுவதனால் அணிவகைகள் பெண்கட்கு அழகை வளர்ப்பனவாகக் கொள்ளார். பெண்களின் அழகை வளர்ப்பவர் நாயகர்களே யென்பதும், இதனால் அழகின் கொழுமைக்கு உரியவன் கொழுநன் என்பதும் பெற்றும். "செந்திருவைப் பொன்மகளைச் சிங்காரித் தென்னபயன் அந்தகனே நாயகனானால்" என்பதும் ஈண்டுக் கவனிக்கத் தக்கதொன்றும். குலமகளிர்கட்குத் தம் நாய கர் அன்பே மிகப் பெருஞ் செல்வமாம். ஏனைச் செல்வங்களெல் லாம் தம் நாயகரின் அன்புச் செல்வத்துடன் கூடி நின்றாலன்றி இப் பெண்மணிகளால் ஒரு சிறிதும் விரும்பப்படா. அனிச்ச மலரி னும் மேன்மைவாய்ந்து செம்பஞ்சு தோய்ந்த சீறடிகள் நோவக், கல்லும் முள்ளும் கலந்த கானகத்தே, சீதாபிராட்டியார் வந்தது எதன்பொருட்டு? ராஜாதி ராஜனாகிய ஜனகமகாராஜன் புதல்வியான பிராட்டியார் பிறந்தவீட்டில் வந்திருந்தால் எல்லாச்சௌகர்யங்களும் உண்டன்றோ? தந்தைவீட்டுச் செல்வத்தை ஒருதுரும்பாகவேனும் மதியாமல் நாயகனாது அன்பையே பெரும்பேறாக மதித்துக், காட்டு வழி நடந்தும் காய்கனி புசித்தும் பன்னசாலையிற் பள்ளிகொண்டும் படாதபாடு பட்டதை யறியார் யாவர்? நாயகனாது அன்புச் செல் வத்துக்கு ஏனைப் பொருட்செல்வம் சிறிதும் ஒவ்வாதெனற்கு இதைவிடவேறு சான்றும் வேண்டுமோ? நளமகாராஜன் காட்டுக்குச் செல்லுங்கால் தாய் தந்தையாதியரையும், மக்களையும், பிறரையும் பிரிந்தாலும், நாயகனை விட்டுப்பிரிய இணங்காமல் தமயந்தி கூறியதை இங்குத் தருகின்றோம்.

"குற்றமில் காட்சிக் குதலைவாய் மைந்தரையும்
பெற்றுக் கொளலாம் பெறலாமோ?—கொற்றவனே!
கோக்கா தலனைக் குலமகளுக் கென்றுரைத்தாள்
நோக்கால் மழைபொழியா நொந்து" என்பதேயாம்.

ஒரு ராஜ குடும்பத்திற் பிறந்த நங்கை ஏழை நாயகனை மணந்து அவனுடன் கூடித் தரித்திர காலக்ஷேபஞ் செய்துவருகையில் பழைய சகியொருத்திவந்து "இத்தரித்திரனுக்கு மனைவியாயினையே ராஜ ராஜபுத்திரியாகிய உனக்கு இவ்விதியா வந்தது? எனக் கூறியபோது அக்கொடுஞ் சொற்களைக்கேட்ட கற்பரசி, "என் நாயகன தரித்திரன்

எனக்கூறிய தோழியே! நீ அறியாது கூறினாய். யானும் இங்கே ராஜரீக பதவியுடன் வாழ்கின்றேன். நீ கூறிய கோட்டையொடுகூடிய காவலமைந்த பெருநகரம் இச்சிறு குடிசையே. என் நாயகனே அரசன். யானே குடி. என் நாயகரின் அன்பே பெருஞ்செல்வம். யானிவர்க்கியற்றும் பணிவிடைகளே குடிகளுதவும் இறைப்பொருள் இந்த ராஜரீக வாழ்க்கைக்கு யாதும் குறையில்லையே" என விடை கூறியதாகப் பொருளமைத்துப் பிற்காலப் புலவரொருவர் பாடிய செய்யுளொன்றைக் கூறுகின்றேன்.

"மிடியுளார் கேள்வரென் றுரைத்த மின்னனாய்!
கடிநகர் சிறுகுடில்; காந்தன் வேந்தனும்;
அடிகளே குடி; அவர் அன்பென் செல்வமாம்;
குடியிறை என்னிறை; குறையுண் டோசொலாய்"—என்பதே.

இதனால் உத்தமகுணப் பெண்கட்குச் செல்வமென்பது தத்தம் நாயகர்களின் அன்பே அல்லாமல் பிறந்தவீட்டுப் பெருஞ் செல்வமாயினும் புகுந்த வீட்டுப் பொற்குவியலாயினும் அல்ல என்பது விளங்கும். ஆகவே செல்வத்தின் கொழுமைக்கும் உரியவன் நாயகன் என்பது சித்தித்தது.

இனி இன்பவிஷயத்திலோ இப்பெண்மணிகள் தமக்கென ஒன்றைக்கொண்டு இன்புறுதல் இல்லை. நாயகருக்கு எது இன்பமோ அதுவே இவர்க்கு மின்பமாகும். நாயகர் இன்பமுற்றால் இவரும் இன்பமெய்துவர். நாயகர் துன்பமுற்றால் இவரும் துன்பமுறுவர்.

"எப்பணியா லின்புறுவர் காதலர்அக் காதலரை
அப்பணியா லப்பொழுதே யன்புறுத்தி—ஒப்ப
மனங்குழையும் வண்ணம் மகிழ்விப்ப தன்றே
கனங்குழையார் தங்கள் கடன்"

என்ற வண்ணம் நாயகரது இன்பத்தையே தம் இன்பமாகக் கொண்டிருந்த நாளாயினி முதலியோர் சரித்திரம் நாமறியாததன்றே? ஆதலின், இன்பத்தின் கொழுமைக்கு உரியனும் நாயகனேயாவன். ஆகவே கொழுநன் என்பவன் நற்குலமங்கையினது அழகு செல்வ இன்பங்களின் கொழுமைக்கு உரிமைபூண்ட கணவனேயாதல் சித்தித்தது. இனி இத்தகைய கணவனைப்பேணல் என்பதைப்

பற்றி ஆராய்வோம். 'பேணல்' எனற்குக் காத்தல் என்பது பொருளாம். கணவனைக் காத்தல் எனவே அக்காவலின் தன்மை விசாரித்தறியத்தக்கதாயிற்று, காவல் என்பது ஒரு பொருளைப் பிறர் பற்றுவாறு காத்திருப்பதுமட்டுமென்று. அப்பொருட்கு வேண்டும் நன்மைகளை யெல்லாம் காலமறிந்து தக்கவாறு செய்தலே காவலாகும். 'அரசன் குடிகளைக் காத்தான்' என்றால் குடிகள் ஓடிவிடாமல் காவல் செய்தான் என்பது பொருளன்று. குடிகட்கு வேண்டும் நன்மைகளைக் காலந்தவறாது செய்தான் என்பதே பொருளாம். இதனுள் மற்றதும் அடங்கும். ஆகவே கொழுநனைப் பேணல், எனற்கு 'நாயகனுக்கு வேண்டிய நன்மைகளை யெல்லாம் செய்தல் என்பது பெறப்படும். நாயகனுக்குரிய சகல பொருள்களையும் பகுத்துக்கூறுமிடத்து உடல் பொருள் ஆவி என மூன்றனுளடங்கும். இம்மூன்றனையும் காத்தலே இங்குக்கூறிய பேணல் என்பதாம். கணவன் நாவிற்கினிமை தரத்தக்க நல்ல உணவுகளை யெல்லாம் காலந்தவறாது செய்வித்துப் படைத்து உண்பித்துக் கணவனது உடலைப் பேணவேண்டும். கணவனுடலில் குளிர் வெப்பம் ஆதியன மிகுந்தும் குறைந்தும் இருத்தலுக்கேற்ப உணவுப் பதார்த்தங்களைப் பக்குவஞ் செய்யும்போதே குடித்தன முறையிற் பழக்கத்தாலறிந்து இது வாயு பதார்த்தம், இது குளிர்ச்சியைத் தரும், இது உஷ்ணப்படுத்தும் என ஆராய்ந்து கூட்ட வேண்டியதைக் கூட்டியும், குறைக்க வேண்டியதைக் குறைத்தும், பக்குவப்படுத்திக் கணவனை யுண்பிக்கவேண்டும். இவைபோன்ற உடல் வளர்ச்சிக்குரிய காரியங்களையெல்லாம் நாயகி தன்கவனத்தில் அமைத்துத் தொழிற்படுத்தவேண்டும், இங்ஙனமின்றி நாயகனுக்கு இனிப்பு வேண்டுமென்றால் தனக்கு எரிப்பு வேண்டுமென்றும், நாயகனுக்கு ரசம் வேண்டுமென்றால் தனக்குக்குழம்பு வேண்டும் என்றும், நாயகன் தூங்கவேண்டுமென்றால் தான்விழித்திருக்கவேண்டுமென்றும், எறுக்குமாறாக நடப்பது கற்புடைய பெண்களின் குணமன்று.

கணவன் தேடிவந்த பொருளைக்கொண்டு மனைக்குரிய பண்டபதார்த்தங்களைக் காலமறிந்து வேண்டுமளவு வாங்கித்தொகுப்பித்தும் அப்பண்டபதார்த்தங்கள் கெடாதவாறு வெயிலிலுலர்த்திப் பாதுகாத்தும், அறவகையினும் செலவிட்டுத் தாமுமுண்டுடுத்துப் பொருளைப் பேணவேண்டும். அறவகையிலாயினும் குடும்ப சுபா சுப வகைகளிலாயினும் ஆடை யாபரணாதிகளிலாயினும் தம் நாயகர்க்குரிய பொரு

ளின் அளவையறிந்து அதற்குத் தக்கபடியே செலவிட்டு அவ் வளவிற்ருனே மனமகிழ வேண்டும். அயல்வீட்டு மங்கையைப்போலத் தானும் தன்னளவிற்கு மிஞ்சிய ஆடை யாபரணாதிகளைக் கொள்ளவேண்டுமென்ருவது மற்ற வீட்டார் விவாகத்தில் அத்தனை பணம் செலவிட்டார்களே யாமும் அவ்வாறு நமது பிள்ளைகள் விவாகத்தில் செலவிட வேண்டுமென்ருவது மற்றவர் மிகவும் பெரிய வீடுகட்டி வருவதைக் கண்டு நாமும் அவ்விதம் பெரியவீடு கட்டவேண்டுமென்ருவது தன் நிலையை யுணராது நாயகனைத் துன்பப்படுத்துவது பதிவிரதைக்கு இயற்கையன்று. தற்காலத்துப் பெண்பாலார் பலர் இவற்றை உணராது நாயகர்பாற் சுடுசொற் கூறித் துன்புறுத்துகின்றனர். அயலகத்தா ஞெருவன் ஒரு வியாபாரத்தால் லட்ச ரூபாய் கொண்டுவந்து பெருமிதமாக வீடும் கட்டி விவாகமும் செய்வித்தானென்ருல் அது கண்ட சில பேதைப்பெண்கள் தங்கள் நாயகரை நோக்கி "அவனைப் போல நீங்களும் ஆண்பிள்ளைதானே? நீங்கள் ஆண்பிள்ளையானல் எந்தத் தொலைக்குப் போயாவது தேடிக்கொண்டு வாருங்கள்; வீண்பிள்ளையானல் இருந்த இடத்திலிருந்து தூங்கிவிழுங்கள். அடுத்தவீட்டுச் *சாலாட்சி-புருஷன் அவளுக்கு என்ன என்ன நகை? என்ன என்ன சேலை? என்ன என்ன சாமான்கள் கொண்டுவந்திருக்கிருன்? மகன் கலியாணத்தில் இருபதுவராகன் செலவாம். வீடுதான் என்ன பளபளவென்றிருக்கிறதே. நீங்கள் இவற்றையெல்லாம் பார்த்தும் சும்மாயிருக்கிறீர்களே, தேடமுடியாவிட்டால் இருக்கிற கிராமம் பூமியை விற்ருவது கடன் வாங்கியாவது நகை செய்து போடுங்கள்" என்று இன்னும் பலவாறு சொல்லித் துன்பப்படுத்துகின்றனர். இந்தப்பெண்சாதியாகிய தேள் கொட்டலைச் சகியாமல் அவர்களிஷ்டப்படியே தம்மளவிற்கு மிஞ்சிய நகைகளைச் செய்வித்தும் வீடுகட்டியும் விவாக முதலியவற்றை நடத்தியும் எத்தனைபேர் கெடுகின்றனர்? இவர் நகை செய்வதெல்லாம் பிறர்நகை செய்வதாதலை யறிந்திலர்.

"ஆன முதலில் அதிகம் செலவானல்
மான மழிந்து மதிகெட்டுப்—போனதிசை
யெல்லார்க்குங் கள்ளனு யேழ்பிறப்புந்தீயனுய்
நல்லார்க்கும் பொல்லனும் நாடு."

---

*விசாலாட்சி என்பதன் மருஉ

என்றவாறு தம்முடைய பொருளின் அளவையறியாது பிறர் தோது கருதி அதிகச் செலவுசெய்து கெடுபவர் பலரன்றே? இக்கேட்டுக்கு முக்கியகாரணம் நமது பேதைப்பெண்களின் அறிவில்லாமையேயாகும். ஆகவே தங்கள் பொருளின் அளவிற்கேற்பச் செலவிடுதல் பதிவிரதா சிகாமணிகளின் கடனும். இதுபற்றியே,

"மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை."

என்றார் பொய்யில்புலவர்.

"வளவனாயினும் அளவறிந் தளித்துண்" என்பதையும்,

"ஆகா றளவிட்டி தாயினுங்கேடில்லை, போகா றகலாக் கடை"

என்பதையும்கடைப்பிடித்து "இல்லறம்பொருளளவிற்கேற்பச்செய்க" என்ற முறையையுணர்ந்து தமது செல்வத்துக்குத் தக்க வண்ணம் செலவிடுகின்ற மனைவி ஒருவனுக்கு வாய்ப்பாளாயின் அவனுக்கு அதைவிட பெரும் பாக்கியம் வேறில்லை. இதனாற்றான் "வருவாய்க்கியைய வாழ்தலுறு மறுவில் கற்பின் மனையாள்போற், பொருள் யாவுளவாம்" என்றார் விநாயக புராணாசிரியரும். நமது அருமைப்பெண்கள் சிகாமணிகள் மட்டும் இந்த நீதியை யுணர்ந்து நடப்பார்களாயின் நம்மவருள் ஒருவரும் வறுமைப்படார்; மானமிழக்கார்; புதுச்சேரி புகார். ஆதலால் நாயகர்களின் பொருட்காவல் பத்தினிமார்களின் கவனத்தாலே நிலைபெறுவதாகு மென்க.

இனி உயிர்க்காவலை ஆராய்வாம் "சிறப்பீனுஞ் செல்வமுமீனும் அறத்தினூ உங்கு, ஆக்கம் எவனோ உயிர்க்கு"

என்றாராகலின், உயிர்க்குத் துணையாய்நின்று நலம்புரிவது அறமேயாகும். அந்த அறச்செயல் அனைத்தும் மனைவியாலே தான் நிலைபெறும். தென்புலத்தார்க்குச் செய்கடன்றீர்க்கவும், தெய்வ வழிபாடு செவ்விது நடாத்தவும், விருந்தினர்ப் போற்றவும், ஒக்கலைக்காக்கவும் மனைவியின் குணவிசேடமே முக்கிய கருவியாம். எந்த அறமும் மனைவியின் றுணையின்றிச் செயற்பாலதன்று. நாயகனுவான் அறச்செயல்களைச் சிந்தித்தற்கு மட்டுமே உரியனாவன். அவன் சிந்தித்தவாறு செய்து முடித்தற்கு நாயகியே யுரியளாவள். மனைவியின் சம்

மதமில்லையாயின் ஒரு அறச்செயலும் நடைபெறாது. ஒரு விருந்தினரை யழைத்து வந்து அன்னமிட வேண்டுமென்றால் "ஆமாம் குறைச்சலில்லை. விருந்துவராத நாள் தானில்லையே! நித்த நித்தம் இந்த இழவுதானே? பொங்கிய சோற்றைப் போட்டு வயிறாரத் தின்னலாமென்பது தான் இல்லையே. என்னால் இனிப் பொங்கவும் போடவும் முடியாது. தலையை வலிக்கிறது." என்று கடுகடுத்துக் கூறி, முக்காடிட்டுப் படுத்துக் கொள்ளும் மூதேவி மனைவியாக வாய்ப்பதால் மணமகனுக்கு அறமெங்கே? புகழெங்கே? எத்தனை செல்வமிருப்பினும் என்னபயன்? அவன் சகல வாழ்வு மற்றவனே.

"மனைமாட்சி யில்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை, எனைமாட்சித் தாயினு மில்" எனவும், "மனைத்தக்காள் மாண்பிலள் ஆயின் மணமகன் நல்லறம், பூண்ட புலப்படா." எனவும் பெரியோர் கூறுமாறுங் காண்க. உத்தமப் பெண்மணிகளாவார் கணவன் குறிப்பறிந்து அவன் சொல்லு முன்னமே தாமாக உபசரித்து வேண்டுவன செய்வார். கொண்டான் குறிப்பறிபவளே பெண்டாட்டியானவள். ஒரு காரியத்தைச் செய் என்றால் "செய்தேன்" என்பவள். இளையான்குடி மாற நாயனார் மனைவியின் சரித்திரத்தைப் பாருங்கள். தாங்கள் பட்டினியாற் றளர்பவராகவும், நளிர்துளிப்பெய்யும் நள்ளிராப்போது வந்த மெய்யடியார் சிந்தை நோகாமல் நென்முளை வாரிவந்து கொடுப்ப மற்றதை வறுத்துக் குற்றிச் சமைத்து அமுது செய்வித்தனர். அற்புதம்! அற்புதம்! இத்தகைய நற்குண நற்செயலமைந்த பெண்கள் திலகத்தைக்கைப்பிடித்து வாழ்வதே வாழ்வாகும். அதுவே சிறந்த நல்லறமாகும். அவர்க்கே இருமைபின்பமும் எய்தும். நாயகன் பணித்தவற்றைக் காரணங்கேளாமலே செய்து முடிப்பது தான் உத்தம மங்கையர் கடன். காரணங்கேட்டு ஆக்ஷேபனை நிகழ்த்தி முடியாமை கூறிக் கன்னத்திலும் முதுகிலும் நாலு கொடுத்த பின்பு கண்ணீரை வடித்து மனத்துள்ளே வைதுகொண்டுசெய்பவள் பெண்ணல்லள். அவளைப்பேயென்றாலும் நாயென்றாலும் குற்றமாகாது.

திருவள்ளுவர் ஒரு தினம் உண்ணும்போது ஒரு கிண்ணத்தில் நீரும் ஊசியும் கொண்டுவந்து வைக்கும் வண்ணம் தமதருமைப்பத்தினியார்க்குக் கட்டளையிட்டனராம். அவ்வம்மையார் அங்ஙனமே தினமுங்கொண்டுவந்து வைத்தனராம். இங்ஙனம் பல வருஷங்கள் நடந்

தும் ஒரு நாளாவது கிண்ணத்து நீரும் ஊசியும் ஒருவிதத்திலும் உப யோகப்படுத்தப் படவில்லையாம். அம்மையார் மரணகாலத்து மிகவும் ஏக்கங்கொண்டிருப்பதறிந்த தேவர் "பெண்ணே! எதை நினைத்துள் ளாய்?" என்றனராம். அம்மையார் இரண்டு கைகளையும் குவித்து "நீரும் ஊசியும் உண்ணும்போது வைக்கும்படி கட்டளையிட்டருளிய வண்ணம் வைத்து வந்தேன். அவை இன்னவித உபயோகத்துக்காக வைக்கப் பெற்றன வென்பது தெரிந்திலன். அதையே நினைந்துள்ளே ன்" என்றனராம். வள்ளுவதேவர் "சாதம் சிந்தினால் ஊசியாற்குத்தி யெடுத்து நீரில்தோய்த்து இலையில் இடுதற்காகவைக்கச்சொன்னேன்" என்றனராம். உடனே அம்மையார் உயிர் நீங்கிற்றும். இவ்வாறு ஓர் கதை சொல்வதுண்டு.

இதில் பல வருஷகாலம் காரணம் வினவாமை மட்டுமன்று. ஒரு போதாவது அன்னஞ் சிந்தாமற் படைத்து வந்ததோர் பேராச்சரிய முங் கவனிக்கற்பாற்றும். § நாயகன் செய்யும் சகல நற்காரியங்களை யும் முட்டின்றி முடிக்கும் பெற்றியால் நாயகனுயிர்க்குக் காவலாயமை வன மனைவியின் நற்குண நற்செயல்களே யென்பதும் பெறப்பட்டன. மேற்கூறிப் போந்தவற்றானே கணவனைப் பேணுங்கடமை கற்புடைய நங்கைக்கே யுரியதென்பது தானே போதரும். "கொண்டானை அல் லால் அறியாக் குலமகள்" எனவும், குல மகட்குத் தெய்வம் கொழுந னே" எனவும் கூறுப ஆதலின் நற்குலத்துதித்த நாரியர் சிகாமணிக்கு நாயகனைத் தவிர வேறு தெய்வமில்லை.

---

§ நாயகன் வினைவசத்தாலாவது அறியாமை வசத்தாலாவது தான் செய்யவேண்டிய அறநிலையினின்று வழுவுங் காலத்தும் அவனுடனிணங்கி நின்று தக்க சூழ்ச்சியால் அவனைத்திருத்தி நன்னெறிக்கட் செலுத்தும் கட மையும் நாயகியினுடையதேயாம். கூன்பாண்டியன் தனது மரபிற்குரிய மெய்ச் சமயமாகிய சைவசமயத்தை விட்டு சமண் மதப் பிணி யுற்றிருக்குங் கால் அவனை விட்டு விலகாது அவனுடனிருந்தே நமது சமயாசாரியமூர்த் திகளாகிய ஸ்ரீ ஞானசம்பந்த சுவாமிகளை வரவழைத்து சமணக்களையை வேரோடு களைந்து சைவப்பயிரைத் தழைப்பித்த கனங்குழை மாதர் சிகா மணி மங்கையர்க்கரசியாரன்றே? இந்த அம்மையார் செய்து வைத்த பெரும் பாக்கியத்தாலல்லவா யாமெல்லாம் இற்றைக்கும் சைவசமயிகளாகி வாழ்கின் றோம்? இதனால் நாயகனது நல்வினைகட்குத் துணை நின்று வளர்ப்பதும் அவன் செய்யும் தீவினைகட்கு இடையூறு செய்து அதனைப்போக்கி நல்வழிப் படுத்தலும் ஆகிய இருவழியானும் கணவனது அறத்தைக் காப்பவள் கற்பு டைய நாயகியே என்பது போதரும்.

இங்ஙனம் கணவனையே தெய்வமாகக் கொண்டொழுகும் பெண் மணிக்கு எல்லாத் தெய்வங்களும் எதிர்வந்து நின்று வேண்டுவன செய்யும் என்பது பல சரித்திர வாயிலாகவும் அறியலாம். சீதாபிராட்டி, தமயந்தி, கண்ணகி முதலிய பெண்மணிகளிட்ட சாபங்கள் தெய்வவாக்கோ டொப்ப முட்டின்றி நடைபெற்றதை யறியாதா ருண்டோ? இதனால் கொழுநனைப் பேணுங் கடமை குலமகளுக்கேயுரியதென்பது பெறப்பட்டது. "குலமகட் சழகுதன் கொழுநனைப் பேணுதல்" என்ற அருமைச் செய்யுளும் ஈண்டுக் கவனிக்கற்பாற்றும்.

குடும்பத்தின் தலைமையை வகிக்கும் சுதந்தரத்துக் குரிமைபூண்ட தலைவன் தலைவி என்னு மிருவருள் தலைவியானவள் தனக்கென யாதொரு சுதந்தரமும் சுகதுக்கமும் கொள்ளாமல் தலைவனையே கதியாகக்கொண்டு பேணுதலாகிய பெரும் பொறுப்பை வகிப்பதனால் பெறத்தக்க பயன் என்னையென ஆராய்வாம். மக்களாகப் பிறந்தார் யாவரும் இம்மை மறுமை இன்பங்களை யடையவேண்டும். இம்மை யின்பம் புகழும் மறுமையின்பம் சுவர்க்காதி மோக்ஷங்களுமாம் சுற்புநிலையுடைய பெண்மணிகளை உலகத்தார் தெய்வமாக நினைத்துப் போற்றுவர். "கற்புக் கடன்பூண்ட இத்தெய்வமல்லது பொற்புடைத்தெய்வம் யாங்கண்டிலமால்" என்றார் பிறரும். கற்புடையவள் சொன்ன சொல்லை எல்லாத்தெய்வங்களும் கேட்டுப்பணிபுரியுமாயின் அவளை உலகத்தார் புகழ்வது சொல்லவும் வேண்டுமா? அப்பெண்மணி பெய்யென்றால் மழைபெய்யும். அவள் நினைத்தகாரியம் உடனே கைகூடும். குலத்தாலும் வயதாலும் அறிவாதிகளாலும் பெரியோராயினும், ஒருகற்புடைய பெண்மணியைக் கைகூப்பி வணங்கி வாழ்த்துவர். ஆதலின் இம்மை யின்பம் பெற்றமை விளக்கமாயிற்று. சுவர்க்காதிமறுமையின்பங்கள் இவர்க்குவாய்க்கு மென்பதென்னே? ஒரு கற்புச்செல்வியைப் பெற்றவர் குலமும் அவளை மணந்த காதலன் சுற்றத்தாருங்கூட எண்ணிறந்த காலம் சுவர்க்க இன்பத்தை யடைவரன்றோ? இதனை.

"சற்பு மேய சனங்குழை மாதரைப்
பெற்று ளோர்தம் மாபும் பெருந்தவக்
கற்பி னுட்கொண்ட காதல னுருயிர்ச்
சுற்றம் யாவும் துறக்கத்தி னெய்துமால்" என்பதனாலுணர்க

இக்கற்பாசிகள் பாதந்தோய்ந்த இடமெல்லாம் சகலபுண்ணியத் தலங்களிலும் சிறந்த புண்ணியத்தானமாகும் என்பதனை:

"நண்ணு கற்புடை நங்கையர் சீறடி
மண்ணி னெவ்விடந் தோயினு மற்றஃ
தெண்ணு கின்ற தலங்க ளெவற்றினும்
புண்ணி யத்தல மென்று புகல்வரால்" என்பதாலறியலாம்.

"வானம் பொய்யாது வளம்பிழைப் பறியாது
நீணில வேந்தன் கொற்றம் சிதையாது
பத்தினிப் பெண்டிர் இருந்த நாடு."

என்ப ஆகலின் கொழுநனைப் பேணுங் குலப்பூங்கோதையர் வாழும் நாட்டில் பஞ்சம் வராது. வளங்கள்குறையா. ராஜநீதி தவறாது. இம்மங்கையர் வாழ்வாற்றான் உலகம் நிலைபெறுவது என்றிருக்கும் ஆயின் கொழுநனைப் பேணலாற் பெறும் பயன் இவ்வளவிற்றென்று வரையறுத்துக்கூறும் வல்லவர் யாவர்? இப்பெண்மணிகளின்பெருமையைக்கூற ஆதிசேடனாலும் முடியாது.

இனி கொழுநனைப் பேணாமையால் வருந்தீங்குகளைக் கவனிப்பாம். மனமகிழ்ச்சியோடு நாயகனைப்பணியாமல் அரியவிரதங்களையும் பூசைகளையும் செய்கின்ற பெண்களை யமதூதர்கள் பிடித்து எரிவாய் நரகத்திற் றள்ளித் துன்பப் படுத்துவரெனவும், நாயகர் பழியைக்கூறுகின்ற பெண்களும் நாயகருடன் கடுகடுத்துப் பேசுகின்ற பெண்களும் ஓரியாகப் பிறப்பார்களென்றும், நாயகர் கோபித்தபோது நாயகரை வைகிற பெண்கள் புலியாகப் பிறப்பார்களெனவும், தன்னைப்போல நாயகன் அன்பிற்குப் பாத்தியப்பட்ட மாற்றவளிடம் பகைமை பாராட்டித் தீங்குசெய்யும் பெண் கூகையாகப் பிறப்பாளெனவும், பரபுருஷர் அழகைக்கண்டு விரும்புபவர்கள் பேயாகப் போவார்கள் எனவும் நாயகர் பசித்திருக்க அவரை உண்பிக்காமல் தாங்கள்மட்டும் வயிறு நிறைபத்தின்கிற பெண்கள் பன்றியாகப் பிறப்பார்களெனவும், கற்புநிலைதவறிய பெண்களின் வம்சத்தவர்களெல்லாம் கொடிய நரகத்தில் அழுந்துவார்களெனவும் நூல்கள் முழங்குகின்றன. இம்மையினும் இவர்கட்குப் பழியல்லது புகழில்லை.

எறியென் றெதிர் நிற்பாள் கூற்றம் சிறுகாலை
அட்டில் புகாதாள் அரும்பிணி—அட்டதனை
உண்டி உதவாதாள் இல்வாழ்பேய் இம்மூவர்
கொண்டானைக் கொல்லும் படை.

என இகழப்படுவாராதலின் இம்மையின்பமும் அடையார். ஆதலால் கொழுநனைப்பேணலால் இம்மை மறுமை யின்பங்களைப்பெறுவரெனவும், கொழுநனைப் பேணாத பெண்கள் இம்மை மறுமையிரண்டினும் பிரயோசன மற்றவர்களாகி மீளாநரகிற்கே ஆளாவாரெனவும் புலப்படுதல் காண்க.

நல்ல குலத்தில் நல்ல குடியிற்பிறந்த புண்ணியவதிகள் தங்கட்கு வாய்த்த நாயகர் அழகில்லாவிடினும் விகாரரூபமுற்றிருப்பினும் அது பற்றி அன்பு மாறாது தங்களுடைய அவயவங்களில் ஏதாவது குறைந்திருந்தாலும் குறைந்த தம் அவயவத்தையும் தாங்கள் நன்கு பாதுகாப்பது போலவே தம் நாயகரை அன்போடு பேணவேண்டும். நாயகர் உண்டபின் தாம் உண்ணவேண்டும். நாயகர் உறங்கிய பின் உறங்கி எழுவதன் முன்னே எழவேண்டும். நாயகர் கோபித்தாலும் தாம் கோபம் கொள்ளாமல் இன்மொழிகூறி, வேண்டுவன செய்து, அவர் கோபத்தை மாற்றவேண்டும். தம் வீட்டைவிட்டு அயல் வீடுகட்கு அடுத்தடுத்துப் போதல்கூடாது. புண்ணிய தீர்த்த ஸ்நானம் திவ்ய க்ஷேத்திர யாத்திரை திருவிழாக்காட்சி விரத மிருத்தல் முதலிய சற்கருமங்களைச் செய்யவேண்டுமாயினும் நாயகர் உத்தரவுபெற்றுக்கொண்டே செய்யவேண்டும். தம் நாயகர் பெயரைச்சொன்னால் அவர் ஆயுள் குறையுமாதலால் அவர் பெயரைச் சொல்லலாகாது. நாயகருண்ட சேஷத்தை அமுதமாகப் பாவித்து உண்ணவேண்டும். நாயகரில்லாத காலத்து புண்ணிய நதியாடநேர்ந்தால் அந்நாயகரை நினைத்து சூரியனைநோக்கி ஸ்நானஞ் செய்யவேண்டும். தமதுசெல்வங்குறையாதிருக்க வேண்டி உரல் அம்மி வாயிற்படி உலக்கை முறம் ஆகிய இவற்றின்மீது உட்காருதல் கூடாது. நாயகருக்கு ஆயுள்விருத்தியாக வேண்டி தாம் மஞ்சள் அணிந்து கொள்ளவேண்டும். நாயகன் நாயகி என உடலிரண்டாயினும் உயிர் ஒன்றேயாக நாயகன் விரும்பியதையே தானும்விரும்பி நாயகன் வெறுப்பதை யெல்லாம் தானும் வெறுத்து வாழவேண்டும். இவையெல்லாம் கொழுநனைப் பேணும் குலமகளிர் கடமைகளாம். வாழ்க்கைத் துணையாகிய கற்புடைய நங்கையர் செய்வனவும் தவிர்வனவு மாகிய கடமைகளை யிதுகாறுங் கூறினோம். இனி 'ஒன்றின முடித்தல், தன்னின முடித்த' லென்னு முத்தியால் மனைவியைக்கணவன் பரிபாலிக்க வேண்டிய முறையினும் சிறிது கூறி முடிப்பாம்.

தாய் தந்தை சகோதரர் உற்றார் முதலிய யாவரையும்விடுத்துத் தம்மையே கதியாகவந்த மனைவியை அவளது தாய் தந்தையராதியர் போல நாயகன் பரிபாலிக்கவேண்டும். மனைவியினிடத்து அன்புடனிருக்கவேண்டும். மனைவியினிடம் ஏதாவது குறைகளைக்கண்டால்மிகக் கடின தண்டனை புரியாமல் நயவசனங்களாலே சிறிது சிறிதாகத் திருத்திக்கொள்ள வேண்டும். "இதத்தால் வசமாம் சினவிலங்கும்" என்பவாதலின் நயமொழியால் எத்தகைய குணக்கேட்டையும் திருத்திவிடலாம். தம்முடைய சகல சுகாசுகங்கட்கும் நிலைக்களமாயிருக்கும் மனைவியைக் கேவலம் அடிமையைப்போலக் கருதி நடத்தல் கூடாது. புருஷன் மனைவியினிடத்து அன்பு மாறாமல் இதவசனத்துடன்இருந்தால் கொடியவளான மனைவியும் மிகவிரைவில் நல்லவளாவதுநிச்சயம். பெண்கள் தம் நாயகரிடத்திலுள்ள அன்பு நீங்க வெறுப்பு வருவதற்குக்காரணம் பெரும்பான்மை ஒன்றே ஒன்று தான் உண்டு. அதாவது தம் நாயகர் தம்மிடத்து வைத்திருக்க வேண்டிய அன்பை வேறொரு பெண்ணிடத்தும் வைத்திருப்பதாகக் காண்டல்தான். ஆதலின் புருஷர்கள் பரஸ்திரீ கமனத்தை அறவே நீக்கவேண்டும். இங்ஙனமிருந்தால் இருவரும் மனம் ஒத்து எல்லாவித சௌக்கியங்களையும் அடைந்து இருமை யின்பமும் ஒருமையிற்பெற்று வாழ்வார்களென்பது சத்தியம் சத்தியம்.

"வந்தெனைக்கரம் பற்றிய வைகல்வாய்
இந்தஇப் பிறவிக்கிரு மாதரைச்
சிந்தை யாலும் தொடேனென்ற செவ்வரம்
தந்த வார்த்தை திருச்செவி சாற்றுவாய்"

என்னும் சீதா பிராட்டியார் வாக்கு நோக்கத் தக்கதாம்.

"வருவாய்க் கியைய வாழ்தலுறு மறுவில் கற்பின் மனையாள்போற்
பொருள்யா வுளவா மதுவன்றிப் புகழும் பயனு மிகவுண்டாங்
கருதா ரெதிரே யிமிலேற்றுக் காமர் நடையு முறுமதனா
லொருவா தவளோ டொப்புறவே யுற்று வாழ்த லறனாகும்."

# (9) கவிகளும் கவிஞர்களும்.

அமிழ்தினு மினிய தமிழ் மொழி யகத்து எழுத்து அசை சீர் தளை அடி தொடை எதுகை மோனை முதலிய பல வுறுப்புக்களையு டைய கவிகள், வெண்பா முதலிய நான்கு வகையினவாகி அவற்றி லொவ்வொன்றும் பலவகைத்தாகி, ஒருவித ஓசைக்கட்டுப்பாடுபெற்று நிகழும். அங்ஙனம் தோன்றும் கவி: செய்யுள், பா, பாட்டு தூக்கு முதலிய பல பெயர்களைக் கொண்டதாகும். இயற்கையறிவும், நூலறி வும் பெற்ற புலவர்கள் தங்கள் மனத்திற்றோன்றிய அரிய பெரிய விஷ யங்களை உலகங்கண்டு களிக்குமாறும், பின்பற்றி யுய்யுமாறும் கவிக ளாகச்செய்து வைத்துள்ளார். வசனமாக எழுதிவைப்பின் அது பிறர் மனத்தைக் கவரும் ஆற்றல் மிகக் கொள்ளாதென்பது கருதியே மனத்தைக் கவரத்தக்க இனிமை வாய்ந்த ஓசைச்சுவையுடன் சொற் சுவை பொருட்சுவைகளு மமையும் வண்ணம் கவிகளாக்கிவைத்தனர்.

பலவகைத் தாதுக்களா லமைந்த நமதுடல் உயிர்க்கிடனாதல் போல, பலவகைச் சொற்களா லமைந்த கவி பொருட்கிடனாகி விளங் கும். ஆகவே பொருட்சுவையற்ற கவியானது உயிரில்லாத உடலை (பிணத்தை) யொப்பதல்லது சிறவாது. இதனைநற்றூன்,

"பல்வகைத் தாதுவி னுயிர்க்குடல் போற்பல
சொல்லாற் பொருட்கிட னாக வுணர்வினின்
வல்லோ ரணிபெறச் செய்வன செய்யுள்"

என்றார். அன்றியும், மலரவன் செய்யும் உடல் மாய்தல்போல புல வர்கள் செய்யும் உடல் (கவி) மாயாமல் என்றென்றும் நிலைபேறுடை யதாகும். கவிஞர்கள் தாம் குறித்தபொருள் முழுதும் நன்கு வெளிப் படுமாறு செய்வதே கவியெனப்படும். அல்லாதன கவியாகா.

"எழுத்து முதலா வீண்டிய வடிவில்
குறித்த பொருளை முடிய நாட்டல்
யாப்பென மொழிப யாப்பறி புலவர்"

என்பதனானே இதனை அறியலாம்

குறித்த பொருள் நன்கு தோன்றலாவது:-ஒரு கவியின் பொருள் வீரம், சோகம் உவகை, நகை முதலியவற்றுள் யாதானுமொன்றைப் பற்றியதாயின் அக்கவியைக் கேட்டுப் பொருளறிந்தவுடன் கேட்டார்க்கு அவ்வகையில் மெய்ப்பாடு தோன்றலேயாம். உத்தமப்புலவர்கள் செய்த நூல்களிலிருந்து சோக ரசமுள்ள கவிகளைக்கேட்டறிந்தவுடன் கண்ணீர்விட்டு மனங்குழைதலும்; வீரம், உவகை, நகை முதலியவும் அவ்வாறே கேட்பார்க்கு மெய்ப்பாட்டில் நன்கு தோன்றுதலும் பலரிடம்நேரில் காண்கின்றோம். பெரியபுராண முதலியவற்றிலுள்ள பத்திச் சுவைப் பாடல்களைக் கேட்டபோது கருங்கல் மனமுங் கரைந்துகக் கண்கள் தொடுமணற் கேணியிற்சுரந்து நீர்பாய நிற்பவரை யாண்டுங் காண்கின்றேம். இதனை "பத்திச்சுவைநனி சொட்டச்சொட்டப் பாடிய கவிவலவ" என்று ஸ்ரீசேக்கிழார் சுவாமிகளை மஹாவித்துவான் ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரம்பிள்ளையவர்கள் கூறும்வாக்காலும் அறியலாம். இத்தகைய தோற்றந்தான் குறித்த பொருள் நன்கு தோன்றலென்பதாம்.

நாவிற்புக்க நல்லுணவானது அதற்கு இனிமையும் உடற்குப் பலமுந் தருவதுபோல, காதிற்புக்க நற்கவியும் அதற்கு இன்பமும், மனத்திற்கு வலிமையும் தரவேண்டும். பரிசனவேதி இரும்பின் இயற்கையில்லைமாற்றி மாற்றுயர்ந்த பசும் பொன்னாக்குதல்போல, நற்கவியும், மனத்தின் இயற்கையாகிப் பொறிவழிச் செல்லும் புல்லொழுக்கைமாற்றி ஆன்றோர்கொண்ட நல்லொழுக்கத்திற் சேர்க்க வேண்டும். காட்சிப் பொருள்கள்யாவும் பிரதிபலிக்கும் கண்ணாடிபோல, மனக்கண்ணாற்காணும் உலகியலொழுக்கங்களனைத்தும் பிரதிபலிக்கும் பெற்றிவாய்ந்து நிற்பதே கவியாம். கவிதா சக்தியும் நூலறிவும் வாய்ந்தவர்களிடம் உள்ளடங்காமகிழ்ச்சியாலும், கொதிப்பாலும் பிறவற்றாலும் கவி தானாகவே வெளிப்படும். இங்ஙனம் வெளிப்படுவதே கவிதா சக்தியாம். இந்த சக்தியானது ஒருவனுக்கு இயற்கையாகவே அமைந்திருக்கவேண்டும். அங்ஙனம் அமையப்பெற்றவனே சிறந்த கவிஞனாவான். அவன் கவியே உலகைத் தன் வசப்படுத்தி மகிழ்விக்கும். இயற்கையமைப்பாகிய கவிதா சக்தியில்லாதவர் காரிகை முதலிய நூல்களைப் படித்து அந்நூல்களிற் கூறப்பட்ட விதிகளைப் பொருத்தி முயன்று கவிபாடுவாராயின அக்கவி இலக்கணவிதி வழுவாததாகுமல்லது, மெய்ப்பாடு தோன்றச்செய்து உலகைத் தன் வசமாக்கும் சிறப்பைப் பெறாதென்பதும் ஆகவே யுலகத்தார் மதியாரென்பதும் துணிபாம்.

கவிதா சக்தி நிரம்பப் பெற்றவர்கள் காரிகைமுதலிய நூல்களை முறையாகக் கல்லாதவராயினும் அவர் கூறுங் கவிகள் இலக்கண விதிக்கு மாறுபடாவண்ணம் சீர்தளை எதுகை மோனை முதலிய எல்லா நலங்களுந்தாமாகவே அமையப்பெறும். கவிதா சக்தியியற்கையிற் பெறாதவர் இலக்கண நூல்களைப் படித்துச் செய்யுள் விதிதெரிந்து அதன்படி கவிபாடத் தொடங்கி ஒரு சொல்லோடு பிறிதொரு சொல்லைச் சேர்க்குந்தோறும் இலக்கண விதியைப் புணர்த்திப் பார்த்துப்பாடலை முடிக்குமுன் அவர் படும்பாடு பிரசவ வேதனையினும் பெரிதாகும். இத்துயரை ஒரு புலவர் பின் வருமாறு கூறுவாராயினர். அது,

"அடிக்குமின்சொற் சுவைக்குமுன்னோர் விதிக்குமொருகுறைவு வராதமைத்தோர் பாடல், முடிக்குமுனந் தாய்கொடுத்த சேனையெலாம் வாங்குதையோ" என்பதே. "காரிகைகற்றுக் கவிசொலுமுன்னே, பேரிகை தட்டிப் பிழைப்பது நன்று" என்பதும் இக்கருத்தையே யுடையதாகும். இயற்கையாகிய கவிதா சக்தி முதற்கருவியும், இலக்கிய இலக்கண வுணர்ச்சி துணைக் கருவியுமாகு மென்று கொள்ள வேண்டும்.

தற்காலத்தும் இலக்கிய இலக்கண வல்லுநரான சிலபண்டிதர்கள் கவிபாடுந்திறம் பெறாமையும், அவற்றின் படிப்புநிரம்பாத சிலர் கவிபாடுந் திறமை மிகப் பெற்றிருத்தலும் பிரத்தியட்சமேயாம். ஆகவே எத்தனை நூல்களை எழுத் தெண்ணிக் கற்பினும் கவிதாசக்தியியற்கையிற் பெற்றாலன்றி நற்கவி பாடும் நற்கவிஞராகா ரென்பது எவரும் ஒப்பமுடிந்த தொன்றாம். நூலுணர்ச்சியும் கவிதா சக்தியும் வாய்ந்தவரே உத்தம கவிஞர்களாவார்.

கவிதா வனிதா என்பது உலகவழக்கு. வனிதை மனமொத்து வந்து கூடினால் மட்டும் இன்பஞ் சனிக்குமல்லது பலவந்தஞ் செய்து கூடப் பெறில் இன்பம் தோன்றாது. அங்ஙனம் கூடுதலை உலகமும் கொள்ளாது. அதுபோன்று கவிதையும் மனவெழுச்சியால் தானாகவே வந்தால் மட்டும் இன்பந்தருமல்லது எழுத்தையும் சொல்லையும் எண்ணி யிணைத்து வலிந்து கட்டுப்படுத்திப் பாடப்படின் அது சுவைபயவாது. உலகமும் அதனை மதியாது. இத்தகைய அதம கவிகளைப் பற்றிக் கம்பநாடர் கூறுவதாவது, 'பொன்விலை மகளிர் மனமெனக் கீழ்போய்ப் "புன்கவியெனத் தெளிவின்றி" என்பதாம். உத்தம கவியைப்பற்றி அவர் கூறுவதாவது.

"புவியினுக் கணியா யான்ற பொருடந்து புலத்திற் றாகி
யவியகத் துறைக டாங்கி யைந்திணை நெறிய ளாவிச்
சவியுறத் தெளிந்து தண்ணென் றொழுக்கமுந் தழுவிச் சான்றோர்
கவியெனக் கிடந்த கோதா வரியினை வீரர்கண்டார்" என்பதே.

இக்கவியில் சான்றோர்கவிக்குக்கூறும் பொருளைமட்டும் அடியில் காட்டுவாம்.

சான்றோர் கவிக்குச் சிலேடைப் பொருள் வருமாறு:—புவியினுக்கு அணியாய்-புவியிலுள்ளவர்களுக்கு அலங்காரமாகி, ஆன்றபொருள் தந்து-அமைந்த சதுர்வித புருஷார்த்தங்களையளித்து, புலத்திற்றாகி-அறிவினதாகி, அவி அகத்துறைகள் தாங்கி-தேவருணவினையொத்த அகப்பொருட்டுறைகளைக் கொண்டு, ஐந்திணை நெறி அளாவி-ஐவகை நிலத்தின் மார்க்கத்தினைக்கலந்து, சவிஉற தெளிந்து-(மனம்) ஒளிபெறத் தெளிந்து, தண் என்று-தண்ணளிபூண்டு, ஒழுக்கமும் தழுவி-அவ்வவ்வருண நிலைகட்கேற்ற ஒழுக்கமுந் தழுவி என்பதாம்.

புவி: ஈண்டு ஆகுபெயராய் மக்களை யுணர்த்திற்று. அணி என்றது ஐவகையிலக்கணத்து ளொன்றாகிய அணி என்பதனை; இனி, சான்றோர்கவியை மேற்கோளாக எடுத்துரைப்பார் சொற்கழகாய் என்றலுமாம்; அணி - அழகு; "நூற்கியைந்த சொல்லின் வனப்பே வனப்பு" என்றார் ஆன்றோரும். 'ஆன்ற' ஈண்டு அமைந்த என்னும் பொருட்டு. "ஆன்ற பெரியாரகத்து" என நாயனாரும், "மரங்கள் - ஆன்ற பருவத்தாற் பூத்து" என கம்பநாடரும் அமைந்த என்னும் பொருளிலுரைத்தமையறிக. ஆன்றபொருள் - சதுர்வித புருஷார்த்தம். "அறம்பொரு ளின்பம் வீடெனநான்கும்-திறம்படு பொருளெனச் செப்பினர் புலவர்" என்பவாகலின், சான்றோர் தாம் கற்றுங் கேட்டும் பெற்ற பல அரியபெரிய விஷயங்களும் கற்பித்த கற்பனைகளும் அக்கவியின்கணடங்கி ஆக்கியோர் பேராற்றலைக் குறிக்குமென்பார் 'புலத்திற்றாகி' என்றார். நூல்வழிப்பட்டதெனினு மமையும். புலம்நூலாதலை, "புலம் தொகுத்தோன்" என்னும் தொல்காப்பியப் பாயிரத்தாற் கண்டுதெளிக. அகப்பொருட்டுறைகள் இன்பப் பாலனவாகலின் அகத்துறைகட்குத் தேவருணவாகிய அமிர்தத்தை யுவமை கூறினார். ஐவகைத் திணைகளும் திணை மயக்கங்களும் விரவி நடத்தலின் 'ஐந்திணைநெறியளாவி' என்றார். கற்போர் தாம் மடமைநீங்கி

அறிவாமொளியைப் பெறுதற்கு அக்கவியே காரணமாகவிருத்தலின் 'சவியுற' என்றார். தெளிவு-குன்றக்கூறன் முதலிய குற்றங்களி னீங்கிய தன்மை. இனி, 'ஐந்திணை' என்பதற்கு ஐந்தின் இணையாகிய பத்து எனக்கொண்டு சுருங்கச்சொல்லல் விளங்கவைத்தல் முதலிய பத்துவிதத்திற் கலந்து அழகுபொருந்தத் தெளிவடைந்து என்றலுமாம். உலகம் இருள்தருமா ஞாலத்து வழிதெரியாது. உழன்று பின் னரிவாய் நரகிற்கிரையாகாமே நன்னெறிச்செலுத்தி முத்தியை யளிக்குந் தண்ணளி பூண்டுள்ளதாதலின் 'தண்ணென்று' என்றார். தண்மை-தண்ணளி யென்றார் பரிமேலழகியாரும். நான்கு வருணத்தாரும் தத்தம் வருணத்திற் பிறழாது நிலைபெறப் பாதுகாத்தல் அறநிலை அறமாகலின் இன்றியமையாத அவ்வறத்தையும் விளக்கிக்காட்டுவதென்பார் 'ஒழுக்கமுந்தழுவி' என்றார். ''வருணக் காப்பிற் பிறழா நெறிநிலை - பெறுதற் குரித்தாய்ப் பேணும்பெற்றி அறநிலை யறமென்றறைந்தனர் புலவர்.'' இது பிங்கலத்தை 'கிடந்த என்ற சொல்லாற்றலான் ஆக்கியோர் பூதவுடம்பு பொன்றினும் புகழுடம்பு பொன்றாது நிலைத்திருக்குமென்பது விளக்குதலறிக.

இன்னும் இக்கம்பநாடர் கவிதாசக்தி நிரம்பிய அரும்பெரும்புலவர் திலகராதலால் ''பாவருங் கிழமைத் தொன்மைப் பருணிதர் பணித்த பத்தி, நாவருங் கிளவிச் செவ்வி நடையள்'' என மற்றோரிடத்தும், ''கவிஞயர் நாட்டிய, சொற்பொரு ளாமெனத் தோன்றல் சான்றது'' எனப்பிறிதோரிடத்துங் கூறுவாராயினர்.

இத்தகைய உத்தமக் கவிஞர் திலக ரியற்றிய நற்கவிகளானே உலகத்தில் சகல தருமங்களும் நிலைபெற்றுள்ளனவாகும். செஞ்சொற் செறிவும், இனிய வோசைப் பொலிவும், உலகமொப்பத் தக்க செம்பொருள் நிறைவும் கொண்டுள்ள கவிகள் பிறர் மனத்தைக கவரும் சக்தி பெற்றிருத்தலாற்றான் அவற்றை மனப்பாடஞ் செய்வது சுலபமாகின்றது. மனப்பாடஞ் செய்தலில் வருத்தத்தை யுண்டாக்கும் கவி எதுவாயினும் அது கவிதாசக்தியிற் றோன்றியதில்லை யென்பது நிச்சயம். நிகண்டு முதலிய நூல்களிலுள்ள கவிகளை மனப்பாடஞ் செய்யுங்கால் அக்கவிகள் மனத்திற் றங்குவதில்லை. மிகவருந்திப் பன்முறைபடித்து நாத்தழும்பு படமொறுபயின்று மனங்கொள்ள நேரிடுகிறது. இதன் காரணம் யாதெனில் அக்கவிகளில் கவிதாசக்தி அமைவதற்கிடமில்லாமையேயாம். பெரியபுராணம் திருவிளையாடற்புராணம்

கம்பராமாயணமாதியவற்றிலுள்ள கவிகளையும் மற்றும் பல தனிக்கவி களையும் மனப்பாடம் செய்யத்தொடங்கினால் வெகு சுலபத்தில் பாட மாகின்றமைக்குக் காரணம் அவை கவிதா சக்தி மிகுதியாலியற்றப் பட்டமையேயாம், இதனாற்றான் பண்டு தோன்றியனவும் இன்று தோன்றுகின்றனவுமான நூல்கள் தனிக்கவிகளில் ஒரு சில யாவரா லும் பாராட்டப்பெறுதலும், ஒரு சில அங்ஙனம் பாராட்டப்படாது அபிமானம் வைத்த சிலரால் மட்டும் பாதுகாக்கப்படுதலும் பெற்றுள் ளமை தெளியத்தகும். இக்கவிதா சக்தியானது முற்பிறப்பிற்செய்த நல்வினைக்கேற்ப இறைவன் கூட்டுவித்தாலல்லது சிரமப்பட்டுமுயன்று தேடிக்கொள்ளக்கூடியதன்று. இவ்வுண்மையை யுணராமல் "செஞ் சொல்லை நினைந்துருகுநெஞ்சிற்புண்ணும்" என்றவாறு மனம்புண்படச் சிந்தனைசெய்து ஒலைப்பாய் முடைவதுபோலச் சொற்களைச்சேர்த்துக் கவிமுடைவாரை யின்றுங்காணலாம். இவ்வாறு முடைந்து தோற்று வித்ததுங் கவியெனப் பெயருறுமேனும், அதனை யியற்றியோர் தாம் கொண்ட சிரமவசத்தாராகி, குரூபியானமகனைநோக்கி யீன்றாள் மகிழ் வதுபோல் தம்முடையதென்ற அபிமானத்தால் மகிழ்தல் கூடும். உல கத்தார் கண்டுகளித்தல்சாலாது. "எல்லார்க்குமொவ்வொன்றெளிது" என்பவாகலின் கவிதா சக்தியுடையார்க்கே கவி பாடுதல் எளிதாம் ஏனையார் இவ்வுண்மை யுணராது கவிபாடப்புகுதல் வீணும். கவிபா டப்புகுவோர்தமக்கு அச்சக்தியுண்டா என்பதையாராய்ந்தபின்னரே பாடவேண்டும். பாடுவிப்போரும் அச்சக்தியுடையாரைக்கொண்டே பாடுவிக்கவேண்டும். அன்றேல் இருவர் செயலும் அவமாம். "செய் வினை திருந்தச்செய்" என்பதைக் கவிபாடுவோரும் "இதனை இதனா லிவன் முடிக்குமென்றாய்ந், ததனை யவன்கண் விடல்" என்பதைப் பாடுவிப்போரும் சிந்திக்கக் கடவர்.

தற்காலத்தில் "...தெட்டுதற்கோ அறிவில்லாத் துரைகளுண்டு தேசமெங்கும் புலவரெனத் திரிபலாமே" என்றவாறு சற்றே இலக் கிய இலக்கணங் கற்றவரும் கல்லாதவரும் தமது சக்தியையறியாது ஆசையாலும் பொறாமையாலும் தூண்டப்பட்டுத் தனிக்கவிகள் சிறு நூல்கள் காவியங்கள் ஆகியவற்றைப் பாடப்புகுகின்றனர். வாழ்த்துக் கவிகளும் சரமகவிகளும் எத்தனைஎத்தனை தோன்றுகின்றன? இருளிலா மதியும், அருளிலா அறமும், பொருளிலாக் கவியும் ஒருநிகரனவேயாம். இருளறுமதியும் அருளுறு அறமும்போலப் பொருளுறு கவியே கவி யாகும். அதனைப் பாடுவோரே கவிஞராவார்.

# (10) இயலிசைப்புலவர் தாரதம்மியம்.

வையங்காப்பவர் முதல் ஐயம்புகுபவர் ஈறாக எல்லாரிடத்தும் செவிவழிச் சென்று மனத்துட்புக்கு நல்லின்பம் பயப்பன இயலும் இசையுமேயாம். சொல்லும், பொருளும் எவ்வாறு ஒன்றோடொன்று பிணைந்து நிற்பனவோ அவ்வாறே சங்கீதசாஹித்யங்களும் பெரும்பாலும் பிணைந்து நிற்பனவாகும் ஓர் இசையைப் பாடுங்கால் ஒரு பாட்டும் வேண்டும். ஒருபாட்டைப் பாடுங்கால் ஓர் இசையும் தானே வரும். ஆனால் சிறுபான்மை சொற்றொடரன்றி வெற்றொலி பரப்புதல்போன்று தனித்து இராகத்தைமட்டும் பாடுதலும் உண்டு. ஆயினும் பாட்டுடன் சேர்ந்த இசையொலியே விரைவில் மனத்தைக் குளிர்விக்கும். பாட்டைக்கொள்ளாத இசையொலி (இராகம் பாடுதலுஞ்) செவிக்கின்பம் பயப்பது போலவே இசையுடன் கலவாமல் தனித்தனி பிரித்துக் கூறப்படுஞ் சொற்றொடர்களமைந்த கவிகளும் அவற்றின் சொற்சுவையாலும் பொருட்சுவையாலும் மனத்தைக் கவர்ந்து இன்பமூட்டும் பெற்றித்தாம். அன்றியும், இசைக்கு ஆதாரமாகிய "சரிகமபதநி" என்னும் சப்தசுரங்களும் இயலின் வகுப்பைச் சேர்ந்தனவாகும். தனித்தாயினும், சேர்ந்தாயினும் இவ்விரண்டும் கேட்பவரை ஆனந்தத்தில் அழுத்திவிடுமென்பதில் ஐயமில்லை.

ஆனதுபற்றியே பண்டைக்கால முதல் அரசர்களும் பிரபுக்களும் இயற்புலவர்களையும், இசைப்புலவர்களையும் நன்கு அபிமானித்து ஆதரித்து வந்தனர். தற்காலத்தும் பற்பல சம்ஸ்தானபதிகளும், பிரபுக்களும் இவ்விருவகைப் புலவர்களையும் பாதுகாத்து வருகின்றார்கள். இங்ஙனம் ஆதரிக்கப்படும் இவ்விருவகைப் புலவர்களும் செவிச்சுவை யளிப்பவரேயாயினும் இவருள் பெரிதும் தாரதம்மியமுண்டு. என்னை?

சந்திரனில்லாத இராக்காலம் மயக்கத்திற் கேதுவாயிருக்கும். இராக்காலமில்லாத சந்திரன் ஒளிமழுங்கியிருப்பான். அதுபோலவே இயற்புலவரில்லாத அரசர் மயக்கமுற்றிருப்பார். அரசரில்லாத இயற்புலவர் கீர்த்தியின்றி யடங்கியிருப்பார். ஆகையால் இயற்புலவருக்கு அரசரும், அரசருக்கு இயற்புலவரும் இன்றியமையாத் துணையாதல் விளங்கும்.

அன்றியும் புறப்பொருள்களை யெல்லாம் உள்ளவாறு காட்டுங் கண்ணைப்போல அகப்பொருள்களாகிய தருமார்த்த காம மோக்ஷ மென்னும் புருஷார்த்தங்களை விளக்கிக் காட்டுவன இயல்நூல்களே யாம். ஆனது பற்றியன்றே இயற்புலவர்கள் அரசர்க்குக் கண்போல் வாரென்று பண்டைநூல்கள் கூறுகின்றன. "கற்ற மாந்தரைக் கண் ணெனக் கோடலும்" என்பது சீவகசிந்தாமணி. இங்ஙனமாகிய இயலினது மேம்பாட்டைக் கருதியன்றோ நூல்களை இயலிசை நாடகமென முத்திறப்படுத்திய முதியோர் முதலில் இயலைவைத்துக் கூறுவாராயினர்.

இசைப்புலமை நிரம்பிய எந்தப் பெரிய வித்துவானாயினும் சரி, அவர்பாடிய நல்லிசையால் அடையும் இன்பம் அந்த க்ஷணமே மறைந்துவிடும். அவர்பாடிய இசையொலியெல்லாம் காற்றோடு காற்றாகப்போய்விடுமே யன்றி வேறில்லை. பெரும்பாலும் இசையொலி காமத்தை வளர்விக்கும். மாணாக்கர்கள் இசைப்பாட்டின் விருப்பத் தால் தாம் தேறவேண்டிய பரீக்ஷைகளிற் றவறி வருந்துவதை நம் மவர் பலரும் காண்பரன்றோ?

இயற்புலவர்கள் கூறிய செய்யுட்களின் பொருள்கள் கேட்பவர் மனத்திற் பன்னாள்நின்று நிலவும். அதுமட்டோ அக்காரவடி விற்றாகி எத்தனைகாலங்கட்குப் பின்னுற்றாரும் அறிந்து உய்தற்கு ஏற்றதுணை யாகும். இதுபற்றியன்றே,

"கலைமகள் வாழ்க்கை முகத்த தெனினு
மலரவன் வண்டமிழோர்க் கொவ்வான்—மலரவன்செய்
வெற்றுடம்பு மாய்வனபோன் மாயா புகழ்கொண்டு
மற்றிவர் செய்யு முடம்பு."—என்றார்பிறரும்.

இராசநீதிகளையும், ஆசாராதிகளையும், வழக்கங்களையும், தெய் வத் திறத்தையும், புண்ணிய பாவ மோக்ஷ நரகாதிகளையும், சிவஞா னத்தையும் யாவர்க்கும் உணர்த்துவதும், பூர்வ சரிதங்களை விளக்கு வதும் இவ்வியற்புலமையன்றோ? இத்தகைய உயர்வு தாழ்வுகளை யறிந்தே பூர்வ அரசர்களில் எத்தனையோபேர், இயற்புலவர்கட்கு முற் றூட்டாகப் பலகிராமங்களைத் தானஞ்செய்தும், பற்பல ஆடையா பரண வாகன முதலிய விசேஷ மரியாதைகளைச்செய்தும் பாதுகாத்த துடன் தமக்கு முக்கியமந்திரிகளாகவும், உயர்ந்த துணைவர்களாகவும்,

தம் பினும்மிக்க மரியாதையுடன் எப்போதும் நம்முடன் (இவ்வியற்புலவர்களேயே) வைத்து, அவர்கள் சொல்வழிநின்று புவிபுரந்து புகழ் புனைந்து வாழ்ந்தார்களென்பது புறநானூறு முதலியபழைய நூல்களால் நன்கு புலப்படுவதாகும். இயற்புலவர் சொல்வழிநின்று யுத்தத்தை யொழித்துச் சமாதானமடைந்தார் பலர். சிறைவிடுத்தார் பலர். இன்னும் பற்பல பெருங்காரியங்களேயெல்லாம் இயற்புலவர் சொல்வழியே அரசர்கள் செய்து வந்திருக்கின்றனர். இந்தப்புலவர்கள் பெருமையும், இவர்க்குதவிய மன்னவர் கீர்த்தியும், இப்புலவர்களியற்றிய இயல்நூல்களும் பல்லாயிரவருடங்கள் சென்ற பின்னும் யாவரும் அறிந்து பாராட்டுமாறு விளங்குதல் இன்னும் பிரத்தியட்ச மன்றோ? எந்தப் பெருவேந்தர்களாவது இசைப்புலவர்கட்கு முற்றூட்டாகப் பெரிய தானங்களேக் கொடுத்தனரென்றேனும், அவர்களே மந்திரிகளாகக்கொண்டு அவர்களாற் பெரியதோருதவி பெற்றனரென்றேனும், சரிதங்கள் கேட்டதுண்டோ?

பாணபத்திரருக்குப் பொருள்தரவேண்டித், திருவாலவாயுடையார் சேரமான் பெருமாளுயனுருக்குத் திருமுகப்பாசுரங் கட்டளேயிட்டருளியதும், அத்தகைய பிறசில சரிதங்களும் இசைப்புலவர்மாட்டு ஈசுவரானுக்கிரகம் நிறைந்திருந்த தென்பதை விளக்குவனவன்றோ எனின், இவ்வாறாக இயற்புலவர்கட்குக் கிடைத்த ஈசுவரானுக்கிரகங்களேக் கூறப்புகின் அவை பொருகடல்போற் பெருகுமெனக. என்பு பெண்ணானதும், கருங்கல்மிதந்ததும், நீற்றறை குளிர்ந்ததும், முதலைவாய்ப்பட்டு மூவாண்டு சென்றமைந்தன் உயிர்பெற்று மீண்டதும், திருவாலவாயுடையார் திருமுடியில் மண்சுமந்து பிரம்படிகொண்டதும், அவர் திருக்கைலாய மலேயிலிருந்து ஞான உலா முதலிய இயற்றமிழ் நூல்களேக்கேட்டு மகிழ்ந்தருளியதும், தம் அருமைத்திருக்கரத்தால் திருக்கோவையாரை எழுதியருளியதும், "அர்ச்சனே பாட்டே யாகு மாதலான் மண்மே னம்மைச் சொற்றமிழ் பாடுக" என சுந்தரமூர்த்திசுவாமிகளிடம் திருவாய் மலர்ந்து வலியவேண்டியதும் இவைபோல்வன பலவும் இயற்பாட்டின் பெருமையை விளக்குவன வன்றோ? இதுமட்டோ! சிவபிரான், முருகக்கடவுள், நாமகள் இவர்கள் சங்கப்பலகையேறி இயற்புலவராக வீற்றிருந்தமையும், முருகக்கடவுள் நக்கீரரிடத்தும், பொய்யாமொழிப்புலவரிடத்தும் வலியச்சென்று தம்மீது இயற்பாட்டைவேண்டியடைந்தமையும், இடைக்காடன்

என்னும் புலவர் திலகர் பிணக்கைநீக்குவான் திருவாலவாயுடையார் திருக்கோயிலைவிட்டுநீங்கி வேற்றிடம்புக்கு வாழ்ந்தமையும், கச்சிப் பெருமாள் ஒருபுலவன் பின்சென்றமையும் இவைபோல்வன பிறவும் இயற்புலவர்பாலுள்ள ஈசுவராநுக்கிரகாதிக்கத்தைப் பசுமரத்தாணி போல் நாட்டத்தக்கனவேயாம். அன்றியும் இயற்புலவருள்ளே சாபாநுக்கிரக வாக்கிகளாகவாழ்ந்தார் பலராவர். ஔவைப்பிராட்டியார், கம்பநாட்டாழ்வார், காளமேகப்புலவர் முதலியவர்களின் அற்புதசரிதங்களைக் கூறப்புகின் அவையொவ்வொன்றுமே யொருதனிப்புத்தகமாகுமன்றே? இங்ஙனம் இசைப்புலவர்களுள்ளே சாபாநுக்கிரகசீலர்களாக யாரேனு மிருந்தாரென்று யாண்டுங் கேட்கப்பட்டதில்லையே. ஆதலின் கடவுளரை வசீகரிப்பிக்கும் சக்தி இசைப்புலமையைப்பார்க்கினும் இயற்புலமைக்கேமிக்கிருந்ததென்பதை எவருமறுக்கொண்ணாதென்க. நம்மைப்போன்ற மதப்பற்றுடையார்க்கு மட்டும் உவப்பையும் நம்பிக்கையையுந்தரும் இத்தகைய தெய்வத்தன்மைச் சரிதங்கள் ஒருபுறமிருக்க, யாவராலும் அங்கீகரிக்கப்பெற்ற சரித்திரவாயிலாக ஆராயப்புகினும் இயற்புலமையின் பெருமையே மிக்குத் தோன்றுவதாகும். தமிழ்நாட்டு வேந்தர்கள் இயற்புலவர்களை உயிர்த்துணைவராகக் கருதித் தம்மினும் மிக்குமதித்துத் தம் அரசும், கல்வியறிவொழுக்கங்களும், நியாயமும், வீரமும், கொடையும் இப்புலவர்களானே நிலைபெற்று வளர்வனவாகக்கொண்டு இவரைப்போற்றி வந்தனரென்பது சரித்திராராய்ச்சிக்குக் கருவியாய புறநானூறு முதலிய பண்டை நூல்களானே செவ்விதாக விளங்கும். இசையால் அடையுமின்பத்தை மனிதர்கள் வாயிலாகப் பெறுதலினும் அதிகமாகவே குயில் பூவை முதலிய பக்ஷிகளின் வாயிலாகவும், வீணை பிடில் முதலிய அசரப் பொருள்கள் மூலமாகவும் பெற்றுக்கொள்ளலாம். இயற்பாவாற் பெறுமின்பமோ பெறுதற்கரிய மானுடப்பிறவி யுற்றாருள்ளும் கற்றுணர்ந்த மேன்மக்கள் வாயிலாகவே பெறவேண்டுமன்றி வேறில்லை. இதை நோக்குமிடத்து இசைக்கும் இயலுக்கும் உள்ள வித்தியாசம் பறவைகட்கும் மனிதருக்குமுள்ள வித்தியாசத்தைவிடக் குறைந்ததன்றென்பதை மறுப்பவர் யாவர்?

இனி ஒருவர் மனத்தைத் தன்வசப்படுத்திச் சலனமறச் செய்யும் ஆற்றல் இசைக்கே அதிகமுண்டெனவும், பாம்பு முதலிய ஊர்வனவற்றையும், பறவைகளையும், யானை முதலிய விலங்கினங்களையும் அறிவு

விரும்பாத இளமகார்களையும் தன் வசப்படுத்துவது இசையேயெனவும் இவற்றை, "காழ்வரை நில்லாக் கடுங்களிற் றொருத்தல் யாழ்வரைத் தாங்கி யாங்கு" என்னும் கலித்தொகையானும், "அணியிழை மகளிரும் யானையும் வணக்கு மணியொலி வீணை" என்னும் பெருங்கதையானும், "மகரயாழ் வல்லமைந்தனொருவனைக் கண்ட மத்தப் புகர் முகக் களிற்றின்" என்னும் மேரு மந்தர புராணத்தானும், பிறவும் பற்பல நூல்களானும் அறியலாமன்றோ எனவும் கூறின் அது பொருளன்றென்க. என்னை? மனத்தைத் திருத்தி நல்லறிவை வளர்த்தலே பயனுடைத்தாமன்றி மனத்தை வசப்படுத்தலொன்றாற் பெறும் பயன் ஒன்றுமின்றே. கள் முதலிய மயக்கும் பொருள்களும் பரத்தையரின் பழும் மனத்தை வசப்படுத்துவனவன்றோ? அவையிற்றை அதுகொண்டு பெருமைப் படுத்தக் கண்டிலம். மனத்தை வசப்படுத்திப்பயன் பெறச்செய்வதே சிறந்ததாமென்க. இது நிற்க,

பண்டைகாலத்து இயற்புலவரிடத்து விரிந்த சிந்தனையும், பரிந்துருகும் தயாளமும், மேலான செல்வாக்கும், அரசர்க்கு நடுநிலை தவறுது இடித்துக்கூறும் சொல்லாற்றலும், மனத்திட்பமும், இன்னோரன்ன பற்பல உயர்குணங்களும் மிக்கு விளங்கினவென்பதற்கு எத்தனையோ திருட்டாந்தங்களைப் பழைய நூல்களின் வாயிலாகவே நாம் எடுத்துக் காட்டக்கூடும்.

(1.) தலையாலங் கானத்துச் சேரசோழ ரென்னும் இரு பெரு வேந்தரையும் ஐந்துகுறுநிலமன்னரையும் ஒருங்குபோர்வென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் என்பான், அப்போர் முகத்து "இது செய்யேனுயின் இன்னவனுவேன்" என்று வஞ்சினங்கூறு மிடத்து, "என்னைச் சிறுசொற்சொல்லிய வேந்தரைப் போர்சிதறத்தாக்கி அகப்படுத்தேனுயின் மாங்குடிமருதன் முதலாகிய நற்புலவர் எனது நிலவெல்லையைப் படாது நீங்குக" எனக்கூறினனென்பது

"ஓங்கிய சிறப்பி னுயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவனாக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பிற்
புலவர் பாடாது வரைகவென் னிலவரை"

என்னும் புறப்பாட்டால் நன்குவிளங்கும். உத்தமப்புலவராற் பாடப் பெறுமையை எத்துணைக்கேவலமாக நினைத்துள்ளானென்பது

ம் உலகமோடுநிலை இயபலர்புகழ சிறப்பிற் புலவர் என இயற்புலவரை எவ்வாறு உயர்த்தி மதித்துள்ளாரென்பதும் ஈண்டுக் கவனிக்கத் தக்கனவாம்.

(2.) பொய்கையார் என்னும்புலவர், சோழன் செங்கணான் என்பான் சேரமான் கணைக்காலிரும் பொறையோடு பொருது அவனைப்பிடித்துச் சிறைவைத்துழி களவழிநாற்பதுபாடிச் சிறைமீட்டினர். கோபாவேசங்கொண்டு நாற்பெரும் படையொடு போர்க்களம் புகுந்து தன்னுடற்புண்படப் பொருது வென்று சிறையிட்டானாக அங்கேயொரு புலவர் வந்தாராம், ஏதோ பாடினாராம், அப்பாட்டைக் கேட்டதும் அரசன் மகிழ்ந்து பகையரசனைச் சிறைநீக்கி விடுத்தனனும். ஆயின் அவ்வரசன் அப்புலவரையும், அவர் கவியையும் எவ்வாறு உள்ளூற மதித்தவனாக வேண்டுமென்பது இங்கே ஊகித்தற்பாலது, (புறநானூறு. 74.)

(3) அதியமான் நெடுமானஞ்சி என்னும் வள்ளல் சிரஞ்சீவித் தன்மையைத் தரும் கருநெல்லிக் கனியைத்தான் பெற்றும் அதனைத் தானுண்ணாது ஒளவையாருக்குக் கொடுத்தான். இதனால் ஒளவையாரைத்தன்னினும் மிகமதித்துப் போற்றினனென்பது வெள்ளிடைமலைபோற் பெறப்படும். ("விருந்துபுறத்ததாத் தானுண்டல் சாவா, மருந்தெனினும் வேண்டற்பாற்றன்று" என்ற தேவர் திருவாக்கிற்கு இச்சரிதம் இலக்காதலை இவண் கவனிக்க.)

(4) குமணன் என்னும் கொடையாளி பெருந்தலைச் சாத்தனார் என்ற புலவருக்குத் தன் தலையைக் கொடுக்கத் துணிந்தனன். புலவர் வறுமையைப் போக்கவேண்டுமிடத்துத் தன்னுயிரையுந்துறப்பவன் எனபது இதனாற்போதரும்.

(5) சேரமான் தகடூரெறிந்த பெருஞ்சேரலிரும்பொறை என்னும் அரசனுடைய * முரசுகட்டிலில் அறியாது ஏறித்துயின்ற மோசிகீரனார் என்னும் புலவரை அவ்வரசன் துன்பஞ் செய்யாது அவர் துயில் நீங்கும் வரை பக்கமே நின்று கவரிகொண்டு வீசினான். என்பதைப் புறநானூறு 50-வது கவியால் காணலாம். இதனால் புலவரிடத்து இவ்வரசன் எத்துணை மதிப்புக் கொண்டிருந்தா னென்பது நன்கு புலப்படும்.

---

* முரசுகட்டில் - வீரமுரசுவைத்து அரசனிருக்கு மோராசனம். சிம்மாசனம் போன்ற சிறப்பையுடையது.

(6) சோழன் நலங்கிள்ளி என்பான் தன்னினத்தாரோடும் வேற்றரசரோடும் போர்செய்து அவரை வருத்தி அன்னார் நாடு முதலியவற்றைக் கோடலையே தொழிலாகக் கொண்டு பன்னாட்கழித்தானாக உறையூர் முதுகண்ணன் சாத்தனார் என்னும் புலவர் சொல்லிய நற்குணபோதனைக் கிணங்கிப் போர்செய்தலை விடுத்து அறஞ்செய்தலை மேற்கொண்டு வாழ்ந்தான். இச்சரித்திரத்தால் அரசர்கள் இயற்புலவர் சொல்வழி நின்று நன்னெறி பற்றும் பண்டை வழக்கம் நன்கு வெளிப்படும். (புறநானூறு 27, 28, 29, 30, 325.)

(7) பாரி என்னும் வள்ளல் கபிலர் என்னும் புலவர் திலகரிடத்து உயிர் நட்புக்கொண்டு அவர் சொல்வழி நின்று பெரும் புகழ் பெற்றான். அவன் இறந்தபின்னர் மிக்கபரிதாப நிலையிலிருந்த அவன் மகளிரைக் கபிலர் அரசர்க்கு மணம் செய்வித்தனர். இப்பாரியின் சரிதம் இயற்புலவர் பெருமைக்குச் சிரோபூஷணமாய் நிற்பது.

(8) ஒரு குடிப்பிறந்த நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி என்னும் சோழமன்னரிருவர் அந்நாட்டரசுரிமை தமக்குரியது தமக்குரியது என முரணிப் பொருதனர். அவருள் நெடுங்கிள்ளி சோணாட்டைத் தன்வசப்படுத்தி ஆட்சிபுரிந்தமையால் நலங்கிள்ளிவந்து ஆவூர்க் கோட்டையை *முற்றுகையிட்டான். நெடுங்கிள்ளியோ கோட்டை வாயிலைத் திறவாது உள்ளிருந்தனன். இங்ஙனம் பன்னாட் செல்லவே கோட்டைக்குள்ளிருந்த பிராணிகளடையுந் துன்பத்தைச் சகியாத கோவூர்கிழார் என்னும் புலவர் நெடுங்கிள்ளியிடஞ் சென்று "அரசே! யானைகள் குளியாமலுங் கவளங்கொள்ளாமலும் நிலத்திற் புரளுங் கையனவாகி யிடிபோல் முழங்கவும், பாலின்றிச் சிறார்களிரங்கவும், மகளிர் அணியின்றித் தேம்பவும், குடிகளெல்லாம் வருந்தவும் இவற்றிற்கெல்லாம் நாணாது நீமட்டும் இனிதாகவிருத்தல் மிகவுங் கொடியது. நீ தருமமுடையனாயினும் வீரமுடையனாயினுங் கோட்டையைத் திறத்தல்வேண்டும். இரண்டுமற்றவனாகித் தனித்துறைதல் மிகவும் இழுக்காகும்" எனக் கூறித் திறப்பித்தனர் என்பது புறநானூறு சச-ம் பாடலாற் பெறப்படும். இப்புலவர்பிரான் உயிர்கட்கிரங்கும் கருணையும், இடித்துக்கூறும் வன்மையும் இங்கே நன்கு காணலாம். இம்மட்டோ? மேற்குறித்த அரசரிருவரும் உறையூர்க் கோட்டையில் முற்றுகையிட்டும் அடைத்

* முற்றுகையிட்டான் - வளைத்துக்கொண்டான்.

தும் நிற்க, அதுகண்ட இப்புலவர் மனம்பொறுது அம்மன்னரிரு வர்பாலும் சென்று "அரசர்களே! பகைத்து நிற்கும் நும்மிருவருள் ஒருவராவது சேரபாண்டியரல்லர். இருவரும் சோழமன்னரே. நும் மில் யாவர் தோற்பினும் தோற்பது நுமது குடியேயன்றி வேறில் லையே. இருவருள் ஒருவர் தோற்பது உறுதியே. இதனுல் நுங்கள் செய்கை நுங்குடிப்பெருமைக் கேற்றதன்று. வேற்று வேந்தர்க்கு நகைப்பைத்தரத்தக்க இப்போரை யொழிமின்" எனக் கூறியாற்றி னர்: என்பதை,

"இரும்பனை வெண்டோடு மலைந்தோ னல்லன்
கருஞ்சினை வேம்பின் றெரியலோ னல்லன்
நின்ன கண்ணியும் ஆர்மிடைந்தன்றே, நின்னொடு
பொருவோன் கண்ணியும் ஆர்மிடைந்தன்றே
ஒருவீர் தோற்பினுந் தோற்பதுங் குடியே
இருவீர் வேறல் இயற்கையும் அன்றே
குடிப்பொருள் அன்று நும் செய்தி கொடித்தேர்
நும்மோ ரன்ன வேந்தர்க்கு
மெய்ம்மலி யுவகை செய்யுமிவ் விகலே" என்பதனுற் காண்க.

ஒருகுடிப்பிறந்த இருவர் கலாய்த்தவழி அவரையடுத்து ஏற்பன கூறிச் சமாதானஞ் செய்யும் முறை இக்கவியில் வெகு அழகாக அமைந்துள்ளது. இக்காலத்து நம்நாட்டுக் குறுநிலமன்னர் பலர் இவ் வாறே கலகம் விளைத்துக் கெடுவாராயினர். இங்ஙனம் இடித்துக்கூறு வார் மொழியைத் தடுத்துக் கூறுகின்றனர். இச்சகம் பேசும் கொச் சையக்கள் மீதே பட்சம் வைக்கின்றனர். முன்னைய மன்னர் சரி தங்களை ஆராய்ந் துய்வாராக.

(9) காரிக்கண்ணனுர் என்னுஞ் சோணுட்டுப்புலவர், பெரு வழுதி யென்னும் பாண்டியனும், பெருந்திருமாவளவன் என்னும் சோழனும் ஒருழைக் கூடியிருக்குங்கால் அவ்விருவரையும் வாழ்த் துவான் தொடங்கித் தனித்தனி நோக்கி "நீ காவிரிநாட்டுத் தலைவன்; இவன் மிகப் பழைய ஆலமரத்தை அதன் வீழ் தாங்குவதுபோல் தன் பழங்குடியைத் தாங்கிப் பகைவரஞ்ச வாழும் பாண்டியரேறு போல்வான்; நீ, உறந்தை காவலன்; இவன் தமிழ்வள மிகுந்த மது ரைவேந்தன். நீவி ரிருவரும் பலராமனும், கண்ணனும் போலக்

குழீ இயிருக்கு மிக்காட்சியினுஞ் சிறந்தபொருள் வேறுண்டோ? உங்கள் புகழ் நீடுவாழ்க. உங்களில் ஒருவர் ஒருவர்க்கு உரியபோதெல்லாம் உதவி செய்க. நும் கூட்டரவு பேதப்படாவிடில் இக்கடலுலக முற்றும் நுங்காற்கீழ்ப்படுதல் உண்மை. நல்லவைபோன்றும் நடுநிலை போன்றும் தொல்லோர் வழக்குப்போன்றும் சொல்வன்மையாற் பல படக்கூறி நும்மைப் பிரிக்கக் கருதும் தன்னயப்பதடிகள் சொற் கொள்ளாது நுங்கூட்டம் இன்றுபோல் என்றும் விளங்குக. இருவருஞ் சேர்ந்து வெற்றிபெறுக. மலைகளெல்லாம் புலிமுத்திரையுடன் மீனமுத்திரையும் பெறுக" என்னுங் கருத்துத்தோன்ற மிக அற்புதமாகவாழ்த்தினர். இவ்வாழ்த்துச் செய்யுளில் இப்புலவரது ராஜரீக லௌகிக சாமர்த்தியம் நன்குவிளங்கக் கிடக்கின்றது. என்னை? தாம் சோணாட்டுப் புலவராதலின் முதற்கட் சோழனைக் கூறினர். விருந்தினரைத் தம்மவரைப் பார்க்கினும் மிக மேம்படுத்தல் மரபாதலின் பாண்டியனுக்கு விசேடணங்களைக்கொடுத்துக்கூறினர். இவை போல்வன உய்த்துணர் வார்க்குப் பெரிதும் இன்பத்தைத் தருமென்பதிற் றடையில்லை. (புறநானூறு. ருஅ)

(10) கிள்ளிவளவனென்னும் சோழன் மலையமான் திருமுடிக் காரியிடத்துள்ள பகைமையால் அவன் மக்களைப் பிடித்து யானைக்கு இரையாக்க நேர்ந்தக்கால் கோவூர்கிழார் என்னும் புலவர் மனம் பொறாது கிள்ளிவளவனிடஞ்சென்று "அரசே! நீ புறவொன்றினுயிர்காத்ததுடன் பிறவுயிர் பலவற்றின் றுன்பந் துடைத்துக் காத்த சோழர்குலத்தோன்றல். இப்பிள்ளைகளோ யானையைக் கண்டு தம் மிளமையால் வெருவியழும் இயற்கையையும் மறந்து நிற்குஞ்சிறார்கள். இக்கூட்டத்தைப் பார்த்து அஞ்சி இதற்குமுன் தாம் என்றும் உறாததொரு பெருவருத்தமுற்று நிற்கின்றார்கள். நான் கூறிய சொற்களை நீயுளங்கொளக் கேட்டவனாயின் இனி நீ செய்வதைச் செய்க" என இரங்கக்கூறி அம்மக்களைத் தப்புவித் துய்யக்கொண்டனர். அரசர் அநீதிபுரியத் துணிந்தால் அதனை நீக்கத் தைரியத்துடன் முற்படுபவர் இயற்புலவர்களே. இவரது பெருங்கருணையையும் செல்வாக்கையும் என்னென்று புகழ்வோம்? (புறநானூறு (சசு)

(11) நெடுங்கிள்ளியிட மிருந்து நலங்கிள்ளி பால்வந்தஇளந்தத்தனென்னும் புலவனை இவன் நெடுங்கிள்ளியின் ஒற்றன் போலாமென்று

கருதிக் கொல்லத் தொடங்கியக்கால் மேற்கூறிய கோவூர்கிழா ரென்னும் புலவர் பெருமான் சென்று அரசனை நோக்கி "வள்ளலாயுள்ளவர்களை நினைத்து, பழுத்த மரங்களை நோக்கிச் செல்லும் பறவையைப்போலச் சென்று, கடத்தற்கரிய வழிகளையெல்லாந் தூரமென்று கருதாமற் கடந்து, திருந்தாத நாவாற் றம்மாற் கூடியபடி பாடி, அங்கே பெற்ற பரிசிலால் மகிழ்ந்து, தம் சுற்றத்தை யுண்பித்து, தாமும் அப்பொருளைப் பாதுகாவாமல் உண்டு, உண்மகிழ்ச்சியுடன் பிறர்க்கீந்து, தம்மைக் காக்குஞ் செல்வராற் பெறுஞ் சிறப்பு ஏதுவாக வருந்தும் இப்பரிசிலான் வாழும் வாழ்க்கையானது பிறர்க்குத் கொடுமை செய்ததை யறிந்ததோ? இல்லை. மற்றிவ்வாழ்க்கை தம்மொடு எதிர்த்தோரைக் கல்வியால் வென்று அதனால் செருக்குதலுடையதேயன்றி உங்களைப்போன்ற அரசருடைய பெருமையு முடையது" என்னும் பொருள்பட

"வள்ளியோர்ப் படர்ந்து புள்ளிற் போகி
நெடியவென் னாது சுரம்பல கடந்து
வடியா நாவின் வல்லாங்குப் பாடிப்
பெற்றது மகிழ்ந்து சுற்றம் அருத்தி
ஓம்பா துண்டு கூம்பாது வீசி
வரிசைக்கு வருந்துமிப் பரிசில் வாழ்க்கை
பிறர்க்குத் தீதறிந் தன்றோ இன்றே, திறப்பட
நண்ணார் நாண அண்ணாந் தேகி
யாங்கினி தொழுகி னல்ல தோங்குபுகழ்
மண்ணாள் செல்வ மெய்திய
நும்மோ ரன்ன செம்மலு முடைத்தே"

என்ற கவியைப்பாடி இளந்தத்தனுக்கு வந்த முதனத்தை நீக்கிப் பிழைப்பித்தனர்.

(12) இளங்கண்டீரக்கோ, இளவிச்சிக்கோ என்னும் இருபெருந் தலைவரும் ஒருவழி யுற்றபோது ஆண்டுப்போந்த பெருந்தலைச்சாத்தனார் என்னும் புலவர் இளங்கண்டீரக் கோவைமட்டுந் தழுவி மரியாதை செய்தனர். அது கண்டு மனம் புழுங்கிய இளவிச்சிக்கோசின முகத்தனாகிப் புலவரை நோக்கி "நீவிர் என்னை யிழிவுபடுத்தற்குக் காரணமென்னை? என வினவினன். மனத்திட்பம் வாய்ந்த அப்புல

வர் "வாணர்க்குதவும் வண்குடிப்பிறந்த இவ்விளங்கண்டீரக்கோவை என்றும் மதிப்போம். இளவிச்சிக்கோவாகிய நீ நன்னன் குலத்துற்ற பெருமையும், இயற்கை நற் குணங்களும் வாய்ந்தனை யெனினும் நின் முன்னோனொருவன் புலவர்கட்கு வாயிற்கதவடைத்த கொடியனாதல் பற்றி நின்குலத்தவரை எமமவர்பாடுதலொழிந்தார்." எனத்துணிந்து கூறினார். (புற. நா. கருக) இயற்புலவர்கள் அரசர்களிடத்துப் பெருங்குற்றங் கண்டால் அக்குற்றத்தை வம்மிச பாரம்பரையாக மறவாமல் அதனை யியற்றிய குலத்தினரையெல்லாம் இழித்துக் கூறி வரும் வழக்கங்கொண்டிருந்தனரென்பதற்கு இதைவிட வேறு சான்றும் வேண்டுமோ?

(13) வெளிமான் என்னும் சிற்றரசனிடம் பரிசில் வேண்டிச் சென்ற பெருஞ்சித்திரனார் என்னும் புலவர் அவ்வரசன் ஏதோ சிறிது கொடுக்க, அதனை ஏற்காமற் சினத்துடன் சென்று குமண வள்ளலைப் பாடி அவனிடம் யானைப்பரிசில் பெற்று மீண்டும் வெளிமான் நகர்க்கு வந்து, அங்குள்ள காவல் மரமொன்றில் தான்பெற்ற பரிசில் யானையைக்கட்டி அவ்வெளிமானிடம் நேரிற் சென்று "இரப்போர்க்குக் கொடுத்துக் காப்பவன் நீ யொருவனல்லன்; ரக்ஷிப்பவர்கள் யாசிப்பவர்க்கு இல்லாமற் போகவில்லை; யாசிப்பவரிருத்தலையும் பார்! அவர்க்கு ஈவோர் இருத்தலையும் பார்! உன் ஊரில் காவலையுடைய மரம் வருந்தும்படி யாம்கொண்டு வந்து கட்டிய உயர்ந்த நல்லிலக்கணமமைந்த யானை எமது பரிசில், விரைவான கதிபடைத்த குதிரைகட்குத் தலைவனே! இனி நான் செல்வேன்" என்னும் பொருள்பட

"இரவலர் புரவலை நீயு மல்லை
புரவல ரிரவலர்க் கில்லையு மல்லர்
இரவல ருண்மையுங் காணினி யிரவலர்க்
கீவோ ருண்மையுங் காணினி நின்னூர்க்
கடிமரம் வருந்தத் தந்தியாம் பிணித்த
நெடுநல் யானையெம் பரிசில்
கடுமான் றோன்றல் செல்வல்யானே"

என்ற கவியைக் கூறிமீண்டனர். இப்புலவரது உயர்ந்த காம்பீரியமும், உண்மையும், உறுதியினின்று விலகாமையும் எவ்வளவு மெச்சத்தக்கனவாக இருக்கின்றன?

(14) இவ்வியற் புலவர்கள் தம்புலமைத் திறத்தைக் காட்டிப் பெறும் பரிசில்களால் மகிழ்வரேயன்றி வெறும் யாசகமாகப்பெறும் பரிசில்களைப் பெரிதும் வெறுத்துத் தள்ளுவர். பெருஞ்சித்திரனு ரென்ற முற்கூறிய புலவர் அதிகமான் நெடுமானஞ்சியிடம் சென்று பலநாட் காத்திருக்க, அவ்வரசன் அப்புலவர் கவித்திறமையைநேரிற் கண்டு களியாமல் ஏவலாளர் மூலஞ் சிலபொருளைப் பரிசிலாக அனுப் பினன்; அப்பரிசிலைப் புலவர் பெற்றுக்கொள்ளாமல் "சம்மானம் பெறுதல் வேண்டிக் குன்றும் மலையுங்கடந்து வந்தேன்" எனச்சொல் லியனுப்பிய என்னிடம், அன்பு கொண்டு இப்பொருளைக் கொண்டு இவ்வாறு செல்லுக" என்று விடுப்பதற்கு என்னை எத்தன்மையனாக அரசன் அறிந்தான்? என்னைக்காணுமலே தந்த இப்பொருளைக் கொள்ளற்கு, யான் ஓரிலாபத்தையே கருதும் வாணிகனல்லன்; கல்வி முதலிய பெருமையின் அளவையறிந்து கொடுப்பின் அப்பரிசில் தினையளவாயினும் நல்லதாகும்—என்னும் பொருள்பட

"குன்று மலையும் பலபின் னொழிய
வந்தனென் பரிசில் கொண்டனென் செலற்கென
நின்ற வென்னயந்தருளி யீதுகொண்
டீங்கனஞ் செல்க தானென வென்னை
யாங்கறிந் தனனோ தாங்கருங் காவலன்
காணு தீத்த விப்பொருட் கியானோர்
வாணிகப் பரிசில னல்லேன் பேணித்
தினையனைத் தாயினு மினிதவர்
துணையள வறிந்து நல்கினர் விடினே"

என்ற கவியைக் கூறினர். இவர் கூறியதொன்று தானோ?

(15) கபிலரேன்னும் புலவர் பெருமானும் மலையமான் திரு முடிக் காரியென்னும் வள்ளலைநோக்கி வரிசையறிந்து கொடுத்தலே கொடையாகுமென்னும் பொருள்பட:—

"ஒருதிசை யொருவனை யுள்ளி நாற்றிசைப்
பலரும் வருவர் பரிசின் மாக்கள்
வரிசை யறிதலோ வரிதே பெரிது
மீத லெளிதே மாவண் டோன்ற
லதுநன் கறிந்தனை யாயிற்
பொதுநோக் கொழிமதி புலவர் மாட்டே"

என்க் கூறியுள்ளார். இவற்றால் பண்டைக்காலத்து இயற்புலவர் கொண்டிருந்த பேராற்றலும், அவர் பக்கல் அரசர்கள் கொண்டிருந்த அன்பும், ஆதரவும் நாம் நன்கு தெளியலாமன்றோ?

(16) புகழேந்தியார் ஒட்டக்கூத்தராதிய பிற்காலப் புலவர்களும், கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பநாட்டாழ்வாரும் "செழியனையுஞ் சோனையுஞ்சேரத் திறைகொள்—மொழியின் சுவையேமுதிர்ந்த' வர்களாய் நம்தமிழ்நாட்டு முடிவேந்தர் பணிந்து போற்றத்தக்க பெருமரியாதையுடனிருந்தார்களென்பது சரித்திரவாயிலாக யாவருமறிந்ததொன்றே.

இராமநாதபுரம் சம்ஸ்தானத்தில் ஒரு காலத்தில் மந்திரியாயிருந்த அண்ணாமலைப்பிள்ளை யென்பவர் அமுத கவிராயர் நித்திரை செய்யும்போது அவர் பாதத்தை வருட உடனே கவிராயர் விழித்துப் பார்த்து மந்திரி நிற்பதையறிந்து அடியில் வரும் கவியைக் கூறினார்.

சீரிலகு மான்மணிப் பாய்சுமந் தான்கம்பர்
    சிவிகைபாண் டியனேந்தினன்
செல்வமிகு கச்சியப் பன்னுதை பொறுத்தனன்
    றிகழ்சுட்டி சோமனீந்தான்
றாருலவு குமணனுந் தலைகொடுத் தான்சிவன்
    றானுமொரு தூதுசென்றான்
சர்க்கரையு மெச்சில்வாய் கழுவினான் காளத்தி
    தனதிருகை புற்றிலிட்டான்
பேரிலகு கம்பையனும் விரலாழி யீந்தனன்
    பெரியவன் பெண்கொடுத்தான்
பிணிமுகத் தோன்கீரனைப்புரந் தான்பேதை
    முதிகிலன மொருவனிட்டான்
பாருலகி லித்தமிழ்க் குத்தொண்டு செய்தபேர்
    பார்க்கிற் கணக்கில்லையே
பராசர் பணிகின்ற வண்ணா மலைக்குரிசில்
    பாதத்தை வருடினனே,

இக்கவியிற் கூறப்பெற்ற சரிதங்களை யெல்லாம் விரிவாகக் காண வேண்டின் செந்தமிழ்ப் பத்திரிகை 3-வது தொகுதியில் 66-ம் பக்கத்தில் "செந்தமிழ்க்குத் தொண்டு செய்தோர்" என்ற தலைப்பின் கீழ்ப் பார்க்கலாம்.

அன்றியும், நடவிடகர்யகர்கள் கூட்டுறவுக்குரியவரல்லர் என்று மிருதிகள் விலக்கிக்கூறுகின்றன. (மஹாபாரதம், சாந்திபர்வம் 35-வது அத்யாயம் பக்கம் 121. ம. வீ. இராமா. பதிப்பு) "பாடகன் நர்த்தனஞ் செய்பவன் விதூஷகன் கொழுப்புள்ளவன் ..................... இவர் முதலானவர் பொருட்டுத் தானஞ் செய்யக்கூடாது............ சரியானபடி செய்யப்படாத தானம் கொடுத்தவனுக்கும் அவ்விதம் வாங்கினவனுக்குந் தீங்கை விளைவிக்கும் என்று கூறுகின்றது. இதனால் தானம் பெறற்குரியராகாதவர் வரிசையில் பாடகரையும் சேர்த்திருப்பதையறியலாம். எக்காலத்தும் அரசர்களுடனிருந்து இடித்துக்கூறி இம்மை மறுமை நன்மை புரிந்துவருபவர் இயற்புலவரே யென்பது பற்பல காரணங்களாலுஞ் சரித்திரங்களாலும் பசுமரத்தாணிபோல் நிலைநாட்டப்படுமெனக.

ஸ்ரீ சேக்கிழார் சுவாமிகள் பெரிய புராணம் பாடியருளிய காலத்து சோழராசன் ஷை புராணத்தையும் சுவாமிகளையும் யானைமீது ஆரோகணிப்பித்துத் தானும் பின்னே ஏறியிருந்து தன்னிரு கரங்களிலும் இரண்டு சாமரை யெடுத்து வீசித் திருவீதி வலஞ்செய்வித்து ஸ்ரீ சபாநாயகர் சந்நிதியில் அரங்கேற்றுவித்துப் பற்பல விசேடமரியாதைகளைச் செய்து வணங்கினான் என்பதை.

"செறிமதயானைச்சிரத்திற் பொற்கலத்தோ டெடுத்துத் திருமுறையை யிருத்தியபின் சேவையர்கா வலரை, முறைமைபெற வேற்றியா சனுங்கூட வேறி முறைமையினு லிணைக்கவரி துணைக்கரத்தால் வீச, மறைமுழங்க விண்ணவர்கள் கற்பகப்பூமாரி மழைபொழியத் திருவீதி வலமாக வரும்போ, திறைவர்திரு வருளைநினைந் தடலரசர் கோமா னிதுவன்றோ நான்செய்த தவப்பயனென் றிசைத்தான்".

என்றும் ஸ்ரீ உமாபதி சிவாசாரியார் திருவாக்கால் நன்குணரலாம். கம்பர், பாண்டியன் மனைவி தம்பல்லக்கைச் சுமந்தபோது பாடியது.

உமையவளு நீயு மொருங்கொப்பே யொப்பில்
உமையவளுக் கங்குண்டோ ரூனம்—உமையவளைப்
பாகந்தோய்ந் தாண்டான் பலிக்குழன்றான் பாண்டியனின்
ஆகந்தோய்ந் தாண்டா னரசு. (தமிழ்நாவலர்சரிதை)

படிக்காசுப்புலவர், கருப்பமுதலியாரென்ற பிரபு தம் பல்லக்கைச் சுமந்தபோது பாடியது.

எல்லையப்ப னம்மையப்பன் தருதிருவேங் கடநாத னெழிற்சீராமன்
வல்லக்கொண்டையன்மாதைவெங்கடேசுரன்போலவரிசைசெய்தே
செல்வத்தம் பெருடனே கஸ்தூரிமகன் சுருப்பன் தெருவீதிக்கே
பல்லக்குத் தான்சுமந்தா னிதுநமக்கோ ராயிரம்பொன் பரிசுதானே.
(த. நா. ச.)

கடந்த சமீபகாலத்தில் சிவகிரிச் சம்ஸ்தான கர்த்தாவர்கள்தெய்வப்புல்வர் என்பவரை யழைத்துத் தம்மீது "திக்குவிஜயம்" என்னும் பிரபந்தம் பாடச்சொன்னபோது அப்புலவர் "யாம் பாடவேண்டின் அந்நூலை யரங்கேற்றியவுடன் எமக்குப் பற்பல சம்மானங்கள் செய்வதுடன் எம்மைப் பல்லக்கிலேற்றித் தாங்கள் பல்லக்குக்கொம்பு தாங்கிக் கௌரவப்படுத்தவேண்டும். அங்ஙனம் செய்ய இசைந்தால் யாம் பாடுவோம்" எனக்கூறிச் சம்மதி பெற்றுக்கொண்டு குறித்த நூலைப்பாடி யரங்கேற்றினர். அதனைக்கேட்டு மகிழ்ந்த அரசர், புலவர்க்கு, தக்க சம்மானம் செய்து புலவரைப் பல்லக்கிலேற்றி நகர் வலஞ் செய்விக்குங்கால் சம்ஸ்தானங்களில் சம்ஸ்தான புல்லுருவிகளாக வாழும் சிலர் துற்போதனைக்குச் செவிகொடுத்து, பல்லக்கின் பின்புறமாகச் சற்று ஆலோசித்து நின்று பாவனைபண்ணத் தொடங்கினார்கள். அதனைக் குறிப்பாலறிந்த புலவர் பல்லக்கிலிருந்தபடியே

"வாக்கிரண்டு பேசா வரகுணரா மப்பாண்டியன்
வாக்கிரண்டு பேச மனம் வைத்தான்"

என்று கூறினர். அதுகண்ட அரசர் திடுக்கிட்டு "இதோ தயாராயிருக்கிறேன்" என்று கூறிப் பல்லக்குக்கொம்பு தாங்கினார்கள். உடனே புலவர் மனமகிழ்ந்து,

"தாக்கு
மருவலரைக் கொல்லென்றான் வந்தடைந்த போது
வெருவாமற் காவென்றான் மேல்"

என அவ்வெண்பாவின் பிற்பாகத்தை முடித்தனர். புலவர் கவித்திறமையையும் அவர்பால் அரசர் வைத்திருந்த மதிப்யையும் கண்ட எல்லாரும் மகிழ்ந்தனர்.

எமது குலபரிபாலரராகிய சேற்றூர்ச் சம்ஸ்தான கர்த்தரவர்கள் முத்துச்சாமித்துரையவர்கள் மீது தமது சம்ஸ்தான வித்துவானும் எம் அருமைத்தந்தையுமாகிய இராமசாமிக்கவிராஜராவர்கள் குறவஞ்சி என்னும் பிரபந்தம்பாடி அரங்கேற்றிய காலத்து துரையவர்கள் மிக விருத்தாப்பிய தளர்ச்சியுற்றிருந்தபடியால் அவர்கள் அனுமதிப்படிக்கு ஷை சம்ஸ்தான பிரதான மந்திரியாகிய சுந்தரமகாலிங்கம்பிள்ளையவர்கள் பல்லக்குக்கொம்புதாங்கப், பல்வகைய விருதுசூழ, வாத்திய முழக்கப், பட்டணப்பிரவேசஞ் செய்வித்துப் பற்பல மரியாதைசெய்தார்கள். எந்தையவர்கள் அடியில்வரும் பாடலையுடனேகூறினார்கள்.

"செய்தாங்கும் வளச்சேறை முத்துசுவா மிக்குரிசி றினமும்மெச்சு
மெய்தாங்குஞ் சொல்லமைச்சன் சுந்தரம காலிங்க மேலோன்சேடன்
பைதாங்கு நிலவுலகிற் றன்னரசன் புகழ் நிலைக்கும்படி யிகைக்குக்
கைதாங்கிக் கவிஞர்சிவி கைதாங்கித் தன்புகழுங் கதிப்பித்தானே."

தக்க வித்துவான்களுக்கன்றிச் சரியிருப்புக்கொடாத வழக்கத்தைத் தொன்றுதொட்டுக் கைக்கொண்டுவரும் எட்டயபுரம் சம்ஸ்தான கர்த்தரவர்கள் தம்மீது சமுத்திரவிலாசமென்னும் பிரபந்தம் பாடிய கடிகைமுத்துப்புலவருக்குச் சிறந்த பற்பல விசேடமரியாதைகளைச் செய்ததுமன்றி அப்புலவர் குலத்தில் பிறந்த எல்லாருக்கும் இன்றும் சமமரியாதை செய்துவருகின்றார்கள். இன்னும் இவ்வரிசைகளைக் கூறப்புகின் மிகவிரியும்.

இவ்வாறாக எந்த சம்ஸ்தானத்திலாவது இசைப்புலவர்க்கு நிலைநின்ற பெருமரியாதை செய்ததாகக் கேட்கப்பட்டதில்லையே.

சோழராஜன் ஜயங்கொண்டா ரென்னும் இயற்புலவருக்குப் பலவுகையான பெரிய சம்மானங்களைச் செய்து அன்புடன் ஆதரித்து வருங்கால் ஏதோ அவ்வரசனுக்கும் புலவருக்கும் சிறிதுமனவருத்தம்

நேர்ந்தபோது "அரசன் இப்புலவருக்கு யான் எத்தனையோ பொருள்களைச் சம்மானஞ் செய்தேனே, அப்படியிருந்தும் இப்புலவர் என்னோடு பிணங்கினரே" என, தான்செய்த சம்மானத்தையே பெரிதாக மதித்துக் கூறியபோது அப்புலவர்

"சாவல ரீகை கருதுங்காற் காவலர்க்குப்
பாவல ரீயும் பரிசொவ்வா—பூவினிலே
யாகாப்பொருளை யபயனளித் தான்புகழா
மேகாப் பொருளளித்தேன் யான்"

என்னும் கவியைக் கூறினர். (த. நா. ச.)

இவ்வாறே அரசன் பிணக்குற்றபோது கம்பர்பாடிய செய்யுட்கள் பல "தனிச்செய்யுட்சிந்தாமணி" முதலிய புத்தகங்களிற் காணலாம். இங்ஙனம் எக்காலத்துஞ் சிறப்புப் பெறுதற்குப் பாத்திரராகிய இயற்புலவர்களைக் கேவலம் யாசகராக நினைக்கின்றமை தக்கதாகுமா?

இயற்புலவர்களை இரப்பவராகக் கருதி அவமதித்தல் பெரிதும் பிழைபாடாமென்பது அடியில்வருஞ் செய்யுளானுங்காண்க,

"கலைமதிநா ணுறச்சகல கலைபுடைத்துப் பிறர்க்குநல்குங் கவிசீரேட்டத், தலைமையுறு மவர்மிகுந்த தகுந்த வித்யா தானதன சம்பத்துள்ளார், இலையெனவொன் றிரக்கினந்தக் குறையரசர்க் கல்லதிவர்க்கில்லைநல்ல, விலைமதியா மணிதெரியா தவர்மதியா விடினுமது மேன்மை தானே" (பர்த்துருகரி நீதிசதகம்)

இவ்வாறாகவும் தற்காலம் சிலபிரபுக்கள் சங்கீத வித்துவான்களை மிகமதித்துக்கொண்டாடியும், சாகித்ய வித்துவான்களை அங்ஙனம் மதியாமலும் நடத்திவருகின்றார்கள். அச்சங்கீத வித்துவான்களும் அங்ஙனமே தம்மை மதித்துப்பாராட்டிக் கொள்கின்றார்கள். பாகுபாடறியாது சூழ இருப்பவரும் "அரசனெவ்வழி யவ்வழியுலகம்" என்றவாறே கருதுகின்றார்கள். ஆதலின் இவற்றின் பாகுபாடுகளையும் பண்டை வழக்கங்களையும் பலரும் அறியவேண்டுமென்ற கருத்தால் இங்ஙனம் எழுதப்புகுந்தேமன்றி வேறில்லை.

அரசர்களே! பிரபுக்களே! தொன்றுதொட்டுள்ள வழக்கங்களையும், நியாயத்தையும் கருதி இவ்விருவகைப் புலவர்களையும் ஏற்றவாறு நடத்திப்புகழும், புண்ணியமும், இன்பமும் பெறுதல் வேண்டுமென்று நுங்களைப் பிரார்த்திக்கின்றனன். இம்மைக்குரிய லௌகிக காரியங்களையும், மறுமைக்குரிய புண்ணியப் பேறுகளையும், நிலைத்ததிது நிலையாததிதுவென்னும் பகுத்தறிவையும், பேரின்பத்தைத்தரும் ஞானத்தையும், பிற்காலத்துச் சரித்திரவாராய்ச்சி புரிவார் கண்டு மெச்சத்தக்க பெரும் புகழையும், மற்றும் பற்பல நன்மைகளையும் இயற்புலவர்கள் மூலமாகவேனும் அவர்கள் கருணையுடன் எழுதிவைத்த நூல்கள் மூலமாகவேனும் பெறவேண்டுமேயன்றி வேறொருவாற்றாற் பெற முடியாது. இசைப்புலவராற் பெறுவதெல்லாஞ் சிறுபொழுது மனம் ஆறுதலடைதலே யல்லது வேறில்லை.

இயற்புலவர்களை இசைப் புலவர்களினும் மேலாக மதிக்கவேண்டியிருக்க அதற்கு நேர் மாறாக நடத்துவது மிகவும் அநீதி. இருவரையும் சமமாகவாவது கொள்ளுங்கள்.

## "இயலிசைப் புலவர் தாரதம்மியம்"

என்னும் வியாசத்தைப படித்து மகிழ்ந்த

மகிபாலன்பட்டி வித்துவான் ஸ்ரீமத்.

## மு. கதிரேசச்செட்டியாரவர்கள்

எழுதியனுப்பிய

# உவகைச் செய்யுட்கள்.

அலைக்கடல்சூழ் நிலக்கணுள வரையர்புக ழுடலழியா தருளிக் காக்கும், கலைக்கடலுண் டவர்பெருமை யறியார்த மகத்திருளைக் கந்தசாமித், தலைப்பெயர்கொ ளியற்புலவ! தக்கவியற் புலவர் *விறற் || சவிமிக் கார்ந்த, * கலைக்கதிரா லொருவியறி விருவியநின் பெருமை யெவர் கழறு வாரே.

அந்நாளிற் கோல்கோடா தரசுபுரிந் துலகாண்ட வரையர் பல்லோர், எந்நாளுங் கவியரைய ருரைவழியே நின்றசெய லெல்லாங் காட்டி, யிந்நாளு மம்முறையே யொழுகிநல னுறுகவென விளைத்த நின்னுச், செந்நாவன் றோகந்த சாமியெனுங் கவிஞ! வது சிறக்க மெய்யே.

அரியவுல கியலைநனி யாய்ந்துநுனித் துணர்ந்தவ்வக் காலக் கேற்பத், தெரியவுரைத் திடுமறிவு நினக்கெளிது பிறர்க்கரிது தேருங் காண்மற், றரியபய னுறத்தொடங்கு கருமமுமத் தகைத்தென்னே யுனது மாட்சி, விரியவுரைத் திடல்கந்த சாமியெனும் வியன்புலவ! மேதக் கோனே.

வேறு.

எத்திசா முகத்துஞ் சூழ்மா விருளொரீஇத் திகழ்ந்து லாவும்
வித்தியா பாநு வாழ்க மீக்கிளர்ந் ததுதோன் றற்குக்
கத்துபாற் கடலாங் கல்விக் கந்தசா மிப்பேர்ச் செல்வன்
சுத்தமா ருள்ளம் வாழ்க சொற்பொருட் டலைவர் வாழ்க.

இங்ஙனம் அன்பன்,

மு. கதிரேசன்.

---

* விறல்-பெருமை; அல்லது இசைப்புலவரினும் விழுமிய வெற்றி.
|| சவி-ஒளி. * கலைக்கதிர்-வித்தியாபாநு.

மகிபாலன்பட்டி வித்துவான் ஸ்ரீமத்

## மு. கதிரேசச் செட்டியாரவர்கள்

அனுப்பிய உவகைச்செய்யுட்களைக் கண்டு

## மு. ரா. கந்தசாமிக்கவிராயர்

ஷை செட்டியாரவர்கட்கு எழுதியனுப்பிய கவிகள்.

---

தனவணிகர் திருமரபு மகிபால நன்னகருந் தமிழ்த்தென் னாடு மினமலியும் புலவர்களும் புரிதவத்தாற் பிறந்தன்பி னெல்லை யாகி மனமுறநல் லுபகாரங் கினமியற்றி யிருமொழிக்கும் வரம்பு கண்டு முனைவனருண் முழுதுணர்த்துங் கதிரேச நாவலவ மொழிவ கேண்மோ. (க)

இயற்புலவ ரிசைக்கடலு ளொருதுளியைப் பாநுகரத் தீர்த் தாங் காங்குப், பெயற்குறுமென் சிறுசெயலைப் பெரிதாக நின்னுளத் துப் பேண லாலென், வயத்தடையும் படிவிடுத்த நாற்கவியும் பெற் றின்ப வாரி மூழ்கி, நயத்தகுநின் குணமறிவு புலமைகவித் திறமி வற்றை நனிகண் டேனால். (உ)

பயனறிவார் தினையளவும் பனையளவாக் கொள்வரென்ற படியே செஞ்சொல், நயனறிநீ யென்செயலென் றெள்ளாது வியந்துரைத்த நாற்பா வானால், வியனறிவார் மிகன்மக்க ளான்றமதிப் பெனக்கு முறும் விழுப்பங் கண்டேன், அயனறிவா லுனைப்படைத்தான் றன் மனைசீ ரிந்நாளு மவிர்வான் மன்னே. (ங)

சேற்கணியர் விநோதமொரீஇ யருங்கலைவி நோதனெனத் திகழு நீயன், பாற்கவியு மன்புடனே பாவித்த நாற்கவியும் படித்தேனின் னைப், போற்கவிஞர் சிலரிருப்பி னியற்பெருமை யிவ்வாறு போமோ முந்தை; நாற்கவிரா சரிலெவர்க்கு மேற்கவியாங் கதிரேச நாவல் லோனே.

தாமுமொரு பயப்படார் பயப்படுவார் தம்மையுந்தம் போற் செய் வார்போல்,எமமுறு தழுக்காற்றூற் பிறருரைபாக் கண்டவற்றை யிழுக்கிச் சொற்றுத், தேமறியப் புலவர்பதி யெனத்திரியும் வேடரெ லாஞ் சிந்தை நாணப், பாமொழிந்து பாவலரை யூக்குவிக்குங் கதி ரேசப் பண்பன் வாழி. (ரு)

இங்ஙனம் அன்புள்ள,

மு. ரா. கந்தசாமிக்கவிராயர்.

# (11) கல்வியின்பம்.

கல்வியாவது ஈண்டு வித்தையென்னும் பொருள்தந்து நிற்பதாம். ஒரு பொருளையறியுங்கால் பிண்டமாக அறியும் நிருவிகற்ப வுணர்ச்சி போலாது அப்பொருளைப்பற்றிய விவரணங்களைப் பாகுபாடுசெய்து அறியும் சவிகற்ப வுணர்ச்சியைத் தருதற்குக் கருவியாவது இக்கல்வி யேயாம். இக்கல்வியில்லாதார் சவிகற்ப வுணர்ச்சியைக்கூடப்பெருர். விலங்கினங்களோடொப்ப அறியும் பஞ்சேந்திரிய வுணர்ச்சியின் வேருய் மனிதர்க்கேயுரியதாய் மனத்தின்கண் நிகழும்பெற்றித்தாய் நல்ல தன் நலனும் தீயதன் தீமையும் பகுத்தறிந்து கோடற்குக் கருவியா யுறுவது மிக்கல்வியேயாம்.

கல்விச்சிறப்பு:—மனத்தைத் தீயவழியிற் புகவிடாது நல்வழியிற் செலுத்தி மாட்சிபெறுவிப்பது. மனிதரிடத்துள்ள மிருகத்தன்மை யைமாற்றி அவர்க்கு மனிதத்தன்மையைக் கொடுக்கவல்லது. "மேற் பிறந்தாராயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்துங் கற்ருரனைத்திலர் பாடு, என்பதால் உடலோடொழியும் குலச்சிறப்பினும் மிகச் சிறப்புடை யது. "எக்குடிப்பிறப்பினும் யாவரேயாயினும் அக்குடியிற் கற்ருே ரை வருகென்பர், என்பதனுனுங் காண்க.

கள்வராற் கவரப்படாது, தாயத்தாராற் பாகிக்கப்படாது, அரச ராற் கொள்ளப்படாது, வெள்ள முதலியவற்ருல் அழிக்கப்படாது, பிறர்க்குக் கொடுக்கக் கொடுக்கக் குறைவெய்தாது நிறைவுறுவது, அறிவை வளர்ப்பது இவைபோல்வனவாகிய பல்வகைச் சிறப்புக்களை யுடையது.

"வைப்புழிக் கோட்படா வாய்த்தீயிற் கேடில்லை
மிக்க சிறப்பி னரசர் செறின்வௌவார்"

"கேடில் விழுச்செல்வங் கல்வியொருவற்கு
மாடல்ல மற்றைய வை"

என்பன வாதியவாதியவற்ருல் இதன்பெருமை நன்கு புலப்படும். அன்றியும்,

"ஒருமைக்கட் டாங்கற்ற கல்வி யொருவற்
கெழுமையு மேமாப் புடைத்து"

என்றவாறு ஒருபிறப்பின்கண் பயின்ற கல்வியானது அப்பிறவியொழி யினும் ஒழியாது உயிருடன் எழுமையுந் தொடர்ந்து சென்றுதவுங்

தன்மையது. "நற்பொருள் செய்வார்க்கிடம் பொருள்செய்வார்க்கு மஃதிடம்" என நற்பொருளென்று திருத்தக்கதேவர் சிறப்பித்துக் கூறலுங் கருதற்பாற்றும். இதுபற்றியன்றே.

"அறம்பொரு ளின்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையு நாட்டு—முறுங்கவலொன்
றுற்றுழியுங் கைகொடுக்குங் கல்வியி னூங்கில்லை
சிற்றுயிர்க் குற்ற துணை"

என்றார் ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள். இதைவிட வேறுகூறுதல் மிகையாமென இம்மட்டில் நிறுத்தி மேற்செல்வாம்.

கற்றார்பெருமை:—உலகத்தார் அரசனைத் தெய்வமாக மதிப்பர். அவ்வரசனினும் பலமடங்கு சிறப்பெய்துவார் கற்றார். அரசனுக்கு அவன் நாட்டில்மட்டுமே சிறப்பாம். கற்றார்க்கோ சென்ற விடங்களெல்லாம் சிறப்பாம் எந்தநாடும் நாடாம். எந்த வூரும் ஊராம். எல்லாரும் உறவினரேயாவர். எல்லாராலும் புகழ்ந்து போற்றப் படுவர்- கடவுள் கருணைக்கு முரியராவர். இவ்விஷயங்களைப் பண்டைப்புலவர் சரிதவாயிலாலும் நன்கு காணலாம். சோழராஜனால் சிறிது புறக்கணிக்கப்பட்டு நீர்நாட்டை நீங்கி மலைநாட்டிலெய்திய கம்பநாட்டாழ்வார் அம்மலைநாட்டு மன்னர் பெருமானால் மிகப்பாராட்டி மதிக்கப்பட்டு மீண்ட சரிதமொன்றே யிதற்குப் போதிய சான்றாகும். "விலங்கொடு மக்க ளனையர் இலங்குநூல் கற்றாரோ டேனையவர்" "கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு புண்ணுடையர் கல்லாதவர்" என்பவற்றாலும் கற்றார் பெருமையினிது விளங்கும். அன்றியும்,

"கலைமகள் வாழ்க்கை முகத்த வெனினும்
மலரவன் வண்டமிழோர்க் கொவ்வான்—மலரவன்செய்
வெற்றுடம்பு மாய்வதுபோன் மாயா புகழ்கொண்டு
மற்றிவர் செய்யு முடம்பு"

என்பதனானே கற்றார் பெருமையினைத்தென வொருவாறு தெரிதல் சாலுமென்க.

கற்கத்தக்கன:—

"அலகுசால் கற்பின் அறிவுநூல் கல்லா
துலகநூ லோதுப வெல்லாங்—கலகல
கூஉந் துணையல்லாற் கொண்டு தடுமாற்றம்
போஒந் துணையறிவா ரில்"

"எழுத்தறியத் தீரு மிழிதகைமை தீர்ந்தால்
மொழித்திறத்தின் முட்டறுப்பா னாகு—மொழித்திறத்தின்
முட்டறுத்த நல்லோன் முதனூற் பொருளுணர்ந்து
கட்டறுத்து வீடு பெறும்"

"கல்வி கரையில கற்பவர் நாள்சில
மெல்ல நினைக்கிற் பிணிபல—மெல்லவே
யாராய்ந் தமைவுடைய கற்பவே நீரொழியப்
பாலுண் குருகிற் றெரிந்து"

"பொருவி லாவிதி காச புராணங்கள்
தெருளு மாந்தர் சிறப்புள ராகுவர்
தரும நூலும் புராணத்தின் றன்மையும்
கருதி யோர்ந்தவ ரேகலை வல்லரே"

என்பவாகலின் கற்கப்புகுவார் அறம்பொருளின்பம் வீடென்னும் புருஷார்த்தங்களைப் போதிப்பனவாகிய நூல்களையே கற்கக்கடவர். அன்றியும் ராஜநீதி முதலியவற்றை யுணர்த்து நூல்களையும் தொழின் முறைகளைக் கற்பிக்கு நூல்களையும் நல்லறிவைப் பெருக்கும் ஏனைய நூல்களையும் கற்கவேண்டும். இங்ஙனமன்றி அற்ப விஷயங்களை யுணர்த்து நூல்களைக் கற்றல் வீண்காலப் போக்காவதன்றிப் பிறி தில்லை. தற்காலத்தில் ஆங்கிலக்கல்வி பல்கத்தொடங்கவே பல இடங்களில் நம்முன்னோர் கொள்கை நழுவவிடப்படுகின்றது. ஆங் கிலக்கல்வி மணம் வீசத்தலைப்பட்ட கலாசாலையில் நமது சிறுவர்கள் இளமைக்கட்கற்கும் பாடங்களைப் பார்த்தால் பெரும்பாலும் நாய், பூனை, கழுதை, சிங்கம், ஓநாய் என்பவற்றைப் பற்றியவைகளாக இரு க்கின்றன. நம்முன்னோர் ஏற்படுத்திய பாடங்களைப் பார்ப்போம். ஆத்திச்சூடி, கொன்றைவேய்ந்தான், வெற்றிவேற்கை, நல்வழி, நன் னெறி முதலியனவாகும். இச்சிறு நூல்களி லமைந்துள்ள பொரு ளமைப்பைப் பார்த்தால் எவரேவியவார்? "தொட்டிற் பழக்கம் சுடு காடு மட்டும்" "சிறுவர்க்குக்கல்வி சிலையிலெழுத்து" என்றவண்ணம் இந்நீதி நூல்களால் இளமைப் பருவத்தில் கற்றறிந்த நீதிகள் நம் முள்ளத்தே யூன்றிப் பதிவனவாகும். அங்ஙனம் பதியவே நம்மக்கள் எத்தனை வயசு சென்ற பின்னும் இளமையிற்படித்த சிறு நூல்களின் சாரம் அவருள்ளத்தைக் கொள்ளைகொண்டு பன்னலம் புரிவனவாகும். இச்சிறு நீதிநூல்களின் பொருளமைப்பே வேறு பெருநூல்களில் பல

படவிரிந்து தோன்றுவதாம். ஆதலால் கற்பிக்கும் ஆசிரியர்கள் மாணுக்கர் பருவத்துக்கு ஏற்றவாறு நற்பொருள் போதிக்கும் சிறந்த நூல்களைப் படிப்படியாகப் போதிக்கவேண்டும். தமக்கும் பிறர்க்கும் பயன் செய்யாது விநோத மாத்திரையாகச் சிறுபோது மகிழ்வூட்டும் பெற்றிவாய்ந்துள்ள வேடிக்கைப் பாக்களையும் தெம்பாங்கு முதலியவற்றையும் போலிச்சரித்திர நூல்களையும் போதித்தல்கூடாது. கற்பிப்பாரும் கற்பாரும் நன்கு ஊகித்துணரற்பாலது இது. இவ்விருவருள்ளும் முதலில் இப்பொறுப்பு கற்பிக்கும் ஆசிரியர்க்கே யுரியதாம். இதனுற்றான் நல்லாசிரியரை யடுத்துக் கற்கவேண்டும் என்று கருதி ஆசிரிய ரிலக்கணத்தை நன்கு விரித்தோதி வைத்துள்ளார் நம் முதியோர். நம்மவர் பலர் இதனைச்சிந்திப்பதில்லை. முன்னர் கவனியாது மக்கள் கல்வியின் பொருட்டுச்சிறிது பொருட்செலவிடுதற்கஞ்சி கிறிஸ்தவர் கலாசாலைகளில் தம்மக்களை விட்டுக்கற்கச்செய்து பின்னர் அம்மக்களின் மனநிலைவேறுபட்டு ஒழுக்கம் பிறழ்ந்துபோதலைக்கண்டு கண்ணீர்விட்டுக் கதறியழுகின்றவர் எத்தனைபேருள்ளார்? அந்தோ பரிதாபம்!

கற்குமுறை:—கற்கும்போது கஷ்டமாகத்தோன்றினும் "தொடங்குங்காற் றுன்பமா யின்பம் பயக்கும்" என்றவாறு பிற்பயப்பதான இன்பத்தைக்கருதி, வருத்தமுற்றாலும் சலியாது ஊக்கத்துடன் கற்கவேண்டும். காலந்தவறாது கலாசாலைக்குச் சென்று ஆசிரியரை மகிழ்ச்சியுடன் வழிபாடுசெய்து ஆசிரியர்குறிப்பறிந்து அவராணைக்கடங்கி நின்று பசித்துண் பவனைப்போல் கற்பதில் விருப்பமிகக்கொண்டு கற்கவேண்டும். கற்றபாடங்களைத் தனியேயிருந்து நன்றாகச் சிந்திக்கவேண்டும். தம்மோடொத்த மாணவர்களுடன் அளவளாவியறியவேண்டும். தாம்கற்ற பாடங்களை யெல்லாம் தம்மிற்றாழ்ந்த நிலையிலுள்ள மாணுக்கர்கட்குப் போதிக்கவேண்டும். இவையெல்லாம் தாம் கற்ற கல்வியை நிலைநாட்டற்குரியன. கற்குங்கால் மனத்தை வேறு வகையிற் செலுத்தல் கூடாது. இதைப்பற்றி யொரு சிறு கதை கூறுவதுண்டு. அஃதாவது:—காரிகைநூல் கற்கப்புக்கமாணவகனொருவன் மிகக்கவனத்துடன் கற்றுவருங்கால் ஒருநாள்உண்ணும்போது அன்னத்தில் நெய்விடுதற்குப் பதிலாக மறதியால் வேப்பநெய்யை அவன்றாய் வார்த்தனள். இவன் படிப்பிலேயே கவனத்தைச் செலுத்தியிருந்தானாதலின் கசப்பறியாது வழக்கப்படி யுண்டு சென்றான். அவன்றாய் தான் மறதியால் வேப்பநெய்யூற்றியதையும் தன்

மகன் படிப்பின் கவனத்தால் கசப்பறியா துண்டதையுமறிந்து அவ்வாறே தினமும் வேப்பநெய்யை யூற்றிவந்தனள். இவனும் உண்டுவந்தான். காரிகைப்பாட முடிந்தது. மனக்கவலை மாறியது. வழக்கப்படி யுண்ணும்போது அம்மா நெய் கசக்கிறதே யென்றான். அவள் அப்பா இன்றுதான் உனக்குப்படிப்பும் சசந்ததுபோலுமென்றாள். பின்னர் நடந்த செய்தியை யறிந்து பாடமுடிந்ததை யுணர்ந்து இருவரு மகிழ்ந்தனர்; என்பதே. இங்ஙனமாக ஒருவழிப்பட்ட மனத்துடன் கற்றல்மட்டுமே கல்விநிரம்புவதாகும். பழைய பாடங்களைப் போற்றாது புதியபாடங்களையே ஆசிரியரிடம் கேட்டுவருதல் பயனற்ற செயலேயாம்; அது கையிலுள்ள பொருளைப் பாதுகாவாது கொட்டிவிட்டு மீட்டும் வருந்திப் பொருள் தேடுவார் செயலையேயொப்பாகும். இக்கருத்தை,

"வருந்தித்தாங் கற்றன வோம்பாது மற்றும்
பரிந்துசில கற்பான் றொடங்கல்—கருந்தனங்
கைத்தலத்த வுய்த்துச் சொரிந்திட் டரிப்பரித்தாங்
கெய்த்துப் பொருள்செய் திடல்" என்பதாலறியலாம்.

சிறிதளவாகக் கற்பினும் கற்றமட்டில் சந்தேகமின்றி யிதற்கிதுவே பொருளாமென்று நிச்சயித்துக்கொண்டே மேற் கற்கவேண்டும். முன்னர் கற்ற பாடங்களின் பொருளை நன்கு தெளிந்து கொள்ளாமல் ஐயப்பாட்டுடன் விட்டு மேலு மேலுங் கற்றுப்போதல் கூடாது. உண்மைப் பொருளை நன்குதெரிந்து கொண்ட பின்னரே மேலே கற்க வேண்டும்.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக" என்ற முறை கவனிக்கற்பாலது.

கற்றவர் கடமை—: "கற்றபின் நிற்க அதற்குத் தக" என்றவாறு கற்றறிந்தவர்கள் தாம் கற்ற நூல்களிற் கூறிய வொழுக்கங்களின் வழுவாது நடக்க வேண்டும். கல்வியின் பயன் ஒழுக்கமேயாகும். கற்றும் அதன்படி யொழுகாதவர் கல்லாதவரினும் கடையரே யாவர். ஆதலின் கற்றவர்கள் ஒழுக்கந்தவறாது நடக்கக்கட்டுப்பட்டவராவர் என்பதை நன்றாக அறிந்து நடக்கக் கடவர். மெய்வருத்தம் பாராது பசிநோக்காது கண்டுஞ்சாது எவ்வெவர் தீமையு மேற்கொள்ளாது. அருமையும் அவமதிப்பும் கருதாது அரிதின் முயன்று கற்றபின் கற்றவாறொழுகலை விடுத்து வீண்வாதமிட்டுக்

காலத்தை அவமே போக்கல் மதியீனமாம். ஓதி யுணர்ந்தும் பிறர்க் குரைத்துந் தாமடங்காப், பேதையிற் பேதையாரில், எனவும், "கற் றதுங்கேட் டதுந்தானே யேதுக்காகக், கடபடமென் றுருட்டுதற்கோ கல்லா லெம்மான், குற்றமறக் கைகாட்டுங் குணத்தைக்கண்டு, குணங் குறியற் றின்பநிட்டை கூட வன்றோ, எனவும், "கற்றதனு லாய பயனென்கொல் வாலறிவ, னற்றாடொழா அ ரெனின்" எனவும்,வரும் மேலோர் திருவாக்குக்களை யுய்த்துணர்தல் வேண்டும்.

**கல்லாமையின் இழிவு—:** கல்லாதவர் முகம் சுடுகாட்டை யொக்கு மெனவும்; கல்லாதவர் உருவம் மரம்போலுமெனவும், கல் லாதவர் கண்கள் முகத்திலிரண்டு புண்களே போலுமெனவும், கற் றாரவையிற் கல்லாதார் போயிருத்தல் நாயிருப்பது போலு மென வும், அவர் அங்கே யேதேனும் பேசுதல் நாய் குலைப்பது போலு மெனவும், கல்லாதாருடம்பு அவர்க்குப் பாழேயாகும் எனவும் அறி ஞர் கூறுவர். இதனை

"கற்றி லாய்கலை கற்றுணர் ரார்முகம்
உற்று நோக்கின் மயானத்தை யொக்குமால்
பெற்று ளார்பெறும் பேறுதங் காதலர்
சொற்ற கல்வியிற் றாயரென் றோதலே"

"கல்லாது நீண்ட வொருவ னுலகத்து
நல்லறி வாள ரிடைப் புக்கு—மெல்ல
விருப்பினு நாயிருந் தற்றே யிரா அ
துரைப்பினு நாய்குரைத் தற்று"

"கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கு
மவையல்ல நல்ல மரங்கள்—சவைநடுவே
நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய
மாட்டா தவனன் மரம்"

"தனக்குப் பாழ், கற்றறிவில்லா வுடம்பு" என்பவற்றாலறிக.

அன்றியும்

"எல்லா விடத்து முளனெங்க டம்மிறை
கல்லா தவர்கள் கலப்பறி யாரே"

"எல்லா வுயிர்க்கு மிறைவனே யாயினும்
கல்லாதார் நெஞ்சத்துக் காணவொண் ணாதே"

"கல்லா மனிதர் கயவ ருலகினிற்
பொல்லா வினைத்துயர் போகஞ்செய் வாரே"

"கல்லாத மூடரைக் காணவு மாகாது
கல்லாத மூடர்சொற் கேட்கக் கடனன்று
கல்லாத மூடர்க்குக் கல்லாதார் நல்லராம்
கல்லாத மூடர் கருத்தறி யாரே"

"கல்லார் நெஞ்சி னில்லா னீசன்
சொல்லா தாரோ டல்லோம் யாமே"

என்பவற்றால் இறைவனை யறிந்து வழிபட்டுய்யுந்தன்மை கல்லாதவர்கட்கில்லை யென்பதும் பெற்றாம்.

கற்றவர் பாலிறைவனருள்:— பஞ்சேந்திரியங்களா லறியப்படும் பொருள்களைப்பற்றிய சவிகற்ப வுணர்ச்சிக்குங்கூடக் கல்வி வேண்டப் படுவதாயின் எங்கும் நிறைந்தும் யாவர்க்கும் தோன்றாது எள்ளினுள் ளெண்ணெய் போன்று நிற்கும் இறைவனைப்பற்றியறிய வேண்டின் கலைஞானம் இன்றியமையாதென்பது கூறாமலே யமையும். மாயா வலையிற் சிக்கியுழன்று எண்ணிலாப் பிறவிகளை யெடுத்தெடுத் துழலும் ஆன்மா இறைவனையறிந்து பிறவிப் பெருங்கடனீந்தி அழியாப் பேறு பெற்றுய்தற்கு முக்கியதுணையாயுதவுவது வித்தையே யாம். "உவமையிலாக் கலைஞானம்" எனச்சிறப்பித்தோதும் ஸ்ரீ சேக்கிழார் பெருமான் றிருவாக்கும் ஈண்டுச் சிந்திக்கற்பாலதாம். கற்றவர் பக்கல் இறைவனருட் பெருக்கம் தெற்றென விளங்குதலைப்பற்றி நம் பெரியார் கூறியுள்ள அருமைத் திருவாக்குகளிற் சிலவற்றை யீண்டுத்தருதும்.

"கற்றல் கேட்டலுடையார் பெரியார் கழல்கையாற் றொழுதேத்தப்
பெற்றமூர்ந்த பிரமாபுரமேவிய பெம்மானிவனன்றே"

"பின்னுவார் சடையான் றன்னைப் பிதற்றிலாப் பேதை மாக்கள்
துன்னுவார் நரகந்தன்னுட் டொல்வினை தீரவேண்டின்
மன்னுவான் மறைகளோதி மனத்தினுள் விளக்கொன்றேத்தி
யுன்னுவா ருள்ளத்துள்ளா னொற்றியூ ருடையகோவே"

"கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக் கரையிலாக் கருணைமாகடலை
மற்றவ ரறியா மாணிக்க மலையை மதிப்பவர் மனமணி விளக்கைச்

"செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனைத் திருவிழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டுகண் டுள்ளங் குளிரவென் கண்குளிர்ந் தனவே"

எனப்பலவாம்,

கல்வியாற்பெறும் இன்பம்:—உலகத்திற் றோன்றிய ஆன்மாக்க ளெல்லாம் இன்பத்தைவிரும்பும் துக்கநிவிர்த்தியையும் இன்பப்பேற் றையும் விரும்பாத வுயிர்கள் கிடையா. ஆகார நித்திரையாதியவற் றால்வரும் இன்பம் எல்லாவுயிர்கட்குமுண்டு. புருஷார்த்தங்களின் மூன்றாவதாகவைத்துச் சிறப்பித்தோதப்படும் இன்பம் ஒரேகாலத் தில் ஐம்புலன்களாலும் அனுபவிக்கப்படும். ஏனையின்பங்கள் ஓரோர மையத்து ஓரோர்புலன்களா னுகரப்படும். இதனை,

"மெய் வாய்கண் மூக்குச் செவியெனு நாமங்கண் மேவப் பெற்ற
ஐவாயி னானு மருந்தினரோ" எனவும்,

"கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைப்புலனு
மொண்டொடி கண்ணே யுள" எனவும்,

வருபவற்றானும் அநுபவத்தாலும் யாவருமறிவர். இவ்வின்பங் களெல்லாம் பக்ஷிகள் மிருகங்கள் மனிதர்கள் முதலிய சகலவுயிர்களும் தினந்தினம் இயல்பாக அடைகின்றன. இங்ஙனம் அடையப்படுகி ன்ற இன்பஞ் சிற்றின்பமேயாகும். இதனைக்கொண்டவர்களைப்பற்றிக் கூறுங்கால்,

"கொலையஞ்சார் பொய்ந்நாணார் மானமு மோம்பார்
களவொன்றோ வேனையவும் செய்வார்—பழியோடு
பாவமிஃ தென்னார் பிறிதுமற் றென்செய்யார்
காமங் கதுவப்பட் டார்"

"கள்ளுண்டல் காம மென்ப கருத்தறை போக்குச் செய்வ
எள்ளுண்ட காமம்போல வெண்ணினிற் காணிற் கேட்கிற்
றள்ளுண்ட விடத்தி னஞ்சந் தலைக்கொண்டா லென்ன வாங்கே
யுள்ளுண்ட வுணர்வுபோக்கா துண்டபோ தழிக்குங் கள்ளுண்"

என இழிவுபடுத்துக்கூறுவர் பெரியோர். ஆன்றோராற் பெரி தும் பழித்துக்கூறப்பட்டு இம்மை மறுமை யிரண்டிடத்தும் துன்பமே தந்தும் இன்பம்போல் மயக்கும் இச் சிற்றின்பத்தைப்போலாது எரி டத்தும் இன்பமேதந்து ஆன்றோராற் புகழப்படும் மற்றின்பமொன்

றுண்டு. அதுதான் கல்வியின்ப மெனப்படுவது. சிற்றின்பம் தொடங்குங்கா லின்பம்போன்று பின்னர்ப் பெருந்துன்பத்தையே தரும். கல்வியின்பமோ தொடங்குகால் துன்பமாகத்தோன்றி பின்னர்ப்பெரிதும் இன்பந்தந்துநிற்கும்:—

"முற்பயக்குஞ் சின்னீர வின்பத்தின் முற்றிழாய்
பிற்பயக்கும் பிழை பெரிது"

"தொடங்குங்காற் றுன்பமா யின்பம் பயக்கும்
மடங்கொன் றறிவகற்றுங் கல்வி" என்பதாலறிக.

சிற்றின்பம் ஞானத்தைக் கெடுக்கும். கல்வியின்பம் ஞானத்தை வளர்க்கும். சிற்றின்பங் கவலையை ஆக்கும். கல்வியின்பம் கவலையை நீக்கும். சிற்றின்பம் அறம்பொருள்வீடு பேற்றுக்குத்தடையாம். கல்வியின்பம் அவைகளை யடைதற்குத் துணையாம். சிற்றின்பத்தை யடைந்தவர் தாமடைந்தவாறே பிறரடையச்சகியார். கல்வியின்பத்தை யடைந்தவர் தாமடைந்தவாறே யுலகமெல்லா மெய்தவிரும்புவர். சிற்றின்பானுபவ நலத்திற் சிறந்ததான தேவருலகவாழ்க்கையைக் கல்வியின்பமடைந்தவர் கொள்ளக்கருதார். இவைகளை:—

"அறம்பொரு ளின்பமும் வீடும் பயக்கும்"

"தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந்தார்"

"தவலருந் தொல்கேள்வித் தன்மை யுடையார்
இகலிலர் எஃகுடையார் தம்முட் குழீஇ
நகலி னினிதாயிற் காண்பா மகல்வானத்
தும்ப ருறைவார் பதி" என்பனவற்றுற் காண்டலமையும்.

இன்னும் கல்வியாற்பெறும் இன்பப்பேற்றைப்பற்றி,

"ஆயுந் தொறுந்தொறு மின்பந் தருங்கல்வி யாங்கறிவு
மாயுந் தொறுந்தொறு மின்பந் தரும்வள்ளல் வார்கழல்கள்
தேயுந் தொறுந்தொறு மின்பந் தருஞ்சந்து தேங்குழனிற்
றேயுந் தொறுந்தொறு நேராத வின்பஞ் சுரந்திடுமே"

"வறுமையான் மடமை தன்னுன் வருந்திநெஞ் சழியுங் காலை
யுறுதிசெய் துணையாங் கற்ற வுணர்வினை வளர்க்கு மென்றும்

இறுதியில் லாத வின்ப மீட்டுமோ தலினாற் கற்று
மறுவறு மொழுக்க முள்ளார் வாய்மொழி போற்றல்வேண்டும்''

என்பவற்றால் நன்குதெளிதல்சாலும்,

இங்ஙனம் இம்மையிற் பெறும் இன்பத்தோ டமையாது மறுமைக்கண்ணும் இன்பமுறச்செய்யவல்லது கல்வியேயாமென்பதனை,

“கற்பக் கழிமட மஃகு மடமஃகப்
புற்கந்தீர்ந் திவ்வுலகிற் கோளுணரும்—கோளுணர்ந்தாற்
றத்துவ மாய நெறிபடரு மந்நெறி
யிப்பா லுலகத் திசைநிறீஇ யப்பா
லுயர்ந்த வுலகம்புகும்'' என்பதுதெளிவிக்கும்.

இங்ஙனம், இம்மை மறுமை யீரிடத்தும் இன்பந்தருதல் பற்றியே கல்வியைக் கற்புடைப்பெண்டிராகவும் கவிபாடுதலை மக்கட்பேறாகவும் பிறவும் ஏற்றவாறு புனைந்துகூறி வைத்தார்போலும்.

“கல்வியே கற்புடைப் பெண்டிரப் பெண்டிர்க்குச்
செல்வப் புதல்வனே யீர்ங்கவியாச்—சொல்வளம்
மல்லல் வெறுக்கையா மாணவை மண்ணுறுத்துஞ்
செல்வமு முண்டு சிலர்க்கு'' என்பது அது.

கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினுங் கற்கை நன்றே.

# (12) அறிவுடைமை.

அறிவின் தன்மை:— மெய் வாய் கண் மூக்குச் செவிகளை வாயில்களாகக்கொண்டு நிகழும் ஸ்பரிச ரச ரூப கந்த சப்தங்களில் வரையறை கடந்து மயங்கிச் செல்லப்புகும் மனத்தை அதன் எண்ணப்படி விடாது தடுத்து நன்மையின்கண் நாடிச் செல்லச் செய்யும் இயல்பினது. இவ்வியல் பிற்றுப அறிவு இல்வழி மனமானது நன்மை தீமைகளைப் பகுத்துணரும் ஆற்றலின்றி தான் எண்ணியவாறே யாண்டுஞ் சென்று தோயாதவற்றைத் தோய்ந்தும், உண்ணுதவற்றை யுண்டும், காணுதவற்றைக் கண்டும், முகராதவற்றை முகர்ந்தும், கேளாதவற்றைக் கேட்டும் பழியும் பாவமுங்கொண்டு அல்லற்பட்டுக் கெடுவதாகும்; மெய்வாய் முதலியன தத்தமக்கு வரும் நன்மை தீமைகளை யறியாமல் பற்பல பொருள்களையும் விரும்பிச் செல்லுங்கால் இவ் விருப்பம் பொருந்தாதது; இது பொருந்துவது என்று அறிவித்துப் பொருந்தாதவற்றை நீக்கிப் பொருந்துமவற்றிற் செலுத்துவது அறிவேயாகும். இதனை—:

"சென்ற விடத்தாற் செலவிடா தீதொரீஇ
நன்றின்பா லுய்ப்ப தறிவு"

என்ற, தேவர் திருவாக்காற்றெளிந்து கோடலமையும். அன்றியும்,

பன்னுளாக அரிதின் முயன்று தான் தெளிந்ததொரு பொருளைப் பிறர் யாரும் எளிதில் உணர்ந்து கொள்ளுமாறு விளக்கமுறச் சொல்லிப்பதும், அங்ஙனமே பிறர் கூறும் அரும்பொருள்களை எளிதில் அறிந்து கொள்ளச் செய்விப்பதும், இவ்வறிவின் தன்மைகளாம்; அறிவு நிரம்பாதவர் தாமறிந்ததொரு நுண்பொருளைப் பிறர்க்கு விளக்கும் வலிமையைப் பெறுர். பிறர் கூறும் நுண் பொருள்களை ஆராய்ந்தறியவும், ஆற்றல்பெறுர். ஆகவே தாம் பிறர்க்குப் பயன் படாமை யோடு தாம் பிறராலும் பயனுறுராவர். இதனுற்றுன்

"எண் பொருள வாகச் செலச் சொல்லித் தான்பிறர்வாய்
நுண் பொருள் காண்ப தறிவு" என்றுர் பொய்யில் புலவர்.

அல்லதூஉம், யார் யார் என்ன என்ன கூறினும் அக் கூற்றுக் களின் பொய்ம்மையை நீக்கி உண்மையை யுணர்த்துவதும் அறிவே

யாம். அறிவில்வழிப் பிறர்கூறும் பொய்ப் பொருள்களையும் மெய்ப் பொருள்களாகக் கொண்டு பற்பல பாவத்துறைகளிற்புக்கு இடர்ப் பாடெய்த நேரும். அறிவுள்வழி பொய்யைக்கடிந்து மெய்யையறிந்து அதன்வழிச் சென்று நன்மை யெய்தலமையும். இக்கருத்தை:—

"எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப் பொருள் காண்ப தறிவு" என்னும் திருவாக்கால்தெளி தல் சாலும்.

அறிவின்பெருமை:— நமக்குப் பெருமை தருபவைகளி லெல்லாம் தலைமைபெற்றது அறிவேயாகும். உலகமெல்லாம் தம்மை வணங்கும்படி சிங்காசனத்திருந்து செங்கோல் செலுத்தும் முடியுடை வேந்தரேயாயினும் அறிஞரை உபசரித்தும் வணங்கியும் அவர்க்கு வேண்டுவன புரிந்தும் அவர் கூறியவாறே நடப்பர். "கோனோக்கிவாழுங் குடியெல்லாம்" என்ற வண்ணம் உலகமெல்லாம் தம் ஆணையை எதிர் பார்த்திருக்கும்படி உன்னத நிலையிலிருக்கும் பேரரசரும் அறிஞருரையை உச்சிமேற் கொண்டு போற்றுவராயின் இதன் பெருமையை அளவிடல் எளிதாமோ? "அறிவுடை யொருவனை யரசனும் விரும்பும்" என்பனவாதியமுதியார் கூற்றுக்கள் பலவுள்ளன. அறிவில்லா மக்களைக் கொச்சை மக்களென்றும், அம்மக்களைப் பெறுதலினும் பிள்ளைப் பேறின்றி யிருத்தலே நலமென்றும் பொருள் படுமாறு "அச்சமுள்ளடக்கி யறிவகத்தில்லாக், கொச்சைமக்களைப் பெறுதலினக்குடி, எச்சமற் றேமாந்திருத்தல் நன்றே" எனப்பெரியார் கூறுவர். எல்லாப் பேறுகளினும் அறிவறிந்த மக்கட் பேறே மிகச்சிறந்தாமென்பதனை நன்குணர்ந்தே

"பெறு மவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற" எனக்கூறி யருளினர் தேவர். இங்கே "யாமறிவதில்லை" எனத் தம்மேல் வைத்துத் தாமே கரிகூறிப்போதலை நோக்குங்கால் தேவர்க்கு இதனைப்பற்றி யுளதாய மனவுறுதிப் பாடு நன்கு புலப்படுவதாகும்.

அறிவின்வகை:—(1) இயற்கையறிவு (2) செயற்கையறிவு என இரண்டாகும்.

(1) இயற்கை யறிவானது ஐயறிவு பகுத்தறிவென இரண்டாம்.
(2) செயற்கையறிவானது நூலறிவு தத்துவஅறிவு என இரண்டாம்.

ஐயறிவு:—மெய்வாய் கண் மூக்குச் செவி என்னும் பஞ்சேந்திரியங்களின் வழியாக உணரத்தக்க ஸ்பரிச ரச ரூப கந்த சப்தம் என்பவைகளாம்.

பகுத்தறிவு:— நெருப்புச் சுடும், வெயில் காயும், நீர் குளிரும் அமிழ்த்தும், பாம்பு விஷமுடையது, புலி கொல்லும் என்பனவாதிய விஷயங்களைப்பகுத்துணர்ந்து கோடலாம்: இவ்வியற்கையறிவு இறைவனாற் றரப்படுவது. ஆறறிவுடைய மக்கட்கேயன்றி மிருகம் பக்ஷி முதலிய பிறவுயிர்கட்கும் இவ்வறிவுண்டு இயற்கையறிவில் ஓாறிவேனும் இல்லாத உயிர்கள் கிடையா: உயிர்ப்பொருள்கள் எவையோ அவையெல்லாம் இயற்கையறிவில் ஒன்றையாவது பெற்றேயிருக்கும். ஆகவே இயற்கையறிவு எல்லாவுயிர்கட்கும் பொதுவாக அமைந்திருத்தல் தெளியத்தகும்.

நூலறிவு:—இளமைதொட்டு ஆசிரியனையடுத்துக் கல்விபயில்வதால்வருவது. இது நாளுக்குநாள் கல்விப்பயிற்சியின் ஏற்றத்தாழ்ச்சிக்கேற்ப வளர்ந்துவரும். புண்ணியமிது, பாவமிது, மோக்ஷநிலையித்தகையது, நரகநிலை யித்தகையது, இதை இதைச்செய்ய வேண்டும், இதையிதை விலக்கவேண்டும், இன்னவரிடத்து இன்னவாறு நடந்து கொள்ளவேண்டும், இன்னது செய்யிற் புகழுண்டாம், இன்னது செய்யிற் பழியுண்டாம். என்பனவாதியவற்றை யுணர்த்தி மனத்தைப் பண்படுத்துவதும், அந்நிலைக்கண்நிறுத்துவதும் இந்தநூலறிவேயாம்.

“தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு”

என்பவாகலின் நூற்பயிற்சியானே அறிவு வளர்ச்சியுறுமென்பதும், இவ்வறிவு பல்வகையுயிர்த்தொகுதிகளுள்ளும் மக்கட்கே யுரியதாகுமென்பதும் பெறப்படும். அன்றியும்,

“இருவிழிகண் வாண்முகத்தி லிருந்தாலும் வானிரவியெழுந்தாலன்றிக்
கருதுநிலப் பல்பொருளுங் காண்டலரி தாமுலகிற் கண்போல் யாரும்
பெருகியசெல் வமுமறிவும் பெற்றாலு நூற்கேள்வி பெறுவார்க்கன்றித்
திருவளர்புண் ணியபாவ மிம்மைமறு மையும்வீடுந் தெரியா வன்றே”

என ஆன்றோர் கூறுமாற்றால் இயற்கை யறிவுடன் நூலறிவுஞ் சேர்ந்தால் மட்டுமே ஏற்றபலனுண்டாமென்பதும் புலனாம்.

தத்துவஅறிவு:—இது நூல்களாலறிந்து கொண்டவற்றை அறிந்த மட்டில்விடாது நாடோறும் பயின்று அநுபவத்திற்கொண்டு வருதலானும், சற்குருவையடைந்து வழிபாடுபுரிந்து பெற்றுக்கொள்ளும் உபதேசவகையானும், குரு உபதேசித்தவாறு ஒழுகுவதாகிய சரியை கிரியை யோகங்களானும் வருவதாம். இவ்வறிவுதான் பிறவியைநீக்கி மோக்ஷத்தைத்தரத்தக்கது. இதனை:—

"பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னுஞ்
செம்பொருள் காண்ப தறிவு" என்பதாலறியத்தகும்.

அறிவின்வகை விரிகளைப்பற்றி யிதுகாறுஞ் சிறிதுகூறினும். இனி அறிவின் பொதுநிலையைப்பற்றிச் சிறிதுகூறி முடிப்பாம்.

அறிவின்பயன்:—எதிர்காலத்தில் வரத்தக்க இன்பதுன்பங்களை முன்னேயுணர்த்தித் துன்பம் வராமற்காப்பதும், இன்பவரவை விரைந்துபெறவும் செய்யத்தக்க பேராற்றல் இவ்வறிவிற்கேயுளதாம். அன்றியும் பிறவுயிர்கட்குவரும் சுகதுக்கங்களையெல்லாம் தமக்கு வருவனவாகக்கருதி பிறவுயிர்கட்கு இடுக்கண் களையவும், இன்பம் எய்துவிக்கவும் முன்னிற்கும் தகைமையையுடையதும் இவ்வறிவேயாகும். ஆகவே தனக்கும் பிறர்க்கும் துன்பமெய்தாது தடுக்கவும் இன்பம் எய்தப் புரியவும் யாவர்க்கும் இன்றியமையாது வேண்டுவதும் இவ்வறிவேயாகும். இப்பெருமைகளை யுணர்ந்தன்றோ,

"எதிரதாக் காக்கு மறிவினார்க் கில்லை
அதிர வருவதோர் நோய்" எனவும்,

"அறிவினா னாகுவ துண்டோ பிறிதினோய்
தன்னோய்போற் போற்றாக் கடை" எனவும்,

பொதுமறை முழங்குவதாயிற்று. "அறிவையறிவது பொருளென அருளிய பெருமானே" எனவும், "அறிவறிந்த மக்கட்பேறு" எனவும் பெரியோர் கூறுவதுங் கவனிக்கற்பாற்று. அறிவுடைமையாற்றான் எல்லாப்பயனும் எய்தத்தகும்.

அறிவின்மைக்கேடு:—எல்லாவித வறுமைகளினும் பெரியதோர் வறுமை அறிவின்மையேயாம். எந்தப்பொருள்க ளில்லாவிடினும்

அறிவுமாத்திரம் இருப்பின் ஏனையபொருள்களின்மையால் மனந்தளராது. உலகத்தாரும் அறிவுடையரைக்கண்டுழிப் பொருளிலரெனக் கருதி அவமதியார். எத்தனை செல்வமிருப்பினும் அறிவுச்செல்வம் இல்லையேல் ஏனைச்செல்வங்களா லடையும் பயனையடைய முடியாது. உலகத்தாரும் அறிவிலாச்செல்வரை யொருபொருட்படுத்திமதியார். எல்லாவுறுப்புக்களினும் சிறந்துள்ள கண்முதலிய பொறிகளில்லாவிடினும் பழியில்லை. அறிவில்லையேல் பெரும்பழியேயாம். மாரனைப்பழிக்கும் பேரழகெய்தினும் அறிவிலாராயின் அவரழகு மண்பாவையின் அழகோ டொக்குமல்லது வேறில்லை.

"அறிவின்மை யின்மையு ளின்மை பிறிதின்மை
யின்மையா வையா துலகு"

"அறிவுடையா ரெல்லா முடைய ரறிவிலார்
என்னுடைய ரேனு மிலர்"

"நுண்மா ணுழைபுல மில்லா னெழினல
மண்மாண் புனைபாவை யற்று"

என்பனவாதிய பிரபலப்பிரமாணங்கள் பலவுள்ளன.

இருவகை யறிவின் ஒற்றுமை:—இயற்கையறிவே சிறந்ததென்பரொருசாரார். செயற்கையறிவே சிறந்ததென்பரொருசாரார். இங்ஙனம் ஒன்றைவிட் டொன்றைச் சிறந்ததாகக் கூறுதல் நிலைபெறாது. மனிதராய்ப்பிறந்தார் எவர்க்கும் இருவகையறிவும் இன்றியமையாச் சிறப்பினவே யென்பதொருதலை. இயற்கை யறிவு உடல்போலவதாயின் செயற்கையறிவு உயிர்போலும்: இயற்கையறிவு கண்ணொளி போல்வதேற் செயற்கையறிவு கதிரொளிபோலும். உயிர்ச்சார்பின் றேல் உடல்பிணமாம். கதிரொளி சாராதேல் கண்ணொளி பயன்படாது. உடலைச்சார்ந்தே உயிர் உலகிலுலவவேண்டும். கண்ணொளியைச்சார்ந்தே கதிரொளி பயன்படும். குருட்டுக்கண்ணருக்குக் கதிரொளி யென்னபயன்செய்யும்? இவ்வாறே இயற்கையறிவும் செயற்கையறிவும் ஒன்றோடொன்றுகலந்து நின்றபோதுதான் பெரும்பயனுளதாவதல்லது வேறில்லை இயற்கையறிவில்லாதவர்கள் எத்தனை நூல்களைக்கற்பினும் பெரும்பயனெய்தார், நூலறிவில்லாதவர் எத்தனை

இயற்கையறிவைப் பெற்றிருப்பினும் உலகம் ஒப்பாது. ஆகவே இந்த இருவகையறிவும் இன்றியமையாதன வென்பதே தேற்றம்.

"நுண்ணிய நூல்பல கற்பினு மற்றுந்தன்
உண்மை யறிவே மிகும்"

என்று, இயற்கையறிவின் வலிமையை வற்புறுத்திக்கூறிய திருவள்ளுவதேவர் தாமே,

"கல்லாதா னொட்பங் கழியநன் றாயினும்
கொள்ளா ரறிவுடை யார்"

என்று செயற்கையறிவின் அவசியத்தையும் கூறியருளுவாராயினர். இவற்றால் இவ்விருவகையறிவும் எல்லாராலும் வேண்டப்படுவனவே யென்பது தேவர்க்குங் கருத்தாதல் பசுமரத்தாணிபோல் நாட்டப்படும். இங்ஙனங்கொள்ளாது இயற்கையறிவே பெரிது செயற்கையறிவே பெரிதெனத் தத்தமக் கேற்பக் கூறிக்கலாம் விளைத்தல் முறையன்றாதலும் தெளியத்தகும்.

முழுமுதற் கடவுட்கு அறிவே உருவமென்று பெரியார் கூறுப ஆகலின் அறிவைப் பெறத்தக்க செயல்களை யாவருங் கைக்கொள்ள வேண்டு மென்பதும், யாவரும் தத்தம் அறிவினும் தத்தம் மக்களறிவுடைமை பெரிதாதலைக் காண்புழிப்பெரு மகிழ்ச்சி கொள்வரென்பதும் கவனித்தற்குரியன.

"தம்மிற்றம் மக்க ளறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாந் தலை"

"பெறுமவற் றுள்யா மறிவ தில்லை யறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற"

# (13) உபந்யாஸம்.

---

தற்காலம் தமிழ்நாட்டின் பலபாகங்களில் சபைகளும் உபந்யாஸங்களும் அடுத்தடுத்து நிகழ்கின்றன. தமிழ் மக்களிடம் உபந்யாச விருப்பமும், சிரவண விருப்பமும் வளர்கின்றன. இக்காலத்தை உபந்யாஸகாலம் என்னினும் இழுக்காது, இப்பொழுது ஆரம்பகாலமாதலின் உபந்யசிப்போரும் சிரவணஞ் செய்வோரும் கவனிக்க வேண்டிய விஷயங்கள் பலவுள. உபந்யஸிப்போர் கவனிக்கவேண்டியவற்றைமட்டுமே இவண் கூறப்புகுந்தனம்.

உபந்யஸிப்போர் தாம் எடுத்துக்கொண்ட விஷயத்தைப்பற்றி நீளநினைந்து ஆன்றோர் கருத்துக்களைத் தழுவிப் பாகுபாடுசெய்து தம் மனத்துள்ளே யமைத்துக்கொண்டு பேசப் புகுதல்வேண்டும். "காலமும் இடமும் 'வாலிதினோக்கிச்' சிறந்துழி யிருந்துதன் றெய்வம் வாழ்த்தி, உரைக்கப் படும்பொருள் உள்ளத் தமைத்து, விரையான் வெகுளான் விரும்பி முகமலர்ந்து, கொள்வோன் கொள்வகை அறிந்து அவனுங்கொள" என்று கூறும் போதகாசிரியரிலக்கணத்தை மேற்கொண்டு எடுத்த விஷயத்தை விட்டுப் புறஞ்செல்லாது பேசவேண்டும். எடுத்த விஷயத்தை விட்டு வேறொன்றைப் பற்றுதல் "மற்றொன்று விரித்த" லென்னும் குற்றமாமென்பதைத் தெரிந்து கொள்ளல் வேண்டும்.

பருந்தும் நிழலும்; மணியும் ஒளியும்போன்ற சொல்லும்பொருளும் தாம்கொண்ட கருத்தை விளக்குவனவாக மரபு பிறழாது பேசவேண்டும். "எப்பொருளெச்சொலி னெவ்வா றுயர்ந்தோர், செப்பின ரப்படிச் செப்புதன் மரபே" என்பது நினைத்தற்குரியது. கருத்தின் றன்மையைப் பல்வகைச் சொற்களாற் கூறலாமாயினும் அவற்றுள் இதுவே சிறந்ததென்று ஆன்றோர் கொள்ளுமாறு குறித்த பொருளை அதன் பிரதிசாயலாகப் படம்பிடித்துக் காட்டுவது போலச் சிறிதும் வேறுபடாவண்ணம் ஏற்றசொற்களாற் கூறவேண்டும். சொற்கள் செஞ்சொல், ஆக்கச்சொல், குறிப்புச்சொல் என மூவகைப்படும்.

செஞ்சொல்:—இடுகுறி காரண வகைகளால் நேராகவே குறித்த பொருளைத் தருவது. ஆக்கச்சொல்:—அச்சொல்லின் சம்பந்தம் பெற்று இலக்கணையாக ஆகுபெயர் அன்மொழித்தொகை முதலியவற்றால் குறித்த பொருளைத்தருவது. குறிப்புச்சொல்:— இவ்விரண்டுமன்றி வேறாகத் தோன்றிச் சொல்லின் சம்பந்தம் பற்றாது மாறு

படு புகழ்நிலை புகழாப் புகழ்ச்சி முதலியவாற்றால் யாதானுமோர் குறிப்புப் பற்றிக் கருதிய பொருளைத்தருவது. கல்வி கேள்விகளால் நூல் வழக்கும் உலகவழக்கும் தெரிந்து பாஷா ஞானமுதிர்ச்சியுடையார்க்கே இச்சொற்களை யுபயோகிக்கும் திறமையுண்டாம். திசைச் சொல், இரட்டைக்கிளவி, அடுக்குத்தொடர் முதலியவற்றையும் இடமறிந்து அமைத்துப் பேசவேண்டும். குறில் நெடில் வன்றொடர் மென்றொடர் இடைத்தொடர் ஆகியவற்றைச் சமயோஜிதமாகத் தொடுத்து, எதுகை மோனை மடக்குமுதலிய செய்யுளிலக்கணங்களை யிடையிடையே செறித்து இன்றியமையாத சந்திகளைவிடாது மலர்ந்த முகத்தோடு அவையோர் செவியில் அமிர்ததாரை புக்காற்போன்ற இனிய குரலுடன் பேசவேண்டும்.

சொற்குற்றம், பொருட்குற்றம், சந்திவழு, முடிபுவழு முதலிய பிழைகளை நீக்கவேண்டும். சொல்வழுவாவது ஒருமொழியின் இயற்கையமைப்பை யறியாது இழிசனர் வழக்கைக் கொண்டு கூறல். பொருள் வழுவாவது:—ஆக்கியோர் கருத்துக்கும் ஆன்றோர் கொள்கைக்கு மாறுபடப் பிறிது பொருள் கூறல். சந்திவழுவாவது ஒற்று மிகவேண்டிய இடத்து மிகாமையும் இயல்பாக வேண்டிய இடத்து ஒற்றுமிகுதலு முதலியவாக்கூறுதல். முடிபு வழுவாவது எழுவாய் பயனிலைப் பிறழ்ச்சி. இத்தகைய குற்றங்கள்படப் பேசினால் பேசும் போதே அவைக்களத்தறிஞர் அருவருப்புறுவர். அதனைக்கண்டு ஏனையரு மதியார். இத்தகையை குற்றங்களுடன் பேசப்படும் உபந்யாஸமானது பேசுவோர்க்குப் பழிப்பும் அவையினர்க்கு வெறுப்பும் விளைப்பதாகும். கேட்போருள்ளம் வேட்குமாறு சொற்சுவையும் பொருட்சுவையும் தொடைநயமும் ஓசையின்பமும் அமையப்பேசவல்லவனே உபந்யாஸ வல்லனாவான். அவன் புரியும் உபந்யாஸமே உலகைத் தன்வசப்படுத்தும். இதனாற்றான்.

"கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாஞ் சொல்" எனவும்.

விரைந்து தொழில் கேட்கு ஞால நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்"

எனவும், கூறினர் பொய்யில் புலவர்.

"இடைதெரிந்து நன்குணர்ந்து சொல்லுக சொல்லின்
நடையறிந்த நன்மை யவர்"

என்னுந் தேவர்வாக்கு ஈண்டுக்கவனித்தற்குரியது. இதன்பொருள். சொல்லின் நடைதெரிந்த நன்மையவர்—தாங்கூறுஞ்சொற்கள்பொருள் பயக்குமுறைமையையுணர்ந்த நல்லோர். இடைதெரிந்து அவையின்செவ்வியும் நடையின் செவ்வியும் அறிந்து, நன்குணர்ந்துசொல்லுக—தாம் சொல்லுதலானும் அவையார் கேட்டலானும் விளையும் நன்மையினை யுணர்ந்துசொல்லவேண்டும் என்பதாம். அவையின் செவ்வியறிதலாவது—இவ்வவைக்கு இதுபொழுது இது ஏற்குமென்பதைத் தெரிதல். நடையின் செவ்வியறிதலாவது—சிறியகண்ணடியில் பெரிய மலையைக் காட்டல்போல் சொற்சுருக்கத்திற் பொருட்பெருக்கம் அடங்கிவிளங்கக்கருதிய பொருள் வெளிப்படுமாறு இழுமெனவொலிக்கும் விழுமிய ஓசையோடு கேட்டார் மனம் அசைவற்றுத்தம்பித்து நிற்க "சுருங்கச் சொல்லல் விளங்கவைத்தல் நவின்றோர்க்கினிமை நன்மொழிபுணர்த்தலாதிய அழகு வாய்ப்பப் பேசுமுறை யறிதல். நன்குணர்தலாவது—அறம்பொருளின்பம் வீடு என்பவற்று ளொன்றாய் விழுப்பயன் சித்திக்கு மாற்றைக்கருதல். இவற்றை யெல்லாம் நன்குதெரிந்து கருதிய பொருள் அதுவோ இதுவோ என மயங்கவைக்கு மொழிகளையும், நின்று பயனில்லாத வெற்றுரைகளையும், விலக்கவேண்டும். அடியிற் கரும்பு தின்பதுபோன்று போகப்போக மதுரங் குறைந்து முடிவில் சுவையற்றொழிவதாகிய 'சென்று தேய்ந்திறுதல்' என்னுங் குற்றத்துட்படாது, நுனியிலிருந்து கரும்பு தின்பதுபோன்று கேட்கக் கேட்க இனிக்கும்படி உபந்யஸிக்கவேண்டும். குறித்த பொருளின் தன்மையின்னதென்று தாம்தமது சொற்களானே விளக்குதலுடன் ஆன்றோர் கொள்கையு மிதுவென்று உதாரணவாயிலாகவும் காட்டுதல் இன்றியமையாத தொன்றாம். அங்ஙனம் காட்டினாற்றான் குறித்த பொருள் பசுமரத்தாணிபோல் நிலை காட்டப் பெற்றதாகும். நெடுநேரம் பேச விரும்பி வீணாரவாரச் சொற்களைப்பெய்தல் நன்றன்று,

"பலசொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற
சிலசொல்ல றேற்றா தவர்" என்பர் தேவர்.

பேசுவோனது இயற்கையறிவும் நூலுணர்ச்சியும் அவன் பேச்சினாலே வெளிப்பட்டுவிடும். சட்டியிலுள்ளதுதான் அகப்பையில் வருமாதலால் பேசுவோர் தமது ஆற்றலினும் அதிகமாகப்பேசவேண்டுமென்று எவ்வளவுதான் முயன்றாலும் பயன்படாது. ஆகலின்

எதையும் முதலில் தாம் நன்கு ஆராய்ந்து தெளிந்துகொண்டு பேசப் புகுவதே நலமாம். சிலர் தமது இயற்கைப் போக்கைத் தாமே மதியாது பிறரைப்போற் பேசவேண்டுமென்னும் ஆசைவயப்பட்டுத் தம்மியல்பை மாற்றிப்பிறரைப்போற் பேசப்புகுகின்றனர். “கானமயிலாடக் கண்டிருந்த வான்கோழி, தானுமதுவாகப் பாவித்துத்— தானுந்தன், பொல்லாச் சிறகைவிரித் தாடினாற்போல, அவர்க்கது பரிபவத்தையே விளைப்பதாகும், ஆதலின் எவரும் தத்தம் இயற்கையமைப்பின் வழி அறிவை விருத்திசெய்து பொருள்களை ஆராய்ந்து உபந்யாஸித்தலே தக்கதாம்.

“நாநலமென்னு நலனுடைமை யந்நலம்
யாநலத் துள்ளதூஉ மன்று” என்பவாகலின் நாநலமென்கிற சொல்வன்மையானது சிலர்க்குமட்டுமே இயல்பாக அமைந்தாறும். நளபாகம் வீமபாகம் என்பது எல்லார்க்கும் வருமா? எட்டாப்பழத்துக்குக் கொட்டாவியிடுதலால் யாதுபயன்? எந்தச் செயலும் அவரவர் தந்தம் சக்தியறிந்து மேற்கொண்டால் மட்டுமே பயனுறும். இதனை யறியாது “செந்தமிழும் நாப்பழக்கம்” என்பதை நினைந்து பல்காற் பழகினால் நல்வாக்கு வந்துவிடுமென நம்பிப் பேசப் புகுவாருமுண்டு. இவர் பேச்சானது கவித்துவ சக்தி யியற்கையி லமையப் பெறுதார் காரிகை கற்றுச் சொற்சேர்க்கைதோறும் இலக்கணவிதியைப் புகுத்திப் பார்த்துப் பாடுகிற செய்யுளைப் போல்வதேயாம். இவைகளை யெல்லாம் நோக்கியன்றோ “வார்த்தை பதினாயிரத்தொருவர் என்றார் முதியோர். பேசுதற்குக் கூறிய வ்வனைத்தும் வசனநடை எழுதுதற்கும் ஏற்புடையவாகும். பேசுந் திறமையை நன்கு பெற விரும்புவோர் முயற்சி வலியாற் பெறுதலும் ஏகதேசத்திலுண்டு. அன்னவர் “அறையிலாடி அம்பலத்திலாடு” என்றவண்ணம் முதலிற் பேரவைக்கட் புகாது சிற்றவைகளிற்புக்குப் பல்காலிடைவிடாது ஊக்கத்துடன் பயிற்சிசெய்துவரிற் பெறுதலுங்கூடும். முயற்சி திருவினையாக்குமென்பதையாம் மறுக்க வரவில்லை. தொடக்கத்திலேயே பேரவைக்கட்புக்குத் தாமும் பரிபவப்பட்டுப் பிறர் காலத்தையும் வீணாக்காமை வேண்டியே உபந்யாஸ சக்தியைப்பற்றி யித்துணையும் கூறினேம்.

இதுகாறுங் கூறியவாற்றால் உபந்யாஸ சக்தியும் நூலுணர்ச்சியும் பெற்றவரே பேரவைக்கட் பேசப்புகவேண்டு மென்பதும், அன்னவரையே அவையினர் தெரிந்தெடுத்தல் வேண்டுமென்பதும், இங்ஙனங் கருதிச்செய்யா வழிப்பயன் பெறுதலருமை யென்பதும் பிறவுமாம்.

# (14) பிரசங்கமும் வியாசமும்.

சென்னை முதல் தூத்துக்குடி வரை சிலவருஷகாலமாக அநேக நகரங்களில் சபைகளும் பிரசங்கங்களும் நடைபெறுகின்றன. ஜனங்களுக்குள் முன்னில்லாத ஒருவித பரபரப்பு இவ்விஷயத்தில் தோன்றியிருக்கின்றது. இது மிகவும் நல்லகாரியமேயாகும். இதுபோலவே பத்திரிகைகட்கு வியாச மெழுதுவதற்கும் பலர் முற்படுகின்றனர். இதுவும் நன்றே. சபையில் பேசுவதற்கும் பத்திரிகையில் எழுதுவதற்கும் நம்மவர்கட்குப் பிரியஞ் சனிப்பது பிற்காலத்தார் க்ஷேமத்துக்குப் பெரிதும் துணையாகும். ஆனால் "செய்வினை திருந்தச்செய்" என்ற ஔவைப்பிராட்டியாரின் அமுதவாக்கை ஒவ்வொருவரும் எக்காரியத்திலும் மறக்கவொண்ணாது, காரியத்தில் பிரவர்த்திப்பவர் யாவராயினும் இத்திருவாக்கை நினைத்துக்கொண்டே தொடங்குவாராயின் அக்காரியத்தால் தமக்கும் பிறர்க்கும் நன்மை யுண்டாமென்பது நிச்சயம். இதனை யுணராது பொறுமையாலும், ஆசையாலும் தம்மாலாகாத காரியத்திற் பிரவர்த்தித்துச் சிலர்முட்டுப்படுகின்றனர். நாமும் சபையேறிப் பேசிவிடவேண்டும் என்று சிலர்கிளம்புகின்றனர். சபையில் எழுந்ததும் இன்னவாறு தொடங்கி யின்னவாறு முடிப்பது என்று யாதுமறியாது விழிக்கின்றார்கள். இச்சமையம் இவர்க்குத் துணைசெய்வது அவையடக்கமே. என்னை? பிரசங்கத்துக்கு நியமித்த காலம் 30 நிமிஷம் என்றால் 25 நிமிஷம் அவையடக்கங் கூறிவிட்டு எடுத்த விஷயம் பேசுதற்கு நேரம் இல்லையே என்செய்வேன் என்று சொல்லிமுடித்து விடுகின்றார். இன்னும் சிலரோ தோத்திரமாகத் தமக்குப் பாடமுள்ள கவிகளை யெல்லாங்கூறிப் பொழுது போக்குகின்றார்கள். பின்னுஞ் சிலர் தோத்திரக் கவிகளையோ சுலோகங்களையோ கூறிப் பொருள்விரிக்க ஆரம்பிக்கின்றனர். இவைகளெல்லாம் கற்கவேண்டிய நூல்களைமுறையாகக் கற்காமையால் விளைவன. வேறு சிலரோ ஆண்களும், பெண்களும் நிறைந்த சபையில் * இடக்காடக்கல் இன்னதென் றறியாது விஷயத்தாலும் சொற்களாலும் தகாதவற்றை யுரைத்து அருவருப்பை விளைத்து விடுகின்றார்கள். இவர்களெல்லாம் பண்டிதரென்ற பட்டத்தைக் கட்டிக்கொள்ள விருப்பமுள்ளவர்களேயன்றி கட்டிக்கொண்டவர்களல்லர். பண்டிதரென்று பட்டங்கட்டிக்கொண்டுவருபவருள்ளுஞ்சிலர் பிரசங்க முறையறியாராகின்றனர்.

---

* சொல்லத்தகாததை வேறு சொல்லாற் சொல்லுதல்.

"தாங்கள் எதைப்பற்றி யுபந்யசிக்கிறீர்கள்? எதை யாவது வைத்துக்கொள்வோம். ஆனாலும் ஒரு பேரைக் கூறுங்கள். நீங்கள் தான் கூறுங்களேன். இல்லை தாங்களே கூறுங்கள். நான்தான் சொன்னேனே. எதை வேண்டுமானாலும் பேசலாம். ஞானத்தைப்பற்றிப் பேசுகிறீர்களா? ஞானமா, (தலையசைத்து) இதைப்பற்றியிப்போதே யென்ன, பேசுகிறபோது பார்ப்போமே. சரி தங்கட்கு எவ்வளவு நேரம் வேண்டும்? எவ்வளவு நேரமானாலுஞ் சரி, அவர்களுக் கெவ்வளவு நேரம். அரைமணி, எனக்கும் அரைமணிதான், என்னமோ ஒருத்தருக்கற்றபடி நமக்கு மாகட்டுமே. தாங்கள்தான் முதலில் பேசவேண்டும். இல்லை அவர்கள்தான் ஆகட்டும் அல்லது நீங்களாகட்டும்." என இவ்வாறு பேசுகிற வித்துவான்களுமிருக்கின்றார்கள். எடுத்தவிஷயத்தைவிட்டு அநாவசியமான கதைகளைச் சொல்லிப் பொழுது கழித்துவிட்டு "ஐயையோ நேரமாயிற்றே" இன்னம் ஒருமணி நேரம் வேண்டும், ரெம்பப் பெரிய விஷயம், இதைப்பற்றி 3 நாள், இல்லை; 30 நாள் வேணுமானாலும் பேசலாம். எனக்கு எப்படியாவது தயவுசெய்து ஒரு மணி கொடுக்கவேண்டும். நான் ரெம்ப ஆசையோடு வெகுதூரத்திலிருந்து வந்திருக்கிறேன். நல்லவிஷயம் ஒருமணி கொடுங்கள்" என்று கெஞ்சுவா ரொருசிலர். பிரசங்கத்தை நிறுத்துங்களென்பதற் கறிகுறியாக ஜனங்கள் கைதட்டியும், வாயாற் சொல்லியும், ஆரவாரித்தால் அதனைத் தமது பிரசங்கத்தில் ஜனங்கட்குளதாகிய விருப்பம் வெளிப்படுவதாகக் கொண்டு மேலும் பொழுது கழிப்பர் சிலர். இவர்களெல்லாம் பலமுறை சபைகளிற் சென்று தக்கார் பிரசங்கங்களைக் கேட்டு தாமும் அவர்கள் போற் செய்யப்பழகி அதன் பின்னர் அவையேறல் நன்று.

உபந்யஸிப்பவர் சபையில் எழுந்து கடவுளைத் தியானித்து அவைக்கு அடங்கி தாம் எடுத்த விஷயத்தை முன்னரே தம் மனத்தில் பாகுபடுத்திவைத்து இனியதொனியுடனும் மதுரமொழியுடனும் முன்பின் முரணுமல் தக்க உதாரணங்களை அவசியமானபோதுகூறிப் பிரசங்கிக்கவேண்டும். சபையோர் அமைதி குறையுமாயின் பிரசங்கம் சபையால் விரும்பப்படவில்லை யென்று உணரவேண்டும். குறித்த காலத்துக்குள் எடுத்த விஷயத்தை முடிக்கத்தக்க நிலையில் பாகுபாடு செய்து அளவுடன் பேசவேண்டும். தாம் கூறும் எந்த விஷயமும், எந்தக்கதையும் எடுத்த விஷயத்தோடு சம்பந்தப் பட்டனவாகச்

சபைக்குத் தெளிவுறத் தெரியும்படி கூறவேண்டும். சபையோர் யாவரிடத்தும் தமது பார்வையைச் செலுத்தவேண்டும். முகமலர்ச்சியும், சமையத்துக்கேற்ப வலியுறுத்தல், இரக்கம், அநுதாபம், கோபம், அருவருப்பு, மகிழ்ச்சி முதலிய மெய்ப்பாடுகளும், தோனறுமாறு ஆங்காங்கு ஏற்ற சொற்களையே யுபயோகிக்கவேண்டும். எழுவாய் பயனிலையாதிய இலக்கணமுறை வழுவாமல் காக்கவேண்டும். இவ்வாறு பிரசங்கஞ் செய்வார்களாயின் சபையாரை வசீகரிப்பது நிச்சயமாகும். சபையைத் தன் வசப்படுத்தாத பிரசங்கத்தால் யாதொரு பயனுமுண்டாகாது. வீண்காலப்போக்காகவேமுடியும். இதனால்தான்

"விரைந்து தொழில்கேட்கு ஞால நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்" என்றார். பொய்யில்புலவர்.

இனி வியாசமெழுதுவதைப் பற்றிச் சிறிது ஆராய்வாம். பத்திரிகைகளில் வியாசம் எழுதுபவர்கள் எழுதுவதற்கு முன்னமே எடுத்த விஷயத்தைப்பற்றி நீள நினைந்து ஆன்றோர் கொள்கைக்கு மாறுபடாமலும், படிப்பவர்க்கு அறிவைத் தருவதாகவும், படிக்கும்போது மகிழ்ச்சியை விளைப்பதாகவும், பிறர் யாருக்கும் துவேஷத்தை விளைக்காததாகவும், இலக்கணப்பிழை இல்லாமல் நல்லசொற்களைப் புணர்த்தியும் எழுதவேண்டும். எதையும் நன்கு ஆராய்ந்து துணிந்து எழுதவேண்டும். பயனற்ற விஷயங்களைப் பலபடவிரித்துப் பக்கங்களை நிரப்பலாகாது. யார்க்கும் பொருள் விளங்கும்படி தெளிவான செந்தமிழ் நடையில் எழுதவேண்டும். நவீனக்கொள்கைகளை விளக்கவரினும் பிராசீன கோட்பாடுகட்கும் இவற்றுக்குமுள்ள தாரதம்மியம் இன்னவென்று மரியாதை முறை கடவாமல் "ஞபம் படவுரை" யென்ற முதுமொழியைப் பின்பற்றி எழுதவேண்டும். சிலர் தத்தம் மனம்போனவாறு என்னென்னவோ எழுதித் தமது காலத்தையும், பிறர் காலத்தையும், வீணாக்குகின்றனர்.

பிரசங்கிக்கவும் வியாசம் வரையவும், தொடங்கும் மித்திரர்கள் மேற்கூறியவற்றைச் சிந்தித்து தங்கள் மனமுயற்சியால் உலகிற்கும் தங்கட்கும் நன்மை யுண்டாக்கும்படி நிறுத்தமொழியாற் குறித்த பொருள் விளக்கிப் புகழ்பெற்று வாழ்வார்களாக.

# (15) பிரசங்கமரபு.

ஒருவர் தாம் பன்னாள் வருந்திக்கற்றுங் கேட்டும் உய்த்துணர்ந்த நுண்ணிய விஷயங்களைப் பல்லோர் நிறைந்த அவைக்களத்தின்கண் 'ஐயம்படவுரை' என்றவாறு தொடுத்து இனிது விளங்க முறைப் படுத்திக் கூறுதலே பிரசங்கமெனப்படும். இது புராணப்பிரசங்கம், விஷயப்பிரசங்கம் என இருவகைத்தாகும். பெரியபுராணம், திருவிளையாடல் ஆதியநூல்களை முற்றுமாதல், ஓரோர் பாகத்தை யாதல் படித்துப் பொருள்கூறுதலே புராணப்பிரசங்கமாம். அறம், பொருள், ஈகை, அன்பு, பதியியல், பசுவியல், பாசவியல், முதலிய யாதானு மொருவிஷயத்தைப்பற்றிப் பலதிறப்படுத்தி விரித்துக் கூறுதல் விஷயப்பிரசங்கமாம். இங்ஙனம் கூறுமிடத்து எடுத்தவிஷயத்தை வசனக் கிரமமாகத் தொடங்கி ஆங்காங்கு வேண்டிய மேற்கோள்களைக்காட்டிப் பிரசங்கித்து முடிப்பரொரு சாரார். இவ்வாறன்றி எடுத்துக் கொண்ட விஷயத்தை விரித்துக்கூறுதற்கு இடந்தரத்தக்க ஆன்றோர் திருவாக்காகிய யாதானுமொரு செய்யுளின் அடியாகவே பலபட விரித்துப் பிரசங்கிப்பர் பிறிதொருசாரார். விஷயப்பிரசங்கம் மேற்கூறிய இருவகையாலும் செய்யப்பெறுவதே யாயினும் தெள்ளிய ஆலின் சிறுபழத்தொருவிதை யினின்று பல்கிளை கிளைத்துப் பரந்துயர்ந்தடர்ந்து நால்வகைச்சேனை நராதிபர்வதிக்கச் சால நிழல்தருந் தகைமைபோல குறள் வெண்பாவாதிய ஓரோ ஒரு செய்யுளைக்கூறி அதினின்று பலபடவிரித்துரைத்தல் நன்கு கற்றோர்க்கு மட்டும் எளிதாமன்றி ஆடுகுழைதின்றாற்போன்று அங்கொன்று மிங்கொன்றுமாகக் கற்று அவ்வளவிற்றானே அவைக்களம்புக்குப் பிரசங்கிப்பேமெனப் புகும் போலிப்பிரசங்கிகட்கு எளிதன்று, அன்னார் இங்ஙனம்செய்யப் புகினும் இனிது நிறைவேறாது வதமே விளைக்கும்.

பிரசங்க சாமர்த்தியம் மிக்க சூ. சோமசுந்தர நாயகரவர்கள் "அங்கிங்கெனாதபடி" என்ற ஸ்ரீதாயுமானவர் கவியை எடுத்துக்கொண்டு 3-நாள் விடாது பிரசங்கித்தமையைப் பெங்களூர் வாசிகள் இன்றும் வியந்து கூறுகின்றனர். நாயகரவர்கள் மதுரையம்பதி முதலிய பல இடங்களில் இவ்வாறே ஒரு கவியைப் பீடிகையாகக் கொண்டு தொடங்கி ஒருநாள் முழுதும் பிரசங்கித்துள்ளார்கள். ஆறுமுகநாவலரவர்கள், சபாபதிநாவலரவர்கள், முதலியோரும் இங்ஙனமே பல இடங்களில் பிரசங்கித்துள்ளார்கள். இருபெரும் பொருட்கும் ஒரு

பெருங் குரிசிலாகி விளங்கிய ஸ்ரீமாந், பாஸ்கர சேதுபதி மஹாராஜா அவர்கள் சைவ சமயாசாரியர்களருளிய தமிழ்வேதச் செய்யுட்களி லொன்றைப் பீடிகையாகக் கொண்டு 3-மணிநேரம் 4-மணி நேரம் அமுதவருஷம் பொழிந்தாற்போற் பிரசங்கித்து வந்தார்கள். இம் மன்னர்பெருமான் சபையில் சாமக்குளம் வெங்கட்டரமண தாசர் என்னும் சுப்பிரமணிய சர்மா அவர்கள்.

“சிவாய நமவென்று சிந்தித் திருப்போர்க்
கபாய மொருநாளு மில்லை—உபாயம்
இதுவே மதியாகு மல்லாத வெல்லாம்
விதியே மதியாய் விடும்.”

என்ற செய்யுளையெடுத்துக் கொண்டு 4-மணி நேரம் பிரசங்கித்தார் கள்; இப்பிரசங்கத்தை வியந்த அம்மன்னவர் கோமான் சர்மா அவர் கட்கு வலியகலியுக அரதத்தாசாரியர் என்ற பட்டமும், பல்வகைப் பரிசு முதவினார்கள். இந்தப்பிரசங்கத்தை முழுதும் எழுதிவாங்கி தூத்துக்குடிச் சைவப்பிரகாச சபையார் ஒரு புத்தகமாக அச்சிட்டு வெளியிட்டிருக்கின்றனர். மதுரைத் தமிழ்ச்சங்கம் அக்கிராசனாதி பதியாகிய ஸ்ரீ பொ. பாண்டித்துரைசாமியவர்கள் கம்பராமாயணத்தி லொரு செய்யுளையெடுத்துப் பலமணிநேரம்பிரசங்கித்ததை நம்முடன் பலரறிவர். நாட்டுக்கோட்டை வணிகர்குல மணியாகிய மகிபாலன் பட்டி வித்துவான், ஸ்ரீ மு. கதிரேசச்செட்டியாரவர்கள் மேலைச்சிவபுரிச் சன்மார்க்க சபைக்கூட்டங்களிலும், மற்றும்பல சபைகளிலும் இவ் வாறே ஒரு கவியைத்தொடங்கிப் பன்முறை பிரசங்கித்து வருகிறார் கள். இவ்வாறே சிறந்த வித்வமணிகள் பலரும் ஒரு கவியை ஆதார மாகவைத்துக்கொண்டு நெடுநேரம் பிரசங்கித்து வருதலான் இது பிரசங்க மரபாமென்பது தெற்றெனவிளங்கும். இதுநிற்க,

பலர் கூடிய சபையகத்துப்புக்கு ஒரு விஷயத்தைப் பிரசங்கித்த லென்பது எளிதன்று. “ஆர்த்தசபை நூற்றொருவர்”

“வார்த்தை பதினா யிரத்தொருவர்” என்றவாறு சபையார் மகிழ்ந்தேற்பப் பிரசங்கிப்பவர் மிகச்சிலரேயாவர். தற்காலத்திலோ பிரசங்கிக்கும் சக்தி சிறிது மில்லாதவருங்கூட வலிந்து தாம் பிரசங் கிக்கவருகின்றனர். ஒரு சபையில் பத்துப்பேர் பிரசங்கிகளாக வரு

வராயின் அவருள் இரண்டுபேராவது பிரசங்கமுறை தெரிந்தவராக அமைதலருமை. சிலர் தாமெடுத்த விஷயத்தின் தொடக்கமுடிவு தெரியாது மடமடவென்று சம்பந்தமற்ற பலவிஷயங்களை ஒரு நிமிஷத்திற்கு 300 வார்த்தை பேசினர் 500 வார்த்தை பேசினர் என்று கூறத்தக்கவாறு கூச்சலிட்டு அவப்பொழுது போக்குகின்றனர். இவ்வித அசம்பாவிதங்களை யெல்லாம் அடியோடு களையவேண்டும். பிரசங்கிப்பார் சிந்திக்கவேண்டுவன பலவுள.

(1) தன்னளவறிதல்:—ஒரு விஷயத்தைத் தொடங்குமுன் அவ்விஷயத்தைப்பற்றி தாம் முன்னர் தெரிந்திருக்கும் அளவைக் கவனித்து இவ்விஷயத்தைப் பேச நமக்கு வலிமை யிருக்கின்றதா என்பதை யோசிக்கவேண்டும்.

(2) சபையளவறிதல்:—இக்கூட்டத்துள்ளார் நம்மினும் மிக்காரா ஒப்பாரா தாழ்ந்தாரா என்று தெரிந்துகொண்டு, மிக்காராயின் அவர்களில் வேறு சிலர் முதலிற் பிரசங்கித்தபின்னர் அன்னவர் போக்கைப் பின்பற்றி முரணாது பேசப்புகவேண்டும். ஏனையராயின் தாமே முந்துகிளத்தல் இழுக்காகாது.

(3) விஷயத்தைக்கருதல்;—தொடங்கு முன்னரே எடுத்த விஷயத்தை மனத்திலமைத்து பலதிறப் பாகுபாடு செய்து தொகை வகை விரி என்ற முறைப்படி பேசவேண்டும். விரித்துக் கூறுமிடத்துப் பருந்தின் வீழ்ச்சிபோல முடிவு நிலைதவறாது எடுத்த விஷயத்தை விட்டுப்புறம்போகாமை வேண்டும். எத்தனை பெரிய விஷயமேயாயினும் தமக்குக் குறித்த காலத்துக்குள் இனிது முடிக்குமாறு முன்னரே முறைப்படுத்திக்கொள்ளவேண்டும். 'விஷயம் பெரிது காலம் பற்றாது, என்று கூறுதல் கூடாது. கால நிர்ணயம் செய்யும் போதே விஷயத்துக்கேற்ப நிர்ணயிக்கவேண்டும்.

4) பேசுமுறை:—சபையேறியவுடன் சபைக்குப் பணிவுடைமையும் கம்பீரமும் முகத்திற்றோன்ற இனிய ஓசையுடன் தொடங்க வேண்டும். சபையோர் முகத்தைக் கவனிக்க வேண்டும். மட்டுமிஞ்சிக் கைகால் ஆட்டும் அங்க சேஷ்டையைத் தவிர்க்கவேண்டும். மிக மந்தமும் மிக அவசரமுங் கொள்ளாது சாந்தமாகவும் சபையிலுள்ளாரனைவரும் கேட்கும்படியும் விஷயநிலைக்கேற்ப இடை

யிடையே எடுத்தல் படுத்தல் நலிதலாகிய சுரபேகத்துடன் பிரசங்கிக்க வேண்டும். சபையார் கண்ணுங்கருத்தும் பிரசங்கியினிடமும் பிரசங்க விஷயத்தினிடமும் விருப்பத்துடன் பொருந்துமாறு சபையை வசீகரிப்பிக்க வேண்டும். "அவையறிந்தாராய்ந்து சொல்லுக சொல்லின் றொகையறிந்த தூய்மை யவர்" என்ற தேவர் திருவாக்கைப் போற்றி அவையையறிந்து ஆராய்ந்துகொண்டே பேசவேண்டும். தாம் கற்றவற்றையெல்லாம் காட்டிவிட வேண்டுமென்று எடுத்த பொருட்கு இயைபற்ற பலவற்றையும் விரித்துப் பொழுது போக்கல் பெரிதும் இழுக்காகவே முடியும். இங்ஙனம் அதிகமாக விரிக்கப்புகுந்தால் தொடர்ந்துகூறும் இடந்தெரியாது திகைத்துத் தடுமாற நேரும். அப்போது தான் சபையார்களுக்குள் பலவித பேச்சும் சத்தமும் அவமதிப்பும் உண்டாகும். தொடக்கத்தில் 100பேர் கூடியிருந்தால் முடிவில் நாலைந்துபேர்களே மிகப் பொறுமையுடன் இருப்பவராவர். சபையார்கள் அமைதியற்றுப் போதற்குக் காரணம் பிரசங்கியின் குற்றமேயன்றி சபையின் குற்றமன்று. சபையார்க்கு அநாங்கீகாரமான விஷயங்கள்கூட பிரசங்கியின் சொற்சாதுரியத்தால் அங்கீகாரமாகவே உறுதிப்படும். இதுபல சபைகளில் இன்றுங் கண்கூடாகக்காணலாம். வக்கீல்களின் பேச்சு வல்லபத்தில் ஈடுபட்டு நியாயாதிபதிகள் தாம் முன்கொண்ட கருத்தை மாற்றி வேறுவித தீர்மானஞ் செய்வதையும் யாவருமறிவர். இதுபற்றியன்றே "விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது, சொல்லுதல் வல்லார்ப் பெறின்" என்றார். செந்நாப் போதாரும். ஆதலால் பிரசங்கிகளாகவரும் ஒவ்வொருவரும் "நாம் இச்சபையில் பேசியதாகப் பேரிருந்தால் போதும்" என்று கருதிச் சபையேறாது தீர்க்காலோசனையுடன் தமது ஆற்றலின் அளவையறிந்தே பிரசங்கிக்க முற்படவேண்டும். பிரசங்கிகளைத் தெரிந்தெடுக்குஞ் சபையார்களும் இவைகளையெல்லாம் சிந்திக்கவேண்டும். இருவகையாரும் தக்க ஆலோசனையுடன் தமது கடமையைச் செய்வார்களாயின் சபைகட்கும் பிரசங்கிகட்கும் நலந்தரும்.

# (16) சங்கங்கள்.

——[:*:]——

நாகரீகம் வளரவளர ஊர்கடோறும் சங்கங்களும் பிரசங்கங்களும் ஏற்படுகின்றன. சிலவருஷங்களுக்குள் பலசங்கங்கள் தோன்றின. இவற்றுள் மாசக்கணக்கிலொழிந்தன சில. வருஷக்கணக்கிலழிந்தன பல. எஞ்சிநிற்பன சிற்சில. இங்ஙனம் தோன்றி மறைவதற்குக்காரணம் அவற்றை ஸ்தாபிப்பவர்கள் சுத்தமனத்துடன் முயலாமல் அழுக்காறு அவா வெகுளி முதலியவை காரணமாகத் தொடங்குதலே யன்றிவேறில்லை. சுத்தமனத்துடன் ஸ்தாபிக்கப்பெற்றவைகளே நிலைநிற்பன. அவற்றுள்ளும் முயற்சிநலத்துக்கேற்ப விளக்கமுறுகின்றன. இங்ஙனம் விளக்கமுறும்சபைகளும் அவற்றை நடத்துவோர்களின் மதிவலிமை, அறிவுண்மை, தாளாண்மை, ஒப்புரவு, துணைவலிமை முதலியவற்றால் உலகுக்குச் சிறந்த பயன் விளைப்பனவாகும்.

சங்கங்கூட்ட வேண்டுமென்று நினைப்பதும் சந்தைக்கூட்டம் போல் பலர்கூடுவதும், வரம்பின்றி மனம்போனவாறு உச்சத்தொனியுறப்பிரசங்கிப்பதும், வீண்செய்கையே யன்றிப் பிறிதில்லை. ஒரு சபையை ஏற்படுத்துமுன்னர் இச்சபை எதன்பொருட்டு ஏற்படுத்துவது? இச்சபையார் செய்யற்பாலன யாவை? செய்தற்கும், செய்வித்தற்கும் உரியவர் யாவர்? இதன் கடைப்பிடியான கோட்பாடு யாது? இது நெடுங்காலம் நடைபெறுமா? வருவாய்க்கு வழியது? என்பன வாதிய பலவற்றையும் நன்குசூழ்ந்து ஸ்திர புத்தியுடன் ஏற்படுத்தவேண்டும். இங்ஙனமின்றி வரவரப் பார்போமென்று தொடக்கத்தில் உற்சாகத்துடன் விரிவாக நடத்தினால் பின்னர் இடுக்கட்பட்டு வருந்த நேர்ந்துழி மேற்கொண்ட கருமங்களை ஒன்றன்பின் ஒன்றாகக் குறைக்கவும் ஒழிக்கவும் வேண்டிவரும். நீட்டிக்குறைத்தவுடன் பழிப்புக்கிடமாகி யழிவிற்கும் காரணமேற்படும். இங்ஙனம் முறைபிறழ்ந்து நடத்தப்பெற்றமையால் ஒழிந்துபடும் சபைகள் தாம் கெட்டமட்டில் நில்லாது பின்னர்த்தோன்றும் சபைகட்கு மன்றோ பழிப்பைத்தருவனவாகும். இந்நிலை மிகவும் பரிதாபமே!

“சங்கம், சபை, பொது, என்பன ஒரு பொருளன. ‘சபை, என்றபோதே ஒருவர்க்குச் சொந்தமன்றென்பதும் பலர்க்கும் உரிமையுடையதென்பதும் போதரும். ஆதலின் ஒரு சபைக்குத் தலைமை வகித்து அதனை நடத்தும் பொறுப்பைக்கொள்பவர் தன்னயங்கருதா

மலும், தற்புகழ் பேசாமலும், பொதுநலப்பிரியராகி அச்சபை சம்பந்தப்பட்டமட்டில் உறவினர் அயலார் பகைவர் என்று பிரியாப் பிரியங்கொள்ளாது அவரவர் புரியும் தொழில்களையே கவனித்து விருப்பு வெறுப்புக்கொண்டு நீதிதவறாது நடத்திவரவேண்டும். சபையின் பொருளில் ஒவ்வொரு காசு செலவிடும்போதும் இச்செலவு செய்வது அவசியமா நியாயமா என்று தீர்க்காலோசனை செய்தே செலவிடவேண்டும். சபையின் அங்கத்தினரோ பிறரோ யாவராயினும் பொதுப்பொருளின் வரவு செலவைப்பற்றிக் கேட்டால் அதற்கு விடையளிக்கவேண்டும். அங்ஙனம் கேட்பவரெல்லாம் தமக்கு நலஞ்செய்பவராகக் கருதவேண்டும். இன்னோரன்ன நற்குண நற்செயலுடையாரே சபைத் தலைமையுறுதற்குப் பாத்திரராவார். இத்தகையார் நடத்தும் சபைகளே வளர்ச்சியுற்றுப் பிரகாசிக்கும்.

# (17) கஷ்டத்தாலடையும் நன்மை.

—(:*:)—

எல்லா வுயிர்களும் இன்பத்தை விரும்புதலும் கஷ்டத்தை வெறுத்தலும் இயற்கையே. இன்பம் வந்தபோது தன்னை மறந்து களிப்புறுகின்றனர். கஷ்டம் வந்தபோது முகம் வாடித் தலைகவிழ்ந்து வருந்துகின்றனர். இன்பத்தையே யனுபவிப்பவர் பிறர் குணகுணங்களை யுள்ளவாறறியும் ஆற்றலிலர். கடவுளையுமறப்பர். தன்னையே மதிப்பார். உலகியலையுமறியார். துன்பமுற்றவரோ தம்மைத்தாமே நொந்துகொள்வதுடன் கடவுளைப் பிரார்த்தித்துப் பக்திபண்ணுவர். துன்பமுற்ற காலத்திற்றான் தம்மைச் சார்ந்தவர்கள் பந்துக்கள் முதலாயினோர் குணங்களை யுள்ளவாறறிதல்கூடும். தம்மிடத்துள்ள தீயசெயல்களையுங் குணங்களையும் விலக்கவேண்டுமென்ற எண்ணமுண்டாகும். சரீரச் சோம்பல் நீங்கும். கைப்பதனைக் கட்டியென்றுண்ணும் மன அமைதி பிறக்கும். பிறர்குற்றங்கண்டு சீற்றங்கொள்ளாது பொறுமைகொள்ளத்தக்க மனநிலை வரும். அற்ற குளத்தில் அறுநீர்ப்பறவைபோல் உற்றுழித்தீரும் உறவினர் கூட்டுறவு தொலையும். ஜீவகாருண்ய மிக்க சீரியர் சேர்க்கையே கிட்டும். பசி, பிணியாதியவற்றாற் றுன்புற்றவர் அத்துன்பமுறுதற்கு முன்பு தாங்கொண்டுள்ள செருக்கை வெறுப்பர். தம்மைப்போல் வருந்துபவர்பால் இரக்கங்கொள்வர். இன்னும் பல நன்மைகளுளவாம். இதுபற்றியன்றே ஆசிரியர் பொய்யில் புலவர்.

"கேட்டினு முண்டோ ருறுதி கிளைஞரை
நீட்டி யளப்பதோர் கோல்." என்றருளினர்.

துன்ப அநுபவமானது தீச்செயல்களை விலக்கி நற்செயல்களையும் நற்குணங்களையும் கற்பிக்கும் பாடசாலை போலாகும்.

இங்ஙனமாக எத்தனையோ நன்மைகளைப் பயக்கத்தக்க கஷ்டாநுபவத்தை யடையுங்கால் அதையுஞ்சந்தோஷமாக ஏற்றுக்கொள்ளலும் மனஞ்சலிப்புறுமையும் அவசியம் வேண்டப்படும். இதுபற்றியன்றே

"நன்றாங்கால் நல்லவாக் காண்பவர் அன்றாங்கால்
அல்லற் படுவ தெவன்" என்றார் பெரியார்.

இன்பதுன்பங்கள் அவரவர்செய்த நல்வினை தீவினைக்குத்தக்கபடி வருவனவாதலின் "ஏதுவர வேண்டு மதுவருக எம்மைவிடுத் தேதகல வேண்டு மதுவகல" என்றவாறு இன்பம் வரினும் துன்பம் வரினும் மனத்திருப்தியோடு அனுபவிக்கத் தொடங்கினால் துன்பமும் இன்பமாகவே அமையும். இந்நிலையிலிருப்பவர்கள் ஒருபோதும் துக்கமுறார்

"மாயையின் மயங்குகின்றும் மயக்கின்மேல் மயக்கும்வைத்தாம்" என்றவாறு இவ்வுலகவாழ்க்கையாகிய துன்பத்தை அனுபவிக்கும் நாம் அதனுள்ளும் மற்றொருவகைத் துன்பத்தைக்கொண்டு மனஞ்சலிப்புறாது "ஏது வரினு மெமக்கேற்ற தேயென்ற மூதறிவுகொண்டு இன்பமூழ்கலே நன்றாகும்" என்ற வண்ணம் இன்பதுன்பங்களை யொன்றாகப் பாவித்து விருப்பு வெறுப்பின்றி அநுபவிக்கவேண்டும். இங்ஙனங் கொள்ளுவோமாயின் சித்த சுத்தி யுண்டாகி நித்தியானந்தப் பெருவாழ்வை யடைதற்குப் பாத்திரராவோம்.

# (18) அறச்சிறப்பு.

ஆன்மாக்கள் தாம்செய்த வினைப்பயன்கட்கேற்ப எழுவகைப் பிறப்பினுள் யாதானுமொன்றைப் பெறும். அவ்வகைப் பிறப்புக்களுள்ளே மானிடப் பிறவி யெடுத்தல் மிகவும் அரிது. இம்மனித சன்மத்தின் உயர்வையறியாது "வறியனு மொரு பிறவிக்குருடன் கையில் வந்த பெரு விலைமணி" போலவும், "மழைதேருச் சிறியனு மொரு மதலை கையிற் கொண்ட செம்பொன் மணிவள்ளம்" போலவும் இத னருமையை மதியாது பாழாக்குவார் பலராவர்.

இம்மனிதப் பிறப்பின் அருமை:—

"எண்ணரிய பிறவிதனின் மானிடப்பிறவியே யாதினும்
அரிதரிது காண்" எனத் தாயுமானவரும்,

"பரவை வெண்டிரை வடகடற் படுநுகத் துளையுட்
டிரைசெய் தென்கட லிட்டதோர் நோன்கழி சிவணி
அரச வத்துளை யகவையிற் செறிந்தென வரிதாற்
பெரிய யோனிகள் பிழைத்திவண் மானிடம் பெறலே"

எனத் திருத்தக்கதேவருங் கூறுமாற்று லெளிது புலனும்.

இத்துணை அருமை வாய்ந்த மானிடப் பிறவியைப் பண்டைநல் வினைக்கீடாகப் பெற்றவர்கள் அடையவேண்டியவற்றை வடநூலார் "புருஷார்த்தம்" என்பர். அது நால்வகைப்படும். தர்மார்த்த காம மோக்ஷமெனப்படும். இவற்றைத் தமிழ்நூலார் "அறம் பொருள் இன்பம் வீடு" என்பர். இவற்றுள் தலையாய அறத்தின் சிறப்பே இவண் கூறப்படுவதாகும்.

பொருள்:— அறம் என்பது அறு + அம். எனப்பிரிக்கப்பட்டு அறுதல் என்று பொருள் தந்து தானெய்திய எல்லாப்பொருள்களையும் பிறர்க்குப் பயன்படுமாறு செய்வதே அதுவாதலின் எப்பொருள்களிடத்தும் அவாவறுதல் என்பதை யுணர்த்தி நிற்குமென்பர் ஒருசாரார். வரையறுக்கப்பட்டமையால் அறம் எனப்பட்டதென்பாருமுளர். எப்பொருள் கொள்ளினும் நன்றே.

தர்மம் என்பது தாங்குவது எனப் பொருள்தரும். ஒருவர் தம் பாலுள்ள பொருள்களைப் பிறர்க்குபகரித்தலால் பிறரைத் தாங்குவ தென்றும், அதன் பலன் அதனைச் செய்தாரை இம்மை மறுமை வீடு என்ற மூன்றிடத்தும் தொடர்ந்து துணைசெய்தலால் தம்மைத் தாங்கு வதென்றுங் கொள்ளக்கிடக்கின்றதென்பர்.

இனி உயிர்களெல்லாம் இன்பத்தையே விரும்பும் இயல்புடை யன. இது ஓரறிவுமுதல் ஆறறிவுவரை பெற்ற சகல பிராணிகளிடத் துங் காணப்படும் பொதுவியற்கையாம். இவ்வின்பம் இம்மையின்பம் மறுமையின்பம் வீட்டின்பம் என மூத்திறப்படும்.

இம்மையின்பம்:—இவ்வுலகில் மனைவிமக்களாதி சுற்றத்தாரோடு கூடியிருந்து செல்வம் கல்வி அதிகார முதலியவற்றாற் சிறந்து எல்லா ரும் புகழுமாறு கவலையின்றி வாழ்தலாம்.

மறுமையின்பம்:— இச்சரீரம் நீங்கியபின் இன்பத்துக் கிடமா கிய தேவராக்கையைப் பெற்றுத் தேவபோகந்துய்த்தலாம்.

வீட்டின்பம்:—காலவரையறைக்குட்பட்டு குறித்தகாலங் கழிந்த வுடன் மீட்டும் பிறவிக்கேதுவாகும் இவ்வின்பங்களைப் போலாது என் றும் மாறுத நிரதிசய இன்பநிலையான மோக்ஷஇன்பமாம்.

இம்மூவகை யின்பங்களையே இம்மை அம்மை வீடு எனக்கூறுப.

அறச்சிறப்பு:—மேற்கூறிய மூவகை யின்பங்களையும் ஆன்மாக்கட் குத் தரவல்லது அறமேயாம். பொருளின்ப வீடுகளையும் தானே தரத்தக்கதாதலாற்றான் புருஷார்த்தங்களில் தானே (அறமே) முதற் கட்கூறப்படுவதாயிற்று. அறம் செய்தவர் பொருளின்ப வீடுகளை யடைவர். அறஞ்செய்யாதவர் ஒருபோதுமவற்றையடையார். இதனை

"அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடை"

"அறந்திறம் பாது நாளு மரும்பொருள் காமந் துய்ப்போர்
சிறந்தவிவ் வுலகந் தன்னி லளப்பருஞ் செல்வ மெய்தி
மறங்கிளர் வடிவே லுண்கண் வானவர் மகளி ரோடு
முறங்கிடா தின்பந் துய்க்கு முலகினி லினிது வாழ்வார்"

"தருமமே யுலகம் போற்றச் சகலகா ரணம தாகும்
தருமமே யழியா தென்றுந் தாபர மாகி நிற்கும்
தருமமே தனைவேட் டோர்க்குச் சவுக்கிய மனைத்து நல்கும்
தருமமே முத்தி சேருஞ் சாதன மென்றுட் கொள்வான்"

"சிறப்பீனுஞ் செல்வமு மீனு மறத்தினூங்
காக்க மெவனோ வுயிர்க்கு"

"தருமமா வதுவே யின்பந் தருமலாற் றரும நீக்குங்
கருமம், ஆவதுபோற் றோன்றிக் காட்டினும் பசுமட் பாண்டத்
தருமையா நிரப்புந் தெண்ணீ ரனைத்துமப் பாண்டத் தோடு
மொருமையாக் கெடுத லேபோன் றொருகணத் தழியு மன்றே"

என்பவற்று லறியலாம். அன்றியும், "அறன் இம்மை மறுமை வீடு என்னும் மூன்றனையும் பயத்தலால் அவற்றின் வலியுடைத்து" என்பர் பரிமேலழகர்.

"தேங்குவிண் போகமுஞ் சிறந்த முத்தியு
மீங்குறு மாக்கமு மினிது நல்கலா
லோங்கிய வறத்தினை யுளமுன் மூன்றினும்
பாங்குற நித்தலும் பரிந்து செய்தியால்" என்பதுங் காண்க.

அறப் பகுப்பு:— ஒழுக்கம், வழக்கு, தண்டம் எனமூன்றும். இம்மூன்றனுள் வழக்கும் தண்டமும் காலதேயவியற்கையா னறியத் தக்கன. உலகநெறி நிறுத்துதலே பயனாகவுள்ளன. இவ்விரண்டனினும் சிறந்ததாய் நூலுணர்ச்சியானும் பெரியா ருபதேசத்தானு மறியப்படுவதாய் உயிர்க்குறுதி பயத்தற் சிறப்புடையது தலைநின்ற ஒழுக்கமென்பதேயாம்.

ஒழுக்கம்:—விதித்தன செய்தல் விலக்கியன ஒழிதல் என இரு பிரிவிற்று. இவற்றுள் விதித்தன செய்தலாவது அறநூல்களிலே ஆன்றோர்களால் விதிக்கப்பட்டவாறு நடத்தலாம். ஆயின் இவ்விதிக்குச் சற்றே விலக்குண்டு. அதாவது:—விதித்தவண்ணம் நடக்கவேண்டுமாயினும் இயன்றவரை செய்யலாம். இல்லறம் பொருளளவிற்கேற்பவும் துறவறம் யாக்கைநிலைக்கேற்பவும் செய்யலாமென்பது சான்றோர் கோட்பாடாகும். விலக்கியவற்றை விலக்கியே தீரவேண்டும். விலக்

கியவற்றுள்ளும் இயன்றவரை விலக்குவேன் என்பது சாலாது. ஆக வே பொருளின்மையானும் யாக்கைத்தளர்ச்சியானும் விதித்தனசெய் தலில் சிறிது குறைபாடுறினும் தோஷமாகாதென்பதும், எக்காரணத் தானும் விலக்கியவற்றை விலக்காதொழிதல் தோஷமாமென்பதும்பெ றப்படும். இவ்வொழுக்கமாகிய அறமே இங்குபேசப்படுமென்பதூஉங் கவனித்தற்குரியதாம்.

"ஒல்லும் வகையா னறவினை யோவாதே
செல்லும்வா யெல்லாஞ் செயல்" என்பது திருவள்ளுவர்.

அறச்செயல்கள்:—அன்பு, நட்பு, வாய்மை, செய்ந்நன்றியறிதல், பெரியோர்ப்பேணல், பக்தி, ஈகை என்பனமுதலாகப்பலபட விரிந்துள் ளன. ஆயினும் இவற்றுளெல்லாம் தலையாய அறம் ஈகையே என்பது பெறப்படும். ஏனைய அறங்களெல்லாம் இதனுள்ளடங்குமென்பதும் கரு தியே அறமாதி புருஷார்த்தங்களைத் தொகுத்து ஒரு வெண்பாவிற் கூறவந்த ஔவைப்பிராட்டியார் "ஈதலறம்" என ஆணைதந்தருளினர்.

அறஞ்செய்யுமுறை:—காலமுமிடமுங்கருதி நற்சிந்தை நற்சொல் நற்செயல்களாகிய திரிகரணசுத்தியுடன் செயல்வேண்டும். மாரிக்கா லத்தே கங்கைநதிக்கரையிலே தண்ணீர்ப்பந்தல் வைத்தால் யாதுபய ன்? தண்ணீர்ப்பந்தல் வைத்தல் அறமேயாயினும் காலமுமிடனுங்கரு தாது செய்யப்பட்டமையால் பயனிலதாயிற்று. கோடைக்காலத்தே நீரற்ற வழியில் நீர்ப்பந்தல் வைத்தலே அறமெனப்படும். ஒருவர் ஓர றச்செயலைச் செய்யுங்கால் பிறர்செய்தலைக்கண்டு பொறாமைகொள்ளா மலும், தனக்கு அவ்வறச்செயலால் உலகமதிப்புவர அம்மதிப்பால் பிறிதோர் பெரும்பயனை யடையக் கருதாமலும், நமதுகடமை இது என்ற எண்ணத்துடன் செய்ய வேண்டும். அங்ஙனஞ் செய்யுங்கால் இன்சொல்லுடன் செய்யவேண்டும். வெட்டெனப்பேசி வெடுவெடுத் துச்செய்தல்கூடாது. பிறர்செய்யும் சங்கடஞ் சகியாது கோபாவே சத்துடன் வெறுப்புற்றுச் செய்தலுங்கூடாது. ஆகவே திரிகரண சுத் தியுடன் செய்வதே அறமாகும். இதனை,

"மனத்துக்கண் மாசில னாத லனைத்தறன்
ஆகுல நீர பிற"
"அழுக்கா றவாவெகுளி யின்னாச்சொ னான்கும்
இழுக்கா வியன்ற தறம்" என்பனவற்றுலறிக.

தக்கன்செய்தது அறமாகிய யாகமே யாயினும் அவன் அழுக்கா றுஅவா வெகுளி இன்னாச் சொல் இவற்றையுடையனாய்ச் செய்தமையின் அவ்வறமே மறமாகி அவனுக்குக் கேடுவிளைத்தமையும், சண்டேசுர நாயனார் சாக்கியநாயனார் செயல்கள் செயலளவில் மறம்போற்றோன்றினும் மனமாசற்றுச் செய்யப்பட்டமையால் அறமாயினமையும் பிரத்தியக்ஷமாம். ஈதல் அறமேயாயினும் பெறுகின்றவர் தகுதியைக் கருதிச்செய்யவேண்டும். மதுபானம் செய்வானொருவன் யாசிக்கவரின் அவற்குப் பொருட்கொடையுதவாது வயிறு நிறைய வுணவையேயுதவவேண்டும். இக்குடிகாரனுக்குப் பொருட்கொடை யுதவின் அதனால் வருவது அறமாகாது. இதனாற்றான் "பாத்திரமறிந்து பிக்ஷையிடு" என வுலகவழக்கினும், "நன்றாற்ற லுள்ளுந் தவறுண்டவரவர், பண்பறிந் தாற்றாக் கடை" எனச்செய்யுள் வழக்கினும் பெரியார் கூறிவைத்தனரென்க.

அறஞ்செய்யுங்காலம்.—உடலும் பொருளு மிருக்கும்போதுநினைத்த உடனே அறஞ்செய்ய வேண்டும். இதுபோது நமக்குவயது கொஞ்சந்தானே, இன்னுஞ்சின்னாட்சென்றபின் செய்வோமெனக்கருதல்கூடாது. உடலைவிட்டுயிர் நீங்குங்காலம் உணர்தற்கரிது. அதனையுணர்ந்தார் யாருமிலர். குடும்பசம்பந்தமாகச் செய்யத்தக்க சிலகாரியங்களைச்செய்து முடித்தவுடன் தருமஞ்செய்தலிற் றலைப்படுவாமெனக்காலந்தாழ்த்தலும் கூடாது. உடலுள்ளவரை குடும்பக்காரியமொழியாதாதலின் தம்பாலுள்ள பொருள் சிறிதளவாதல் கருதி வாணிபத்தானும் பிறவற்றானும் அப்பொருளைப் பெருக்கிப் பெருகியபின்னர்ச் செய்வோமெனக் கருதலுங்கூடாது. நீரில் அலைபோன்று செல்வம் நிலைபெறாதாதலின், ஆகவே எக்காரணத்தாலும் பிற்செய்வாமென்று கருதாது உடலும் பொருளுமுள்ளபொழுதே அவற்றினளவிற்கேற்ப அறச்செயல்களைச்செய்ய முற்படவேண்டும். இதனை,

"இளமையு நில்லா யாக்கையு நில்லா
வளவிய வான்பெருஞ் செல்வமு நில்லா
புத்தே ளுலகம் புதல்வருந் தாரார்
மிக்க வறமே விழுத்துணை யாவது"

"நாளைச் செய்குவ மறமெனி லின்றே
கேள்வி நல்லுயிர் நீங்கினு நீங்கும்

இதுவென வரைந்து வாழுநா ளுணர்ந்தோர்
முதுநீ ருலகின் முழுவது மிலையே"

"பெருங்கட லாடிய சென்று ரொருங்குட
ஞைசை யவிந்தபி னுடுது மென்றற்றால்
இற்செய் குறைவினை நீக்கி யறவினை
மற்றறிவா மென்றிருப்பார் மாண்பு"

"ஆறிடு மேடு மடுவும்போ லாஞ்செல்வ
மாறிடு மேறிடு மாநிலத்தீர்—சோறிடுந்
தண்ணீரும் வாருந் தருமமே சார்பாக
வுண்ணீர்மை வீறு முயர்ந்து" என்பவற்றாலறியலாம்.

மேலும்:—"அன்றறிவா மென்னு தறஞ்செய்க மற்றது பொன்றுங்காற் பொன்றாத் துணை" எனத் தேவரும், "செய்தவுடம்பழியவு முயிரோடொன்றி வினையுடம்பினுஞ் சேறலின், பொன்றாத்துணை யென்றார்" எனப் பரிமேலழகரும் வகுத்தன பாராட்டற்பாலன.

அறஞ்செய்தற்குரியார்:— எல்லாரும் அறஞ்செய்தற் குரியரோ யாயினும் இல்வாழ்க்கை நடத்துபவர்களே இதற்கு முக்கிய அதிகாரிகளாவர். "அறனெனப் பட்டதே யில்வாழ்க்கை" எனத் தேற்றேகாரங்கொடுத்துக் கூறியதும், "அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை, பண்பும் பயனும் அது" என்பதால் அறமே இல்வாழ்க்கையின் பயனும் எனக்கூறியதும், "அறத்தாற்றி னில்வாழ்க்கை யாற்றிற் புறத்தாற்றிற், போஒய்ப் பெறுவ தெவன்" என்பதால் அறத்தொடு கூடிய இல்வாழ்க்கை துறவறத்தினுஞ் சிறந்ததாமெனக் கூறியதும் தேவர் திருவாக்குக்களாம். அன்றியும் இல்வாழ்க்கையைக் கூறுதற்கு முன்னர் அறன் வலியுறுத்தலைக் கூறியதும் இக்கருத்தை வலியுறுத்தா நிற்கும்.

அறஞ்செய்யாமைக்கேடு:—அறத்தைப்போல் ஆக்கந் தருவது பிறிதொன்றில்லை. அறஞ்செய்யாமையைப் போலக் கேடுதருவதும் பிறிதொன்றில்லை. முற் பிறப்புக்களிற் செய்த அறவிசேடத்தால் இப்பிறப்பிற் பல்வகைச் சிறப்புமுற்றவர்கள் இங்கும் அறத்தை மறவாது செய்வார்களாயின் இனிவரும் பிறப்புள்ளும் மிக்க சிறப்பெய்துவர். மறந்து செருக்குற்று வாழ்வரேல் பல்வகைத் துயர்க்கும் நிலைக்களமாவர்;

"அறத்தினூங் காக்கமு மில்லை யதனை
மறத்தலி னூங்கில்லை கேடு"

"மின்போ லழியு முடல்கொடுநல் வினைசெய் தழியா வுடம்பெய்தி
யின்போ டமர்த லாயிருப்ப யாக்கை வருந்து மென்றெண்ணி
யன்போ டறஞ்செய் தினையாம லருந்தி வாளா விருக்குமவன் [றுன்"
றன்போன் மருள ரிலையென்றுன் றண்பூம் பொழில்வைத் தளிக்கின்

எனவும் வருவனவற்றால் அறஞ்செய்யாமைக்கேடு எளிது தெளியப்படும். இதுபற்றித் தான் நமதுபாலப் பருவத்திலேயே "அறஞ் செயவிரும்பு" என்று நம் முதியோர் நமக்குப் போதிப்பாராயினர். அறஞ்செய் என்றுமட்டுங் கூறாது செய விரும்பு எனக்கூறிய மதிநுட்பம் மிகப்பாராட்டற் பாலது. விரும்பிச்செய்யாமல் கடன் கழிக்கச் செய்வதாகக் கருதி மேற்கொண்ட அறச்செயல் பயனுடைத்தாகாமையை விளக்கவே விரும்பு எனக் கூறியவாறும்.

அறத்தை வளர்த்தவர்:—உமையம்மையார் 32 அறங்களையும் புரிந்தார். கண்ணன் கீதையில் அறமுரைத்தான். சிவபிரானும் வடவாலின் கீழிருந்து நால்வர்க்குபதேசித்தருளினர். "அன்றாலின் கீழிருந்தங் கறஞ்சொன்னானை" என்பது காண்க. இவற்றால் கடவுளர்க்கு முரித்தெனல் பெறப்படும்.

**32 அறங்களிவையெனல்:—**

"ஆதுலர் சாலை சோலை யாவின்வா யுறைகண் ணாடி
யோதுவார்க் குணவு கண்ணீ ருறுபந்தர் மடந்த டாகங்
கோதிலா வரிஞ்சி சுண்ணங் கொலையுயிர் விடுத்த லேறு
மாதலைக் கெண்ணெய் கண்ணோய் மருந்துநன் மகப்பால் சோறு"

" அறுசம யத்தோர்க் குண்டி யழிந்தோரை நிறுத்த லட்டுண்
பிறரறங் காத்த லையம் பெண்போக மகப்பே றுய்த்த
னறியதின் விலங்கூண் வண்ணா னாவிதன் சிறைச்சோ றூதி
மறுதலத் தறமெண் ணான்கு மனையறத் திவ்வூர் நல்கும்"

என்னுந் திருக்குற்றாலப் புராணத்தாலறிக.

இருவகையறம்:—காமிகம், நிஷ்காமிகம் எனப்படும்.

காமிகஅறம்:—பலனை யபேக்ஷித்துச் செய்யப்படுவது. புதல்வரைப் பெறக்கருதிப் புத்திரகாமேட்டி செய்தலும், இந்திரபதவியை விரும்பி 100 அசுவ மேதம் புரிதலும், பிணிநீக்க முதலிய கருதி அன்னசத்திராதி வேறு பல அறங்களைச் செய்தலும் காமிக அறங்களாம். இப்பலன்கள் யாவும் அழிதன் மாலேயன. இவை பந்தப்படுத்துவன வாதலால் பொன் விலங்கு போலுமென்ப.

நிஷ்காமிகஅறம்.—"என் கடன் பணிசெய்து கிடப்பதே" என்றவாறு அறஞ்செய்தல் நமது கடமை யெனக்கருதி, பலனையபேக்ஷியாது "வீடும் வேண்டா விறலின் விளங்கினார்" என்ற வண்ணம் எல்லா அறங்களையும் ஈசுவரார்ப்பண மாகவே செய்தல் நிஷ்காமிக அறமாம். சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஈசுவரார்ப்பணமாக யாகத்தை நிறைவேற்றியதும், அப்பூதியடிகள் நீர்ப்பந்தலாதிய அறங்களை திருநாவுக்கரசு சுவாமிகள் பேராற் செய்ததும், இயற்பகைநாயனார் மனைவியையும் சிவனடியார்க் கீந்ததும், கர்ணன் தான்செய்த புண்ணிய மனைத்தையும் கொடுத்ததும், சிவனடியார்கள் சிவபூஜா காலங்களிலே உடல்பொருளாவிகளையும் சிவார்ப்பணம் செய்து வருதலும் பிரத்தியக்ஷமாம். "வேண்டாமை யன்ன விழுச்செல்வ மீண்டில்லை யாண்டும் அஃதொப்பதில்" என்பவாகலினானும், "அற்றது பற்றெனி னுற்றது வீடு" என்பவாகலானும் எவ்வகைப் பற்று மற்ற பெருநிலைக்கட் படுதலான் இந்த நிஷ்காமிக அறமே சிறந்ததென்பது பெறப்படும்.

வடநூலார் பகுப்பு:—இஷ்டம், பூர்த்தம், தானம் எனமூன்றும்.

இஷ்டம்:—உலகமெல்லாம் வாழக்கருதி அவ்வாழ்வு நிலைபெறும் வண்ணம் வேதவிதிப்படி ஆகுதி மந்திராதிகளால் வேள்வி மூலம் கடவுளர்களைப் பூஜித்தல்.

பூர்த்தம்:—சகலவுயிர்கட்கும் இன்பப்பேறும் துக்கநிவிர்த்தியும், வரக்கருதிச் செய்யப்படும். நீர்ப்பந்தல், அன்னசத்திரம், வித்தியா சாலை, மருத்துவசாலை முதலியன ஸ்தாபித்தல்.

தானம்:—வறியராய் வருந்துவோர்க்கிரங்கி அவரது தகுதிக் கேற்பவேண்டும் பொருளைத் தத்தஞ்செய்து சுகத்துடன்வாழ்வித்தல். இம்மூன்றனையும் முறையே வேள்வி, ஒப்புரவு, ஈக்கார்க்கீதல் எனக் கூறுவர் தமிழ்நூலார்.

இனி சைவ சமயத்தினர் அறத்தைப் பாகுபடுத்திக் கூறுகின்ற முறையாவது பாசஅறம், பசுவறம், பதியறம் என்பதாம்.

பாசஅறமாவது:—தாய்தந்தை யாதியவர்க்குச் செய்யும் சிராத்தாதி செயல்களும், பந்துக்கட் குதவிசெய்தலு மிவைபோல்வன பிறவுமாம்.

பசுவறமாவது:—நீர்ப்பந்தல் அன்ன சத்திராதிகள் ஸ்தாபித்துப் பிறவுயிர்கட் குபகரித்தலாம்.

பதியறமாவது:—குருலிங்க சங்கம வழிபாடு, திருக்கோயில் கட்டுதல் முதலியனவாம். இவை முறையே ஒன்றற்கொன்று பெரும் பயன் செய்வதாம்.

"இன்சொல் விளைநிலனா ஈதலே வித்தாக
வன்சொற் களைகட்டு வாய்மை யெருவட்டி
அன்புநீர் பாய்ச்சி அறக்கதிர் ஈனவோர்
பைங்கூழ் சிறுகாலைச் செய்"

என்னுங்கவியால் அறம் விளைதற்கு நிலமும், வித்தும், அதற்கிடையூறு செய்யும் களையும், உரமும், நீரும், செய்யத்தக்க காலமும் நன்கறியலாம். இது-அறநெறிச்சாரம்.

# (19) கொல்லாமை.

கொல்லாமை யாவது யாதோ ருயிரையுங் கொலைசெய்யாதிருத்தல் எனப்பொருள் படும். உயிர்கள் ஓரறிவு முதல் ஆறறிவுவரை கொண்டு புல்மரம் முதல் மனித சரீரம் வரை படிப் படியாக நிறைந்துறு வனமாம். இவ்வுயிர்கள் முன்பு செய்த வினைக்கீடாக நால்வகைத் தோற்றத்தின் கண் எழுவகைப் பிறப்புக்களில் எண்பத்து நான்கிலக்க யோனி பேதங்களில் யாதானுமொன்றிற் பிறந்திறந்துழலும் பெற்றி வாய்ந்தன. ஓரோருடல் தோறும் ஓரோருயிருண்டு. எந்த 'வுயிரும் மரணத்துக் கஞ்சி அங்கங் குலைந்து நடுநடுங்கு வனவேயாம். எல்லா வுயிர்கட்கும் மரண வேதனையைப் பார்க்கினும் அதிகத் துன்பம்வேறு எதுவுமில்லை.

"ஒற்றுமை நயத்தின் ஒன்றெனத் தோன்றினும்
வேற்றுமை நயத்தின் வேறே யுடலுயிர்"

என்பவாகலின் உடலினின்றும் வேறு பிரித்தறியப் படாததாய் உடலோ டொன்றி யிருக்கும் உயிர் அவ்வுடலின் வேறாயும் அதனோடு எங்கும் நிறைந்தும் பிரித்தறிய வாராததாய்க் கலப்புற்றிருக்குமென்க. "வினைப்போக மேயொரு தேகங் கண்டாய் வினை தானொழிந்தாற் றினைப் போதளவு நில்லாது" என்றவாறு தாம் தாம் செய்த வினைக்கீடாகத் தநுகரண புவன போகங்களைப் பெற்றிருந்து வினைப் போகம் நீங்கியவுடன் உடலைவிட்டு நீங்குவதாகும்.

உயிர்நிச்சயம்:—உடலின் வேறாக உயிரென வொன்றுண்டெனல் பொருந்தாது, வெற்றிலை பாக்குச் சுண்ணங்களின் சேர்க்கையில் ஒரு செம்மை தோன்றுவது போலவே பஞ்ச பூதங்களின் சேர்க்கையால் உடலமையவே அதனிடத்து ஓருணர்ச்சி தோன்றுகின்றதன்றி அவ்வுடலின் கண்ணே உயிரென வொன்றமைவதாகக் கோடலெற்றுக்கு? ஆகவே உடம்பு வேறு உயிர் வேறு எனல் சாலாது. பஞ்சபூதச் சேர்க்கையே யுடம்பு. உடம்பின் குணமே யுயிர். என்னில், உடம்பின் குணமாகிய உணர்ச்சி பிணத்திற் காணாமை யென்னையோ? பிணத்தினிடத்தில் பஞ்சபூதச் சேர்க்கை குறைவுபட்டுப் போதலால் அதனிடத்து உணர்ச்சியிலதாயிற்றென்னில் பூதச்சேர்க்கை சிறிதுங்

குறைவுறுதிருக்கப்பெற்ற நித்திரைகாலத்தில் அவ்வுணர்ச்சி தோன்றக் காணுமையென்னே? ஆதலின் பூதச் சேர்க்கையின் குணமான உணர்ச்சி தானுயிரென்பது பொருந்தாமையும் உயிரென்பதோர் தனிப்பொருளென்பதும் பெறப்படும்.

"உடலினவே றுயிரே னிந்த வுடலன்றோ வுணர்வ தென்னி
னுடல்சவ மான போது முயிரினுக் குணர்வுண் டாகு
முடலினுள் வாயுப் போனு லுணர்ச்சியின் றுடலுக் கென்னி
லுடலினுள் வாயுப் போகா வுறக்கத்து முணர்வ தின்றே"

என்பதால் இதனை நன்கு தெளியத்தகும்.

கொலையே பெரும்பாவம்:—எல்லாவுயிர்க்கும் இன்பஞ் செய்தலே புண்ணியமெனவும், அவைகட்குத் துன்பஞ் செய்தலே பாவம் எனவும் ஆன்றோர் கூறுவர். அத்துன்பச் செயல்களுள் மாற்ற முடியாததும் மிகக்கொடியதுமான கொலைத் துன்பம் பெரும்பாவமேயாயிற்று. இத்தகைய கொடும் பாவங்களில் கொலை, களவு, கள், காமம், பொய் என்பவற்றைப் பஞ்சமஹா பாதகங்களென்பர். இப்பஞ்சமா பாதகங்களுள்ளும் கொலையே மிகக் கொடிய தாதல்பற்றி முதலில் வைத்தெண்ணப்படுவதாயிற்று. அன்றியும் கொலைசெய்ய நினைப்பவன் கொலைசெய்பவன் கொலைசெய்வதைக் கண்டிரங்காதவன் கொலைசெய்வதைத் தடுக்காதவன் ஆகிய இவர்களெல்லாம் நரகத்தில் வருந்தித் தீவினைப் போகந்துய்ப்பரென்பதை.

"உண்ணு வூனை விரும்பி யுயிர்க் கொலை
யெண்ணு வான்கொலை கண்டிரங் கான்கொலை
பண்ணு வானைத் தடுத்துப் பகர்கிலா
னண்ணு வானிவ ரோடெனு நால்வரும்"

"இந்நோய் நமக்குண்டென் றெண்ணுதே வெவ்வுயிரு
முன்னேவக் கொன்றருந்து மூர்க்கர்தா—மெந்நோவும்
பண்ணப் படுநரகிற் பாவிகளிற் பாவிகளென்
றெண்ணப் படுவா ரிசைந்து"

என்பவற்றுற் காணலாம்.

கொலைப்பாவப்பலன்:—கொலைப்பாவத்தின் பயன் இப்பிறவியிலேயே அனுபவிக்க வாராதொழியினும் காலாந்தரத்தில் நரகவேத

னையும் இனி வரும் பிறவியுமாகி நடைபெறும். இப்போது செய்யும் வேளாண்மைப் பயிர்விளைவு அடுத்த ஆண்டிற்கு விதையாகவும் உணவாகவும் அமையுமாறு போல இப்போது செய்த வினைப்பயன் மேலைப்பிறவிக்கு வித்தாகவும் அநுபவிக்கப் படுவதாகவும் அமையு மென்பர். இதனை:—

"மேலைக்கு வித்து மாகி விளைந்தவை யுணவு மாகி
ஞாலத்து வருமா போல நாஞ்செய்த வினைக ளெல்லா
மேலத்தான் பலமாச் செய்பு மிதமடி தங்கட் கெல்லா
மூலத்த தாகி மண்மேல் வந்திடு முறைமை யோடே"

என்பதா லறியலாம்.

மறுமையிற் பலனுண்டெனல்:—வினையைச் செய்த வுடலழிய வும் அவ்வினைப்பயன் மறுமைக் கட்சென்று வேறோ ருடலைப்பற்றி நிற்குமென்பது யாங்ஙனம் பொருந்து மென்னில், ஓருயிர் இறந்த வுடன் அவ்வுயிர்ச் செயல் பாவமாயின் யமதூதர் அவ்வுயிரையணுகி அதற்குப் பூததேகத்தைக்கொடுத்துத் துன்பத்திலாழ்த்துவரெனவும், அவ்வுயிர் புண்ணிய மியற்றியதாயின் சிவகணத்தவர்கள் அவ்வுயிரை யணுகி அதற்குப் பூதசாரமாகிய தேவ சரீரத்தைக் கொடுத்து இன் பந்துய்ப்பிப்ப ரெனவும் நூல்கள் கூறுமாற்றை

"அருந்துயர்க் குழியி னாழ்வா ராகமே பாவத் தாகும்
பொருந்திய பூதத்தாலே யிமைத்திடும் போது தன்னுட்
புரிந்துவிண் புகுவாராகம் புண்ணியத் தாலே யாகும்
பொருந்திய பூத சாரத் தொருகணப் போது தன்னில்"

என்பதனு னுணரலாம்.

வேறு சரீரத்துட் சென்றனுபவித்தல். அழிந்து போன சரீரத்தி னுள்ளிருந்த வுயிரறிவு வேறொரு சரீரத்துட்புக்கு இன்பதுன்பங்களை யனுபவித்தல் கூடுமோ என்னில் பரகாயப் பிரவேசஞ் செய்தறிவது போலக்கூடுமென்பார். அதுவும் கண்டதில்லையே யென்னில் கனவில் வேற்றுடல்புக்கு அறிதல் பிரத்தியட்சமேயாதலின் அதுபோல் ஆமெ னல் மறுக்க முடியாதாம். சொப்பனதேகம் வேறில்லை இவனுள்ள நினைவேயாமென்னில் இந்திராதி தேவஉருக்கொள்ளக் காணுமையால் நினைவன்றென்பதும், சொப்பனதேகம் வேறென்பதும் பெறப்படும்.

"பன்னக மண்ட சங்கள் பரகாயந் தன்னிற் பாய்வோர்
துன்னுதோன் முட்டை யாக்கை துறந்துசெல் வதுவே போல
வுன்னிய வுயிர்கள் தூல வுடல்விட்டு வானி னூடு
மன்னிடு நனவு மாறிக் கனவினை மருவு மாபோல்"

இவ்வுடல் கனவூ டெங்கு மியங்குரு வலவன் றென்ப
ரவ்வுடல் பறத்த லாற்கண் டுளநினை வல்ல வாகு
மெவ்வழி யிமையோர் கேள்வி நினைவெனி லிந்தி ராதி
திவ்விய வுருக்கொ ளேமாற் றிகழ்ந்ததவ் வுருவே றென்னே.

என்பவற்றாற் றெளியத்தகும்.

பக்ஷிமிருகக்கொலை:—உயிர்க்கொலையெல்லாம் பாவமெனல்கூடாது. பகுத்தறிவாகிய ஆறுவதறிவுமுடைய மனிதக்கொலை கூடாததேயாக. பகுத்தறிவில்லாத பக்ஷிகளையும் மிருகங்களையும் கொல்லலால் பாவமாகாது. அவைகளை மனிதர்க்கு உணவாகவே கடவுள்படைத்தனர் என்னில், புண்ணியபாவமோக்ஷ நரக விவரங்களையுணரும் பகுத்தறிவான் மக்கட் பிறப்பு விசேடமுடைத்தென்பதொக்கும். மரணவேதனைக்குப்பயந்து அஞ்சி நடுங்கித் துன்பமுறுதலாகிய வுணர்ச்சி மனிதரைப்போலவே மிருகாதிகட்கு முண்டாதல் பிரத்தியட்சமாதலின் அக்கொலையும் பாவமேயாகும். அப்பிராணிகளை மனிதர்க்குணவாகவே இறைவன் படைத்தானென்பதும் பொருந்தாது. என்னை? மலத்திலுள்ள புழுக்களும் அவற்றிற் சிறிய கொசுமுதலியவும் மனிதர்க்கு என்னபயன் கருதிப்படைக்கப் பட்டன. இவ்வினாவுக்கு விடுக்குமாறில்லையாம். பயனுள்ளவும் பயனில்லவுமாகப் படைத்தானெனில், அங்ஙனம் படைத்த கடவுள் ஞானமய னெனப்படல்கூடாது. பாம்பு தேள் முதலியன மனிதர்க்குத் துன்பஞ் செய்கின்றனவே. மனிதன் கடவுள் கட்டளையைமீறி நடந்தமையால் அவர் சாபம் இவ்வாறுயிற் றெனில், ஆடுமாடு ஆதியன மனிதர்க்கு அடங்கி நடத்தலானும், யானை சிங்கம் முதலியவற்றுள்ளும் சில அடங்கி நடத்தலானும் சாபம் பலமற்றதாகும். ஆகவே கடவுளும் பலமற்றவராவர். ஆதலால் எவ்வுயிரைக் கொல்லினும் பாவமுண்டென்பதே தேற்றமாமென்க.

ஓரறிவுயிர்க்கொலை:-ஓரறிவுமுதல் ஆறறிவுவரையுள்ளயுயிர்களைக் கோறல் பாவமாதல் பெறப்பட்டமையால் ஓரறிவுயிராகிய அசரக்கொலையானும்பாவமாமே அதனைச்செய்தல்கூடுமோ என்னில், நம்முடைய

நகங்களும் உரோமங்களும் போல் களையப்படின் அதனால் வேதனை தோன்றாமையோடு அவைமீட்டும் முளைத்துவளர்தலால்பாவமின்றாம். பற்பல அவயவங்களுள்ளே சேர்த்தெண்ணப் படுவனவாயினும் நகம் உரோமங்கள் களையப்படுதலும் கை கண் முதலியனகளையப் படுதலும் ஒன்றாமோ? ஒருமரக்கொம்பைவெட்டி வேறிடத்து நட்டுவைத்தால் மரத்தில் வெட்டுண்டபாகந் தளிர்த்தலுடன் வெட்டிநட்டகோடுந்தளிர்த்து மற்றுமொரு மரமாதல் கண்கூடாம். இந்த நியாயங்களால்அசரக் கொலைபாற் பெரும்பாவ மின்றென்பர். ஆயினும் அதனானும் அற்பபாவம் வருமெனவும், அவ்வற்பபாவமும் தேவாதியோர்க்கு நிவேதித்தலால் தீர்ந்தொழியுமெனவும் கூறுவர், இதனை:—

"மரக்கோட்டைக் காதிவந்து வைத்தான் மரமும்
மரக்கோடு மற்றிரண்டாய் வாழும்—சரிக்கின்ற
வோருயிரின் காலவாங்கி யோரிடத்தே வைத்தான்மற்
றீருயிர்தா னாமோ வியம்பு"

"தேவ ரதிதி யனல் தேசிகர்க்கென் றிட்டவன்னந்
தேவருல கத்தமுதென் றெண்" என்பவைவிளக்கும்.

மாமிசநிவேதனம்:—மாமிசவர்க்கங்களையும் தேவாதியோர்க்கு நிவேதித்தால் அப்பாவம் போகாதோ எனிற் கூறுதும். புண்ணியரூபிகளாய அவர்க்கு அப்புலாலுணவு விருப்புடைத்தன் றாதலின் அங்ஙனம் நிவேதிப்பின் அவர் ஏற்றுக்கொள்ளாராம். அன்றியும் சுத்தமாகிய அவர் திருமுன்னர் அசுத்தப்படுத்திய பாவமாதலும் பெறப்படும். அரசன் றயவுவேண்டியவர் அவ்வரசன் விரும்பியகாரியங்களைச் செய்தான்மட்டுமே அவன் றயவுகிட்டுவதாகும். அரசன் வெறுப்பன செய்து சென்றால் அரசதண்டனையே கிடைப்பதாகும்.

பக்திமார்க்கம் விதியாகாது:—கண்ணப்பநாயனாரும், சிறுத்தொண்டநாயனாரும் இறைவற்கு மாமிச நிவேதனம் புரிந்தனரே யென்னில் விடுக்குதும். அவ்விருவரும் மனவாக்குக் காயமென்னுந் திரிகரணங்களும் ஒருவழிப்படப்பெற்று இறைவனிடத்தும் அடியாரிடத்தும் அகங்குழைந்துருகும் மெய்யன்பே வடிவமாகக்கொண்டு இவர்க்குநாமிதுசெய்தால் நமக்கிவரிதுசெய்வர் என்ற தற்போதவலியற்று அருள்வசத்தராய் இறைவன் கண்ணிலோரூறு காண்டலுந் தங் கண்ணைப்பறித்துச் சாத்தியதுடன் தமக்குக்கண்ணில்லாது போமேயென்

றதோற்றஞ் சிறிதுமின்றி மற்றைக் கண்ணையும் பறிக்கத்துணிந்ததும், அடியவர்க்கமுது செய்விப்பதேவேண்டி தமது அருமந்த புதல்வனை யறுத்துச் சமைத்துப் படைத்ததும் செயற்கருஞ் செயல்களேயாதலின் அவர்கள் செயலனைத்தும் புண்ணியச் செயலேயாகும். அத்தகை யபெரியாருடன் பத்திநெறியின் பாங்குணராத மனிதரையொப்பிட்டுப்பேசுதல் மலையையும் அணுவையும் ஒப்பிடுதல்போலாமென்க.

"அரனடிக் கன்பர்செய்யும் பாவமு மறமதாகும்
பரனடிக்கன்பிலாதார் புண்ணியம் பாவமாகும்"

என்பதாலிதன்பெற்றி நன்குவிளங்குவதாம்.

"அவனுடைய வடிவெல்லா நம்பக்க லன்பென்றும்
அவனுடைய அறிவெல்லா நமையறியு மறிவென்றும்
அவனுடைய செயலெல்லா நமக்கினிய வாமென்றும்
அவனுடைய நிலையிவ்வா றறிநீயென் றருள்செய்தார்"

என்று கண்ணப்பநாயனார் தன்மையைப்பற்றி சிவகோசரியார்க்கு இறைவன் கட்டளையிட் டருள்வதையுங் காண்க.

"கானுறு கோடி கடிமலர் வில்வம்
வானுற விட்டு வாழ்த்தி வணங்கினு
மூனினை நீக்கி யுண்பவர்க் கல்லது
தேனமர் பூங்கழல் சேரவொண் ணாதே,, எனவும்,

"கொல்லா விரதியர் நேர்நின்ற முக்கட் குருமணியே" எனவும் வருவன பலவாம்.

இனி உயிர்கள்தோறும் அந்தர்யாமியாய் எள்ளினுள் நெய்போல் இறைவன் வியாபித்து வீற்றிருத்தலால் உயிர்க்கொலையானது இறைவன் திருக்கோயிலை யிடித்ததோ டொக்குமென்பதையும், அப்பாதகஞ்செய்தோரை யமதூதர்பற்றியிழுத்து எரிவாய் நரகிற்றள்ளி இரும்பையுருக்கி யவர்வாயில் வார்த்து மற்றும் பற்பல கொடுந்தண்டனைபுரியா நிற்பரென்பதையும்,

"எவ்வுயிரும் பராபரன்சந் நிதியதாகு
மிலங்குமுயி ருடலனைத்து மீசன்கோயி
லெவ்வுயிரு மெம்முயிர்போ லென்றுநோக்கி
யிரங்காது கொன்றருந்து மியல்பினோரை

வௌவியம தூதருந் தண்டஞ்செய்து
வல்லிரும்பை யுருக்கியவர் வாயில்வார்த்து
வெவ்வியதீ யெழுநரகில் வீழ்த்திமாறு
வேதனைசெய் திடுவரென விளம்புநூலே"

"உயிருடம்பி னீக்கியா ரென்ப செயிருடம்பிற்
செல்லாத்தீ வாழ்க்கை யவர்"

என்னும் சிவஞான தீபத்தானும் தேவர்வாக்கானும் காணலாம்.

பாதகப்பலன்;—அதிகரித்த பாவப்பலன் இம்மையினும் சாடி மறுமையினும் வாட்டும். ஒருவனுண்ட விஷமானது கொல்லுதன் முன் தளர்ச்சியும் மயக்கமுந்தந்து பின்னர்கொல்லும். நெருப்புப்பட்டமாத்திரத்தே சூடும் எரிவும் தோன்றிப் பின்பு புண்ணாக்கும். இவைபோலவே அதிகப்பட்ட மகாபாதகம் இம்மையினும் சித்தப்பிரமை தீப்பிணி யாதியதுன்பத்தை விளைத்து மறுமையினும் நரகவேதனையைத் தருமென்பர்.

"மிகமேவிய புண்ணிய பாவமெனும் வினையின்பயன்
வேறொரு சன்மமுறா, திகமேவரும்" என்பதூஉங்காண்க.

புறனடையின்மை:—எல்லாவிதிக்கும் புறனடையிருத்தல்போல் கொலைக்கும் புறனடையுண்டோ? எவ்விடத்திலாவது கொஞ்சம் கொலைசெய்து கொள்ளலாமோ? எனின், யாண்டும் உயிர்க்கொலைசெயல் கூடாதென்பதே மேலோர் கருத்தாம்.

"தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை"

என்பதே இதற்குப்போதிய சான்றாகும். கொஞ்சங்கொலை மிக்ககொலை எனப்பாகுபடாது உடம்பினின்றுயிரைப் பிரித்தலாகிய எல்லாக்கொலையும் கொலையேயாதலின் இதற்கு விலக்குவிதியிலதாயிற்று.

கொல்லாமைச்சிறப்பு:—கொல்லாமையாகிய பேரறம் துறவறவியலின்கண் வைத்தோதப்படுதலின் துறவிகட்கே யுரியதாமல்லது இல்லறத்தார்க் குரியதாவதில்லையே என்னிற்கூறுதும். துறவிகளாவார்

"மற்றுந் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்க
லுற்றார்க் குடம்பு மிகை"

என்றவாறு எல்லாவற்றையும் முற்றத்துறந்த மெய்ஞ்ஞானிகளாவர். அவர் செயல்களோ.

"பெருமை சிறுமையில்லை பின்னு முன்னு மில்லை
வரையற்று வேண்டியசெய் வார்"

என்றவாறு விதிவிலக்குகட் குட்படுவனவல்ல. ஞானிகள் செயலெல்லாம் விதியாகவே கொள்ளத்தக்கன. இப்படியிருந்தும் அத்துறவிகளே கொல்லாமை அறத்தைக் கைப்பற்ற வேண்டுமென்பதுவிதியாக அமையுங்கால் விதிவிலக்கு வரம்புக்குட் கட்டுப்பட்டு நடக்குங் கடப்பாடுடையராய் இல்லறத்தார் அவ்விதிக்குக் கட்டுப்பட வேண்டுமென்பது கூறாமலேயமையும். துறவிகள் அருளுடையராதல்பற்றி அருட்டன்மைவாய்ந்த கொல்லாமையைத் தலைமைபற்றித்துறவறத்தின்கண் வைக்கப்பட்டவாறும், அரசனுக்குப் பிரதிநிதியாகிய மந்திரியானவன் இச்சட்டத்தை மீறலாகாதெனின் ஏனையர் அச்சட்டத்தை மீறலாகாமைவலியுறுத்தியவாறேயாம். கல்விஎன்பது தலைமைபற்றி அரசியலில் வைத்தோதப்படுவதால் அரசனொருவனே கற்கவேண்டும். ஏனையர்க்குக்கல்வி அவசியமின்று. எனக்கூறலாமோ? எல்லார்க்கும் பொதுவகையான் வேண்டப்படுங் கல்வி அரசனுக்குச் சிறப்புவகையான் வேண்டப்படுதல் நோக்கி அதனை அரசியலில் வைத்தோதியவாறும். அருளாட்சியுடைமைகருதித் துறவறத்தின்கண் வைத்தோதப்பட்ட கொல்லாமையானது எல்லார்க்கும் இன்றியமையாப் பேரறமாமென்பதே தேற்றம். ஏனையெல்லா வறங்களுள்ளுந் தலைசிறந்த நல்லறங்கொல்லாமையேயாமென்பதை.

"ஆனை யடியி லடங்கா வடியில்லை
தானதுபோ னிற்கின்ற தன்மையா—லூனுயிரைக்
கொல்லா வறத்தின் கொழுநிழற்கே யுள்ளடங்கு
மெல்லா வறமு மிசைந்து"

"கொன்றா னுகருங் கொடுமையை யுண்ணினைந்
தன்றே யொழிய விடுவானே—லென்று
மிடுக்க ணெனவுண்டோ வில்வாழ்க்கைக் குள்ளே
படுத்தானுந் தன்னைத் தவம்"

"கொலையிலா னுதவு மன்னங் கூறிற்பே ரமுத மாகுங்
கொலையுளா னுதவு மன்னங் கூறில்வல் விடம தாகும்
புலையர்தம் மனையி லுண்போன் புலையனு மாறு போலக்
கொலைஞர்தம் மனையி லுண்போன் கொலைஞனே யாவ னன்றே"

"கொலையாதி நெறியகன்ற ஞானந்தானே
கூறரிய மேலான ஞானமாகுங்
கொலையாதி யகன்றொழுகுந் தவங்கடாமே
குற்றமிலா நற்றவமென் றுரைக்குநூலுங்
கொலையாதி யகற்றியநல் லறங்கடாமே
குவலயத்தி லொப்பரிய வறங்களாகுங்
கொலையாதி யகன்றுபெறுஞ் செல்வந்தானே
கூறிலுயிர்க் கிதமான வாழ்வதாமே"

"நன்றிக்கு வித்தாகு நல்லொழுக்கந் தீயொழுக்க
மென்று மிடும்பை தரும்" எனவருவன பலவாம்.

இவற்றால் கொல்லாவிரதத்தை மேற்கொண்டவர்களே தவமுடைய ராவரென்பதும், அவர்களிடும் அதிதியுணவு அமுதம்போலு மென்பதும், இல்லறத்தார் செயற்பாலவாகிய தண்ணீர்ப்பந்தல் கல்விச்சாலையாதிய அறங்களெல்லாம் கொல்லாமை மேற்கொண்டவர்களாற் செய்யப்பட்டால் மட்டும் பெரும்பயன் விளைக்குமென்பதும், எத்தகைய பெரும்புண்ணியங்களைச் செய்யினும் கொல்லாவிரதிய ரல்லாதாராற் புரியப்படின் அவை பயன்விளையாவென்பதும் பிறவும் பெறப்பட்டன.

வேதவிதிப்படி செய்யப்படுவனவாகிய யாகங்களைப்பார்க்கினும், கொல்லாமையே சிறந்தது என்பது தேவர்கருத்தாதல்.

"அவிசொரிந் தாயிரம் வேட்டலி னொன்ற
னுயிர்செகுத் துண்ணாமை நன்று"

என்னும் வாயுறை வாழ்த்தே நிலைநாட்டுவதாம்.

கொல்லாமையே பெரும்புண்ணியமென்பது:—எல்லா அறங்களையுங் கூறியருளிய பொய்யில்புலவர்.

"அறவினை யாதெனிற் கொல்லாமை கோறல்
பிறவினை யெல்லாந் தரும்"

எனக் கொல்லாமையே தலைசிறந்த பேரறமாமென வற்புறுத்தியருளினர். இவர்தாமே

"யாமெய்யாக் கண்டவற்று ளில்லை யெனைத்தொன்றும்
வாய்மையி னல்ல பிற"

எனப் பொய்யாமையைத் தலைசிறந்த பேரறமாகத் தம்மேல்வைத்துத் தாமே கரிகூறுவாராயினர். இவற்றால் கொல்லாமைதான் சிறந்த அறமோ? அன்றிப் பொய்யாமைதான் சிறந்த அறமோ? என ஐயுறுதற் கேதுவாமேயெனின், இவ்வையப்பாடெய்து மென்பதையும் அவரறிந்தே அவ்வையத்தை விலக்கிக் கொல்லாமையே எல்லா அறங்களினுஞ்சிறந்த பேரறமாமென்பதைப் பசுமரத்தாணிபோல நிலைநாட்டுவாராகவே,

"ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று"

எனத் திருவாய்மலர்ந்தருளினர்போலும். இங்ஙனமாகவும் சில்வாழ்நாட்புலாலுடம்புபேணைக் கருதிக் கொலைபுரிவார் தங்கொடுஞ்செயலென்னே! அந்தோ! பரிதாபம்.

"கொல்லா விரதமொன்று கொண்டவரே நல்லோர்மற்
றல்லாதார் யாரோ அறியேன் பராபரமே"

"கொல்லா விரதங் குவலயமெ லாமோங்க
வெல்லார்க்குஞ் சொல்லுவதென் னிச்சை பராபரமே"

# (20) வாய்மை.

வாய்மை எனினும் உண்மை யெனினும் ஒக்கும். வாய்மை என்பது வாயின்றன்மையாம். உள்ளதை உள்ளவாறு கூறுதலே அது. இதனால் உண்மை பேசுதற்கென்றே வாய் அமைக்கப்பட்டதென்பது ஆன்றோர் கொள்கை. இதனை:—

“பேயன்ன புறச்சமயப் பிணக்குநூல் வழியனைத்தும் பிழையே யன்றி, வாயன்மை தெளிந்துசைவ சித்தாந்த வழிதேறி யதீத வாழ்விற், போயஞ்சி யஞ்செழுத்துந் திருநீறுங் கண்டிகையும் பொருளாக் கொண்ட, நாயன்மார் திருக்கூட்டஞ் சென்றிறைஞ்சும் பெரும்பேறு நான்பெற் றேனால்”

என்னும் திராவிடமாபாடிய கர்த்தராகிய மாதவச் சிவஞான யோகிகள் திருவாக்கில் வாயன்மை எனற்கு உண்மையல்லாமை எனப் பொருள்தரக் கூறியருளினமை யுணர்த்தாநிற்கும்.

வாய்மையின் போதுத்தன்மை:—புறப்பொருள்களிலுள்ள அழுக்கைப்போக்கிப் புனிதப்படுத்தும் நீர்போல அகப்பொருளாகிய மனத்தின்கண் படிந்துள்ள மாசுநீங்கப்புரிந்து நிர்மலமாக்கி வைப்பது வாய்மையேயாம். புறவிருளைப்போக்கிப் புறப்பொருள்களை நமது முகக்கண்ணுக்குவிளக்குகின்ற சோமசூரியாக்கினியென்ற முச்சுடர்களாலும் நீக்கமுடியாத ஐயந்திரிபு அறியாமையென்னும் அகவிருளைநீக்கி உண்மைப்பொருளை நம் அகக்கண்ணுக்கு விளக்கிக்காட்டும் மணிவிளக்குப் போல்வதும் இவ்வாய்மையேயாம்.

“புறந்தூய்மை நீரா னமையு மகந்தூய்மை
வாய்மையாற் காணப் படும்”

“எல்லா விளக்கும் விளக்கல்ல மாந்தர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு”

என்பன தேவர் வாக்கு. இது மூன்று வகைப்பட்டு நிகழ்வதாகும்

(1) மெய்ச்சிந்தை:---கடவுளியல்பு புண்ணிய பாவத் தன்மை மோக்ஷ நரக வியல்பு பிறப்பிறப்புகளின் முறை இத்தகையவான அறி

யவற்றைப்பற்றி வேதாகமாதி முதனூல்களும் ஆன்றோர்களும் கூறியருளியவற்றை உள்ளவாறுணர்ந்து பற்றுக்கொள்ளலே மெய்ச்சிந்தையாம்.

(2) மெய்யுரை;—அறிந்த விஷயத்தை அறிந்தபடியே கூறுதல் மெய்யுரையாம்.

(3) மெய்யொழுக்கம்:—தாம் மேற்கொண்ட கருமத்துக்கேற்ற கோலமும், கோலத்துக்கேற்ற நடையும் கோடலே மெய்யொழுக்கமாம்.

ஆகவே மனம் வாக்குக் காயங்களாகிய திரிகரணங்களாலும் உண்மையாகவே நடக்க வேண்டுமென்பது பெறப்பட்டது. இவற்றுள் வாய்மை யென்பது மெய்யுரையைப் பற்றியே பெரும்பாலும் வழங்கப்படுமென்க.

மெய்யுரை விளக்கம்:—அறிந்தவொன்றை அறிந்தவாறே கூறுதல் தான் மெய்யுரை யென்பது மேலே யுணர்த்தப்பட்டது. ஆயின் "வாய்மை யெனப்படுவ தியாதெனில் யாதொன்றுந் தீமை யிலாத சொலல்" எனவும்,

"பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனில்" எனவும் தேவர் விதி வகுத்தனரே.

இதனால் அறிந்ததை அறிந்தவாறே கூறுதல் தான் மெய்யுரை யென்பது எவ்வாறு பெறப்படும்? என்னிற் கூறுதும். எல்லாச் செயல்களும் அவை தருகின்ற பயனை நோக்கியே நல்லன தீயன எனப் பகுக்கப்படும். செயலளவாற்றீயன வாகத் தோன்றி நன்மை பயப்பனவும், செயலளவால் நல்லனவாகத் தோன்றித் தீமை பயப்பனவும் உண்டு. களவு ஐம்பெரும் பாவத்துள் வைத்தெண்ணப்பட்டுக் கடியப்பட்டதொன்றே யாயினும் அக்களவு நன்மை பயப்பதாயின் தீமையாகாது. தன் சுற்றத்தாரோடு பிணக்குற்ற பேதைப்பெண்ணொருத்தி சினப்பெருக்காற் றன்னுயிரை விடுப்பக்கருதி விடத்தைச் சேர்த்து வந்து யாருமில்லாத வேளையி லெடுத் துண்ணவேண்டி ஒருதனி யிடத்தில் (அவ்விடத்தை) மறைத்து வைத்தனள். இஃதறிந்த ஒருவன் அவளுயிரைக் காப்பது கருதி அவளறியாமல் அவ்விடத்தைத் திருடிச்சென்று உகுத்தான். பின்னர் அவள் தான் கரு

தியவாறு யாருமில்லாத சமையத்தில் தான் வைத்த விடத்தைப் பார்த்தனள். அங்கு அது இல்லை. அப்பொழுது சற்று வருந்தினள். பின் வரவர கோபந்தணிந்தது. உயிர் துறப்பதாகக்கொண்ட எண்ணத்தை மாற்றிக் கொண்டனள். இங்கே விடத்தைக் களவுசெய்யாவிடில் அப்பெண் இறந்துபடுதலுறுதி. அவளுயிரைக்காப்பது வேண்டியே அவன் விடத்திருடனுனன். இக்களவு செயலளவாற் களவேயாயினும் பயனளவால் ஒருயிரைக் காத்த புண்ணியமேயாயிற்று. இது போலவே செயலளவால் வாய்மையாகத் தோற்றப் படுவனவெல்லாம் வாய்மையாகாமையையும் காட்டுதும். சாத்தனென்பவனைக் கொல்லக்கருதிக் கொற்றனென்பவன் ஆயுதபாணியாகத் துரத்தி வருகிறுன். சாத்தன் பயந்து விரைந்து ஓடிச்சென்று ஒரு முடுக்கு வழியில் மறைந்தான். அந்த இடத்தில் தேவனென்பவன் நின்று சாத்தன் ஓடி மறைந்ததையும் கொற்றன் கொலைக் கருத்தனுகத் துரத்தி வருவதையும் கண்டிருக்கிறுன்.

ஆயுதபாணி யாகவந்த கொற்றன் தேவனை நோக்கி "முன்னே ஓடிவந்த சாத்தன் எவ்வழிச் சென்றனன்" என வினவுகின்றனன். இந்நிலையில் தேவன் கூறத்தக்க விடை யாது? சாத்தன் சென்றவழியைக் கூறினுல் கொற்றன் சென்று சாத்தனைக் கொன்று விடுவான். அப்பொழுது சாத்தன் கொல்லப் படுவான். கொற்றன் கொலைப் பாவத்துக்குட் படுவான். ஆதலின் சாத்தன் ஓடிபொளித்த வழியைக் கூறுது. வேருெரு கவர் வழியைக்காட்டி இந்நெறியிற்றுன் சாத்தனேடுகின்றுன் எனக் கூறினுல் அவ்வழியிற் சிறிதுதூரஞ் சென்று சாத்தனைக் காணுது கொற்றன் மீள்வன். இப்பொழுது சாத்தனும் பிழைப்பன். கொற்றனும் கொலைப்பாவத்தினின்று மீட்கப்படுவன். இவ்விதமாக யாருக்கும் தீங்கு நிகழாமல் எல்லார்க்கும் நன்மையே விளையும்படி பேசுவது தான் வாய்மை யெனப் படும். இந்த நிலையைக் கருதித்தான் "யாதொன்றுந் தீமையிலாத சொலல்" எனவும், "புரைதீர்ந்த நன்மை பயக்குமெனின்" எனவும் தேவர் கூறுவாராயினர். யாருக்கும் எவ்வித தீமையும் உண்டாகாமலும் எல்லாருக்கும் நன்மையே தருவதாகவும் சொல்லப்படுவது தான் வாய்மையாம். இங்ஙனமன்றித் தனக்கேனும் தன்னைச் சார்ந்தார்க்கேனும் நன்மை பயக்கக்கருதியும், தன் மாற்றார்க்குத் தீமை பயப்பது கருதியும் தானறிந்ததை மறைத்துக் கூறுவது வாய்மையாகாது.

வாய்மையின் பயன்:—வாய்மை யுடையோர் இம்மைக் கண்ணே எல்லாச் சிறப்புக்களையும் அடைவர். எல்லாராலும் புகழப் படுவர். அவர்க்குக் கிட்டாத அரும்பொருள் எதுவுமில்லை. வாய்மையானது இம்மையில் நன்மை தருவதுடன் மறுமைப் பேற்றையும் தரும். வீடு பேற்றையும் தரும். சுருங்கச் சொல்லின் ஒருவனுக்குச் சகல நன்மைகளையும் தருவது வாய்மையேயாம். இதனால் எக்காலத்தும் எக்காரணத்தாலும் வாய்மை தவறாதொழுகவேண்டும்: இதனை

"வாய்மையின் வழாது மன்னுயி ரோம்பினர்க்
கியாவது முண்டோ வெய்தா வரும்பொருள்" என்னும் சிலப்பதிகாரத்தாலும்,

"பொய்யாமை யன்ன புகழில்லை யெய்யாமை
எல்லா வறமுந்தரும்" என்னும் வாயுறை வாழ்த்தானும் அறிக.

வாய்மைச் சிறப்பு:—வாய்மை யென்னுமிப் பேரறத்தைக் கைக்கொண்ட வொருவன் வேறு அறங்களைச் செய்யாவிடினும் எல்லா அறங்களையும் செய்தவனாவன் என்பதை:—

"பொய்யாமை பொய்யாமை யாற்றி னறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று" என்ற உத்தரவேதமே வலியுறுத்துவதாம். அன்றியும்

"தூஉய்மை யென்ப தவாவின்மை மற்றது
வாஅய்மை வேண்ட வரும்" என்பதில் வாய்மை என்ற சொல் பரம்பொருளைக் குறித்து நிற்பது நோக்கத் தக்கதாம்.

அரிச்சந்திரனும் அவன் மனைவியும் மகனும் வாய்மை வழுவாமையையே பேரறமாகக்கொண்டு எத்தனையோ பெருந்துன்பங்கள் அடுக்கடுக்காக வரவும் மனந்தளராது அவ்வாய்மையே தாம்பெற்ற பெரும் பேறாகக் கருதியிருந்தமையால் இற்றைக்கும் அழியாப்புகழுடம்புடன் வாழ்கின்றாரென்பது சிந்திக்கற்பாலதாம்,

"தருமத்தைச் செய், சத்தியத்தைப்பேசு" என்று வரையறுத்து விதிவகுத்து வேதங் கோஷிப்பது கொண்டும் இதன் சிறப்புப் பசுமரத்தாணி போல் நிலைநாட்டப் படுமென்க.

"இம்மை யம்மைவீ டெனமறை புலங்கொள வியம்பு
மும்மை யுந்தரு முறைபுடைத் தெனுநிலை முரணி
யெம்மை யாழ்வயிற் றடக்கிமீட் டுமிழ்சலா வெரிவாய்
வெம்மை சூர்நர குய்க்கினு மெய்ம்மையை விடேமால்"

"உவமந் தீர்ந்திடு வாய்மையொன் றேயுறி னுலகிற்
றவமுந் தானமு மொருங்குறச் செய்தலிற் றலையாய்ப்
பவம கன்றுநான் மறைமுடி வாகிய பரம
சிவன ரும்பதம் பெறும்படி யுயர்த்திடுந் தெரியின்"

"மெய்யே சிறந்த பெருநலமா மெய்யே யெவையு நிலைபெறுத்து
மெய்யா லழல்கால் கதிர்பிறவுந் தத்தந் தொழிலின் விலகாவா
மெய்யே யெவைக்கு மிருப்பிடமா மெய்யே மெய்யே சிவமாகு
மெய்யே பிரம பதமுமெனப் புகன்றான் வினைதீர் காசிபனே"

"உள்ளத்தாற் பொய்யா தொழுகி னுலகத்தா
ருள்ளத்து ளெல்லா முளன்"

# (21) பொய்மைத்தீமை.

மேலே கூறப்பட்ட வாய்மையின் மறுதலை பொய்மை யெனப் படும். தீமையென விலக்கப்பட்ட எல்லாப்பாவங்கட்கும் தாய்போல் இருந்து அப்பாவக் குழவிகளைப் பெற்றுவளர்த்துப் பரிபாலிப்பதான பொய்யைப் போல மக்கட்குத் தீமை பயப்பது வேறில்லை. வாய்மை யினுள்ளே அடக்கிக் கூறலாமாயினும் இதன் கொடுமை நோக்கியே வேறு வைத்துக் கூறத்தொடங்கினம்.

பொய்யென்பது:—ஒருவன் சொல்லியதொரு விஷயம் அவன் கூறியவாறில்லாதிருக்கவேண்டும். நிகழாத தொன்றை நிகழ்ந்ததாகக் கூறுவேன் எனச் சிந்தித்தல் வேண்டும். சிந்தித்தவாறு சொல்ல வேண்டும். அவ்வாறு சொல்லியதைப் பிறனொருவன் கேட்க வேண்டும். இந்நான்குங் கூடிய வழியே பொய்யாகு மென்பர். இந்நான்கு மின்றிப் பொய் தோன்றுவதில்லை யென்பதையும் காட்டுதும். ஒருவன் ஒன்றைக் கூறினால் அவன் கூறியவாறு நிகாழாதிருப்பினல்லது பொய்யாகாது. இன்னவாறு நிகழ்ந்ததொன்றை இன்னவாறு மாற்றி யுரைப்பேன் என மனத்தா லொருவன் சிந்தித்த பின்னரே வாயாற் கூறலமையும். ஆதலின் மனநினைப்பில் முதற்கட்டோன்றுது பொய் பிறத்தலமையாது. மனத்தாற் சிந்தித்த ஒருவன் அம்மட்டிலடங்கி வாயாற் கூறுது விடுவனேல் பொய்யாக மாட்டாது. வாயாற் கூறினுயினும் பிறனொருவன் கேட்டலில்லையாயின் அவன் கூற்றால் யாருக்குந் தீங்கில்லை. பிறனொருவன் கேட்டால் மட்டுமே அப் பொய்யைக் கேட்டவன் அதனை மெய்யெனக்கொண்டு அதற்கேற் பச்செய்து கேடுறுவன். ஆதலின் பிறனொருவன் கேட்க இல்லாத போது அதாவது யாருமற்ற இடத்தில் எவன் என்ன பொய்யைக் கட்டியுரைப்பினும் அப்பொய்யால் யார்க்கும் எவ்வித தீங்குமில்லை யாதல் பெறப்படும். இதனை

"அற்றன் றுத லதுதான் மனஞ்செய்தல்
சொற்றன் மாட்டு நிகழ்த்தல் பிறனோர்த்தன்
மற்றித் தன்மை படுமே லதுவன்றே
குற்றப் பொய்யென் றுரைத்தார் குணமிக்கார்" என்பதாலறிக.

வாக்கின் குற்றம்:— பொய் குறளை வன்சொல் பயனில்மொழி என வாக்கின் குற்றம் நால்வகைப்படும். இவற்றுள் அறக்கொடியது பொய்யே யாதல் பற்றி இதனையே முதற்கண்ணமைத்து

"பொய்யே குறளை கடுஞ்சொல் பயனில்
சொல்லெனச் சொல்லிற் றோற்றுவ நான்கும்"

என மணி மேகலை கூறும்.

விளையாட்டாகவும் போய்கூறலாகாது:— பொய்யாமை யன்ன புகழில்லை யென்பவாதலின் எக்காலத்தும் பொய் கூறலை விலக்க வேண்டும். ஒருவர்க்கும் தீங்குபயவாதென்றெண்ணி விளையாட்டாக வேனும் பொய்கூறலாகாது. இதைப்பற்றிய கதை யொன்றுண்டு. ஒரு சிறுவன் ஊர்ப்புறத்தே நின்று "புலி வந்து விட்டது புலி வந்து விட்டது" என்று விளையாட்டாகக் கதறினான். அம்மொழிகேட்ட சிலர் ஆயுதபாணிகளாக ஓடோடிவந்து அச்சிறுவனைக் கிட்டிப்பார்க்க அவன் நகைத்துக்கொண்டே சேய்மைக்கட் சென்றான். இவ்வாறு சிலவேளை பரிகாசஞ் செய்துவந்தானாக ஒருநாள் மெய்யாகவே புலி யொன்று வந்துவிட்டது. சிறுவன் நடுநடுங்கி வழக்கப்படி "புலி வந்திருக்கிறது" எனப்பதறிக் கதறினான். இவன் என்ன கதறியும் யாரும் துணைசெய்ய வந்திலர். பக்கத்திலிருந்தவர்கள் ஆயுதபாணிகளாக நின்றும் அச்சிறுவன் விளையாட்டுப் பையன் என்றும், பரிகசிக்கின்றானென்றுங் கருதி வாளா இருந்தனர். புலி ஒரே பாய்ச்சலில் அச்சிறுவனைப்பற்றிப் பெருந்துயர் விளைத்தது. ஆதலின் விளையாட்டாக வேனும் பொய்கூறலாகாது. என்று கிராமப் பள்ளிக்கூடங்களில் சொல்லிக் கொடுப்பதுண்டு. இதனால் விநோதங்கருதிப்பொய் கூறினுந் தீங்காகுமென்பது தெளியத்தக்கது.

"பொருளுமேலோ பத்தினாலும் புரிதரு விநோதத் தானு
மருடப வுயிரை யோம்பி வாழுதற் பொருட்டி னானு
மிருளுறு மொருபொய் கூறி னெடுத்திடு பவங்க டோறுந்
தெருடப வந்துபற்றிச் செயிர்மிக விளைக்கு மன்றே"

என்பது நம் பெரியார் கூற்றாம். ஒருவன் பொய்யனென்று பிறர் கருதப்பட்ட பின்னர் அவன் உறுதியாக மெய்யே கூறினும் அவன் கூற்றை யெவரும்மெய்யெனக் கொள்ளாது பொய்யெனவே கொண்டு அவமதித் தகல்வரென்பதும் இதனாற் பெறப்படுவதாயிற்று.

பொய்யின் கொடுமை:— "கள்ளும் பொய்யுங் காமமுங் கொலையும், உள்ளக் களவுமென் றுரவோர் துறந்தவை" எனப் பஞ்சமாபாதகத்துள் ளொன்றாகக் கூறப்படுவதாயினும் அவ்வைந்தனுள்ளும் அறக்கொடியது பொய்யே யாகும். எல்லாப்பாவச் செயல்களையும், மறைத்துவைத்துப் பாதுகாத்தற்கு வலிய அரண் இப்பொய்யே. எத்தகைய பாவஞ் செய்தாலும் பின்னர் இப்பொய்யைக் கொண்டே அதனை மறைப்பது உலகியல். இதனால் எல்லாப் பாவங்களையும் பாதுகாப்பது இது வெனப்படும். கொலை முதலிய ஏனைப்பாவங்கள் பாவவுணர்ச்சியே யின்றி விலங்காதிகளாலும் செய்யப்படும். பொய்யோ பகுத்தறிவுள்ள மனிதனால் மட்டும் வேண்டுமென்று கருதியே செய்யப்படும். ஏனைப் பாவங்களெல்லாம் ஒருவன் உடல்வலியும் பொருட் பெருக்கமும் கொண்டிருக்கும் வரையே செய்யப்படும். பொய்யோ மனமொன்றுள்ள வரை பிறிது துணைவேண்டாது தனித்தியங்கித்தீங்கியற்றும். ஏனைய பாவங்களெல்லாம் பிறிதொரு பொருளுமுடனிருந்தால் மட்டுமே செய்யப்படும். அதாவது:— கொல்லப்படுமோர் பிராணியும் கொல்லற்குரிய கருவியும் பெற்றாலன்றிக் கொலை நிகழாது. குடிக்கப்படும் கள் முதலிய இல்வழிக் குடி நிகழாது. தன் மனத்தைக் கவரும் பெண்ணொருத்தியும் பிறவசதிகளும் கிட்டினல்லது காமம் செல்லாது. தனக்கு வேண்டும் பொருளும் உடையாரில்லாச் சமையமும் கிடைப்பி னல்லது களவு நிகழாது. இங்ஙனமே எல்லாப் பாவங்களும் யாதானும் பிறிதொரு பொருட் சேர்க்கையாலே நிகழ்வனவாம். பொய்யோ இங்ஙனம் பிற துணைசிறிது மிலதாயினும் மனவுணர்ச்சி யுள்ளவரை நிகழ்வதாகும். பொய்யாகிய பெருந்துணையைக் கொண்டுதான் ஏனைய பாவங்களெல்லாம் வளர்வனவாகும். இவ்வாறு மேலே கூறப்பட்டவற்றால் பொய்யின் கொடுமை அளவிடற்கரிதெனல் புலனும்.

பொய்யின் வகை:—பொய்யுணர்வு பொய்யுரை பொய்யொழுக்கம் என மூவகைப்படும்.

பொய்யுணர்வு:—உயர்தொருண் டெனக்கருதும் வீடு பேறு முதலியவற்றை இல்லையெனக் கருதலும், அங்ஙனங் கருதியதைப் பிறரறியாவாறு மறைக்கத்தக்க வஞ்சகங்களை யோசித்தலும் பிறவும் பொய்யுணர்வாம்.

பொய்யுரை:—இதனை மேலே விளக்கிக் காட்டினும்.

போய்யொழுக்கம்:—தான் கொண்ட வேடத்துக் கேற்ப வொழு காது நல்லன போலப் பிறர்க்குக்காட்டி மயக்கித் தியனபுரிதல் பொய் யொழுக்கமாம்.

இவற்றுள் பொய்ச்சிந்தை யானது தன்னைக்கொண்டானை மட் டுங் கெடுப்பது. இதனாற் பிறர்க்குநேரே திங்கில்லை.

பொய்யுரை பொய்யொழுக்கம் ஆகிய இரண்டும் உடையானை யுங் கெடுத்து உலகத்தையும் கெடுப்பனவாம். ஆதலின் இவ்விரண் டும் மிகக் கொடியன வென்பது பெறப்படும். இவ்விரண்டனுள்ளும் பொய் யொழுக்கத்தை மிகக்கடிந்து கூறுப, "வேட நெறி நில்லார் வேடம்பூண் டென்பயன், வேடநெறி நிற்பார் வேடமெய் வேடமே" "பொய்யாற் றொழுக்கம்" "பொய்தீ ரொழுக்கம்" எனவும், "பொய் யடிமையில்லாத புலவர்" எனவும் மெய்யொழுக்க முடையார் போற் றப்படுவர்.

"நெஞ்சிற் றுறவார் துறந்தார்போல் வஞ்சித்து
வாழ்வாரின் வன்கணா ரில்" எனவும்; "இரவெலாங் காமக் கணி கையர் முயக்கி லின்பமுற் றியற்பக லெல்லாங், குரவரா யணிவெண் ணீறுருத் திராக்கங் கோலமார்ச் சாலமாங் குழைவும், பரவுபா வணையுந் தேவதார்ச் சனையும் பண்ணல்போ லுருப்பல பரப்பி, விரவு மா மணிதொட் டாட்டலும் பார்க்கின்மிகக்கொடி திவர்வஞ்சவேடம்' எனவும், பொய்யொழுக்க முடையாரைக் கடிந்து கூறுப.

ஆகவே மனமொழி மெய்களாற் பொய்யாது வாழும் வாழ்வே வாழ்வாகும்.

"ஓங்குபெரு ஞானியர்போற் பேசுவா ரவருண்மை வேடம் போலப்
பாங்குபெற வுடற்புனைவார் சற்கருமம் புரிவார்தம் பக்கமெய்தி
நீங்குகவென் றுரைப்பாரிந் நிலைமேலாம் பிரமத்தி னிலையே யென்பா
ரீங்கிவர்க டாங்கெடுவ தன்றிமற்றோ ரையுங் கெடுக்கு மெண்ணம்
[பூண்டார்"

"மிக்கவறி வுடையாரைப் போன்றுமுடற் பற்றனைத்தும் விடுத் தார்போன்றுந், தக்கவழக் கிடத்தினுயர் தினைவினையஃ றிணைவினை யாச் சமையச் சொற்றுந், தொக்கபடர்க் கைப்பெயர்முன் னிலைப் பெயரா கிடவுரைத்துஞ் சூழ்வ தெல்லாம், பக்குவமின் மடவோரை மயக்கியவர் கைப்பொருளைப் பறித்தற் கன்றோ"

"பொய்மையே பாவ மெல்லாம் விளைதரு பூமி யாகும்
பொய்மையே பிறவி யெல்லாம் புகப்புரி வித்து மாகும்
பொய்மையே வறுமை யெல்லாம் போதரப் புரிவ தாகும்
பொய்மையே நரகமெல்லாம் புகுதரப் புகுத்தா நிற்கும்"

"பொய்யுளான் மறந்தோர் மெய்மை புகலினும் பொய்மையாகும்
உய்யுமா றென்று மில்லை யுறுதியென் பதுஞ்சா ராது
கொய்யுமா மலர்ப்பூஞ் சோலை சூழ்குவ லபத்து நாளு
நையுமா றெது செய் தாலும் பொய்நவி லாமை வேண்டும்"

"இம்மை நலனழிக்கு மெச்சங் குறைபடுக்கும்
அம்மை யருநரகத் தாழ்விக்கும்—மெய்ம்மை
அறந்தேயும் பின்னு மலர்மகளை நீக்கும்
மறந்தேயும் பொய்யுரைக்கும் வாய்"

"தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும்"
"வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்க
ளைந்து மகத்தே நகும்"

"தான்கெடி னுந் தக்கார்கே டெண்ணற்க தன்னுடம்பி
னூன்கெடினு முண்ணார்கைத் துண்ணற்க—வான்கவிந்த
வையக மெல்லாம் பெறினு முரையற்க
பொய்யோ டிடைமிடைந்த சொல்"

# (22) நட்பு.

நட்பு எனினும் நட்டல் எனினு மொக்கும். இருவர் மனம் ஒன்றுபட்டுக் கலந்து நிகழ்வதே அதுவாகும்.

நட்பின் தோற்றம்:—புணர்ச்சி 'பழகுதல்' உணர்ச்சி யொத்தல் எனமூவகைப்படும். இவற்றுள் முதலிரண்டும் இயற்கை நட்பெனவும், இறுதியது செயற்கை நட்பெனவும் கூறுவர். இயற்கை யாவது வேண்டுமென ஆராய்ந்து தேடிக்கொள்ளாமல் இயல்பாகவே வருவது. செயற்கையாவது வேண்டுமெனக் கருதிப் பல்லாற்று னாராய்ந்து தெளிந்து தேடிக்கொள்ளப்பட்டு வளர்வது, இவற்றுள்:—

புணர்ச்சி:— பிறப்பின் முறையாற் சுற்றத்தா ராயினார் பால் இயல் பாகவே வருவதான மனப்பற்று. இந்த நட்பு அறிவு வளர்ச்சி யில்லார் கண்ணும் காணப்படும். அன்றிச் சிற்சில பக்ஷி மிருகங்கள் பாலும் காணப்படும்.

பழகுதல்:—ஒரு தேயத்தா ராதலாலும் ஓர் ஊரின ராதலாலும் தாம் அடுத்தடுத்துப் பல்காற் பழகுதலால் ஒருவர் மீதொருவர்க்குள தாகும் மனப்பற்று. இது வேற்றுச் சாதியார் பாலும் பழக்க மிகுதி யால் வருவதொன்றும் ஆதலின் புணர்ச்சியின் வேறாக வைத்துக் கருதப் படுவதாயிற்று. இவ்விருவகை நட்பும் நுணுகிய அறிவுடை யார் மாட்டு மட்டும் நிகழ்வதாக அமையாமல் எல்லாரிடத்தும் நிகழ் வன வாதலின் இயற்கை நட்பெனப்படும்.

உணர்ச்சி யொத்தல்:—இதுதான் இருவர் மனம் ஒன்று பட்டுக் கலப்பெய்துவதால் வருவது. ஒருவன் வேண்டுமென்றே பலவகை யுபாயங்களாலும் ஆராய்ந்து தெளிந்த பின்னர் இருவரும் மனவொற் றுமையுடன் நிலைத்திருக்கச் செய்யும் பேராற்றலுடையது. தானாக ஆய்ந்தாய்ந்து தேடிக்கொள்ளப் படுவதாதலின் செயற்கை நட்பெனப் பட்டது. இவண் இந்த நட்பைப் பற்றியே இனிப் பேசப்படுமென்க.

மனக்கலப்பு:—தனித் தனியாகச் செல்லத்தக்க இருவர் மனம் ஒரு தன்மைப்பட்டு நிற்பதே அதுவாம். பாலும் நீரும் கலப்பது போல்வது. மனங்கலந்து நட்புக் கொண்டவர்களைப் பற்றிக்கூறுமிடத்

துப் பாலு நீரும் கலந்த நிலையையே யொப்பிடுவர். இதன் கருத்தாவது:— பாலுடன் நீரைக் கலந்தவுடன் பாலானது தன் தன்மையை நீருக்குக் கொடுக்கின்றது. பால் வேறு நீர் வேறு காண்டலரிது. இங்ஙனங்கலந்தபின அடுப்பிலேற்றிக் காய்ச்சினால் நீர்சுவறுண்டுபோகும். உடனே பால்பொங்கி நெருப்பில் விழும். நீர் தெளித்தால்பொங்குதலடங்கிவிடும். இத்தோற்ற மெவ்வாறெனில் ஒருவன் தன்னிற் றாழ்ந்தானொருவன் றன்னொடு நட்புக்கொண்டாலும் தன்னைப் போலக்கருதல்போற் பால் தன் தன்மையை நீருக்குத்தருவதெனவும், தன்னைப்போலாக்கிப் பெருமைப்படுத்திய பாலுக்கு ஆபத்துவந்ததை அதன் நண்பனான நீர் அறிந்து பால் சுவறுமுன்னே தான் சுவறுதலுறக் கருதியது போல நீர் சுவறுகின்றது எனவும், தன் நண்பனாகிய நீரை நெருப்புச் சுவறச்செய்ததைப் பொறாது தானுந் தன் நண்பனைத்தேடி நெருப்பில் விழக்கருதி எழுந்து கிளம்பியது போலப் பால் பொங்குவதெனவும், அது கண்ட நண்பனாகிய நீரானது நீ நெருப்பில் விழாதே நான் இதோ வந்துவிட்டேனென வருதல்போல நீர் தெளிக்கப்படுகின்றதெனவும், தன் நண்பன் வரவால் தான் மகிழ்ந்தடங்குவது போல பால் பாத்திரத்துள்ளடங்குவதெனவும், நண்பர்களிப் பெற்றியராக இருக்கவேண்டுமெனவும் கூறுவார்.

நட்பின்றிட்பம்:—"இனைய ரிவரெமக் கின்னம்யா மென்று
புனையினும் புல்லென்னு நட்பு"

என்றவாறு, நான் அவர் என்று இருவராகக் கருதப்படுதலின்றி நண்பன்செய்த செயலெல்லாந் தான்செய்ததாகவே கருதவேண்டும். இவ்வாறு நட்புக்கொண்டவருள் துரியோதன கர்ணர்களையே உதாரணங்காட்டல்சாலும். துரியோதனன் மனைவியும் கர்ணனும் பொழுதுபோக்கின்பொருட்டு ஏதோ விளையாடிக்கொண்டிருந்தனர். அவ்விளையாட்டில் துரியோதனன் மனைவி தோல்வியுற்றிருந்த சமையத்தில் அங்கே துரியோதனன் வரவே அதனையறிந்த அம்மங்கை எழுந்து ஓடப்பார்த்தனள். கர்ணன் நீ தோற்றுப்போய் ஓடவிடமாட்டேன் என்று அவள் முன் சீலையைப்பற்றி யிழுத்தான். இழுத்தமையால் அம்மேகலையில் அமைந்த மணிகள் சிதறின. துரியோதனனும் வந்தான். தன்மனைவியின் முன்தானையைப்பற்றி யிழுத்துக்கொண்டு தனியிடத்தில் கர்ணனும் தன்மனைவியு மிருப்பதைக்கண்டான். துரியோதனனைக் கண்ட கர்ணன் சற்றுத்திகைத்து நடுங்கினனாக அதனையறிந்ததுரியோ

தனன் "சிதறுண்ட இம்மேகலைமணிகளைக் கோக்கவா? பொறுக்கவா? யானெதுசெய்யவேண்டும்?" என்றனனும். தன்மனைவியின் முன்றானையைப்பிடித் திழுத்துக்கொண்டு ஏகாந்த இடத்தி லிருக்கக்கண்டபோது யாரே மனஞ்சகிப்பர்? இதுபற்றித்தான்

"மடந்தைபொற் றிருமே கலைமணி யுகவே மாசறத் திகழுமே காந்த, விடந்தனிற் புரிந்தே யானயந் திருப்ப வெடுக்கவோ கோக்கவோ வென்றான், றிடம்படுத் திடுவே லிராசரா சனுக்குச் செருமுனைச் சென்றுசெஞ் சோற்றுக், கடன்கழிப் பதுவே யெனக்கினிப் புகழுங் கருமமுந் தருமமு மென்றான்"

என்று பாராட்டிக் கூறினர் வில்லிபுத்தூரார். இங்ஙனமே இராமபிரான் சுக்கிரீவனை நட்புக்கொண்டபோது,

"மற்றினி யுரைப்ப தென்னே வானிடை மண்ணி னின்னைச்
செற்றவ ரென்னைச் செற்றார் தீயரே யெனினு நின்னோ
டுற்றவ ரெனக்கு முற்றா ருன்கிளை யெனதென் காதற்
சுற்றமுன் சுற்ற நீயே யின்னுயிர்த் துணைவ னென்றான்"

என்பதும், பின் விபீஷணன் வந்தபோது

"குகனொடு மைவ ரானோம் வனத்திடைக் குன்று சூழ்வான்
மகனொடு மறுவ ரானோம் வாரிதி கடந்த பிற்றை
யகனமர் காத லைய நின்னொடு மெழுவ ரானோம்
புகலருங் கானந் தந்து புதல்வராற் பொலிந்தா னுந்தை"

என்று கூறியதும் கருதற்பாலன. இவற்றுள் விபீஷணனை நோக்கி உந்தை என்று தசரதனைக் கூறிய நட்புரிமைத்திறம் மிகவும் வியக்கற்பாற்றேயாம்.

பிரிவில் வருந்துவது:—நட்பினரைப் பிரியும்படி நேரிட்டால் அதுவே பெருந்துக்கமாம். "பசைந்தாரிற் றீர்தலிற் றீப்புகுதனன்று" என்பது இதனையுணர்த்தும் "பேயோடு பழகுறினும் பிரிதலரிதரிதென்று, தூயோர்கள் புகழ்வரால்" என்பதுங்காண்க. ஒருவன் தண்டனைபட்டுச் சிறைச்சாலையில் சிலவருஷமிருக்கையில் அவன் சில எலிகளை வளர்த்துவந்து தண்டனைக்காலங்கழிந்தவுடன் சிறைச்சாலையைவிட்டு மீளுங்கால் அந்த எலிகளைப் பிரிய மிகவருந்தினனென்பது ஆங்கிலங்கற்றார் பலரும் மறிந்த கதையாகும்.

உயிரையுந்துறப்பது:— தசரதச்சக்கரவர்த்தி யுயிர்நீத்ததை யறிந்த சடாயு நட்புரிமையாற் புலம்பியழுதிரங்கி நெருப்பிற் குதித்து இறக்கப்புக்கதனை

"பருவினிய குணத்தவரை யிருசிறகா லுறத்தழுவி மக்கா ணீரே
யுரியகடன் வினையேற்கு முதவுவீ ருடலிரண்டுக் குயிரொன் றானான்
பிரியவுந்தான் பிரியாதே யினிதிருக்கு முடற்பொறையாம் பிழைபாரா
தெரியதனி னின்றேபுக் கிறவேனே யித்துயர மறவேனென்றான்"

என்னும் கம்பர் வாக்காலும், இராமலக்குவர் பிரார்த்தனைக் கிணங்கி அவர்க்குத் துணைசெய்யவே சின்னாளுயிருடனிருந்து சீதையின் பொருட்டு இராவணனொடு பொருது உயிர்நீத்ததும் உலகப்பிரசித்தமாம். அன்றியும், கோப்பெருஞ்சோழ னுயிர்நீத்தலும் அதுகேட்ட அவன் நட்பாளரான பிசிராந்தையாரும் உடனிறந்தமையை திருக்குறளுரையானும், தொல்காப்பிய வுரையானுந் தெளிக. இன்னோரன்ன சரிதங்களால் உயிரினுஞ் சிறந்தது நட்புரிமை யென்று கொள்ளத்தகும்.

நட்பினர் கடமை:— இச்சகம் பேசுங் கொச்சை மக்களைப் போலாது தீயவழியிற் செல்லுங்காலிடித்துரை கூறித்தடுத்து நல்வழியிற் செலுத்தலும், ஊழாற்றுன்ப மெய்தியக்கால் நீரற்ற குளத்து ஆம்பலாதி மலர்கள் போலத் தாமும் துன்பமெய்தலும், உடலாலிருவரேயாயினும் உயிரால் ஒருவரே போறலும், அறிவின் ஒற்றுமை பெறுதலும், நுனியிலிருந்து கரும்புதின்றாற்போன்று நாளுக்குநாள் இன்பமிக்கெய்தலும், துன்பமுற்றக்கால் உயிரையுங் கொடுத் துதவலும் இவைபோல்வன பிறவும் நட்பினர் கடமைகளாம். இத்தன்மையுடையாரே நட்பிற்குரியராவார்.

> "நகுதற் பொருட்டன்று நட்டன் மிகுதிக்கண்
> மேற்சென் றிடித்தற் பொருட்டு"

> "உடுக்கை யிழந்தவன் கைபோல வாங்கே
> இடுக்கண் களைவதா நட்பு"

"அழிதரு நெறியிற் செலவினை விலக்கி யாம்வழிச் செலுத்தியூழ் வினையா, லழிவுவந் தடுப்பி னதற்குட னல்லாந் தாக்கைவே றன்றியா ருயிர்கள், ஒழிவகை யின்றி யுணர்ச்சியொத் தருநூ லுணர்தொறு நுண

யம் போலக், கழிமகிழ் நாளும் பயின்றும் வளரக் கலப்பதே நட்பெனப்படுமால்"

என்பனவற்றால் நட்பினர் கடமைகள் இனையன வெனவொருவா றறிந்துகோட லமையும்.

நட்பின் அவசியம்:—ஒருவனுக்குத் துன்பம் வந்தபோது அத்துன்பத்தை வெளிவிடாது மனத்துள் ளடக்கிவைத்திருந்தால் மேன்மேற் பொங்கித் துன்பமெழுதலால் மனமுடைந்து பெரும் பிணியாளனாக வேண்டிவரும். அத்துன்பங் குறையவேண்டுமேல் தன் நண்பனிடம் கூறுவதே தக்க வுபாயம். நண்பனிடம் கூறியவுடன் துன்பத்தின் பாரஞ் சற்றுக் குறையும். நண்பன் கூறும் ஆறுதல் வசனங்களாலும் அதனை நீக்கச் செய்யு முபாயங்களாலும் அத்துன்பம் அறவேயொழிதலுங்கூடும். ஆகவே, துன்பத்தைப் பங்கிட்டுக் கொள்பவர் நண்பரேயாவர். இன்பம் வந்தபோதும் அதனை நண்பரிடம் கூறுவதால் அவ்வின்பம் முன்னிலும் பன்மடங்கு அதிகப்படும். இங்ஙனம் துன்பத்தைக் குறைக்கவும் இன்பத்தை வளர்க்கவும் நண்பர்களே புரியராவர். பகை வெல்லுதல் முதலிய பிறபயன்களும் நட்பாலுண்டாமாயினும் பகையில்லாவிடத்து நட்பாற் பயனின்றாமேயெனக் கருதல் கூடும். இன்பதுன்பங்க ளில்லாக்காலம் இல்லையாதலின் இன்பவளர்ச்சி துன்ப நிவிர்த்தி ஆகிய இடையறாப் பலன் நட்பாலுண்டாதல் கருதி வலியார் முதல் எளியார் வரை எல்லாரும் தத்தமக்கு ஏற்ற நட்புடையாரைக் கொண்டே வாழவேண்டும்.

கடவுளர்க்கும் நட்புளதாம்:—கண்ணன்-அருச்சுனனையும், குசேலரையும் நட்புற்றதும், சிவபிரான்-குபேரனையும், சுந்தரமூர்த்திசுவாமிகளையும் நட்புற்றதும் நூல்களானறியலாம். இதனை:—

"இளமையி னின்னோ டிருங்கலை கற்ற வெழிலிபோல் வண்ணனிற் கண்ட, வளவையே யெல்லாப் பேசரு வளனு மளிக்குவ னன்னதா லன்றோ, பளகறு நேய னொருவனைப் படைத்தல் பருந்தனப் பொதிபெற்றாற் போன்மென், றுளமிகத் தெளிந்தோர் புகலுநன் மாற்ற முண்மையாம் பொய்ம்மையா காதே"

"அறிந்து செல்வ முடையானு மளகைப் பதியாற் றோழமைகொண் டுறழ்ந்த கல்வி யுடையானு மொருவன் வேண்டு மெனநினைந்தோ

துறந்த முனிவர் தொழும்பரவை துணைவா நினைத்தோ றமைகொண்
சிறந்த வறிவே வடிவமாத் திசமூ நூதற்கட் பெருமானே" [டான்

என்னுஞ் செய்யுட்களாலும், "அரனுடைத் தோழன்" எனக் குபேரனும், "தம்பிரான்றோழன்" எனத்திருநாவலூரரும் பேர்பெற்றமையாலும் கடவுளர்கட்கும் நட்புரிமை அவசியம் வேண்டுமென்பது செவ்விது நிலைநாட்டப்படுவதாகும்.

நட்பாராய்தல்; — நம்முடன் அடுத்துப் பழகுவாரனைவருமே நட்பாளரெனப்படார். பற்பலபேர்களுடன் பழகி ஆராயப் புகுந்தால் உண்மை நட்பாளராவார் ஒருவ ரிருவர் கிடைப்பதுமருமை. "ஊரிலொருவனே தோழன்" என்பது நம் நாட்டுப் பழமொழி. நட்டற்குரியரா யடுப்பவரைப்பற்றிப் பற்பலவாறு ஆராய்ந்து தெளிந்தபின்னரே நட்புக்கொள்ளவேண்டும். நண்பராகக்கொள்ளுமுன் அவரது குணத்தியல்பையும், குடிச்சிறப்பையும், அவரிடமுள்ள குற்றங்களையும் கவனித்தறியவேண்டும். அவருக்கு நட்பாளராகவுள்ளவர்கள் யாவரெனத் தெரிந்துகோடல் மிகவும் அவசியம். "உன் சிநேகிதனைத் தெரிவித்தால் நீ யித்தகையனெனக் கூறுவேன்" என்று ஒருவர் கூறியதாக ஒரு பழமொழியுமுண்டு. சகவாசத்தாலேதான் சகல நன்மை தீமைகளு மமையும். "நிலத்தியல்பா னீர்திரிந்தற்றாகுமாந்தர்க், கினத்தியல்பதாகுமறிவு" என்பவாகலின் இவ்வாராய்ச்சி யின்றி யமையாதது. இத்தகைய ஆராய்ச்சிகளில் நன்மைகாணப்பட்டால் மட்டும் பழகத்தொடங்கலாம். தொடங்கியபின்னர் இவர் நம்மிடம் பழக நெருங்குவதன்காரணமென்ன? சுயநயம்பற்றிப்பழக வருகின்றாரா? நம்முடைய இரகசியங்களையறிய வருகின்றாரா? நட்புரிமை கருதியே அன்புபொங்கி வருகின்றாரா? என ஆராயவேண்டும் சுயநயம் கருதியவராயின் அன்றே விட்டொழிக்கவேண்டும். உழவறிய வந்தவராவென்பதை யறியக் கெடுதலில்லாத சில ரகசியங்களைக்கூறிப் பிறரால் அவ்விரகசியம் வெளியாகின்றதா எனப்பார்க்கவேண்டும். வெளியாயின் அக்கணமே நீக்கவேண்டும். நாம் சிலதீயகாரியங்களைச் செய்வதாகப்பாவனை காட்டி நம் தாக்ஷண்யத்துக்குட்பட்டு அத்தீயகாரியங்களைச்செய்ய நம்முடன் சரிசரியென்று முந்துகின்றாரா? நமக்கு நற்புத்திகூறி அடுக்குமீ தடாதென்றுன்ற வேதுவோடறிவு காட்டிப் பிடித்துரைக்கின்றாரா எனக்கவனிக்கவேண்டும். நமக்குப் பெருங் கஷ்டம் வந்ததாகக்காட்டி அக்காலை நம்மைவிட்டு விலகுகிறாரா? முன்

போல் நம்முடனிருந்து நமது துக்கத்தையும் பங்கிட்டுக்கொள்கின்றாரா வென்பதையும் தெரியவேண்டும். நாம் அவருக்கு வேண்டு நன்மைகள் சில செய்துவருங்கால் சிறுகேடும் செய்து அதனால் சீறிவிலகுகிறாரா; நாம் முன் செய்த நன்மைகளையே பெரிதாக மதித்து நட்பு நிலைமாறுபடாது நிற்கின்றாரா எனப்பார்க்கவேண்டும். இத்தகைய பல வழிகளாலும் ஆராய்ந்து குற்றமற்றவர்களைத் தெரிந்து நட்புக்கொள்வதுதான் கடைசிவரை நலந்தருவதாகும். இவ்வாறு ஆய்ந்துகொள்ளாமல் வாயினிக்கப்பேசி வருபவர்களை யெல்லாம் நண்பராகக்கொள்ளல் கேட்டிற்கேயிடனாம்.

"நன்மதி யுடைமை குடிகுணங் குற்ற நல்வினத் தாலுமெத் திறத்தும்
பன்முறை யாய்ந்து நட்பினைக் கொள்க பாம்பொடு பழகினும் பிரிதல்
இன்மையா மதனு லாய்ந்தலா லொருவ ரிடத்துநட் புறேலுறி னவர்தம்
புன்மையும்பழியும் புணர்ந்திருபயனும் போக்குவ துண்மைபுத்திரனே"

"குணனுங் குடிமையுங் குற்றமுங் குன்றா
இன்னுமறிந்தியாக்க நட்பு"

"ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை
தான்சாந் துயரந் தரும்"

"நாடாது நட்டலிற் கேடில்லை நட்டபின்
வீடில்லை நட்பாள் பவர்க்கு"

"அழிவந்த செய்யினு மன்பறா ரன்பின்
வழிவந்த கேண்மை யவர்"

என்பனவாதிய மேலோர் கூற்றுக்களைச் சிந்தித்து ஆராய்ந்து நட்புக்கோடலே சிறந்த நட்பாகும்.

நட்டற்குரியார்:—கல்வியறிவு, இன்சொல், வாய்மை, உற்றுழியுதவல், நல்லோரிணக்கம், கடவுள் பக்தி, பரோபகாரம், நுண்மதி முதலியவைவுடையவர்களே நட்டற்குரியர். பெருஞ் செல்வமொன்று கருதி நட்புக்கோடல் அடாது. செல்வரிற் பல்லோர் அகங்காரத்தால் நட்பின் றன்மை யறியாது பிறரெவரையும் அவமதிப்பாகவே கருதுவர். ஒரு வறியர் வீட்டுக்கு அவர் நண்பரான செல்வர்வரின் மகிழ்ந்து வரவேற்று என்வீடிது, என் மாதாபிதாக்கள் இவர், என் மனைவியிவள், என் மக்களிவர் எனச் சகல பொருள்களையுங் காட்டி

மதிப்பாக நடத்துவர். அச்செல்வர் வீட்டுக்கு அவர் நட்பினரான வறியர்வரின் அநாதரவாகப் பேசித் தம்மனைவி முதலியவரை இவ்வறியர் பார்த்தலும் அடாதெனக் கருதிப்புறம்பாக வைத்துச் சோறிட்டுப் போக்குவர். ஆதலின் செல்வர் நட்பை விரும்பல்தகாது என்ற பொருள்பட,

"யாமாயி னெம்மில்லங் காட்டுதுந் தாமாயிற்
காணவே கற்பழியு மென்பார்போல்—நாணப்
புறங்கடை வைத்தீவர் சோறு மதனால்
மறந்திடுக செல்வர் தொடர்பு"

என வழங்கும் செய்யுள் கவனித்தற் குரியது.

"யானை யனையவர் நண்பொரீ நாயனையார்
கேண்மை தழீஇக் கொள்ளல் வேண்டும்—யானை
யறிந்தறிந்தும் பாகனையே கொல்லு மெறிந்தவேல்
மெய்யதா வால்குழைக்கு நாய்"

என்பதுங் கவனிக்கத்தகும். நட்புக்கொள்ளுமுன் ஆராய்ந்துகொள்ள வேண்டுமேயன்றி நட்புக்கொண்டு பின்னர் ஆராய்தலடாது. "நாடாது நட்டலிற் கேடில்லை நட்டபின், வீடில்லை நட்பாள்பவர்க்கு" என்பவாகலின் முன்னரே கவனித்து நட்டற்குரியாரைத் தெரிந்து கோடலவசியமென்க. நட்டற்குரியார் மூவகைப்படுவர். தினந்தோறும் தண்ணீர் வார்த்தால்மட்டும் செழிப்புறவளர்ந்தும் இன்றேல் வாடியும் நிற்கும் கமுகமரம்போல் வேண்டும்போதெல்லாம் உதவி செய்துவரும் வரை அன்பு பாராட்டியும் ஒரு காலத்து உதவி செய்யாவிடில் முன்செய்த உதவிகளையெல்லா மறந்து அன்பிற் பிறழ்ந்தும் நடப்பவர் கடைநட்பாளராவர். இத்தகையார் சுயகாரியதுரந்தரரே. அன்றிச் செய்நன்றி கொன்ற தீயருமாவர். "கொன்றன்ன வின்னா செயினு மவர் செய்த, வொன்றுநன் றுள்ளக் கெடும்" என்றவாறு ஒரு நன்மை செய்தவர் அதனிற் பெரிய தீமையைச் செய்தாலும் முன்செய்த நன்மையையே நினைத்து அத்தீமையைப்பற்றிச் சினங்கொள்ளாது விடுவதே முறையாகவும்; பலநாள் நன்மை செய்தவர் ஒருநாள் நன்மை செய்யாவிடின் அதன்பொருட்டு அன்பு மாறு படுதல் மிகக்கொடுங் குணமென்க. தொடக்கத்திற் சிலகாலம் தண்ணீர் விட்டுப் பரிபாலித்தால் பின்னர் நெடுநாள்வரை பலன் கொடுக்கின்ற தென்னையைப்

போல முதலிற் சில நன்மைகளைச் செய்யப்பெற்றுக் கொண்டமைக்காகப்பின்னர்ப் பன்னாள்வரை அன்பு மாறாதவர் இடைநட்பாளரெனவும், ஒருபொழுது விதையை நிலத்திலிட்டு நீர் வார்த்துவைத்தால் பின்னர் தானே வளர்ந்து பலகாலம் பலன் தருகின்ற பனையைப்போல ஒருநாட்செய்த வுதவியைக்கருதி எக்காலத்தும் அன்பு மாறாதவர் தலைநட்பாளர், என்றும் கூறுவர்.

"கடையாயார் நட்பிற் கமுகனைய ரேனை
யிடையாயார் தெங்கி னனையர்—தலையாயார்
எண்ணரும் பெண்ணைபோன் றிட்டஞான் றிட்டதே
தொன்மை யுடையார் தொடர்பு" என்பது காண்க.

நண்டர் குறையைக் கூறாமை:—உலகில் குற்றமற்றவர்கள் யாருமிலர். எல்லாரிடத்தும் யாதேனுமோர் குறை யிருத்தலியல்பு. பாசரகிதரான இறைவர் மட்டும் பிழையற்றவரன்றிப் பாச வசப்பட்டவர்களெல்லாம் குற்றமற்றவராத லசாத்தியம்.

"நெல்லுக் குமியுண்டு நீர்க்கு நுரையுண்டு
புல்லிதழ் பூவிற்கு முண்டு"

"பிழையிலான் கடவுளன்றி மக்களுட்டப் பில்லாதார்
பிறரு முண்டோ
மழையினுமே யசனியுண்டு மதிக்குமோர் மறுவுண்டு
மலர்க்கு முள்ளாங்
கழையினுமே சக்கையுண்டு கனியினுந்தோல் கொட்டையுண்டு
கதிக்குங் காம
விழைவினு னரர்க்கியல்பு மறஞ்செயலா தலினவரை
வெறுக்கொ ணாதே"

என்பனவற்றைச் சிந்தித்து நண்பர்பாற் குறைகண்டபோது இடித்துரை கூறித்திருத்தவேண்டும். பல்காலிடித்துரைத்தும் கேளாது மேலுங்குற்றமே புரிந்துவருவாராயின் "இவர்க்கு நல்லறிவுதந்தருளிக் காக்க" எனக்கடவுளைப் பிரார்த்தித்து அவர் திருந்தும் வரை தாம் விலகியிருக்கவேண்டும். இங்ஙனமன்றித் தாம் மனமொத்துக் கலந்து நண்பரின் குற்றங்களை யறிந்து பின்னர் அக்குறைகளைப் பிறரிடஞ் சொல்லி நட்டவர்க்குப் பழியுண்டாக்கப் புரிதல்மிகக்கொடுஞ்

செயலாகும். எக்காரணத்தாலும் நட்புற்றவர் குறையைப் பிற ரறியச் சொல்லுதல் கூடாது. இம்முறையை

"வேற்றுமை யின்றிக் கலந்திருவர் நட்டக்கால்
தேற்று வொழுக்க மொருவன்க—ணுண்டாயின்
ஆற்றுந் துணையும் பொறுக்க பொறுஅணுயிற்
றாற்றுதே தூர விடல்"

"மொழித்துக் கொளப்பட்ட நட்பி னவரைப்
பழித்துப் பலர்நடுவட் சொல்லாடா—ரெண்சொல்
விழித்தலரு நெய்தற் றுறைவ வுரையார்
இழித்தக்க காணிற் கனு"

"கருத்திலா வரசன் றீமை கருதினு லதனைக் காத்துத்
திருத்தலா மாகி னன்றே திருத்துக தீரா தாயிற்
பொருத்துறு பொருளுண் டாமோ பொருதொழிற் குரிய ராகி
யொருத்தரின் முன்னஞ் சாத லுண்டவர்க் குறுதி யம்மா"

என்பவற்று லறியலாம்.

கூடாநட்பு:— நட்பின் பயனைக் கருதாது தாங்கொள்ளும் பயனைமட்டுங் கருதுவார் நட்பானது கொடுப்பாரைக் கருதாது பொருளையே கருதும் பொருட் பெண்டிரையும், வஞ்சித்தாதல் கொன்றுதல் பொருளைக் கவரும் கள்வரையும் ஒப்பதாம். முகத்தெதிரே இனிமையுறப்பேசிப் புறம்பழிப்பார் நட்பினும் பகைவர் மிக நல்லவராவர். தகுதியற்றவர் நட்புக்கொள்ளவரின் அவர்க் கேதேனுங் கொடுத்தாவது நட்புக்கொள்ளாது விடுதல் நன்று. நகைமுகத்தானுமின்சொல்லானு நட்புரிமை காட்டி வினைவகையால் மாறுசெய்வாரது வஞ்சத்தை வெளியாக்கிப் பகைமை பாராட்டிக் கோடலே மிகவினிது. இத்தகைய தீநட்புக் கொள்ளாது விலக்க லவசியமென்பதை:—

"நகைவகைய ராகிய நட்பிற் பகைவராற்
பத்தடுத்த கோடி யுறும்"

"கனவினு மின்னுது மன்னே வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு"

"உறுவது சீர்தூக்கு நட்பும் பெறுபொருள்
கொள்வாருங் கள்வரு நேர்"

"புறநட் டகம்வேர்ப்பார் நச்சுப் பகைமை
வெளியிட்டு வேறுதல் வேண்டுங்—கழிபெருங்
கண்ணோட்டஞ் செய்யேல் கருவியிட் டாற்றுவார்
புண்வைத்து மூடார் பொதிந்து" என்பவற்றாலறிக.

"துரியோதனனுக்குச் சகுனிசேர்ந்ததுபோல" என நம் நாட்டில் இன்றும் வழங்கக்காண்கின்றோம். ஜீவகன் றந்தையாகிய சச்சந்தனென்னுமன்னனுக்குவாய்த்த தீநட்பாளனாகிய கட்டியங்காரனென்பவன் நல்லவன்போல நடித்து மன்னனை யுவப்பித்து அற்றம்பார்த்து மன்னனுயிர்க்குக் கேடுசூழ்ந்தானாதலும் கருதற்பாற்றாம். "இதனாற்றான் சேரிடமறிந்துசேர்" என்பர் நம்பெரியார் "நல்லிணக்கமல்ல தல்லற் படுத்தும்" என்பதும் அது. தீயவர்கேண்மை கொள்ளாதிருந்தால் அதுவே பெரியதோ ரிலாபமா மென்பதை,

"ஊதிய மென்ப தொருவற்குப் பேதையார்
கேண்மை யொரீஇ விடல்" என்பதே விளக்கும்.

நட்புக்கோர்புறனடை:—ஒருவர்பால் முகநகநட்பது நட்பன்றாயினும் முகநட்புடையாரது உண்மைநிலை கண்டபின்னரும் அக்கணத்தே அவர் நட்பை நீக்குதலியலாதாயின் அதாவது அக்கணமே நீக்கி வேறுதலே முறையாயினும் அங்ஙனம் செய்தவழிப் பெரியதோரிடுக்கண் சம்பவிக்குமாயின் தாமும் அவரைப்போல் முகநட்புக்காட்டி அகநட்புக்கொள்ளாது அற்றம்பார்த்து நீக்கிவிடவேண்டும். இதுவே நீதிநூலுடையார் கோட்பாடாம். இது,

"பகைநட்பாங் காலம் வருங்கான் முகநட்
டகநட் பொரீஇ விடல்" என்பதாற்பெறப்படும்.

"அரியவற்று ளெல்லா மரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்"

"ஊரங் கணநீ ருறவுநீர் சேர்ந்தக்காற்
பேரும் பிறிதாகித் தீர்த்தமா—மோருங்
குலமாட்சி யில்லாருங் குன்றுபோ னிற்பர்
நலமாட்சி நல்லாரைச் சேர்ந்து"

"அறக்குறைவை நிறைவாக்குஞ் சம்பத்தாக்கு
மாபத்தைச் சுபமாக்கு மசுபந்தன்னைச்
சிறக்குமுயர்ந் தவர்கூட்ட மென்னுங்கங்கைச்
சீதநீ ராடினர்க்குச் செந்தீவேள்வி
இறக்கரிய தவந்தானந் தீர்த்தம்வேண்டா
விடர்பந்த மறுத்தெவர்க்கு மினியோராகிப்
பிறப்பெனும்வே லைப்புணையா முணர்வுசான்ற
பெரியவரை யெவ்வகையும் பேணல்வேண்டும்"

"சமயம்வரி னிடித்துரைப்பார் தக்கவழி செலச்செல்வா
ரிமையவர்த முலகுறவு மிருளுலகம் பகையுமா
வமையவறி வுறுத்துவா ரந்தோநூல் கற்றுணர்ந்த
கமையுடையோர் நட்பெவர்க்குக் காண்கிடைக்கு மரிதரிது"

"பொன்னுந் துகிரு முத்து மன்னிய
மாமலைப் பயந்த காமரு மணியு
மிடைபடச் சேய வாயினுந் தொடைபுணர்ந்
தருவிலை நன்கல மமைக்குங் காலை
யொருவழித் தோன்றியாங் கென்றுஞ் சான்றோர்
சான்றோர் பால ராப
சாலார் சாலார் பாலரா குபவே"

"செறுத்தோ றுடைப்பினுஞ் செம்புனலோ டோர்
மறுத்துஞ் சிறைசெய்வர் நீர்நசை வாணர்
வெறுப்ப வெறுப்பச் செயினும் பொறுப்பரே
தாம் வேண்டிக் கொண்டார் தொடர்பு"

# (23) கற்பு.

உண்மை மாத்திரை யுணர்த்திப் பிழம்புணர்த்தப்படாதனவும், உண்மையும் பிழம்பும் உணர்த்தப்படுவனவுமென உலகத்துப்பொருள் களிருவகைப்படுமென்ப. இவற்றுள் உண்மைமாத்திரை யுணர்த்திப் பிழம்புணர்த்தப்படாதவகையிற் சேர்ந்தது கற்பு என்பதாம். இதனை,

"ஒப்பு முருவும் வெறுப்பு மென்று
கற்பு மேரு மெழிலு மென்று
சாயலு நாணு மடனு மென்று
நோயும் வேட்கையு நுகர்வு மென்றாங்
காவயின் வரூஉங் கிளவி யெல்லா
நாட்டிய மரபி னெஞ்சுகொளி னல்லது
காட்ட லாகாப் பொருள வென்ப" என்பதாலறியலாம்.

இனி பிழம்புணர்த்தப் படாதொழியினும் உண்மையுணர்த்து முகத்தாற் றெளிவுறக்கூறுமிடத்து, தைலதாரைபோலிடையறவுபடா து யாண்டுந் தொடர்ந்து செல்வதான உழுவலன்பினிகழ்ச்சியே கற் பின்தன்மையெனத் தெளியப்படும். அந்நிகழ்ச்சி:—

"சாவிற் சாத னோவி னோதல்
லொண்பொருள் கொடுத்த னன்கினிது மொழிதல்
புணர்வுநனி வேட்டல் பிரிவுநனி யிரங்கல்"

என்பனவாதியவாம். இந்நிகழ்ச்சிகளை அன்பு முதலிய வேறு சொற்களாற்கூறாது கற்பென்னுஞ் சொல்லாற்றான் கூறப்படுவதென் னையெனின்:—"கொண்டானிற் சிறந்ததெய்வ மின்றெனவும் அவனை யின்னவாறே வழிபடுகவெனவும் இருமுதுகுரவர் கற்பித்தலானும், அந்தணர் திறத்துஞ் சான்றோர் தேத்தும் ஐயர்பாங்கினு மமரர்ச்சு ட்டியும் ஒழுகும் ஒழுக்கம் தலைமகன் கற்பித்தலானும் கற்பாயிற்று" என்னுந் தொல்காப்பிய வுரையாற்காணலாம். "கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை" என்பதும் இப்பொருளையே குறித்ததாம். ஆக வே பெண்கள் இளமைப்பருவத்தின்கண் தாய்தந்தையர் கற்பித்தவா றும் பின்னர் நாயகன் கற்பித்தவாறும் உள்ளன்புபூண்டு நடக்குங்கடப் பாடு பெரிதுடையரென்பது பெற்றாம்.

**கற்பின்றன்மை:**—கற்பின்றன்மையைக் கூறப்புகின் நற்குடிப்பிறந்த பெண்மணிகள் தம்மைக்கொண்ட நாயகரை யல்லது தமக்குவேறுதெய்வமில்லையெனக்கொண்டு அந்நாயகர்க்குவரும் இன்பதுன்பங்களே தமக்கும் இன்பதுன்பங்களாக அமைய உடலிரண்டிற்கு உயிரொன்றே யுளதெனக்கருதுமாறு ஒழுகுவதே அதுவாம். இக்கற்புடைமங்கையரொழுகுமா றனைத்தும் பின்வருஞ்செய்யுட்களா னினிது புலனாகும்.

"கொழுநனமு துண்டதற்பின் றாமுண்பார் குலவுபணி
யொழுகியவன் றுயின்றதற்பின் றாந்துயில்வா ருறங்கியவ
னெழுவதன்முன் னெழுந்திருப்பா ரில்லறத்துக் குரியவராய்ப்
பழுதகல்கற் புயர்நெறிகொள் பண்புமிகு பாவையரே"

"மிடியினர் குணமிலர் விருத்தர் நோயினர்
வடிவில ருறுப்பிலர் வஞ்சர் மூடர்வெங்
கொடியவ ராயினுங் கொழுநர் தம்மிடை
மடிவில ரன்புகற் புடைய மாதரே"

"சிறுகாலை யட்டில்புக லருக்கியுறச் சமைத்தல்சுவை திருத்தியூட்டல், மறுகாலையெண்ணாது விருந்தழைத்தன் மகப்பெறுதன் மடநாணச்சம், பெறுகாலை யின்புறுதன் முன்னுறங்கப் பின்னுறங்கல் பின்னெழாதல், உறுகாலை தொழுதெழுதல் பன்னிரண்டு மங்கையர்க்கற்புடையோர் செய்கை"

"வனைதருபொற் கலனனைத்து மாற்றவளுக் கீதரினுந்
தினையளவு முனியார்க டனிவழியுஞ் செல்லார்கள்
அனையினுமோர் முதுமாதர் துணையன்றி யயலகத்து
நினைதரார் புகுதல்செய நீடியகற் புடைமாதர்"

**கணவர் சுகதுக்கங்களே கற்பினர்க்கும்:**—இன்பதுன்ப விருப்பு, வெறுப்புக்களெல்லாம் நாயகர் மனப்பற்றின்வழியே கற்புடைப்பெண்கள் மனப்பற்றும் நிகழ்வதல்லது வேறொன்றில்லை. இதனால் ஈருடற்கோருயிரிருந்தாற்போல வாழ்வர். கணவரைக் கடவுளரினும் சிறப்புறமதித்து வழிபாடாற்றுவர். இவற்றை;—

"காகத் திருகண்ணிற் கொன்றே மணிகலந் தாங்கிருவர்
ஆகத்து ளோருயிர் கண்டனம் யாமின் றியாவையுமாம்

ஏகத் தொருவ னிரும்பொழி லம்பல வன்மலையிற்
றேகைக்குத் தோன்றற்கு மொன்றாய் வருமின்ப துன்பங்களே"

"கொண்டா னல்லது தெய்வமும் பேணாப்
பெண்டிர் தங்குடி"

"குலமகட்குத் தெய்வங் கொழுநனே"

"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை" என்பவற்றாலறிக.

புருடரினுங் கற்புடைப் பூவையர் சிறந்தவர்:—நம்மவர்களிற் பலர் பெண்ஜன்மம் பாவஜன்மமென்றும், புருஷஜன்மமே சிறந்ததென்றும் பொதுவாகக்கூறுவதுண்டு. இதற்குக்காரணம் பெண்களின் பேதைமைக்குணமும் சபலசித்தமும் கல்விக்குறையும் சுவாதீனமின்மையும் அடங்கிநடக்கும் சுபாவமும் இவைபோல்வனபிறவுமாம். ஆனால்கற்புடைய பெண்கள் ஆடவர்களைப் பார்க்கினும் சிறந்தவர்கள் என்றும், மற்றும் பலவகையாகவும் சிறப்பித்து நூல்கள் கூறுவதை,

"நிறைநின்ற பெண்ணன்று பீடிலாமாந்தரின்"

"பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்
திண்மையுண் டாகப் பெறின்"

"காண்டகைய தங்கணவ ரைக்கடவு ளார்போல்
வேண்டலுறு கற்பினர்த மெய்யுரையி னிற்கும்
ஈண்டையுள தெய்வதமு மாமுகிலு மென்றால்
ஆண்டகைமை யோர்களு மவர்க்குநிக ரன்றே"

என்பனவற்றா லறியலாம்.

கற்பின் துயர்வு:—கற்புடைய பெண்களினுயர்வைப்பற்றி நம்நூல்கள் மிகமுழக்குகின்றன. கற்புடையாள் சொல்வழியே கடவுளரும் ஏவல்செய்வர். அவள் பிறந்தகுடியும் புகுந்தகுடியும் மும்மைப்பயனும் பெறும். அவளிருக்கும் நாடுமிகச் செழிப்புறும். அவள் கணவன் மகாபாவியேயாயினும் அவள் நிமித்தம் அவனுக்கும் நற்கதி கிடைக்கும். இன்னும் கற்பினால் எய்தாத நன்மைகள் இல்லை. எனப் பலவாம் இவற்றை:—

"கற்பு மேய கனங்குழை மாதரைப்
பெற்று ளோர்தம் மரபும் பெருந்தவக்
கற்பி னுட்கொண்ட காதல ளுருயிர்ச்
சுற்றம் யாவுந் துறக்கத்தி னெய்துமால்"

"கற்புக் கடன்பூண்ட வித்தெய்வ மல்லது
பொற்புடைத் தெய்வம் யாங்கண் டிலமால்
வானம் பொய்யாது வளம்பிழைப் பறியாது
நீணில வேந்தன் கொற்றஞ் சிதையாது
பத்தினிப் பெண்டி ரிருந்த நாடு"

"கொழுநன் பாவி யெனினுங் கொழுநனோ
டழலின் மூழ்கினள் கற்புடை யாளெனில்
விழியி லன்னவட் காணின் வெங் கூற்றுவன்
உழுவ லன்பனைக் கைவிடுத் தோடுமே"

இத்தகைய கற்பு "மறுவில் கற்பின் வாணுதல் கணவன்" என்புழி நச்சினார்க்கினியருரையால் அறக்கற்பு மறக்கற்பு என இருவகைப்படுவதாகும். அவற்றுள்:—

அறக்கற்பு:—மிகச்சிறந்த வலிமை பெற்றுள்ள கற்பினால் சாபாநுக்கிரக சக்திகொண்டிருந்தபோதும் சாந்தமும் கருணையுங்கொண்டு நாயகனையல்லது நினையாமல் எத்தகைய துன்பத்தையும் சகித்து மனவமைதியுடன் கற்பைக்காத்திருத்தல் அறக்கற்பாம். இங்ஙனமிருந்தோர் சீதை, நளாயினி, அநசூயை, மங்கையர்க்கரசியார் முதலியோரென்க. சீதையை இராவணன் றூக்கிச்சென்று சிறையில்வைத்துப் பற்பலதுன்பப்படுத்தியபோதும் அவள் பொறுமையுடனிருந்து இராவணனுக்கேனும் இலங்கைக்கேனும் சாபமிட்டுத் தீங்குவிளையாமல் தன் நாயகன்போர்வலியால் அரக்கர் குலத்தைக்களைந்து தன்னைமீட்டலே அவற்குப் புகழெனவிருந்தாளென்பதை

"அல்லன் மாக்க ளிலங்கைய தாகுமோ
எல்லை நீர்ந்த வுலகங்க ளியாவுமென்
சொல்லி னாற்சுடு வேனது தூயவன்
வில்லி னாற்றற்கு மாறென்று வீசினேன்" எனவும்,

அநுமன் தன் தோளிலேறிக்கொண்டால் இப்பொழுதே விரைவில் இராமன் முன்னர் விடுப்பேன் என்றபோது

"வேறு முண்டுரை கேளது மெய்ம்மையோய்
ஏறு சேவகன் மேனியல் லாலிடை
ஆறு மைம்பொறி நின்னையு மாணெனக்
கூறு மிவ்வுருத் தீண்டுதல் கூடுமோ"

"நன்றி யில்பதம் வஞ்சித்த நாய்களின்
நின்ற வஞ்சனை நீயு நினைத்தியோ" எனவும்,

அச்சீதையின் கூற்றாகவருஞ் செய்யுட்களானறிக. இவ்வாறே அநசூயை யாதியர் சரிதமும், நெடுஞ்செழிய னிறந்தவுடன் தானும் இறந்த கோப் பெருந்தேவி சரிதமும் பிறவும் நூல்களானறிக.

மறக்கற்பாவது:—கற்புடைப்பெண்கள் தம் கற்புக்கேனும், தம் கணவற்கேனும் இடையூறெய்தியக்கால் அதனைச்சகிக்கலாற்றாது கோபமும் வீரமுங்கொண்டு ஊறிழைத்தார்க்கு இடுக்கணிழைத்து நிற்றலாம். கண்ணகி தமயந்தி முதலியோர் கற்பு இதன்பாற்படும். கண்ணகி தன்கணவனைப் பாண்டியன் ஆராயாது கொல்வித்ததறிந்தவுடன் அவள்கொண்ட கோபமும் பின்னிரிட்ட சாபமும் பின்வருவனவற்றாலறியலாம். பாண்டியன் அரண்மனை வாயிலில்வந்து சீற்றத்தொடு நின்று,

"வாயிலோயே வாயிலோயே
அறிவறை போகிய பொறையறு நெஞ்சத்
திறைமுறை பிழைத்தோன் வாயிலோயே
கணவனை யிழந்தாள் கடையகத் தாளென்
றறிவிப் பாயே யறிவிப் பாயே" என்றதும்,

வாயில் காவலன் அரசன்முன்சென்று வந்தவளியல்பை வழுத்துங்காலை,

"பிடர்த்தலைப் பீட மேறிய மடக்கொடி
வெற்றி வேற்கைக் கொற்றவை யல்லள்
அறுவர்க் கிளைய நங்கை யிறைவனை
யாடல்கண் டருளிய வணங்கு சூருடைக்
கானக முகந்த காளி தாருகன்
பேருரங் கிழித்த பெண்ணு மல்லள்

செற்றனள் போலுஞ் செயிர்த்தனள் போலும்
பொற்றொழிற் சிலம்பொன் றேந்திய கையள்
கணவனை யிழந்தாள் கடையகத்தாளே" என்றதும்,

பின் மன்னவனாணைப்படி அரண்மனையுட் புக்கபோது வேந்தனை நோக்கி,

"நற்றிறம் படராக் கொற்கை வேந்தே" எனத்தொடுத்துக்கூறியதும், பிறவுங்காண்க.

"மெய்யிற் பொடியும் விரித்த கருங்குழலும்
கையிற் சிலம்பொன்றுங் கண்ணீரும்—வையைக்கோன்
கண்டளவே தோற்றானக் காரிகைதன் சொற்செவியி
லுண்டளவே தோற்றா னுயிர்" என்பது மிதனைவலியுறுத்தும்.

தமயந்தி கணவனைப்பிரிந்து வனத்துப்புக் குழலுங்கால் அவளழகைக்கண்டு காமுற்ற வேடனைச் சாபமிட்டுச் சாம்பலாக்கினளென்பதை,

"வெய்ய வரவின் பகுவாயின் விடுத்த மடமா னெழிநோக்கி
மையல் கூர்ந்த நெஞ்சினனாய் வரிவிற் றடக்கை வயவேடன்
றெய்யிற் றனமேற் புல்லுதற்குத் தொடரத் துஞ்சா வருங்கற்பின்
றையல் சினந்து நோக்குதலுஞ் சாம்ப ராயிற் றவனுடலே"

என்னுங் கவியாற் காண்க.

இனி இங்ஙனம் அறம் மறம் என இருவகைப்படுத்தி யுரைத்தலேயன்றி, தலை யிடை கடையென மூவகைப்படுத்தியுங் கூறுவர்.

தலைக்கற்பு:—கணவனது இன்பதுன்பங்களே தனது இன்பதுன்பமாகக்கொண்டு வாழ்ந்த உத்தமக்கற்புடைப் பெண்மணி தன் கணவனிறந்தானெனக் கேட்டபோதே அவளுயிரும் நீங்கிவிடும். இந்நிலைக் கண்ணின்ற மாதரசிகள் கற்பே தலைக்கற்பெனப்படும். இவ்வாறு நிகழக்கூடுமோ என ஐயுறவேண்டா. இங்ஙனம் நிகழ்ந்த சரிதங்கள் பற்பலகாட்டக்கூடும். என்னை? சூரபன்மனிறந்தமை கேட்டதும் அவன் மனைவியாகிய பதுமகோமளை யுயிர்துறந்தமையை,

"காவன் மன்னவ னிறந்தன னெனுமொழி கன்னத்தின்
மேவு மெல்லையி லசனியே றுண்டவெம் பணியேபோற்

றேவி யாகிய பதுமகோ மளேயெனுந் திருமங்கை
யாவி நீங்கினள் தலையளி யாகிய ததுவன்றே"

என்னுங் கந்தபுராணத்தானும்,

இராவணன் யுத்தகளத்தில் உயிர்துறந்ததும் அவன் மனைவியாகிய வண்டோதரியும் உடனே உயிர்துறந்தனளென்பதை,

"என்ற ழைத்தன ளேங்கி யெழுந்தவன்
பொன்ற ழைத்த பொருவரு மார்பினைத்
தன்ற ழைக்கைக ளாற்றமு வித்தனி
நின்ற ழைத்துயிர்த் தாளுயிர் நீங்கினாள்"

என்னும் கம்பராமாயணத்தானும், அறியலாம்.

பாண்டிய னொருவன் றன் பத்தினியோடு நிலாமுற்ற மேடையில் விளையாடி யிருப்புழி அரண்மனைப் புறத்தே பேராரவாரங் கேட்ப, அரசன் அதன் காரணம் கணவனையிழந்த மாதொருத்தி உடன்கட்டை யேறப் புகுகின்றாளென்பதே யெனவறிந்து அவள் கற்பு நிலையை வியந்து தன்னருமைக் காதலிக்குக்கூற, ராஜபத்தினி எள்ளி நகைத்து இதுவோ கற்பு? கணவனிறந்தபின் இத்தனை ஆரவாரத்துட னுயிர் தரித்திருக்கும் இவளோ கற்புடையவள்? எனக்கூறினள். அதுகேட்ட செழியர்கோமான் தன் மனையாட்டியின் கற்பு நிலையை யறிய விரும்பி ஒருநாள் வேட்டையாடச் சென்று காட்டகத்திலிருந்து கொண்டே "அரசன் புலிவாய்ப்பட் டிறந்தான்" எனப் பொய்யாகச் செய்தியனுப்பினான். அச்செய்தி அரண்மனைக் கெய்தவே ராஜவீதியில் அரசனிறந்தமையை வெளிப்படுத்தும் சாப்பறை முழங்குவதாயிற்று. அச்செய்தி கேட்ட அக்கணமே அரசன் மனைவி நெட்டுயிர்த்து ஆவி துறந்தனள். ஒருபுறமாக அரச னிறந்தமையைப் பறையறைந்துவர மற்றொருபுறமாக அரசி யிறந்தமையை வேறு பறையொன்றறைந்து வந்ததென்பதும் நூல்வல்லார்வாய்க் கேட்டுணர்க. இங்ஙனமாகிய தலைக்கற்பினை மூதானந்தமென்பர் புறப்பொருளார்.

"கயலேர் கண்ணி கணவனொடு முடிய
வியனெறிச் செல்வோர் வியந்துரைத் தன்று"

"ஒருயி ராக வுணர்க வுடன்கலந்தார்க்
கிருயி ரென்ப ரிடைதெரியார்—போரில்

விடனேந்தும் வேலோர்க்கும் வெள்வளையி னாட்கும்
உடனே மடிந்த துயிர்'' என்பதாலறிக.

இடைக்கற்பாவது:— கொழுந னிறந்துபட்டது கண்டு மனங் குழைந்து இனி யுயிர் வாழ்தல் அவமாமென் றெண்ணி அக்கினிப் பிரவேசஞ் செய்து நாயகி தன்னுயிரை நீத்தலாம். இதனை உடன் கட்டை யேறுதலென்பர். பூதப்பாண்டிய னிறந்தபோது அவன் மனைவியாகிய பெருங்கோப்பெண்டு என்பாள் இவ்வாறே உடன்கட்டை யேறி யுயிர்நீத்தாளென்பர்.

"பெருந்தோட் கணவன் மாய்ந்தென வரும்பற
வள்ளித ழவிழ்ந்த தாமரை
நள்ளிரும் பொய்கையுந் தீயுமோ ரற்றே"

என்பதால் இக்கற்புடைப் பெண்கள் தாமரைப் பொய்கையில் நீராடுதலையும் அக்கினிப்பிரவேசஞ் செய்தலையும் ஒருபடித்தாகக் கொள்வ ரென்பதுபெறப்படும். இதனை ஆநந்தப்பையுளென்பர் புறப்பொருளார்.

"விழுமங்கூர வேய்த்தோ ளரிவை
கொழுநன் வியக் குழைந்துயங் கின்று"

"புகழொழிய வையகத்துப் பூங்கழற் காளை
திகழொளிய மாவிசும்பு சேர—விகழ்வார்முன்
கண்டே கழிகாத வில்லையாற் கைசோர்ந்து
முண்டே யளித்தென் னுயிர்'' என்பதாலறிக.

"காதலன் வியக் கடுந்துய ரெய்திப்
போதல் செய்யா வுயிரொடு புலந்து
நளியிரும் பொய்கை யாடுநர் போல
முளியெரிப் புகூஉ முதுக்குடிப் பிறந்த
பத்தினிப் பெண்டிர்'' என்பதனானு மிவர்நிலை காணத்தக்கதாம்.

இங்ஙனம் உடன்கட்டை யேறி யுயிர் துறத்தலானது உள்ளபடியே அன்பாற் செய்யப்பட்டு வந்ததாயினும் பிற்காலத்து வரவரப் பிறர் கட்டாயத்துக்காகவும் பிறர் பழிப்புக் கஞ்சியும் செய்யப்பட நேர்ந்தமையால் இச்செயல் கூடாதென்று அரசாங்கத்தாரால் நடுக்கப்பட்டது.

கடைக்கற்பாவது:— கணவனுயிர் நீத்தபின்னர்க் கண்ணீர்வாரப் புண்முகஞ்சோர 'நனிதுயரடைந்த நாரியர் இனிவரும் பிறப்பிலே னும் நாயகனைப் பிரியாது உடனுறைதல்வேண்டி நோற்றலாகிய கைம் மை விரதங் காத்தலாம். கைம்மை விரதமென்பது நீர்ச்சோறும் வெள்ளெட் டுவையலும் புளியிட் டவித்த வேளைக்கீரையும் உண்டு தரையிடைப்படுத்துக் காலங்கழித்தல். இதனை

"அடையிடைக் கிடந்த கைபிழி பண்டம்
வெள்ளெட் சாந்தொடு புளிப்பெய் தட்ட
வேளை வெந்தை வல்சி யாகப்
பரற்பெய் பள்ளிப் பாயின்று வதியும்
உயவற் பெண்டிர்" என்பதாலறிக,

இதனைத் தாபதநிலை யென்பர் புறப் பொருளார்.

"குருந்தலர் கண்ணிக் கொழுநன் மாய்ந்தெனக்
கருந்தடங் கண்ணி கைம்மைகூ றின்று"
"கலந்தவனைக் கூற்றங் கரப்பக் கழியா
தலந்தினையு மவ்வளைத் தோளி—யுலந்தவன்
தாரொடு பொங்கி நிலனசைஇத் தான்மிசையுங்
காடகின் மேல்வைத்தாள் கை" என்பதாலறிக.

தலையிடை கடையென்னு மிம் மூவகைக்கற்பினையும் ஒருங்குசேர்த்து

"காதல ரிறப்பிற் கனையெரி பொத்தி
யூதுலைக் குருகி னுயிர்த்தகத் தடங்கா
தின்னுயி ரீவ ரீயா ராயி
னன்னீர்ப் பொய்கையி னளியெரி புகுவர்
நளியெரி புகாஅ ராயி னன்பரோ
டுடனுறை வாழ்க்கைக்கு நோற்றுடம் படுவர்
பத்தினிப் பெண்டிர்" எனக் கூறுமாற்றுனுங் காண்க.

இத்தகைய கற்பின் றன்மை நம் தேயத்தார்க்கே தொன்று தொட்டு உரிமைப்பட்டுளதாகும். இதனைப்பற்றி வற்புறுத்திக்கூறுத நூல்கள் கிடையா. இதனைப் புகழ்ந்து கூறுதபுலவருமிலர். கற்பு டை மகளிரைத் தெய்வமாக மதித்து வாழ்த்தி வணங்குவது நம்மவர் கொள்கை. விவாக காலத்தில் அம்மி மிதித்து அருந்ததி காட்ட

லென்னும் சடங்கு இற்றைக்கும் நமக்குள் நிகழ்வதாம். இச்சடங்கின் கருத்து விவாக கன்னிக்குக் கற்பின் பெருமையையும் அஃதில்லாமையின் சிறுமையையும் அறிவுறுத்துவதேயாம். அகலிகை கற்பின்மையால் கல்லுருவமானாள் என்பதைக் குறிப்பித்தலே அம்மிமிதித்தலும், அருந்ததி கற்புடைமையால் யாவரும் வணங்க மேலுலகில் வீற்றிருக்கின்றாளென்பதைக் குறிப்பித்தலே அருந்ததி காட்டலு மென்பர்,

கற்பைக்காப்பது:— பெண்கள் கற்பு வழுவாமை கருதி அவர்களிருப்பிடத்தை அந்தப்புரமாக்கி அறைவீட்டிலடைத்து ஆண்மக்கள் யாரும் புகாவாறு சிறைக்குட்படுத்தி யாங்குச் சிலர் காவல்செய்கின்றனர். இக்காவலா லொரு சிறிதாயினும் பயனின்று. பெண்கள் இந்நிலையிற் றவற நினைப்பார்களாயின் அவர்களை எத்தனை கடிய காவலில் வைத்திருப்பினும் அவர்கள் வழுவியே போவார்கள். வேறென்னை யோ காவலெனின்? அகக்காவல் புறக்காவல் என இருவகைக் காவலாலே இக்கற்பு நிலைபெறுவதாகும். அவற்றுள் அகக்காவலென்பது மகளிரின் நிறையேயாம். அதாவது "கொண்டானை யல்லா லறியாக் குலமகள்" "கொண்டோ னல்லது தெய்வமும் பேணாப் பெண்டிர்" என்றவாறு நாயகனை யல்லது வேறு யாரையுங் கருதாததோர் மனவுறுதி. இம்மனத்திட்பமாகிய காவல்தான் இன்றியமையாதது. இது பற்றியன்றே "சிறைகாக்குங் காப்பெவன் செய்யு மகளிர், நிறைகாக்குங் காப்பே தலை" என்றார் செந்நாப்போதார். இரண்டாவது புறக்காவலென்பது அரசனது செங்கோல். இதனை

"மாதவர் நோன்பு மடவார் கற்புங்
காவலன் காவ லின்றெனி னின்றாம்"
"அருந்திற லரசர் முறைசெயி னல்லது
பெரும்பெயர்ப் பெண்டிர்க்குக் கற்புச் சிறவாது"

என்பவற்றா னுணரலாம். பொற்கைப் பாண்டியன் சரிதமும் இதனை விளக்கா நிற்கும்.

கற்பின்மையின் இழிவு:— கற்புநெறி வழுவாக் காரிகையாரை எத்துணைப் பெருமைப்படுத்திக் கூறிவைத்துள்ளாரோ அங்ஙனமே கற்பின் வழுவிய காம மங்கையரை இழிவுபடுத்திக் கூறியுள்ளார் நம்முதியோர். கணவ னேவலை மேற்கொண்டு கற்புநிலை நில்லாதவர் கொடிய

நரகி லழுந்துவர். நாயகனை மகிழ்ந்து வணங்குதலைவிட்டு, விரதம் பூசனைகளைச் செய்பவரும் நரகிற் புகுவர்; கணவன் பழியைத் தூற்று பவர் நரியாகப் பிறப்பர்; கணவனுடன் சீறிப் பேசுபவர் நாயாகப் பிறப்பர்; கணவன் கோபித்தபோது அவனைச் சீறிவைபவர் புலியாகப் பிறப்பர்; சக்களத்தியைச் சீறுகின்றவர் கூகையாகப் பிறப்பர்; அய லா னழகைக் கண்டு விரும்புபவர் பேயாய்ப்பிறப்பர்; கணவன் பசித் திருக்க வுண்பவர் பன்றியாகப் பிறப்பர்; கற்பின் வழுவியவர்களின் மூன்றுதலைமுறை யுள்ளாரும் நரகிற் புகுவர். என்பவற்றை

"கணவர்தம் மேவல் பூண்டு கற்பினி லொழுகி டாதார்
நணுகருங் கொடிய வெய்ய நரகினி லழுந்து வாராற்
பணிவுறுங் கணவர் தம்மை யிழந்துநற் பான்மை யின்றி
யணிகலன் றுறந்த மாதர் தன்மையை யறைகு வாமே"

"உரிய கேள்வ ருவந்து பணிந்திடா
தரிய நோன்பொடு பூசனை யாற்றுவார்
கரிய கூற்றுவன் றூதர் கடிந்திட
வெரியுந் தீநர கத்திடை யெய்துவார்"

"கடிம ணஞ்செயுங் காதலர் தம்பழி
மடமை யோடு மொழிபவர் மற்றவ
ருடன்வெ குண்டுரை யாடுந ரோரியாய்
முடுவ லாகப் பிறப்பர் முடிவினே"

"கொழுநர் சீறிற் குறுகிமுன் வைபவ
ருழுவை யாகப் பிறப்ப ருருத்துநெஞ்
சழல மாற்றவட் சீறு மறிவிலோர்
சழல்கட் கூகைப் பிறப்பிற் கழிவரால்"

"ஏதி லான்ற னெழில்கண் டுவப்பவர்
பேது செய்தழல் பேயுரு வெய்துவார்
சாத லன்பசிக் கக்களிந் துண்பவர்
பாத கஞ்செயும் பன்றியிற் றோன்றுவார்"

"பொருவில் சற்பின் வழீஇயபுன் மங்கைய
ருரிய மூன்று மரபினுள் ளோரையும்

வெருவந் தேங்கி விழுங்கி யுமிழ்கலா
வெரியுந் தீநர கிற்குடி யேற்றுவார்''

என வருவன வற்றுற் காண்க. விரிக்கிற் பெருகும்:

இதுகாறுங் கூறியவற்றால் பெண்கள் மட்டும் பதிவிரதைகளாக இருக்கவேண்டுமென்பதே வலியுறுத்தப்பட்டது. இங்ஙனமே புருடர்களும் ஏக பத்தினி விரதர்களா யிருக்கவேண்டுமென்பதே ஆன்றோர் கருத்தாகும். இக்கருத்தை—

''பிறர்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்
கறனொன்றோ வான்ற வொழுக்கு''

''நலக்குரியார் யாரெனி னாமநீர் வைப்பிற்
பிறர்க்குரியா டோடோயா தார்''

''எனைத்துணைய ராயினு மென்னாந் தினைத்துணையுந்
தேரான் பிறனில் புகல்''

''பகைபாவ மச்சம் பழியென நான்கு
மிகவாயா மில்லிறப்பான் கண்'' எனவரும் தேவர்வாக்காலும், இராமபிரானைப்பற்றி அநுமானிடம் சீதை கூறுங்கால்

''வந்தெ னைக்கரம் பற்றிய வைகல்வா
யிந்த விப்பிற விக்கிரு மாதரைச்
சிந்தை யாலுந் தொடேனென்ற செவ்வரந்
தந்த வார்த்தை திருச்செவி சாற்றுவாய்'' எனக் கூறியதாலும் நன்கு காணலாமென்க.

# (24) சூது.

சூது என்பது சீட்டாடல் சோக்கட்டான் பாசியுருட்டல் முதலிய பலவகைப்படும். இது தொன்றுதொட்டு வந்த தீச்செயல்கள் பலவற்றுள் ஒன்று. கள், காமம் என்பனபோலத் தன்னைப்பற்றியோர் மனதைத் தன் வசப்படுத்திக்கொள்ளும் வலிமையுற்றது. வறுமையையழைத்தற்குத் தூது சென்று தவறாது கூட்டிவைப்பது மானமாகிய விருக்ஷத்தை வேரோடு களையும் வச்சிராயுதமாவது. காலத்தைக் கொள்ளைகொண்டு சீலத்தையழிப்பது. முயற்சியைத்தடுத்து அயர்ச்சியைக்கொடுப்பது. மோசத்தை விளைப்பது. சோகத்தை அழைப்பது. சௌரவத்தை ஒழிப்பது. முற்றச்சொல்லமுடியாத பலபெருங் கேடுகளையும் ஒருங்கே சேர்ப்பிக்கவல்லது.

நம்நாட்டில் முற்காலத்தும் தற்காலத்தும் இதனால் கேடுற்றவர் பல்லோர். இதனை யறியாதவர் யாவர்? அறிந்துமென்ன? நம்மவர் பல்லோர் முன்னைப் புண்ணியபலனாகப் பெருஞ்செல்வத்தை யுடையராகி யாதோர்தொழிலுமின்றி விலாப்புடைக்கவுண்பதும் வீணர்களைக் கூட்டிவைத்துச் சூதாடுவதுமாகக் காலத்தைப் போக்குகிறார்கள். இக் கூட்டத்தவர்க்குச் சாதி, மதம், வயசு, கல்வி, ஒழுக்கம் முதலிய உயர்வு தாழ்வு கிடையா. சூதாட்டத்தால் பல நாள் அடைந்த பொருள் நஷ்டம் இவர்க்கு வருத்தந்தருவதில்லை. ஒரு நாள் சிறிது பொருள் இலாபம் பெறின் இவர்க்குறுமகிழ்ச்சி கடலினும் பெரிதாகும். இது பற்றியன்றே,

"ஒன்றெய்தி நூறிழக்கும் சூதர்க்கும் உண்டாங்கொல்
நன்றெய்தி வாழ்வதோ ராறு"

"வேண்டற்க வென்றிடினுஞ் சூதினை வென்றதூஉம்
தூண்டிற்பொன் மீன் விழுங்கி யற்று"

என்று தெய்வப்புலமையாளர் திருவாய்மலர்ந்தருளினார்.

இச்சூதாட்டத்தைப்பற்றியொரு சிறு கதையுண்டு. அதாவது ஒருவன் சூதாடிக்கொண்டிருக்கும்போது அவன் தாய் மரணமடைந்தனள். இத்துக்கத்தைக் கூறி யழைத்தபோது சூது விருப்பத்தால்

பெற்றதாய் பிரிவையும் கருதாது எல்லாக்காரியங்களும் நடக்கட்டும் இதோ வந்துவிடுகிறேனென்று கூறியனுப்பினான். உத்தரக்கிரியைக்கு வேண்டுவன எல்லாந்தபாரானபின் ஜலங்கொண்டுவரப் போதற்கு வந்தழைத்தனர். அப்போதும் எழுந்து செல்ல மனமில்லானாய்த் தன் தம்பியை வைத்துக்கொண்டே எல்லாம் நடத்தி மயானத்திற்கு எடுத்துக்கொண்டு வரும்படியாகக் கூறி இந்த வழிதானே வரும் அப்போது சேர்ந்துகொள்கிறேன் என்றானும். பின்னரும் சென்றிலனும். இக்கதைப்பொருளையடக்கிச்சூதாடுவோர்கள் "இந்தவழிதானேவரும்" என்று சங்கேதமாக இன்னும் கூறுவதுண்டு. பாண்டவசிரேஷ்டரான தருமர் சூதினாலடைந்த துயரத்துக்கு எல்லையுண்டா? நளமகாராஜன் இதனால் பட்டபாடு கொஞ்சமா? அந்தோ! இக்கொடும்பிணியாற் பற்றப்பட்டார்க்கு உய்யு நெறியேயில்லை. பொய், களவு, கொலை முதலியவைகட்கு இச்சூதே யீன்றதாயாகும்.

"உடை செல்வம் ஊணொளி கல்வியென் றைந்தும்
அடையாவாம் ஆயங் கொளின்"

என்று கூறும் விஷயத்தைப் பிரத்தியக்ஷமாகக் காணலாம். சகலவித நற்குணங்களும் நிறைந்துள்ள தரும புத்திரர் செல்வமுற்றுஞ் சூதிற் றோற்று மனைவியையும் பந்தயப் பொருளாக்கினாரென்றால் இனிச் சொல்வது என்னுளது? வயது முதிர்ந்து அறிவு பொதிந்து காரிய நிர்வாகிகளான பெரியோர்கள் இத்தீச்செயல் செய்வதால் அவர்கட்கு நேரும் கேடு ஒன்றோ? அவரையடுத்துள்ள புத்திராதிச் சிறியோரும் அப்பழக்கமேகொண்டு கெடுவாரென்பதை மறுப்பவர் யாவர்? காலக்கேடு, பொருட்கேடு? மானக்கேடு முதலிய பற்பல கேடுகளை யுண்டாக்கும். இச்சூதாட்டத்தைவிட்டு அதிற்போக்குங்காலத்தை வேறு நல்வழிகளிற் போக்கினால் அனேகவித லாபங்கள் உண்டாகலாமன்றோ? தீவினையகற்று என்பது மூதாட்டி மொழியாகும்.

"அடியும் ஆண்மையும் வலிமையும் சேனையும்
அழகும் வென்றியும் தத்தம்
குடியும் மானமும் செல்வமும் பெருமையும்
குலமும் இன்பமும் தேசும்

படிபு மாமறை ஒழுக்கமும் புகழுமுன்
 பயின்றகல் வியும் சேர
மடியுமால் மதியுணர்ந்தவர் சூதின்மேல்
 வைப்பரோ மனம் வையார்"

"சூதும் வாதும் வேதனை செய்யும்" என்னும் அருமைத்திரு வாக்குப் பலவுள. நம்மவர்காள்! சூதாட்டத்தைத் தொடாமலிருப்பதுமட்டோ அக்கூட்டத்தாரோடு சேரலாகாது. சூதாடுமிடத்து நிற்கவும் கூடாது. சூதாட்டம் என்ற சொற்கேட்டால் யமனைக்கண்டதுபோன்று அஞ்சியொதுங்கவேண்டும்.

# (25) பழக்கம்.

நற்றமிழ்த்தேயத்து உத்தமப்பெண்கள் சிகாமணியானஔவைப் பிராட்டியார் திருவாய்மலர்ந்தருளிய "சேரிடமறிந்துசேர்" என்ற இச்சிறு வாக்கியம் எவ்வளவு பொருளாற்றலுடையது. இவ்வாக்கி யார்த்தத்தை ஆழ்ந்து சூழ்ந்து அறிந்து, அறிந்தவாறே ஒழுகுவோ மாயின் நாம் பெறுதற்கரிய பேறுமுளதோ? அறிவென்பது மக்கட்கு இயற்கையே யமைந்துளதாயினும் அது விளக்கமுறுதற்கு இன்றி யமையாத் துணையாவன கல்வியும், பழக்கமுமாம். விரித்துக்கூறின் அறிவு நெருப்பை யொக்கும். கல்வி, திரியை யொக்கும். பழக்கம் நெய்யை யொக்கும்.

ஒரு விளக்கு ஒளிவிட்டு எரிதற்கு நெருப்பு, திரி, நெய் மூன்றும் வேண்டப்படுவனவேனும் இவற்றுள் இன்றியமையாததும் எப்போ தும் வேண்டப்படுவதும் ஆகிய சிறப்பினையுடையது நெய்யேயாகும். நெய் இல்லையேல் எரியானது திரியையும் அழித்துத்தானும் அழியும். நெய் தானிருக்கும் துணையும் எரியையும் திரியையும் பாதுகாக்கும். இவ்வாறே அறிவாகிய எரியும், கல்வியாகிய திரியும், பழக்கமாகிய நெய்யிருக்குங்காறும் விளக்கமுறும். பழக்கமாகிய நெய்யற்றவிடத்து அறிவே கல்வியையும் மலினப்படுத்தித்தானும் மலினமுறும். நெய் எவ்வளவுக்கெவ்வளவு சுத்தமாயிருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு எரி விளக்கு ஒளிவிட்டுப் பிரகாசிக்கும். நெய் அசுத்தங்கலந்து கெட்டதன்மை பெற்றதாயின் எரியும் ஒளி குன்றிக்குன்றிக் கெட்டுப்போம்.

இங்ஙனம் பழக்கம் நல்லதாக அமையின் அறிவும், கல்வியும் நன்கு பயன்படும். பழக்கம் தீயதாக அமையின் அறிவுங், கல்வியும், கேடு பயக்கும். ஆதலின் அறிவு விளக்கமுற வேண்டினால் அறிஞர் பழக்கமுற வேண்டுமென்பது பெறப்பட்டது. இதுபற்றியன்றே

"நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்கு
இனத்தியல்ப தாகும் அறிவு" என்றார் தேவரும்.

ஒருவன் நூலறிவு கொள்ளானே யாயினும் நல்லோரிணக்கம் பெறுவானேல் எல்லா நலமும் எய்தப் பெறுவான். எத்துணை நூ

களைக் கற்றுள்ளானாயினும், சிற்றினம் சேர்ந்துறுவானாயின் யாதொரு பயனும் பெறான். அதுமட்டோ? சகலதீமையும் எய்தப்பெறுவான். நூலுணர்ந்து பெற்ற அறிவு பழக்கத்தின் சிறுமை பெருமைகட்குத் தக்கவாறு தீங்கும் நலமும் பயப்பதாக மாறும். பழக்கத்தால் பெறும் அறிவோ ஒரு நாளும் பிறிதொன்றால் மாறக்கூடியதன்று. ஆதலின் எப்போதும் நாம் பழகுதற்கு உரியாரை நன்கு தெரிந்து பின்பே பழகல் வேண்டும். நல்லொழுக்கமும், தெய்வபக்தியும், இடித்துக் கூறலும், பரதுக்க துக்கமும், பரோபகாரமும் ஆதிய நற்குண நற் செயலுடையாரே பழக்கத்துக்குத் தக்கவராவர். நம் கண்ணுக்கெதி ரில் தீயவர் பழக்கத்தால் பொருளைச் சிதைத்து அருளை வதைத்துப் பழிக்குடம்பெடுத்த பாவிகளாகி வருந்தி நொந்துள்ளாரைத் தினமும் காண்கின்றோம். சாது சங்கப் பழக்கத்தால், முன்னைய தாழ்ந்த நிலை யை விட்டு உயர் நிலைக்கு வந்துள்ளாரையும் காண்கின்றோம். இவ் வகைகட்குப் புராணேதிகாசமுகத்தால் அறியப்படும் உதாரணமும் பலவே.

இன்னும் இப்பழக்கம் எவ்வளவுக்கெவ்வளவு இளமைப் பருவத் தில் ஏற்படுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு நிலைத்து நிற்கும். ஆதலின் நாம் நற்பழக்கங்கொண்டு வாழ்தலுடன் நமது பிள்ளைகளையும் இந்த விஷயத்தில் முக்கியமாய்க் கவனித்துவரல் வேண்டும். பழக்கத்தாலே ஒழுக்கமுளதாகும். ஒழுக்கமோ குடிப்பிறப்பினும் கல்வியினும்கோடி பங்கு அதிகச் சிறப்பினையுடையது. உயிரினுஞ் சிறந்தது. ஒப்புயர் வற்றது. இதற்கு ஆதாரமாகிய நல்லோர் பழக்கத்தையே யெப் போதும் கவனத்துடன் கைக்கொள்ளல்வேண்டும். தீயார் பழக்கத் தைக் கனவிலும் விடல் வேண்டும். இப்பழக்கத்தின் வலிமையை முற்றப்பகரவொண்ணாது. தற்காலத்து உயர்குடிப்பிறந்த மக்கள் பல்லோர் கட்குடி மக்களாகித் திரிகின்றனர். கலைவல்லவரான பல் லோர் கொலைவல்லவராகிக் கெடுகின்றனர். நன்னிதி படைத்திருந்த பல்லோர் எந்நிதியுமில்லாதவராகி ஏங்குகின்றனர்.

"ஆயிரஞ் சொன்னாலு மடங்காத வஞ்சநெஞ்சப்
பேயரொடு கூடிற் பிழைகாண் பராபரமே"

என்ற அருமைத் திருவாக்கைச் சிந்தித்து நற் பழக்கம் பெற்று வாழ்வதே வாழ்வாகும்.

# (26) பதினாறுபேறு.

நம் இந்துக்களுக்குள்ளே பெரியோர் சிறியோரை வாழ்த்திக் கூறுங்கால் "பதினாறும் பெற்றுப் பெருவாழ்வின் வாழ்ந்திரு" எனக் கூறுதல் யாவரும் அறிந்ததே. இங்ஙனம் பெரியார் கூறும் பதினாறு பேறு யாவை? பெருவாழ்வு யாது? என ஆராய்வாம்.

சாதாரண ஜனங்கள் பதினாறு எனற்கு பதினாறு புத்திரர்களைப் பெறுதல் எனவும், பெருவாழ்வு எனற்கு பெரிதான செல்வ வாழ்க்கை யெனவும் கொள்கின்றனர். சாமான்ய படிப்புள்ள புலவரும் இவ்வாறே கொண்டு "மக்கள் பதினாறு பெற்று மங்காமல் வாழ்திரென்றார்" எனக்கூறியுள்ளார்.

இஃதென்ன விபரீதம்? ஒருவனுக்குப் பதினாறு பிள்ளைகள் பிறந்தால் அப்பிள்ளைகளைப் பெற்று வளர்த்துப் போற்றி வருதலில் எத்துணைப் பெரிய சங்கடங்களுண்டு? இப்பிள்ளைகட்கெல்லாம் நேரும் சுபாசுபக் கிரிகைகளில் ஈடுபட்டு சதா மனக்கவலை யுடையோனாயிருக்கவேண்டுவதன்றி மன அமைதியும், சுகமும், ஆத்மஞான விசாரமும், ஈசுவரோபாசனையும் பொருந்தி ஜநநஸாகரக் கரையேற வழியுண்டோ? ஒருவன் அறுபதினாயிரம் பிள்ளைகளைப் பெற்றான்-பதினாயிரம் பிள்ளைகளைப் பெற்றான் – நூறு பிள்ளைகளைப் பெற்றான் – எனக் கூறும் இதிகாச புராண வழக்குண்டே யென்னில், அது சாதாரண சம்பவமன்றித் திருவருள் விசேடத்தால் நேர்ந்ததும் அங்ஙனம் நேர்ந்துழியும் அதனால் இறுதியாகத் துன்பமே கிடைத்ததென்பதும் பிரத்தியக்ஷமாம். அன்றியும் யாரோ ஒருவர் வெகு புத்திரப்பேற்றாற் சுகமுற்றிருப்பினும் அங்ஙனமாதல் சாதாரண சம்பவ மன்றென்பதும் அத்தகைய அபூர்வ விஷயமொன்றை வைத்துக்கொண்டு விவகரித்தல் கூடாதென்பதும் உணரத்தக்கனவே. குசேலர் வெகு புத்திரப்பேற்றாற் பட்டபாட்டைக் கேட்டுக் கவலைப்படாதார் யாவர்? ஒரு சிறிய கதை வருமாறு:—ஒரு புலவர் ஒரு பிரபுவிடஞ் சென்று தாமடைந்த வறுமையின் கொடுமையைப்பற்றிப் பலவாறு வர்ணித்து நெடுநேரங் கூறினாராம். பிரபுவோ வறுமைப் புலவர் கூறியவற்றை யெல்லாங் கேட்டு "ஐயா நுமக்குப் பிள்ளைகள் எத்தனைபேர்?" என்

றாராம். புலவர் நகைத்து ஓ பிரபுவே! தாம் இவ்வாறு கேட்டதற்கு மிகவும் விசனிக்கின்றேன். ஏனெனில் எனது மிகக் கொடிய வறுமை முழுதுங் கேட்டறிந்த பின்னர் பிள்ளைகளைப் பற்றிச் சங்கை கொள்ளவும் வேண்டுமா? குறைந்தது ஏழெட்டுச் சனியன்களாயினும் இருக்குமென்று தெரிந்துகொள்ள வேண்டாமா? என விடைபகர்ந்தார் என்பதே. உலக வழக்கத்தினும் நாலைந்து புத்திரர்களைப்பெற்ற ஒரு குடும்பஸ்தனைப் பற்றிப் பேசும்பொழுது "ஐயோ பாவம்! நாலைந்து பிள்ளை குட்டிக்காரன்-சமுசாரி" என்று இரக்கத்துடனே கூறுவதுண்டே! இவ்வாறு கூறுவதன் கருத்தெல்லாம் பிள்ளைக ளதிகமானால் துயரமு மதிகமாகும் என்பதுதானே, ஆதலின் பதினாறு என்பது பிள்ளைகளைப்பற்றியதன்று. மற்றென்னையோ பொருளெனின்,

எல்லா மதத்தாரும் ஒப்பும்படி தமிழ் நூல்களில் பொதுவாகக் கூறுவன.

புகழ், கல்வி, வலி, வெற்றி, நன்மக்கள், பொன், நெல், நல்லூழ், நுகர்ச்சி, அறிவு, அழகு, பெருமை, இளமை, துணிவு, நோயின்மை, வாழ்நாள் எனப் பதினாறுமாம். இதனை

"துதிவாணி வீரம் விசயஞ்சந் தானந் துணிவுதனம்
அதிதானி யஞ்சவு பாக்கியம் போகம் அறிவழகு
புதிதாம் பெருமை அறங்குல நோயகல் பூண்வயது
பதினாறு பேறுந் தருவாய் மதுரைப் பராபரனே"

எனச்சிறிது வேறுவைத்துக் கூறுவாறுமுண்டு. இங்ஙனம் கூறும் பதினாறும் எல்லா மதத்திற்கும் பொதுவாகும் ஆயினும் இவைகளெல்லாம் பொய்யான உலகசபந்தம் பற்றியனவேயன்றிப் பிறவிப் பிணியை நீக்கி வீடுபேற்றையளித்துக் காக்குந்தன்மையன வல்ல. ஆதலின் நங்குருமரபிற்கெல்லாம் முதற்குருநாதனான திருநந்திதேவர் சிவபிரானிடத்து வேண்டிக்கொள்வன பதினாறுண்டு. அவை பின்வருங் கவிகளானறியற்பாலனவாம். இப்பரமாசாரியர் விரும்பிவேண்டிய பதினாறுமே யாம்பெறற் பாலனவென்பதும், அவற்றானே பெருவாழ்வு ஆகிய வீடுபேறு சித்திக்கும் என்பதும், ஆகவே "பதினாறும் பெற்று பெருவாழ்வின் வாழ்ந்திரு" என்பது இப்பொருளையே நன்கு விளக்குமென்பதும் காண்க.

## திருநந்திதேவர் வேண்டிய பதினறுபேறு.

மறைகள் நிந்தனை சைவநிந் தனைபொறு மனமும்
தறுகண் ஐம்புலன் களுக்கேவல் செய்துறாச் சதுரும்
பிறவி தீதெனுப் பேதையர் தம்மொடு பிணக்கும்
உறுதி நலலறம் செய்பவர் தங்களோ டுறவும்,

யாது நல்லன்பர் கேட்பினும் உதவுறும் இயல்பும்
மாத வத்தினோர் ஒறுப்பினும் வணங்கிடு மகிழ்வும்
ஓதும் நல்லுப தேசமெய் உறுதியும் அன்பர்
தீது செய்யினும் சிவச்செயல் எனக்கொளும் தெளிவும்,

மனமும் வாக்குநின் அன்பர்பால் ஒருப்படு செயலும்
கனவி லும்உன தன்பருக் கடிமையாம் கருத்தும்
நினைவில் வேறொரு கடவுளை வழிபடா நிலையும்
புனித நின்புகழ் நாடொறும் உரைத்திடும் பொலிவும்,

தீமை ஆம்புறச் சமயங்கள் ஒழிந்திடுந் திறனும்
வாய்மை ஆகவே பிறர்பொருள் விழைவுறா வளனும்
ஏமு றம்பர தாரம்நச் சிடாதநல் நோன்பும்
தூய்மை நெஞ்சின்யான் எனதெனுஞ் செருக்குறாத் துறவும்;

துறக்கமீ துறையினும் நரகிற் றோயினும்
இறக்கினும் பிறக்கினும் இன்பந் துய்க்கினும்
பிறைக்கொழுந் தணி சடைப்பெரும ! இவ்வரம்
மறுத்திடா தெனக்குநீ வழங்கல் வேண்டுமால்.

இவற்றையே யாமும் வேண்டிப்பெற்று உய்யக்கடவேம்.

---

வியாசத்திரட்டு இரண்டாம்பாகம்

முடிந்தது.